# பொருளியல் நோக்கு

மலர் 17 இதழ் 4/5 ஜூலை / ஆகஸ்ட் 1991

330.5
1991-1994

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்த,
கொழும்பு 2
இலங்கை

## உள்ளே

### சிறப்புக் கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| சமன் கலேகம | 52 | நாடுகளின் போட்டியிடும் திறனை மதிப்பிடுவதற்கான ஓர் அளவுகோல் |
| எம். எச். ஈ. செரீப் | 62 | கொழும்பு பங்கு மாற்று நிலையத்தின் வளர்ச்சி ஒரு கண்ணோட்டம் |
| பிரட்மன் வீரக்கோன் | 68 | தேசிய நெருக்கடியொன்றில் தொடர்பு சாதனங்களின் பங்கு |
| எச். எல். ஹேமச்சந்திர | 71 | கொழும்பு நகரின் கொட்டில் மற்றும் சேரிக் குடியிருப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி நிலை |


### விசேஷ அறிக்கை

#### மூன்றாவது உலகப் போர்


| | | |
|---|---|---|
| நிமல் சந்தரத்ன | 2 | வறியோருக்கான வங்கித் தொழில் |
| லக்ஸ்மன் ஆர். வட்டவல | 8 | கிராமிய வறியோருக்கான புதுமை நோக்கிலான நிதியுதவிகள் |
| எம். என் கபூர் | 12 | மனித வளம் - எமது மதிப்புமிக்க சொத்து |
| பி. ஸ்டீவன் பெர்னாண்டோ | 14 | மக்கள் வங்கியின் குறிக்கோள்கள் குறித்த ஒரு மீள்பார்வை |
| எச். களுபண்டா | 17 | அபிவிருத்தி வங்கித்தொழில்: மக்கள் வங்கியின் செயலாற்றுகை குறித்த ஒரு கண்ணோட்டம் |
| அந்ரே குந்தர் பிராங்க் | 20 | மூன்றாவது உலகப் போர் : வளைகுடாப் போர் மற்றும் புதிய உலக ஒழுங்கு என்பவற்றின் அரசியல் பொருளாதாரம் |
| பீ. உன்னிகிருஷ்ணன் | 29 | அரச பொருளாதாரம், பிரிவினைவாத கொள்கைகள் மற்றும் ஜனரஞ்சக அரசியல் |
| அஸ்வினி கே. ரே | 34 | நேரு-காந்தி சகாப்தத்துக்கு பிற்பட்ட இந்தியா |
| சுமித் சக்கரவர்த்தி | 36 | பாரிய, பல பரிமாணங்களைக் கொண்ட அமைப்பு ரீதியான மாற்றங்கள் |
| சஞ்சய் கபூர் | 44 | பாஸிச அச்சுறுத்தல் |
| விக்டர் அல்க்ஸ்னிஸ் வலன்டின் பவ்லோவ் திமித்ரி வொல்கொகோனோவ் | 46 | சோவியத் யூனியன்: நேற்று, இன்று, நாளை மூன்று கண்ணோட்டங்கள் |


"பொருளியல் நோக்கு" கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினை தூண்டி, அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் இதழாகும்.

"பொருளியல் நோக்கு" வெளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

"பொருளியல் நோக்கு" மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

**சந்தாதாரர் கவனத்துக்கு**

விசேஷ அறிக்கைகளின் முக்கியத்துவத்தை கவனத்தில் எடுத்து, "பொருளியல் நோக்கு" இம்முறையும் இரட்டை இதழாக (ஜூலை/ஆகஸ்ட் 1991) வெளிவருகின்றது. இந்த இதழ், சந்தா நோக்கங்களுக்காக இரு தனித்தனி இதழ்களாக கருதப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

33776

# வறியோருக்கான வங்கித் தொழில்

நிமல் சந்தரத்தின

மூத்த ஆய்வாளர், கொள்கை கற்கைகள் நிறுவனம்

## 1. அறிமுகம்

வறியோர்களுக்கான வங்கித் தொழில் "வறிய வங்கித் தொழில்" முறையாக மாறக் கூடாது. ஏழைகளுக்கு உதவி செய்யும் பொருட்டு வங்கிகள் முன்வர வேண்டிய அவசியம் குறித்து இப்போது எல்லோருமே பேசுகிறார்கள். எனினும், வறிய மக்களுக்கு உதவுவதில் வங்கிகள் முக்கியமான பங்கொன்றை வகிக்க வேண்டுமேயானால் வங்கிகளின் செயற்பாடுகள், அவற்றின் தன்மை, அவற்றின் விசேட இயல்பு ஆகியவற்றை நன்கு விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

வங்கிகள், வைப்பு நிதிகளின் பாதுகாவலர்களேயல்லாமல் அவை தர்மஸ்தாபனங்கள் அல்ல. மத்திய வங்கியினால் விதிக்கப்படும் விதிகள், ஒழுங்குகள் ஆகியவற்றிற்கு ஏற்ப அவை நடக்க வேண்டும்; மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட காசு, கடன் விகிதங்களை வங்கிகள் கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். பெரும்பாலான வங்கிகள் இலாபம் காட்ட வேண்டுமென்பதும் ஒரு நிபந்தனையாகும்; அத்துடன், வங்கி வட்டாரங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஐந்தொகைப் பத்திரமொன்றையும் இவை வைத்திருக்க வேண்டும். வங்கியொன்று சரியான முறையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில், அதன் வர்த்தக நிலை குறைந்து காணப்படின், மற்றும் வங்கிகளுடனான அதன் தொடர்புகளும், சர்வதேச கொடுக்கல் வாங்கல் நிலையும் பாதிப்புக்குள்ளாகும்.

மறு பக்கம் பார்க்கும்போது, அபிவிருத்தியில் தாம் வகிக்கும் பங்கு மற்றும் சமுதாய பொறுப்பு ஆகியன பற்றி வங்கிகள் அறிந்திருக்க வேண்டும். இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் வாழும் மக்களில் பெரும்பான்மையானோர் ஏழைகளாயிருப்பதால் ஏழை ஜனத்தொகையினருக்கு உதவிகள் அளிக்கப் படாவிடின் அர்த்தமுள்ள பொருளாதார அபிவிருத்தியைக் காண முடியாது. எனவே, ஏழை மக்களுக்காக வழங்கப்படும் கடன் தொகையில் ஒரு குறிப்பிட்டளவு மானியப்படுத்தல் அவசியமாகின்றது. மானியம் பல்வேறு பிரிவுகள் மூலமாகவோ அல்லது மத்திய வங்கியின் குறைந்த வட்டியிலான மீள் நிதிப் படுத்தல் மூலமாகவோ செயல்பட வேண்டும்.

வறியோருக்கான வங்கிப்படுத்தல் முறைகள் பற்றிக் கலந்துரையாடும் போது குறிப்பிட்ட காலப்பிரிவுக்கென கொடுக்கப்படும் சிறுதொகை கடன் பற்றி யோசிக்காது, ஏழை மக்கள் உண்மையாகவே அபிவிருத்தியடையக் கூடிய கடன் முறை ஒன்று பற்றியே நாம் கவனம் செலுத்த வேண்டும். ஏழை மக்களை ஆதரிக்கக் கூடிய கடன் முறைகளை அபிவிருத்தி செய்ய, வங்கிகள் நீடித்து நிலைக்கக்கூடிய கடன் திட்டங்களைச் செயலாற்ற வேண்டும். இன்னும் சொல்லப் போனால், ஏழை மக்களுக்கு வழங்கப்படும் கடனானது நிதிச் செலவினம், அக் கடன்களை நிர்வகிப்பதற்கான செலவினங்கள் மற்றும் வங்கிகள் ஏற்கும் நட்டவச்சம் ஆகியனவற்றை உள்ளடக்கக்கூடியதாயிருக்க வேண்டும். செலவு அம்சங்களைக் கவனியாமல் கடன்களை வங்கி வழங்கி வந்தால், ஒன்றில் வங்கிகள் வரையறுக்கப்பட்ட அளவு நிதிகளை மட்டுமே வழங்க முடியும்; விரிவான கடன் திட்டங்களை வகுத்து ஏழைகளுக்குத் தொடர்ந்து உதவ முடியாத நிலைக்கு அவை தள்ளப் படும்.

சமுதாயத்தில் உள்ள வறிய மக்களுக்கு உதவும் பொருட்டு, வங்கிகள், நடைமுறைகளை மாற்றியும், அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையிலும் தம் கருமங்களை ஆற்ற வேண்டும். எனினும், சிறிய தொகைகளை கடனாகப் பெறும் மக்களின் தொகை அதிகமாயிருப்பதால் செலவினங்களிலும், இசைந்து செல்லும் மட்டத்திலும் ஒரு வரையறை இருக்க வேண்டும் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன் காரணமாக வறிய மக்களுக்கு வங்கிச் சேவைகளை வழங்கும் முறைகள் பற்றி பல பரீட்சார்த்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த பரீட்சார்த்தங்களின் போது, முழு நிறைவான வர்த்தக வங்கிகள் மூலம் இக்கடன்களை வழங்குவதிலும் பார்க்க சிறிய அரை வங்கி ஸ்தாபனங்களை செயல்படச் செய்து, அவற்றின் மூலம் ஏழை மக்களுக்கு கடன் வழங்கும் முறை செலவினத்தைக் குறைக்கக் கூடியதாயுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதற்காகவே தான், மத்தியஸ்தர்கள் மூலமாக ஏழை மக்களுக்கு உதவிசெய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒருசில நாடுகளில் ஏழை மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு அதற்கான வங்கிகளும் நிறுவப்பட்டுள்ளன. ஆதலால் எவ்வளவுதான் ஏழைக்குக்குச் சேவை செய்ய வேண்டுமென்று விரும்பினாலும் சிறு கடன்களைப் பெறும் வறியவர்களுக்கு உதவி அளிப்பதிலும் ஒரு வரையறை வங்கிகளுக்கு இருக்கத்தான் செய்கிறது என்பதை ஒருவர் நன்கு உணர வேண்டும்.

வறிய மக்களை அணுகுவதில் இலங்கையிலுள்ள வங்கிகள் எடுக்கும் அயரா முயற்சிகள் பற்றியும், இதற்காகத் திட்டமிடப்படும் புதுப்புது முறைகள் பற்றியும் இக்கட்டுரையின் அடுத்து வரும் பகுதியில் விளக்கப் பட்டுள்ளது. புதுப்புது முறைகளைக் கையாண்ட போதிலும் ஏழை மக்களில் ஒரு சிறு பகுதியினரே கடன்களைப் பெறுகின்றனர். இக்கட்டுரையின் மூன்றாவது பிரிவில் வங்கிகளின் அனுபவங்கள் மூலம் கற்றுக் கொண்ட படிப்பினைகள் சுருக்கமாகக் கூறப் பட்டுள்ளது. இக் கட்டுரையின் முடிவில், ஏழைக் கடனாளிகளுக்கு, வங்கிகள் எவ்வாறு விரிவான முறையில் கடன்களை வழங்கலாம் என்பது பற்றிய யோசனைகள் தரப்பட்டுள்ளன.

# வறியோருக்கான வங்கித்தொழில்

## வறிய மக்களை அடைவதற்கான வங்கிப்படுத்தல் முயற்சிகள்

சமுதாயத்தின் வறிய பிரிவினருக்கான கடன்களை அதிகரிப்பதற்கென பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளும் 80 கிளைகளைக் கொண்ட 11 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் வறிய மக்களுக்குச் சேவைகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இரண்டு அரச வங்கிகளும் தமது 600 கிளைகள் மூலம், முன்னர் வங்கிச் சேவைகளை பெற முடியாத நிலையில் இருந்த ஏழை மக்களுக்கென பல்வேறு விசேட கடன்திட்டங்களை அமுல் செய்துள்ளன. அரசு சாரா அமைப்புக்களுக் கூடாகவும், முறைசாரா மத்தியஸ்தர்களுக்கூடாகவும் வறியோருக்கு கடன்களை வழங்குவதன் மூலம் முறைசார் சந்தைகளையும், முறைசாரா சந்தைகளையும் இணைப்பதற்கு அண்மையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எவ்வளவோ முயற்சிகள் எடுத்த போதிலும் வறிய மக்களுக்கு சிறப்பான நிறுவன ரீதியான உதவி கிடைப்பதில்லை. இவர்கள் சுயமாக சம்பாதிப்பவர்களாகவோ, சிறு வர்த்தகர்களாகவோ, விவசாயிகளாகவோ உள்ளனர். இவர்களுடைய தேவைகளை பெரும்பாலும் முறைசாரா துறையே தீர்த்து வைக்கின்றது. இதற்கான காரணங்கள் பல. தேவையான படிவங்களை பூர்த்தி செய்யத் தெரியாமை, பிணைகாரர்களைப் பெற இயலாமை, அவசியமான ஆவணங்களை வழங்கி தாம் கையாளப் போகும் செய்திட்டங்களின் சாத்தியம் பற்றிக் கூறி, வங்கியாளர்களை நம்பச் செய்யத் தவறுதல் ஆகியனவே இக் காரணங்களாகும். மேலும், இவர்கள் கடனைத் திருப்பிக் கொடுப்பதில் தாமதமேற்படுவதினாலும் முகாமையாளர்கள் இவர்களுக்கு கடன் கொடுக்க பின் வாங்குகின்றனர். மேலும், குறைந்த தொகைகளில் கடனைப் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதனால் வேலைப் பளுவும் அதிகமாகின்றது. இக்கடன்களை தொடர்ந்து கண்காணித்து வருவதும் கடினமாகும்.

மேலும், இலாபத்தின் மூலமாகவே ஒரு கிளையின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்படுவதால் வறிய வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவதில் முகாமையாளர்கள் அதிக சிரமம் எடுப்பதில்லை. அத்துடன் பெரும் வர்த்தகர்கள், வங்கியாளர்களுக்கு வெகுமதிகள் கொடுத்து அவர்களின் செல்வாக்கையும் பெறுகின்றனர். எனவே, ஏழை மக்களுக்குச் சேவை செய்யும் வங்கி உத்தியோகத்தர்கள், சேவையையே தமது இலட்சியமாகக் கொண்டு செயலாற்ற தம்மைப் பழகிக் கொள்ள வேண்டும்.

நிறுவனப்படுத்தப்பட்ட கடன் வசதிகளைப் பெறுவதில் பல்வேறு தடைகள் உள்ளன என்பது ஏற்கப்பட்டிருப்பதனால் நிறுவகப்படுத்தப்பட்ட புதுபுது வழிமுறைகளை இப்பொழுது வங்கிகள் கடைப்பிடித்து வருகின்றன. இவை அரை வங்கி நிறுவனங்களான கூட்டுறவு கிராமிய வங்கிகள் மற்றும் கூறு முறைப்படுத்தப்பட்ட வங்கிகளான பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. "பிரஜா நய நியாமக்க" போன்ற நடுவர்கள் மூலமும் கடன்களை வழங்குவதற்கு வங்கிகள் புதிய கடன் முறைகளை தீட்டியுள்ளன.

## கூட்டுறவு கிராமிய வங்கிகள் (கூ.கி.வ.)

மக்கள் வங்கியின் ஆதரவில், 1964ம் ஆண்டில் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டமையே இதன் முதன்மை பரீட்சார்த்த முயற்சியாகும். கூ.கி. வங்கிகள், வங்கிகளல்ல; சேமிப்பைத் திரட்டி அந்த நிதிகளை வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக கடன்களாக வழங்கும் (கூட்டுறவுச் சங்கங்களின்) திணைக்களங்களாக அவை செயற்பட்டு வருகின்றன. இவை அளவில் சிறிதாகவும் வங்கிகளைப் போன்ற படாடோபமற்றவையாகவும் கிராமங்களில் நன்கு பழக்கமான நிறுவனங்களான கூட்டுறவுச் சங்கங்களுக்குள்ளேயே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. கடும் நடைமுறைகளுடன் தம்மைப் பயமுறுத்தும் பிரமாண்டமான வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருப்பதைவிட, தமது கிராமிய கூட்டுறவுச் சங்கங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவே அப்பாவி கிராமத்து மக்களும் விரும்புகின்றனர். ஒரு வங்கிக் கிளையை அமைப்பதற்கு பொருளாதாரம் இடமளிக்காதவிடத்து, இத்தகைய வங்கி அமைப்புக்களை நிறுவி வரையறுக்கப்பட்ட கடன் வசதிகளை வழங்கமுடியும். சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல், அடகு பிடித்தல், விசேட நோக்கங்களுக்கு கடன் வழங்கல் ஆகிய பணிகள் போதுமானவையாகும். மேலும், பழக்கமில்லாத, படாடோபம் நிறைந்த நிறுவனங்கள் மூலம் பெறப்படும் வங்கி சேவைகளிலும் பார்க்க, முன்னர் கூறப்பட்டதையே இவர்கள் விரும்புகின்றனர். கூட்டுறவு கிராமிய வங்கிகள் உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கு வசதியான முறையில் செயல்படுகின்றன. மேலும், கடன் பெறுவோரின் நம்பிக்கை பற்றி நன்கு அறிந்திருப்பதாலும், பரிச்சயமிருப்பதாலும் கடன் வழங்கும் நிபந்தனைகளை இவ்வங்கிகள் பொருத்துமான முறையில் மாற்றியமைத்துக் கொள்ளக் கூடிய நிலையில் உள்ளன.

கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து வருடங்களுக்குப் பின்னர், முற்பணத்திற்கும் மேலதிகமாக வைப்புக்கள் அதிகரித்ததோடு, அதனையடுத்த பல வருடங்களில் மிகைகள் காணப்பட்டன. 1989ம் ஆண்டு செப்டம்பர் மாதக் கடைசியில், இவ்வங்கிகள் 120 கோடி ரூபா மிகை நிதிகளைக் கொண்டிருந்தன. கடந்த 25 வருட காலத்தில் சுமார் ஆயிரம் கூட்டுறவு கிராமிய வங்கிகளும், மக்கள் வங்கியின் விசேட கிளைகளும் (இவை கூட்டுறவு கிராமிய வங்கிளைப் போன்றே புதிய முறைகளுடன் செயலாற்றுகின்றன) நிறுவப்பட்டன.

கூட்டுறவு கிராமிய வங்கிகளின் பரவல் மற்றும் அவற்றால் திரட்டப்பட்ட சேமிப்பின் அளவு என்பவற்றின் பின்னணியில் நோக்கும்போது இதனை வெற்றியாகவே கணிக்க முடிந்தாலும், கடன் வழங்கல் வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. மொத்த முற்பணத்திற்கும் (அடகு உட்பட) மேலதிகமான வைப்புக்களின் மீதத்தைப் பார்க்கும் போது திரட்டப்பட்ட சேமிப்பு வைப்புக்கள் வறிய கிராமிய மக்களுக்கென

உபயோகிக்கப்படாது, ஏனைய இடங்களுக்கு மாற்றப்படுவதைக் காண முடிகிறது. வழங்கப்பட்ட நிதிகள், வரையறுக்கப்பட்ட அளவிலேயே-அதாவது குறிக்கப்பட்ட தேவைகளுக்காகவே-வழங்கப்பட்டன. குறுகிய தவணைக் கடன்களில் அரை வாசிக்கும் மேற்பட்டவை வீடு நிர்மாணித்தல், மின்சார, தண்ணீர் வழங்கலுக்கும், 20% விவசாய உற்பத்தி, குடிசைக் கைத்தொழிலுக்கும் வழக்கப்பட்டன.

கூட்டுறவு உத்தியோகத்தர்கள், வைப்பாளர்களின் நிதியை மிகவும் ஜாக்கிரதையாகக் கையாண்ட படியால் தான், கடன் வழுங்கல் வரையறுக்கப்பட்டதாக இருந்திருக்க முடியும். மேலும், செய்திட்டங்களின் சாத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் வழுங்குதலும் கஷ்டமாயிருந்திருக்கும். ஏனெனில், அச்செய்திட்டங்களை மதிப்பீடு செய்யும் திறமை இவர்களில் பெரும்பான்மையினரிடம் இல்லை என்று கூறலாம். ஏழைக் கடனாளிகளுக்கு மிகவும் வரையறுக்கப்பட்ட கடன்களை வழங்கும் ஸ்தாபனங்களாக கூட்டுறவு கிராமிய வங்கிகள் மாறியுள்ளன. இவ்வங்கிகள் குறைபாடுகளைக் கொண்டபடியினால்தான் இவ்வாறு நடைபெறுகின்றனவென்று நாம் கூற முடியாது. ஏனெனில், உண்மையான நோக்கில் பல்வேறு நுட்பங்களும் சந்தைப்படுத்தல் சாத்தியங்களும் அவசியமான சாத்திய பொருளாதார முயற்சிகள் உள்ளூர் சமூதாயங்களிடையே இல்லாமையும் இதன் காரணமாகும்.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பி.கி.அ.வ.)

அண்மையில் உருவான இன்னுமொரு நிறவன ரீதியான புதுமைப் புகுத்தல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பி.கி.அ.வ.) ஆகும். முதலாவது பி.கி.அ. வங்கி 1985ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 89 கிளைகளுடன் (தலைமைக் காரியாலயங்கள் உட்பட) 11 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள பாதுகாப்பு நிலைமை, இத்திட்டம் மேலும் 14 மாவட்டங்களுக்கு நீடிக்கப்படுவதற்கு தடையாயிருப்பதோடு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கிளை நீடிப்புச் செய்தலையும் இது தாமதித்துள்ளது.

ஏனைய வர்த்தக வங்கிகள் வழங்க முடியாதிருக்கும் கடனை இந்தக் கூறு வங்கிகள் வழங்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இந்தக் கடமையை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறைவேற்றுவதற்கான சில வழிகாட்டு நெறிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் படி இவை ஏற்கனவே இருக்கும் நிதி நிறுவனங்களுடன் போட்டி போடாது, அவற்றிற்கு குறைநிரப்புச் செய்யும் விதத்தில் சிறிய விவசாயிகள், சிறு முயற்சியாளர்கள், சிறு வர்த்தகர்கள், கிராமிய கைவினைஞர்கள் ஆகியோருக்கும் வங்கிகளிலிருந்து தம் சுய தேவைகளுக்கு போதிய கடனைப் பெற முடியாதவர்களுக்கும் கடன்களை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஒரு புதிய கலாச்சாரத்தை தொழிலில் புகுத்தும் புதுமை நோக்கிலான வங்கி கூறுகளாக இவை செயற்பட வேண்டியுள்ளன. இந் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு வங்கியினதும் செயல்படும் பிரதேச எல்லை வரையறுக்கப் பட்டுள்ளது.

1989ம் ஆண்டு இறுதியில் 17.2 கோடி ரூபாவை சேமிப்பாக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் திரட்டியுள்ளன. 1985–89 ஆண்டுகளில், 43.3 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளன. 1989ம் ஆண்டில் மட்டும் 15.5 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளன. இதில் சுமார் 45% கடன்களை விவசாயத்திற்காகவும், 15% சிறுகைத் தொழிலுக்கும், 23% வர்த்தகத்திற்கும் 7% மீன்பிடி, கால்நடைத் தொழிலுக்கும் வழங்கப்பட்டிருந்தன. மேலும் பல்வேறு நோக்கங்களுக்காக இவை கடன் கொடுத்துள்ளன என்பதற்கும், சிறு முயற்சிகளுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளன என்பதற்கும் சான்றுகள் இருக்கின்றன.

உத்தியோகத்தர்களுக்கு அதிகமான சம்பளத்தை இவை வழங்குவதாலும், பெருந்தொகையான சிறிய கடன்களை அவை வழங்குவதாலும், கிளைகளின் வியாபார அளவினை மிஞ்சிய ஆளணியினர் இருப்பதனாலும் இவ்வங்கிகள் உயர்ந்த செலவுக் கட்டமைப்பியொன்றைக் கொண்டுள்ளன. மேலும், கடன் செலுத்தாதோர் பற்றிய தரவுகளும் கிடைக்கவில்லை. இவ்வங்கிகளின் உரிமையை சிறிது சிறிதாக அங்குள்ள சமூகத்தினரின் பங்குதாரர்களுக்கு மாற்றும் யோசனை இருந்தாலும், இது இன்றுவரை நடைபெற்றதாகத் தெரியவில்லை.

## ''பிரஜா நய நியாமக்க'' முகவர்கள்

1988ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கடன் முகவர் (பிரஜா நய நியாமக்க) திட்டத்தின் நோக்கமானது, நிறுவனப்படுத்தப்பட்ட வங்கிப்படுத்தல் முறையுடன், முறைசாரா கடன் வளங்களை இணைக்கும் முயற்சியாகும். இந்த திட்டங்களின் அடிப்படை அம்சங்களின்படி, கடன் நம்பத்தன்மை உள்ளவர்களுக்கு மாதம் 1 1/2 வீத வட்டிப்படி (வருடத்திற்கு 18%) பிணை அடிப்படையில் இரண்டு அரச வங்கிகளும் நிதி வழங்க வேண்டியுள்ளன. மேலும், இதை பிரஜா நய நியாமக்க முகவர் 2 1/2 வீத மாதவட்டிக்கு மேற்படாமல் (வருடத்திற்கு 30%) கடன் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடனை எவ்வாறு வழங்க வேண்டுமென்பதற்கான வழி காட்டல்களை வங்கிகள் இம்முகவர்களுக்கு கொடுத்த போதிலும் அவர்கள் கடன் வழங்குவதற்கான ஆவணங்கள், அத்தாட்சி ஆகியனவற்றை காட்ட வேண்டுமென்பது அவசியமில்லை. இத்திட்டமானது, சிறு கடனாளிக்கு உதவும் நோக்கத்தை கொண்டிருப்பதால் கடன் தொகை ரூ. 5,000 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் சிறு கடனாளிகளின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு முறைசாராப் பிரிவின் வளங்களுக்கு, வங்கிகளின் நிதி வளங்கல்கள் குறைநிரப்புச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வங்கிகளின் வளங்களுடன், வங்கிகளினால் வழங்கமுடியாத நெகிழ்ச்சித்தன்மையை இக் கடன் முகவர் வழங்குகின்றார். கடன் முகவர்களினால் வழங்கப்படும் அதிகமான நிதிகளும் இதன் விளைவாக முறைசாரா கடன் வழங்குவோரிடையே ஏற்பட்டுள்ள போட்டி மனப்பான்மையும் கடன் செலவுகளைக் குறைத்து, சிறு கடனாளிகளின் தேவைகளுக்கான கடனை அதிக அளவில்

அளிக்கவும் கடன் முறைகளின் நிபந்தனைகளை சீர் செய்யவும் வழிகோலலாம். ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு பிரஜா நய நியாமக்க முகவர்கள் என்ற அடிப்படையில் நாடு முழுவதும் 14,000 முகவர்களை நியமிக்க வங்கிகள் திட்டமிட்டிருப்பதால் இவர்களுக்கும் ஏனைய முறைசாரா குழுக்களுக்கும் ஏற்படக்கூடிய போட்டி, முறைசாரா பணச்சந்தையின் வட்டி விகிதங்களை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதிகளின் வழங்கலை அதிகரிப்பதாலும், சிறு கடனாளிகளுக்கு கிடைக்கக் கூடிய தெரிவுகள் அதிகமிருப்பதாலும் கிராமிய நிதிச் சந்தையின் வட்டி விகிதங்களை இந்நிலைமை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் வெற்றி ஓரளவுக்கு கடன் முகவர்களின் தேர்வில் தங்கியிருக்கும். எனவே, இலாபத்தை மட்டுமே இலட்சியமாகக் கொண்டவர்களையல்லாது, சமுதாய நலனை நோக்கமாகக் கொண்டவர்களையே கடன் முகவர்களாக நியமிக்க வங்கிகள் முயற்சிகளை எடுக்கின்றன. மேலும், உற்பத்தியை அபிவிருத்தி செய்வதுடன் வறுமையை ஒழிக்கவும், மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும் செய்யும் ஒரு முக்கியமான திட்டமாக இதை இவ்வங்கிகள் நோக்குகின்றன.

இரண்டு அரச வங்கிகளும், 7000க்கும் அதிகமான பி.ந.நி. கடன் முகவர்களை நியமனஞ் செய்துள்ளதுடன் 200 கோடி ரூபாவிற்கும் மேற்பட்ட கடனை பகிர்ந்தளித்துள்ளன. இந்த கடன் முகவர்கள் சுய தொழில், சிறு வியாபாரம் மற்றும் பல்வேறு சேவைகள் உட்பட பல்வேறு நோக்கங்களுக்காகவும் கடன்களை வழங்கியுள்ளனர். எனினும், திட்டத்தின் தேவைக்கு அமையாது, ஒருசில கடன் முகவர்கள், சிறிய முயற்சிகளுக்கல்லாது, பெரிய கடன்களையும் வழங்கியுள்ளனர். சில சமயங்களில் கடன் நிதிகளை வழங்காது, தமது உறவினருக்கு மட்டும் கடன் வழங்கி இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும், வங்கிகளினால் தமக்களிக்கப்படும் உச்சமட்டக்கடன் தொகை போதியதாயில்லை எனக் கடன் முகவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். தாம் வங்கிகளினால் முகவர்களாக நியமிக்கப்பட்டவர்களாக இருப்பதனால் கடன் பெற வருவோருக்கு, தமது நிதி வளங்கள் தீர்ந்துவிட்டன என்று கூறத் தம்மால் முடியாது உள்ளது என்றும் இவர்கள் கூறுகின்றனர். மாதத்திற்கு 1% இலாப எல்லை கொடுக்கப்படுவது போதவில்லை என்றும், ஏனெனில் கடன் நட்டவச்சப் பளு முழுவதும் தம்மீது உள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

முறைசாரா கடன் வழங்கலை நிறுவனப்படுத்தப்பட்ட முறையுடன் இணைக்கும் இப்பரீட்சார்த்தமானது மிகவும் உபயோகமான ஒரு திட்டம் என்று சந்தேகமில்லமால் கூற முடியும். முறைசாரா கடன் வழங்குவோர் தடைகளின்றி தொடர்ந்து கடன் வழங்குவதை வங்கிகள் உத்தரவாதப்படுத்தினாலன்றி இத்திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட முடியாது. வங்கிகள் நம்பகமான பி.ந.நி. கடன் முகவர்களுக்கு கடன் வழங்குவதோடு, அவற்றைத் திரும்பப் பெறக்கூடியதாயும் இருக்க வேண்டும். மேலும், கடன் வழங்குவதில் முகவர்களுக்கு போதிய சுதந்திரமும் அளிக்கப்படுதல் வேண்டும். வங்கிகளுடன் இணைப்பு ஏற்படுத்தும் போது முறைசார் விதிமுறைகளை திணிக்க முயலக்கூடாது. கடன் முகவர்கள் நம்பகமானவர்களாக இருப்பதனாலும் அவர்கள் தமது பணத்தையே கடனாகக் கொடுப்பதாலும், தமது விருப்பப்படி கடன்களை வழங்கும் சுதந்திரம் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

## அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கல்

வறியோர்களை அணுகி, உதவ வேண்டுமென்ற நோக்கில், வங்கிகள், அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு கடன் கொடுத்து, அதன் மூலம் அந்த அமைப்புக்களின் நிபந்தனைகளின்படி குழுவினருக்கோ த்னி நபர்களுக்கோ கடனை வழங்கும் ஒரு மாதிரியை பின்பற்றுகின்றன. அரசு சார்பற்ற அமைப்புக்கள் இக்கடன்களை சரியான முறையில் கண்காணித்து, இவற்றினை வசூலிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுகின்றன. இம்மாதிரியை குறிப்பாக அரசாங்க வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு விஸ்தரிக்கும் பொருட்டு இரு அரச வங்கிகளும் முயற்சிகளை எடுத்துள்ளன. சில அரசு சார்பற்ற நிறுவனங்கள் நடைமுறையிலுள்ள சந்தை விகிதங்களில் கடன்களைப் பெற்று, தாம் எடுக்கும் நட்டவச்சத்தை உள்ளடக்கி, தமக்கென நிதி அடித்தளமொன்றை கட்டியெழுப்பிக் கொள்ளக்கூடிய முறையில் சிறு அளவு வட்டி ஆதாயத்துடன் கடன்களை வழங்குகின்றன. விவசாய உள்ளீடுகள் பெறுவதற்கும், சந்தைப் படுத்தவும் இந்த அமைப்புக்கள் கடன் வழங்குகின்றன. இதனுக்கான வட்டி அதிகமாயிருப்பினும் கடன் பெறுவோருக்கு ஏற்ற முறையில் வளைந்து கொடுக்கக்கூடியதாக இருப்பதும் உடனடியாக கடன்கள் கிடைப்பதும் இதன் அனுகூலங்களாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் வங்கியிடமிருந்து கடனைப் பெற்று, தனது அங்கத்தவர்களுக்கு கடன் கொடுப்பதால் பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன. முறைசாரா முறையில் கடன் கொடுப்பவர்கள், பெரும்பாலும், கடனை சந்தைப்படுத்தலுடன் இணைக்கின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து கடன் பெறும் உற்பத்தியாளர், தொகையாக கொள்வனவு செய்பவருக்கு (தரகு முகவர்) மட்டும் விற்பனை செய்ய வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுவதில்லை. எனவே அவர்கள், சந்தை விலைகளில் தமது உற்பத்திப் பொருட்களை விற்க முடியும். அரச சார்பற்ற நிறுவனங்கள், தாம் பெற்ற கடன் நிதிகளை போக்குவரத்து வசதிகளை வழங்கவும், சந்தைப்படுத்தலில் உறுப்பினர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் பயன்படுத்தியுள்ளன. மேலும், நகரத்திலுள்ள சந்தைகளில் உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனவு செய்யவும், ஒழுங்கான அல்லது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் சந்தைகளில் பங்குபற்றவும் முயற்சிகள் எடுத்துள்ளன. உற்பத்திகளை சந்தைப் படுத்துவதனால் ஏற்படும் புதிய பொருளாதார முயற்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், கடன் பெறுவோர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் அங்கத்தவர்களாயிருப்பதால், கடன்களைத் திரும்ப அடைப்பதிலும் அவர்கள் மிகவும் பொறுப்புள்ளவர்களாயிருக்கின்றனர்.

கொழும்பு தமிழ்ச் சங்கம் நூலகம்

முன்னர் கூறப்பட்ட மாதிரியை விரிவான முறையில் செயற்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அந்நிய நிறுவனங்கள் கடனைத் திரும்பத்தர தவறுவோர்களுக்கான உத்தரவாதத்தை இந்த அரசுசாரா அமைப்புக்களுக்கு கொடுத்துள்ளன. கடன்களை திரும்பிப் பெறுவதில் உத்தரவாதம் இருப்பதால், வங்கிகளும் சற்று வளைந்து கொடுக்கின்றன. மேலும், இந்த உத்தரவாதத்தின் அடிப்படையில், வங்கிகளும் வசூல் விகிதத்தை தாம் மதிப்பீடு செய்யும் அடிப்படையில், மேலும் அதிக தொகையைக் கடனாகக் கொடுக்கக் கூடியதாயிருக்கின்றது. மேலும், உத்தரவாதம் பற்றி அங்கத்தவர்களிடையே பிரபலப்படுத்தக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஏனெனில், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அப்பொழுது தான் அவர்களுக்கு பொறுப்புணர்வு இருக்கும்.

மேற்கூறப்பட்ட மாதிரியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கும் மாறுபடுகிறது. அரச சார்பற்ற நிறுவன அங்கத்தவர்கள் வங்கியிடமிருந்து நேரடியாகவே ஓரளவு கடனைப் பெறுகின்றனர். இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒப்புதல் அளிப்பதோடு, அவை, நிதிகளின் பிரயோகத்தை மேற்பார்வை செய்து, அவற்றை வசூல் செய்வதிலும் உதவி, செய்கின்றன. ஆனால், கடன் கொடுப்பதில், வங்கிகளுக்கு நட்டவச்சம் இருப்பதால் கடனை வழங்கும் பிரமாணங்களை வங்கிகளே நிர்ணயிக்கின்றன. ஏனைய கடன்களில், வங்கி அ.சா. நிறுவனங்களுக்கு கடன் கொடுக்க, அவை தம் சங்கத்தவர்களுக்கு மீளக் கொடுப்பதால், அந்தக் கடனுக்கான முழுப் பொறுப்பையும் இந்த நிறுவனங்களே ஏற்கின்றன. மூன்றாவது மாதிரியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் உத்தரவாதத்தை அளிக்கின்றன; ஆனால் வங்கி தனது சொந்த அளவுகோள்களின் அடிப்படையில் கடன் வழங்கும் தீர்மானத்தை எடுக்கின்றன அதே சமயம், இப்படியான உத்தரவாதம் செயல்படுவது பற்றி கடன் பெறுவோர் அறிவதில்லை.

இம்மாதிரியை விரிவாக்குவதில் அதிகமான கஷ்டங்கள் உள்ளன. பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாட்டு வளங்களிலிருந்து தம் செயற்பாடுகளுக்குகான மானியத்தைப் பெறுவதால், வட்டியின்றியோ குறைவான வட்டியிலோ இவை கடன்களை வழங்குகின்றன. இதன் விளைவாக, அவற்றால் அதே வேளையில் சந்தையில் உள்ள வட்டி விகிதங்களில் கடன்களை வழங்க முடியாதுள்ளது. உண்மையில் சந்தை நிலவரப்படி கடன் பெறுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊக்கம் காட்டுவதில்லை. வங்கிகள் மிகக் குறைந்த சந்தை வட்டியில் கடன் வழங்க முன்வந்தாலும், வறுமையை ஒழிக்க வேண்டுமென்றால் வட்டியை மேலும் குறைக்க வேண்டுமென இவை கருதுகின்றன.

## ''நிஸ்கோ'' திட்டம்

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கும் சிறு தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்கும் பொருட்டு, அரசாங்க நிறுவனமான தேசிய இளைஞர் சேவைகள் (நிஸ்கோ) மன்றத்தை அரச வங்கிகள் பயன்படுத்துத்தியுள்ளன. ''நிஸ்கோ'' இதற்கான செய் திட்டங்களை தயாரிப்பதிலும், அதற்கான திறன்களையும், உள்ளீடுகளையும் பெறுவதில் இளைஞர்களுக்கு உதவி செய்வதிலும், தேவையான நிதியின் ஒரு பகுதியைக் கடனாக வழங்குவதிலும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. மேலும், அது, செய்திட்டங்களை மேற்பார்வை செய்து இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை தீர்க்கவும், உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் உதவுகிறது. நிதிகளைத் திரும்பப் பெறுவதற்கும் அது உத்தரவாதம் அளிக்கிறது. விரிவான அமுலாக்களிலும் கடன் வசூலிலும் மிகவும் வெற்றிகரமான திட்டங்களில் ஒன்றாக இது இருந்தது. 25 கோடி ரூபா வங்கிக் கடனில் 3500 சிற்றளவு செய்திட்டங்கள் நிதிப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக நிஸ்கோ இயங்கி வந்துள்ளது. வங்கி நிதிப்படுத்தல் இல்லாமலேயே அதிகமான செய்திட்டங்களை ''நிஸ்கோ'' செயற்படுத்தி வருவதையும் குறிப்பிட வேண்டும்.

## அனுபவம் புகட்டிய பாடங்கள்

இந்த பரீட்சார்த்தங்கள் மூலம் நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் என்ன? சிறு முயற்சிகளுக்கு கடன் வழங்குவதிலும் பார்க்க, சேமிப்புக்களைத் திரட்டுவதில்தான் அதிகமான வெற்றி கிடைக்கும் என்பதை சிறிய கடனாளிகளுக்கு உதவுவதற்காக நிறுவப்பட்ட நிறுவனங்களின் அனுபவங்கள் காட்டுகின்றன. எனவே, அதிகமானோரை அணுகி, அதிகளவு சேமிப்புக்களைக் திரட்டுவதற்கான வழிமுறைகளை இந்நிறுவனங்கள் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், வங்கிகளும் அரை வங்கி நிறுவனங்களும் சேமிப்பைத் திரட்டுவதில் அதிகமான வல்லமை உள்ளனவாகவிருப்பினும், முறைசாரா கடன் வழங்குவோர் வெகு சுலபமாக சிறு சிறு கடன்களை வழங்கக் கூடியதாயிருக்கிறது. இவ்விரு பிரிவினரின் வளங்களும் முறைசாரா கடனை வழங்க ஒன்றிணைக்கப்படின் நிறுவன ரீதியான கடனுக்கு குறைநிரப்புச் செய்வதற்கு இந்த வளங்களைப் பயன்படுத்த முடியும்.

குறிப்பாக, அரசாங்க ஆதரவிலான அல்லது அரச நிறுவனங்கள், சிறு விவசாயிகளுக்கும் சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கும் கடன் வழங்கும் போது, கடனாளிகள் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தாத சந்தர்ப்பங்கள் அதிகமாயிருப்பதை அனுபவம் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறது. அரச நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றால் அவற்றைத் திரும்பச் செலுத்த வேண்டியதில்லை என்று சாதாரண மக்கள் நினைப்பதே இதற்குக் காரணமாகும். இதனால் இந்த நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த நிலையில் மீள் கடனளிப்பை நிறுவன ரீதியல்லாத மூலங்கள் வழியாக வழங்குவது விரும்பத்தக்கதாகும்.

முறைசாரா முறையில் கடனை வழங்கும்போது, கடன் கொடுப்பவர்கள் கடும் நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை. தனக்குத் தானே பொறுப்பாளியாக இருப்பதால் எல்லாவற்றையும் அவர்களே தீர்மானம் செய்து கொள்ள முடியும். தமக்கு எது அவசியமோ அவற்றையே அவர்கள் நிபந்தனைகளாக வைத்துக் கொள்வார்கள். அவை ஒன்றுமே கட்டளைகளாக இல்லாதபடியால் அவற்றைத் தமக்குப் பொருத்தமான முறையில் மாற்றிக் கொள்ளலாம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான

முறையில் வட்டி விகிதத்தைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியும். கடன் கொடுப்போருக்கும் கடன் பெறுவோருக்குமிடையிலான தொடர்பின் அடிப்படையில் வழங்கப்படுவதால் கடனைத் திரும்பப் பெறுவதில் அதிகமான தவறுகள் ஏற்படுவதில்லை. முறைசாரா கடன் முறைகளில் பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றன. இதற்கு எதிர்மாறாக, கடன்வழங்கும் நிறுவனங்கள் பல்வேறு விதி முறைகளைக் கடைப்பிடிக்கின்றன: ஆவணங்களைச் சரிவர எழுதி அவற்றைச் சரியாக கடைப்பிடிக்க வேண்டும். வங்கி உத்தியோகத்தர்கள் மிகவும் ஜாக்கிரதையாக விதிமுறைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கடமையாற்ற வேண்டும். வட்டி விகிதங்களையும் ஒரு எல்லைக்குள் மாத்திரமே மாற்ற முடியும். உதாரணமாக, வங்கியானது வட்டியின்றி கடனை வழங்க முடியாது.

மேலும், 120–130 விகிதமும் வட்டியாகப் பெற முடியாது. வங்கிகள் போன்ற நிறுவனங்கள் வறியவர்களுக்கு கடன் கொடுத்து உதவுவதற்கு ஓரளவுக்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், முறைசாரா கடன் கொடுப்பவர்களைப் போல அவை செயற்பட முடியாதுள்ளது. வங்கிகள் தம் நோக்கங்களில் சற்று வளைந்து கொடுக்கலாம்; வழி முறைகளை எளிதாக்கலாம்; வறிய மக்களுக்கு கடன் வழங்க தம் உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்தலாம்; ஆனால் அவை விதிமுறைகளின்படி செயல் ஆற்றுவதோடு ஆவணப்பத்திரங்களையும் பெற வேண்டும். உண்மையான செலவினங்களை உள்ளடக்கிய முறையில் வட்டியைப் பெற முடியாதபடியால் வறியோருக்கு அதிகமாக கடன்களை வழங்க முடியாதிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தான் வங்கிகள் கடனை வழங்க முடியுமானபடியால், முறைசாரா வழியில் முறையில் கடன் வழங்குவோர் ஆற்றும் செயல்களை வங்கிகளும் ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. எனவே, வறிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது கையாளக்கூடிய பல முறைகளில் ஒன்றையாவது, வங்கிகள் பின்பற்ற வேண்டும் என்று யோசனையைக் கூற வேண்டும்.

### வறிய மக்களுக்குச் சேவை செய்வதற்கான வழிமுறைகள்

கடன் பெறுவோருக்கும் வங்கிகளுக்கும் உதவி செய்யும் பொருட்டு, வங்கியின் சில செயற்பாடுகளை ஆற்றவென, குறிப்பாக அரச சார்பற்ற நிறுவனங்களை மத்தியஸ்த அமைப்புக்களாக பயன்படுத்தல் ஒரு முறையாகும். செய்திட்டங்களை திட்டமிடவும், படிவங்களை நிரப்பவும், கடன் பெறுவோரின் சார்பில் பேச்சுவார்த்தை நடாத்தவும், செய்திட்டங்களை மேற்பார்வை செய்யவும், முதலீடுகள் வெற்றிபெற உதவவும் இவை துணை புரியலாம். இரண்டாவது யோசனையானது வங்கிகள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நேரடியாகவே கடனை வழங்கி அவை முறைசாரா கடன் வழங்குவோர் போல் செயற்படுவதற்கு இடமளிப்பதாகும். அவர்கள் எடுக்கும் நட்டவச்சம், மூலதனம் மீளப் பெறல் ஆகியனவற்றின் அடிப்படையில் கடனை விலையிட முடியும்.

மூன்றாவது யோசனை சிறு கடனாளிகளுக்கு, நட்டவச்சத்தை ஏற்று கடன் கொடுக்கும் நபர்களுக்கு நிதியைக் கடனாக வழங்குவதாகும். பி.ந.நி. கடன் முகவர் திட்டமும் இதற்கான ஒரு முயற்சியாகும். இதன் மூலம் முறைசாரா கடன் வழங்குவோரிடையே போட்டி உருவாக்கப்படுகிறது. வட்டி வீதங்களை கட்டுப்படுத்திர, நிதிகள் எவ்வாறு கடனாக வழங்கப்பட வேண்டும் என்பதற்கு நிபந்தனைகள் விதிப்பதற்கு பதிலாக கடன் வழங்குவோரின் எண்ணிக்கையையும் கடன் தொகையையும் அதிகரிப்பதே இத்தகைய திட்டமொன்றின் நோக்கமாக இருத்தல் வேண்டும். நாலாவது யோசனை, ஏழை மக்களுக்கென கடன் கொடுப்பதற்காக விசேட வங்கிகளை நிறுவுவதாகும். ஆனால் நிதிகளின் நிதிச் செலவினம், கடன் கொடுப்பதில் ஏற்படும் நிர்வாக செலவு கொடுக்கல் வாங்கல் செலவுகள், நட்டவச்சம் ஆகியவற்றை உள்ளடக்கக்கூடியதாக இருந்தால், அதற்கேற்ப வட்டி விகிதங்களை நிர்ணயித்தால் மட்டுமே இத்தகைய வங்கிகள் நிலையாக உயிர் வாழ முடியும்.

கடைசியாக நான் கூற வேண்டியது என்னவென்றால், என்னுடைய அபிப்பிராப்படி, வறிய மக்களுக்குக் குறைந்த வட்டியில் கடனை வழங்குதல், அவர்களுக்கான உறுதியான கடன் திட்ட அபிவிருத்தியொன்றுக்கு குந்தகம் விளைவிக்குமென்பதாகும். செலவினங்களைச் சமாளிப்பதற்கு குறைந்தளவு வட்டி போதியதாயிருக்க மாட்டாது. வறிய மக்களுக்குத் தேவையானது, இலகுவாக கடன் பெறுதலேயல்லாமல், குறைந்தளவு வட்டியில் கடன் பெறல் அல்ல. எனவே, வங்கிகளினால் கணிக்கப்படும் வட்டி விகிதத்தில், நிதிச் செலவினம், அவற்றின் கொடுக்கல் வாங்கல் செலவினம், மற்றும் மக்களுக்கு கடனை வழங்குவதால் தாங்க வேண்டிய அபாயம் ஆகிய அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். இச்செலவினம் இதில் அடங்கியிராவிடின் விரிவான முறையில் கடனை வழங்க முடியாதிருப்பதோடு, வறிய மக்களின் ஒரு பகுதியினரே நிறுவகப்படுத்தப்பட்ட கடனைப் பெறக்கூடியதாகவும் இருக்கும். வறிய மக்களில் பெரும்பாலானோர் முறைசாரா வழிகள் மூலம் தமது கடனைப் பெறுவதோடு, மேலதிக வட்டியையும் கொடுக்க வேண்டி வரும். சந்தை வட்டி விகிதங்களே வறிய மக்களுக்காக வழங்கப்படும் வங்கிக் கடன் முறைக்கு அடிப்படையாக இருக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயமாகும். இல்லாவிட்டால் சுய-வேலை வாய்ப்பு, சிறு முயற்சிகள் ஆகியவற்றிற்குக் கூட போதியளவு வளங்களைப் பெற முடியாமல் இம் மக்கள் தத்தளிப்பார்கள்.

"வறியோருக்கான வங்கிப்படுத்தல" "ஏழ்மை வங்கிப்படுத்தல்" ஆக மாறினால், ஏழைகள் வங்கிப்படுத்தல் செய்ய முடியாது. எனவே, உறுதியான கடன் முறையே மிகவும் முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சிறு பகுதியினருக்கே சேவை செய்யக்கூடிய முறையில் வட்டி விகிதத்தைக் குறைத்து, சிறு தொகைகளை கடனாக வழங்குதல் வங்கிகளின் நோக்கமாயிருத்தலாகாது. மேலும், நாம் வங்கிச் சேவைகளின் தரத்தையும் முன்னேற்ற வேண்டும்.

# கிராமிய வறியோருக்கான புதுமை நோக்கிலான நிதியுதவிகள்

லக்ஷ்மன் ஆர். வட்டவல
தலைவர், மக்கள் வங்கி

வறியவர்களுக்கு கடன்களை வழங்கும் கருதுகோள் புதியதொன்றல்ல. மூன்றாவது மண்டல நாடுகளின் அபிவிருத்தி உத்திகளின் ஒரு பாகமென்ற முறையில், விவசாய உற்பத்தி அதிகரிப்பும், வறியோருக்கான நிவாரணமும் 1950களின் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. உலகின் வறியோருக்கென வகுப்பட்டுள்ள விவசாய அபிவிருத்தி உத்திகளில், ஓர் அடிப்படைத் தேவை என்ற முறையில் கடனின் முக்கியத்துவம் நீண்ட காலமாக ஏற்கப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, தொழில்படு மூலதனம் அருமையாக இருப்பதனால் இது அதிகளவில் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. சிறு விவசாயிகள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே நிறுவன ரீதியான அமைப்புகளிலிருந்து கடன்களைப் பெறக் கூடியதாக இருந்தது. வங்கித் தொழில் வட்டாரங்களும் தமது நடவடிக்கைகளை வறியோரின் பால் திருப்ப அதிக அளவு அக்கறை காட்டவில்லை.

சிறப்பு விவசாய வங்கிகளும், பாரிய அபிவிருத்திச் செய்த்திட்டங்களும், கூட்டுறவு ஸ்தாபனங்களும், பல்வேறு அரசுசாரா அமைப்புக்களும் இந்த இடைவெளியை நிரப்ப முயன்று வந்த போதிலும் அத்தகைய சேவைகள் வறியோரைச் சென்றடையவில்லை; அல்லது வரையறுக்கப்பட்ட அளவிலேயே அவை அவர்களுக்குக் கிட்டின. வங்கி நடைமுறைகளிலும், ஸ்தாபனக் கட்டுக் கோப்புகளிலும் புதுமை நோக்கிலான பல மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், பெருந்தொகையான கிராமிய வறிய மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வங்கிச் சேவைகளை வழிப்படுத்துவதற்கு எவரும் முயலவில்லை. இந்த வறிய மக்கள் முறைசாராப் பிரிவிலிருந்தும், பெருமளவுக்கு சுரண்டல் தன்மை வாய்ந்த மூலங்களிலிருந்துமே தமக்குத் தேவையான கடன்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். கிராமப் புறங்களில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய மாற்றமொன்றை எடுத்து வரும் விஷயத்தில் வர்த்தக வங்கிகளும், அபிவிருத்தி வங்கிகளும் அதிகளவு வெற்றியைப் பெறவில்லை. வங்கித் தொழில் நகர்ப்புறங்களில் வேரூன்றி இருந்ததுடன், அது கிராமங்களிலிருந்து வெகுதூரம் ஒதுங்கியே காணப்பட்டது. இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் வர்த்தக வங்கிகளும், பல்வேறு வெளிநாட்டு ஸ்தாபனங்களும் வறியோருக்கிடையே தோற்றம் பெற்றுள்ள அமைப்புக்களும் நிதிசார் புதுமைப் புனைவுகளையும், பரீட்சார்த்தங்களையும் இப்பொழுது அறிமுகஞ் செய்து வருகின்றன.

## 2. கிராமிய வறுமை

கடந்த இரண்டு தசாப்த காலத்தின் போது ஆசிய வளர்முக நாடுகள் வேளாண்மை உற்பத்தியிலும், கிராமிய வருமானங்களிலும் கணிசமான முன்னேற்றங்களை அடைந்து வந்துள்ளன. விரிவாக்கப்பட்ட போக்குவரத்து வலைப்பின்னலமைப்பு, சிறந்த தொலைத் தொடர்பு முறைகள், வளர்ச்சி கண்ட நீர்ப்பாசனக் கட்டமைப்பு மற்றும் நவீன நிர்மாணம் என்பவற்றுடன் இணைந்து நாட்டுப்புறங்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டு வந்திருக்கிறது. எனினும், இந்த அபிவிருத்திகளைக் கொண்டு, அனைத்து நாடுகளும் தமது அபிவிருத்தி நிகழ்வுப் போக்கின் புறப்பாட்டுக் கட்டத்தை அடைந்து விட்டன என்று கூற முடியாது. தலைக்குரிய வருமானம் அதிகரித்துள்ள போதிலும் வறியோரின் நிலையில் எத்தகைய பாரிய மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை என்பதனை கிடைக்கக்கூடியதாக உள்ள தரவுகள் காட்டுகின்றன. வளர்முக நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையில் வாழ்கிறார்கள் அத்துடன் உலக வறியோரில் நான்கில் மூன்று பங்கினர் ஆசியப் பிராந்தியத்தில் உள்ளனர். வறிய மக்கள் கிராமப் புறங்களிலேயே பெருமளவுக்கு செறிந்து வாழ்கின்றனர். கிராமிய வறியோரில் பெருந்தொகையானோர் சமயாசமய கூலித் தொழிலாளர்களாகவே இருந்து வருகின்றனர். இவர்கள் வேளாண்மைத் துறையில் (அல்லது மற்றும் துறைகளில்) தமது ஊழியத்தை பயன்படுத்தி வருகின்றனர். இவர்களிடம் வழங்குவதற்குள்ள ஒரே பொருள் தமது உழைப்புச் சக்தி மட்டுமே.

## 3. வறியோரின் தேவைகள்

பொதுவாக, வளர்முக உலகில் வாழும் வறிய மக்கள், குறிப்பாக ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த வறியோர், தமது உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கும், வாழ்க்கை நிலைமைகளை உயர்த்திக் கொள்வதற்கும் நிதி வசதியற்றவர்களாக உள்ளனர். சொத்துக்களைத் திரட்டிக் கொள்வதற்கும், கஷ்டமான நாட்களில் நுகர்வு மட்டங்களைப் பேணிக் கொள்வதற்கும் கடன் இவர்களுக்கு உதவ முடியும். ஆனால் வங்கிகள் எதிர்பார்க்கும் பிணைகள் கிராமிய, நகர வறியோர்களிடம் இருப்பதில்லை. அத்துடன் பல்வேறு முத்திரைகளை வாங்குவதற்கான பணமும் அவர்களிடமில்லை. வரையறுக்கப்பட்ட அலுவல் நேரங்களுக்குள் வங்கிகளைச் சென்றடையவும் அவர்களால் முடிவதில்லை. கிராம மக்கள், வங்கிக் கிளையொன்றுக்கு வந்து சேருவதற்கு பல மைல் தூரம் நடக்க வேண்டியுள்ளது ; அல்லது நீண்ட பஸ் பிரயாணங்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். இந்த வரையறைகள் காரணமாக வங்கிகள் ஆசியாவின் வறியோரின் கடன் தேவைகளில் 15% ஐ மட்டுமே நிறைவு செய்வது சாத்தியமாகியுள்ளது. தனிப்பட்ட நாடுகளைக் கவனத்தி


வெடுத்துப் பார்க்கும் போது இந்த நிலை இன்னும் மோசமாக இருக்கிறது.

பிரதானமாக நெல் உற்பத்தியைப் பாதுகாத்தல், தையல் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல், ஊறுகாய் தயாரிப்பதற்கான உள்ளீடுகளைப் பெறுதல் அல்லது திடீர் சுகயீனத்தின் போது கடன் பெறுதல் போன்றனவே கிராம வறியோர்களின் தேவைகளாக உள்ளன. எனினும், வங்கிகள் இத்தகைய சிறு கடன்களில் அதிக அக்கறை காட்டுவதில்லை. இந்த மக்களுக்குத் தேவையான வேளையில் பணத்தை வழங்கக்கூடிய நிலையிலும் அவை இருப்பதில்லை. பாரம்பரிய வங்கி நடைமுறைகள் காரணமாக கிராமிய வறியோர் வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறமுடியாதுள்ளனர். இதனால் அவர்கள் உயர் வட்டியில் கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரர்களை நோக்கிச் செல்கிறார்கள்.

இதனை நோக்கி மூன்றாவது மண்டல நாடுகளில் – குறிப்பாக ஆசிய பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளில்-பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### வறியோருக்குக் கடனளிப்பதற்கான முயற்சிகள்

கடன் கிடைக்கக் கூடியதாக இருக்கும் நிலை, கிராமிய அபிவிருத்திக்கு ஒரு முன் நிபந்தனையாக கருதப்படுகிறது. சமீப வருடங்களில் சிறு விவசாயிகளையும், கிராமிய வறியோர்களையும் கடன் திட்டங்களில் சேர்த்துக் கொள்வதற்கான பல புதுமை நோக்கிலான முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு எத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் மிக முக்கியமானது பாரம்பரியப் பிணைத் தேவைகளை மாற்றியமைத்ததாகும். இதற்குப் பதிலாக, கூட்டாகப் பிணைநிற்கும்




இதன் விளைவாக, ஆசிய வறியோர் கடன் தொல்லையில் தொடர்ந்தும் சிக்கித் தவித்து வருகின்றனர். எனவே, சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு வங்கிச் சேவைகளை விஸ்தரிப்பதன் மூலம் லேவாதேவிக்காரர்களின் பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பது அவசியமாகும். சுய தொழில் வாய்ப்புக்களை வளர்க்கும் வகையில் கடன்வசதிகளை வழங்குதல் வேண்டும். வசதி வாய்ப்புக்களை இழந்திருக்கும் பிரிவினரிடையே பரஸ்பர உதவியை ஊக்குவிக்கும் வகையில் நிதி உதவியை அளிப்பது அவசியமாகும். கொடிய வறுமை என்ற விஷச் சுழலிலிருந்து மக்களை விடுவிப்பதற்கு நிதி நிறுவனங்கள் இதற்கூடாகப் பங்களிப்புச் செய்ய முடியும். கிராமிய வறியோரின் தேவைகள் இனங்காணப்பட்ட போதிலும் வறுமை என்ற விஷச் சுழலை அகற்றி விடுவது இலகுவான காரியமல்ல. தற்போதைய அரசியல், பொருளாதார சூழ்நிலைகளில் வறுமைக்கு எதிராகப் போர் தொடுப்பது கூட ஓர் இலகுவான பணியல்ல. எனினும்,

முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடு குழு உறுப்பினர்கள், குழுவின் கண்காணிப்பின் கீழ் கடன்களைப் பெறுவதற்கு வகை செய்கிறது. கிராமப் புறங்களில் வங்கிக் கிளைகள் விஸ்தரிக்கப்பட்டமை, எளிதாக்கப்பட்ட நடைமுறைகள், வங்கிகளின் செயற்பாடுகள் குறித்த அதிகளவு தகவல் என்பன ஏனைய மாற்றங்களாகும்.

வர்த்தக வங்கிகள், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் ஏனைய கொடுகடன் நிறுவனங்கள் போன்ற அரச அமைப்புக்களினதும், அரசுசாரா அமைப்புகளினதும் முன் முயற்சிகளினால் கிராமிய வறியோருக்கான கடன் திட்டங்கள் பல்வேறு அளவுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. சிறு தொழில் முயற்சிக் கடன் திட்டம் (கல்கத்தா), சிற்றளவு நிதியம் (பிலிப்பைன்ஸ்), கிராமிய மகளிருக்கான உற்பத்திக்கடன் (நேபாளம்), கிராமிய வங்கி (பங்களாதேஷ்), ஆகாகான் கிராமிய உதவித் திட்டம் (பாகிஸ்தான்), ஊவா கிராம மன்றம் (இலங்கை), அபிவிருத்திக்கான கிறிஸ்தவக் கமிஷன் (பங்களாதேஷ்), கூலியாள் கடன் நிதியம் (இந்தியா), வளமார்ந்த இந்தோனேஷியாவுக்கான ஆதாரம் (இந்தோனேஷியா), பிரஜா நய நியாமக கடன்திட்டம், தொழில் துவங்குவதற்கான கடன் திட்டம் (இலங்கை) என்பன குறிப்பிட்டுக் கூறக்கூடிய சில சமூகக் கடன் திட்டங்களாகும். கிராமிய, நகர வறியோர் தமக்குத் தேவைப்படும் மூல வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான புதிய வாய்ப்புக்களை இக்கடன் திட்டங்கள் வழங்குகின்றன.

**அட்டவணை 1**
**கடன் திட்டங்களின் பயன்கள்**

| திட்டம் | வருடம் | பயன் |
|---|---|---|
| சிறு அளவு நிதியம் (பிலிப்பைன்ஸ்) | 1989 | 730 |
| கிராமிய மகளிருக்கான உற்பத்திக்கடன் (நேபாளம்) | 1989 | 6,540 |
| சிறு தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டம் (கல்கத்தா) | 1989 | 36,000 |
| உழைக்கும் மகளிர் பேரவை (சென்னை) | 1988 | 50,000 |
| சிறு பண்ணையாளர் மேம்பாட்டுத் திட்டம் (நேபாளம்) | 1989 | 78,520 |
| கிராமீன் வங்கி (பங்களாதேஷ்) | 1988 | 413,000 |
| குபேடேஸ் (இந்தோனேஷியா) | 1988 | 1,300,000 |
| தொழில் துவங்குவதற்கான கடன் திட்டம் (இலங்கை) | 1990 | 10,280 |
| பிரஜா நய நியாமக திட்டம் (இலங்கை) | 1990 | 41,980 |

* இது நலன் பெறுவோரின் எண்ணிக்கையை குறிக்கிறது.

ஆதாரம் : உலக அபிவிருத்தி அறிக்கை, 1990. மக்கள் வங்கி, இலங்கை

இலங்கையில் மிக அண்மைக் காலம் வரையில் நலிந்த சமூகப் பிரிவினருக்கென எந்த விதமான விசேஷ கடன் திட்டங்களும் இருக்கவில்லை. எனினும், கிராமிய கடன் வழங்கலில் முன்னோடிப் பங்கினை வகித்துவந்த மக்கள் வங்கி, அதன் கிராமியக் கடன் திட்டத்திற்கூடாகவும், அடகு முகவர் அமைப்பொன்றாக செயற்பட்டு வந்ததற்கூடாகவும், பல சிறப்பு சேமிப்புத் திட்டங்களுக்கூடாகவும் கிராமியத் துறைக்கும், கிராமிய வறியவர்களுக்கும் பல திட்டங்களை வழங்கி வந்துள்ளது.

கிராமிய எழுச்சி (கம் புபுதுவ) போன்ற விஷேச செயற்திட்டங்களின்

# வறியோருக்கான வங்கித்தொழில்

கீழ் தெரிவு செய்யப்பட்ட இலக்குக் குழுவினருக்கென வங்கிச்சேவைகள் வழிப்படுத்தப்பட்டன. இது தவிர, கைமாற்று கடன் திட்டத்தின் கீழ் நகரத்துறையில் முறைசாரா தொழில்களில் ஈடுபட்டு வருபவர்களுக்கும் இவ்வங்கி கடன் வசதிகளை அளித்து வந்துள்ளது. அண்மையில், வறுமையை ஒழிக்கும் நோக்கில் தொழில் துவங்கும் கடன் திட்டம், பிரஜா நய நியாமக திட்டம், சுய தொழில் கடன் திட்டம், மூன்று சக்கர ஸ்கூட்டர் கடன் போன்ற பல திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளன.

## சனசக்தி நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையில் பின்பற்றப்பட்டுவரும் தற்போதையை வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் (சனசக்தித் திட்டம்), கிராமிய மட்டங்களில் சிறு தொழில் அலகுகளை ஸ்தாபிப்பதன் மூலம் மக்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியை ஊக்குவிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வறிய குடும்பமும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மாதாந்தம் 2500 ரூபாவைப் பெற்றுக் கொள்ளும். இதில் 1458 ரூபா, இதனைப் பெறுபவர் சார்பில் முதலீடு செய்யப்படும். இரண்டு வருட காலத்தில், சம்பாதிக்கப்பட்ட வட்டியுடன் கூடிய இந்த முதலீடு குறிப்பிட்ட குடும்பத்துக்கு 25,000 ரூபா சேமிப் பொன்றை வழங்கும். இந்தச் சேமிப்பைக் கொண்டு குறிப்பிட்ட குடும்பம் நிலைத்திருக்கக்கூடிய, நிலையான தொழில்வாய்ப்பொன்றைப் பெறக் கூடியதாக இருக்கும். வறிய மக்களை திறமை மிக்க உற்பத்தியாளர்களாக உருவாக்குவதும், அவர்கள் வாழும் சூழலுக்குள்ளேயே நீடித்து நிலைக்கக் கூடிய உற்பத்தி முயற்சிகளில் அவர்களை ஒன்று திரட்டுவதும் இந்த உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளாகும்.

சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதலீட்டு அம்சங்களை செயற்படுத்தும் விதத்தில், இலங்கையின் அரச வங்கிகள், சிறு அளவுத் தொழில் முயற்சியாளர்களின் நீடித்து நிலைக்கக் கூடிய செய்திட்டங்களுக்கென செலவு குறைந்த, உடனடியாகக் கிடைக்கக் கூடிய கடன் திட்டமொன்றைத் துவக்கி வைத்துள்ளன. இந்தத் திட்டங்கள் உற்பத்தி சார்ந்தவையாகவும், வருமானங்களை உருவாக்கக் கூடியவையாகவும் இருத்தல் வேண்டும். பிணையாக சொத்துக்களை ஈடாக வைக்கும் கண்டிப்பான தேவைகளை இக்கடன் திட்டங்கள் ஒழித்துள்ளன. மாறாக, பெற்றார் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவரின் உத்தரவாத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன.

(அ) வறுமையொழிப்புத் திட்டத்திற்கு உதவும் அத்தகைய ஒரு முக்கியமான திட்டம், "தொழில் துவங்குவதற்கான கடன் திட்டம்" என்றழைக்கப்படும் மக்கள் வங்கியின் செய்திட்ட நோக்கிலான கடன் திட்டமாகும். இத்திட்டம், நிதி மூலவளங்கள் இன்மையால் எந்த தொழில் முயற்சியையும் துவங்க முடியாத நிலையிலிருக்கும் இளைஞர்களுக்காக வகுக்கப்பட்டதாகும். இந்த

அட்டவணை 2
மக்கள் வங்கியின் வறியோருக்கான கடனுதவி

| கடன் திட்டம் | நலன் பெறுவோர் எண்ணிக்கை | கடன் தொகை ரூ.பத்து இலட்சம் |
|---|---|---|
| (1) தொழில் துவங்குவதற்கான கடன் திட்டம் | 30,062 | 251.7 |
| (2) பிரஜா நய நியாமக திட்டம் | 48,623 | 184.2 |
| (3) சுய தொழில் வாய்ப்பு கடன்திட்டம் (ஸீஸ்கோ) | 5,426 | 64.0 |
| (4) சுய தொழில் கடன் திட்டம் (மத்திய வங்கி அனுசரணை) | 3,207 | 15.7 |
| (5) "கைமாற்று" கடன் திட்டம் | 13,267 | 13.7 |
| (6) மூன்று சக்கர ஸ்கூட்டர் கடன் திட்டம் | 1,624 | 14.1 |
| (7) வெளிநாட்டு தொழில் வாய்ப்பு | 68,894 | 396.7 |
| (8) இலங்கை மின்சார சபையுடன் இணைந்து செயற்படுத்தப்படும் மின்மயமாக்கல் கடன் திட்டம் | 19,046 | 54.7 |
| மொத்தம் | 161,138 | 960.8 |

இளைஞர்கள் பல்வேறு வகையிலான பொருளாதார நடவடிக்கைகளில் தம்மை ஸ்தாபித்துக் கொள்வதற்கு இது உதவுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ரூபா 30,000 உச்சவரம்பு வரையில் நிதி வசதிகள் கிடைக்கக் கூடியதாக உள்ளன. இயந்திரம், உபகரணம், சிறு அளவு தொழில்படு மூலதனம் என்பவற்றின் வடிவில் உதவி வழங்கப் படுகிறது. தேவையானவிடத்து, மின்சார இணைப்புப் பெற்றுக் கொள்வதற்கும் நிதி வசதிகள் வழங்கப்படுகின்றன.

இந்த் திட்டம் பாடசாலையிலிருந்து விலகுபவர்களுக்கும், 18-40 வயதுக் கிடைப்பட்ட இளம் மக்களுக்குமென வகுக்கப்பட்டுள்ளது. தொழிலில் இருந்து கொண்டே பயிற்சியைப் பெறுவதற்கும், அல்லது அங்கீரிக்கப் பட்ட தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழில் பயிற்சி பெறுவதற்கும் இவர்களுக்கு வாய்ப்புள்ளது. தகைமை பெற்ற் இரு விண்ணப்பதாரிகளின் கூட்டு விண்ணப்பங்களும் (ரூபா 30,000 வரையில்) ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. தையல் நிலையங்கள், டயர் பழுதுபார்க்கும் நிலையம், தச்சு வேலை, சிகையலங்காரம், மேசன் வேலை, வீடுகளுக்கு மின்சார வயரிணைப்பு, வாகனப் பழுதுபார்ப்பு வேலைகள், பாதணிகள் செய்தல் மற்றும் தோல்வேலை, சிறு பொறியியல் வேலைகள், சைக்கிள், மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் நிலையங்கள், செங்கல் உற்பத்தி, தும்பு உற்பத்திகள், வியாபாரம், மட்பாண்ட உற்பத்தி, பிரம்பு வேலைகள் போன்ற சேவைத்துறை அலகுகளும், சிறு தொழில் முயற்சிகளும் இவற்றுள் அடங்குகின்றன. குறிப்பிட்ட சில பகுதிகளுக்குப் பொருத்தமான குறித்துரைக்கப்பட்ட சில திட்டங்களை இனங்கண்டு, திட்ட விபரங்களை தொகுப்பு வடிவில் திரட்டுவதும் வழங்கப்படும் பிறிதொரு வசதியாகும். இவ் வருட ஏப்ரல் முடிவில் வங்கி சுமார் 25 கோடியே 15 இலட்சம் ரூபா பெறுமதியான 20,000 செய்திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) பிரஜா நய நியாமக திட்டம்

இலங்கையில் வறியோருக்கெனத் தீட்டப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த அணுகுமுறை 1988ஆம் ஆண்டின் பிற்பகுதியில் துவக்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் இரு வங்கிகளும், நாட்டின் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் ஒவ்வொன்றும் 7000 பிரஜா நய நியாமக முகவர்களை (சமூக கடன் ஊக்குவிப்பாளர்களை) நியமனம் செய்யும். சிறு அளவு கடன்களைப் பெறுபவர்களுக்கு இலகு நிபந்தனைகளின் கீழ் கடன்களை வழங்குவதும், முறைசார் வங்கி நிறுவனங்கள் சென்றடைய முடியாதிருக்கும் பிரதேசங்களு

க்கு வங்கிச் சேவையை விரிவாக்குவதும் இந்தத் திட்டத்தின் அடிப்படைக் குறிக் கோள்களாகும். இந்தத் திட்டத்தின் கீழ் வங்கி பிரஜா நய நியாமக முகவர் களுக்கு மொத்தமாகக் கடன்களை வழுங்குகிறது. அவர்கள் முறைசாரா விதத்தில், சில்லரைக் கடன்களைப் பகிர்ந்தளிக்கின்றனர்.

ஒரு நிதியத்திற்கூடாகவே இத்திட்டத் தின் கீழ் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படு கின்றன. இதற்கென ஒவ்வொரு பிரஜா நய நியாமக அலகுக்கும் ஒரு நிதியம் உருவாக்கப்படுகின்றது. வங்கி யின் முற்பணத்தைக் கொண்டும், குறிப்பிட்ட முகவரின் பங்களிப்பைக் கொண்டும் (15 – 20%) இந்நிதியம் உருவாக்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது ஒவ்வொரு முகவரும் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப் பது அவசியமாகும். வங்கி, தொடக் கத்தில் முற்பணமாக ரூபா 100,000 வழங்கும். அடையப்பட்டுள்ள முன் னேற்றத்தைக் கவனத்திலெடுத்து இத்தொகை பின்னர் ரூபா 200,000 வரை அதிகரிக்கப்படும். ஒரு விண் ணப்பதாரருக்கு வழங்கப்படும் ஆகக் கூடிய கடன் தொகை ரூபா 5,000 ஆகும். இத்தொகை 12 மாதங்கள் வரையான காலப்பிரிவுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. தம்மால் "போது மானது" என்று கருதப்படும் பிணை களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை இந்த முகவர்களுக்குண்டு. இவர்கள் முறைசார்ந்த பணச் சந்தைக்கும், முறைசாரா பணச் சந்தைக்குமிடை யிலான இணைப்பாளர்களாகச் செயற் பட்டு வருகின்றனர். இந்தத் திட்டம் அரசாங்கத்தின் வறுமையொழிப்புத் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக இருந்து வருவதனால் வங்கி இதற்கு முக்கியத்துவமும், முன்னுரிமையும் அளித்து வருகிறது.

மக்கள் வங்கி மட்டும் இப்பொழுது நாடெங்கிலும் 4700 பிரஜா நய நியாமக அலகுகளைச் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1991 ஏப்ரல் வரையில் 48,632 பேருக்கு 18 கோடியே 40 இலட்சம் ரூபா கடனாகப் பகிர்ந் தளிக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக சார்பு ரீதியில் உயர் அளவிலான கடன்கள் (முறையே 33%, 24%) வழங்கப்பட்டிருந்தன. வியாபாரம், கால்நடை வளர்ப்பு, வீடமைப்பு போன்ற நோக்கங்களுக்காக மொத்தக் கடன்தொகையில் 28% வழங்கப்பட்டி ருந்தது. நுகர்வுக்கென மிகக் குறைந்த அளவிலேயே கடன்கள் வழங்கப்பட்டி ருந்தன.

(இ) கைமாற்றுக் கடன்திட்டம்–வசதி குறைந்த மக்கள் பிரிவினருக்கென மிக எளிய நிபந்தனைகளின் கீழ் கடன்களை வழங்கும் பொருட்டு மக்கள் வங்கி கைமாற்றுக் கடன்திட்டத்தைக் துவக்கி வைத்தது. சிறு வியாபாரங் களில் ஈடுபட்டிருப்போர், மீன் விற் போர், மரக்கறி விற்போர், சிறு விவசாயிகள் போன்ற சமூகப்பிரிவின ருக்கு கடன்களை வழங்குவதே இத் திட்டத்தின் குறிக்கோளாகும். இத் திட்டத்தின் கீழ் ஒருவர் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்கூடிய கடன் தொகை ரூபா 1000 ஆகும். இது 12 மாதகாலப்பிரிவுக்கு வழங்கப்படுவ துடன், ஒரு 'சுழல்' முறைக் கடன் வசதியாக இருப்பதால் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையும் இத்தொகை திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு இரு நபர்களின் பிணை போதுமானதாகும். கைமாற்றுக் கடன் திட்டத்தின் கீழ் 1990 ஜூலை மாத முடிவில் 6400 பேருக்கு 63 இலட்சம் ரூபா கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) சனசக்தி உரித்தாவணம் பெற்றி ருப்போருக்கான குழுக் கடன் திட்டம் – மக்கள் வங்கி, சுய தொழில் முயற்சி களைத் துவக்குவதற்கு உதவும் பிறி தொரு கடன் திட்டத்தையும் அறிமுகம் செய்து வைத்துள்ளது. சனசக்தி உரித்தாவணம் பெற்றிருக்கும் 17 இலட்சம் பேருக்கு கடன்வசதிகளை அளிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்க மாகும். இதுவரைகாலமும் நிறுவன ரீதியான கடன்களைப் பெறமுடியா திருந்தவர்கள், கடன் வசதியைப் பெற்று வருமானமீட்டும் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு இது உதவும். சிறிய, வளம் குன்றிய காணிகளை வைத்திருக்கும் விவசாயக் குடியானவர்கள், கூட்டாகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவர்கள், நிலமற்ற தொழிலாளர்கள், சிறு மீனவர்கள், கிராமியக் கைவினைஞர்கள், அகதிகள், விதவையர், பொருளாதார ஆதாரம் எதுவுமற்றோர் போன்ற நலிந்த சமூகப் பிரிவினருக்கு மூலதனத்தை அளிப்பதே இந்தக் குழுக்கடன் திட்டத்தின் குறிக் கோளாகும்.

அட்டவணை 3
பிரஜா நய நியாமக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உப கடன்கள்

| நோக்கம் | பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் விகிதம் |
|---|---|
| விவசாயம் | 24.0 |
| சிறு கைத்தொழில்கள் | 21.9 |
| வீடமைப்பு | 13.4 |
| கைத்தொழில் | 11.5 |
| வர்த்தகம் | 8.8 |
| கால் நடை வளர்ப்பு | 5.5 |
| கடன் மீட்பு | 4.4 |
| நுகர்வு | 3.4 |
| கடற்றொழில் | 1.5 |
| ஏனையன | 5.6 |
| மொத்தம் | 100.0 |

இந்தக் குழுக்களை கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் ஒன்று திரட்ட முடியும்; ஒவ்வொரு குழுவும் 10–20 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இக்குழுவுக்கு ஒரு தலைவர் நியமனம் செய்யப்படுவதுடன் இக்குழு தனது சொந்த செய்திட்டங்களை இனங் கண்டு, கண்காணித்து, உத்தரவாத மளித்து, கடன் தவணைப் பணத்தை வசூலித்து வங்கியில் வைப்புச் செய்யும், ஒவ்வொரு உறுப்பினரும் மாதாந்தம் ரூபா 50 பங்களிப்புச் செய்யும் நிதியமொன்றையும் இக்குழு கொண்டி ருக்கும். ஆகக் கூடிய கடன் தொகை ரூபா 5000 ஆகும்; இதற்கு ஆண் டொன்றுக்கு 30% வட்டி அறவிடப்படும். கடன்களை வழங்கும் ஒழுங்கு வரிசை முறை குழுவினால் தீர்மானித்துக் கொள்ளப்படும். ஒவ்வொரு குழுவு க்கும் மாதமொன்றுக்கு பகிர்ந்தளிக் கப்படும் கடன்களின் எண்ணிக்கை நிதியத்துக்குச் செய்யப்படும் பங்களிப் பின் அளவிலேயே தங்கியிருக்கும்.

## முடிவுரை

எந்தவொரு வறுமையொழிப்பு நிகழ்ச்சித் திட்டத்திலும், நீண்டகால அபிவிருத்தி உத்தியிலும் கடன்–குறிப் பாக நிறுவன ரீதியிலான கடன்–முக்கிய இடத்தைப் பெறுகிறது. எனினும், மிகச் சமீப காலம் வரையில் இத்தகைய சேவைகள் பெருமளவுக்கு நகர்சார்ந்த ஒரு அடிப்படையிலேயே செயற் படுத்தப்பட்டு வந்துள்ளன. இந்த

(13 ம் பக்கம் பார்க்க)

# மனித வளம் – நமது பெறுமதிமிக்க சொத்து

எம். என். கபூர்
துணை பொது மேலாளர்,
(நிர்வாகமும் மனிதவள மேம்பாடும்)
மக்கள் வங்கி

மனித வளங்களே எமது விலையுயர்ந்த சொத்துக்களென்பதில் மக்கள் வங்கி திட நம்பிக்கை கொண்டுள்ளது. "நாம் மக்களை அபிவிருத்தி செய்கிறோம்; மக்கள், வங்கியை அபிவிருத்தி செய்கிறார்கள்" என்பதே எமது குறிக்கோளாகும். மனித வளத்தில் உள்ள எமது அடிப்படை நம்பிக்கையை முன்னணியாகக்கொண்டு, மனிதவள திணைக்களத்தின் ஆளணி கொள்கைகள், செயல் திட்டங்கள், என்பவற்றை உருவாக்கியுள்ளோம். மக்கள் வங்கி தனது முப்பதாவது ஆண்டு நிறைவினை கொண்டாடும் இவ்வேளையில், மிகவும் சிறப்பாகக் கட்டியமைத்து அதன் தொய்வற்ற துரித வளர்ச்சிக்கு வழிகோலிச் சென்ற முன்னோடிகளை நாம் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

1961ம் ஆண்டு ஜூலை மாதம் 01ம் திகதி திரு. வின்சன்ட் சுபசிங்க அவர்களைத் தலைவராகவும், திரு டபிள்யு. எச். சொலமன்ஸ் அவர்களை பொது முகாமையாளராகவும் கொண்டு மக்கள் வங்கி தனது அலுவல்களைத் தொடக்கியது. 1961 டிசம்பர் 31ல் இருந்த மொத்த ஆளணி 149 ஆகும். அது இன்று 10,406 ஆக பெருகியுள்ளது. கடந்த 30 ஆண்டுகளில், மனித வளங்களின் வருடாந்த வளர்ச்சி பிரமாண்டமாக காணப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளில் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, அவர்களை முகாமைப்படுத்துவதிலும் சிக்கல் ஏற்பட்டது. இதனால் ஆளணி முகாமையில் ஒரு விஞ்ஞான ரீதியான புதிய அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனவே, மனிதவள முகாமைப் படுத்தல் மூன்று தெளிவான செயமுறைப் பிரிவுகளைக் கொண்டதாயுள்ளது. அவையாவன :

(1) பதவிநிலை அல்லது ஆளணி திணைக்களம்
(2) நலன்புரி திணைக்களம்
(3) பயிற்சி அல்லது மனிதவள மேம்பாட்டு) திணைக்களம்.

1990ம் ஆண்டில்-விசேடமாக இவ்வாண்டு "பலப்படுத்தும் ஆண்டு" எனப் பிரகடனப்படுத்தப்பட்டபடியினால் –, மனித வளங்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள், விளைதிறனைப் பெருக்கும் வகையிலேயே வழிப்படுத்தப்பட்டன. தூண்டுதல், நலன்புரிதல் ஆகியனவே எமது ஆளணி முகாமையின் பிரதான கருவிகளாகும்.

## ஆளணித் திணைக்களம்

உத்தியோகத்தர்களின் தொழில் ஊக்கத்திற்குத் தடையாகவிருக்கும் பகுதிகளைக் கண்டுபிடித்து, அனுகூலமற்ற நிபந்தனைகளை அகற்றி, சீர்செய்யும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட சில முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

(1) பதவி உயர்த்தல் தொடர்பான திட்டம் வகுக்கப்பட்டமை.
(2) இடமாற்றல் தொடர்பான திட்டம் வகுக்கப்பட்டமை.
(3) மனத்தாங்கல்கள், முரண்பாடுகள் பற்றி துரித நடவடிக்கை எடுத்தல்.
(4) தொழில் சங்கங்களுடன் ஒழுங்கான முறையில் ஆலோசனை நடாத்துதல்.

ஆளணி முகாமைப் பிரிவில் புதிய நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் அவசியம் நன்கு உணரப்பட்டது. இதன் பயனாக, உத்தியோகத்தர் பிரிவை கணனி மூலம் அபிவிருத்தி செய்யும் முயற்சிகளும் வளர்ச்சியடைந்து வருகிறது.

## நலன்புரி திணைக்களம்

வங்கியில் தொடர்ந்து பணியாற்றும் விருப்பினை நிலைநிறுத்துவதற்கும், மற்றும் வெளியார்கள் வங்கியில் வேலைவாய்ப்புப் பெறும் ஆர்வத்தை தூண்டவும் நலன்புரிச் சேவைகள் பெருமளவுக்கு உதவுகின்றன. ஆனால், இச்சேவைகள் மட்டுமே ஊழியர்கள் சிறப்பாக தம் தரமான பணிகளைச் செய்ய ஊக்குவிக்கின்றன என்று நாம் கருதக்கூடாது. இப்பிரிவில் ஏற்பட்டுள்ள புதிய அபிவிருத்திகள் பின்வருமாறு :

(அ) வங்கியானது வருடாவருடம் 20 கோடி ரூபாவை வீடமைப்புக் கடன் நிதிக்கு வழங்குவதன் மூலம், ஊழியர் வீடமைப்பு கடன் உச்சவரம்பினை ரூ. 500,000 ஆக உயர்த்துவது; தகைமை பெற்று, வீடமைப்புக் கடன்களை பெற்றுக்கொள்ள முடியாது போன அனைத்து ஊழியர்களையும் இவ்வாண்டிலும் 1992லும் கவனத்தில் எடுப்பது.

(ஆ) மருத்துவ உதவித்திட்டம் தாமதங்களைத் தவிர்க்கும் முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

(இ) அவசியமானவிடத்து, மருத்துவ உதவித் திட்டத்தின் வீச்சியினை விரிவுபடுத்தி, விசேஷ சிகிச்சை, அறுவை சிகிச்சை போன்ற பெரும் செலவுகளையும் அதில் உள்ளடக்குதல்.

(ஈ) தலைமை அலுவலக ஊழியர் சிற்றுண்டிச்சாலை அபிவிருத்தி செய்யப்பட்டு, அதன் சேவைகள் சீர் செய்யப்பட்டதுடன், குறைந்த செலவில், நியாயமான நல்ல சூழ்நிலையில் போஷாக்கான உணவை வழங்கவும் வசதிகள் செய்யப்பட்டன.

(உ) விளையாட்டு, பொழுது போக்கு வசதிகளை விருத்தி செய்யும் பொருட்டு விளையாட்டுக் கழகமும் புனருத்தாரணம் செய்யப்படுகின்றது.

# வறியோருக்கான வங்கித்தொழில்

### பயிற்சித் திணைக்களம்

வங்கி ஊழியர்களுக்கு, பயிற்சித் திட்டங்களில் குறைந்தது ஒரு திட்டத்திலாவது பங்குபற்ற சந்தர்ப்பம் அளித்தமை, உத்தியோகத்தர் பயிற்சிக் கல்லூரி செயற்பாடுகளில் ஒரு புதுமையை கொண்டு வந்தது எனலாம். மனித நடத்தை, நிறுவக நடத்தை ஆகியவற்றை வெளிக்கொண்டு வருவதன் மூலம் "மனப்பான்மையை மாற்றுவது" என்பதே இந்த ஆண்டின் தலையங்கமாகும். 1991ம் ஆண்டின் பயிற்சித் திட்டங்களில் ஜனசக்தியை எளிதாக்கும் பயிற்சிக்கும், வாடிக்கையாளர் சேவைக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. 1967ம் ஆண்டில் ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிக் கல்லூரி, தற்போது கொழும்பு 7ல் உள்ள ஸ்டான்லி விஜெசுந்தர மாவத்தையில் தொழில்சார் கழகங்களின் சம்மேளனத்துக்குச் சொந்தமான மிகவும் விசாலமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அது 5 சொற்பொழிவு அறைகளையும், கணனி பயிற்சி நிலையத்தையும், ஒரு மண்டபத்தையும் கொண்டுள்ளது.

முன்னர் கையாளப்பட்ட வகுப்பறை சொற்பொழிவு முறைகளிலிருந்து, செவி, கட்புல உதவிகளை பரவலாக உபயோகித்தல், பங்குபற்றல் முறைகள் போன்ற தற்போதைய நவீன பயிற்சி முறைகள் மிகவும் பலன் தரக்கூடியதாக அமைந்துள்ளது. மேலும், பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படும் பயிற்சித் திட்டங்களுடன், முகாமை அபிவிருத்தி பயிற்சித்திட்டங்களும், வேறு விசேஷ பாடத்திட்டங்களும் நன்கு பிரபல்யம் வாய்ந்த முகாமை நிறுவங்களில் ஒன்றான முகாமைக்கான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் ஊழியர் பயிற்சிக் கல்லூரியின் ஆதரவில் நடாத்தப்படுகின்றது. முன்னர் ஒருபோதுமில்லாத அளவுக்கு வங்கி உத்தியோகத்தர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி பெறும் சந்தர்ப்பங்களும் அதிகமாக வழங்கப்படுகின்றன. 1990ம் ஆண்டில் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றோரின் எண்ணிக்கை 108 ஆகும். 1991 ம் ஆண்டிலும் இப்போக்கினைத் தொடர்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்

| வருடம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1961.12.31 | – | 149 |
| 1962.12.31 | – | 220 |
| 1963.12.31 | – | 760 |
| 1964.12.31 | – | 970 |
| 1965.12.31 | – | 1347 |
| 1966.12.31 | – | 1602 |
| 1967.12.31 | – | 1692 |
| 1968.12.31 | – | 1932 |
| 1969.12.31 | – | 2029 |
| 1970.12.31 | – | 2314 |
| 1971.12.31 | – | 2784 |
| 1972.12.31 | – | 3271 |
| 1973.12.31 | – | 3365 |
| 1974.12.31 | – | 3489 |
| 1975.12.31 | – | 3841 |
| 1976.12.31 | – | 4710 |
| 1977.12.31 | – | 5058 |
| 1978.12.31 | – | 7085 |
| 1979.12.31 | – | 8018 |
| 1980.12.31 | – | 8467 |
| 1981.12.31 | – | 9836 |
| 1982.12.31 | – | 10240 |
| 1983.12.31 | – | 10199 |
| 1984.12.31 | – | 10201 |
| 1985.12.31 | – | 10041 |
| 1986.12.31 | – | 9939 |
| 1987.12.31 | – | 9980 |
| 1988.12.31 | – | 9905 |
| 1989.12.31 | – | 9901 |
| 1990.12.31 | – | 101[illegible] |

### தொழிற்சங்கங்களின் பங்கு

"பலப்படுத்தல்" ஆண்டான 1990ல் ஊழியர் உறவுகளும் உச்சக் கட்டத்தை அடைந்தது எனலாம். தொழிற்சங்கங்கள், முகாமைப் பிரிவுடன் பொதுவான முறையில் இணைந்து ஊழியர்களின் வேலை நிலைமைகளைச் சீர் செய்யவும், வாடிக்கையாளர்களின் சேவைகளை நல்வழிப்படுத்தவும், எல்லாவற்றிற்கும் மேலாக, உற்பத்தியைப் பெருக்கவும் ஆவன செய்ய ஆரம்பித்தன. நல்ல சூழ்நிலையில் முகாமைப் பிரிவினதும், தொழிற்சங்கங்களினதும் தொடர்பு தொடர்ந்து சிநேகபூர்வமாக இருந்ததோடல்லாமல், தொழிற்சங்கம் கொண்டு வந்த மனக்குறைகளை, கோரிக்கைகளை நியாயமான முறையில் தீர்த்து வைக்க முயற்சி செய்ததோடு, தொழிற்சங்கங்களும் தங்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படுகின்றன என்ற எண்ணத்தில் பொறுமையாகவும் இருந்தன.

### எதிர்கால தோற்றம்

வங்கிப்படுத்தல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும், நாம் விஞ்ஞான ரீதியில் ஒரு மாதிரியாக – முன்னோடியாக-இருப்பதே மனித வளங்கள் முகாமையின் முடிவான இலட்சியமாகும். இது ஒரு கற்பனையான இலட்சியம் என காணப்படலாம். எனினும், விடா முயற்சியினாலும் பொறுப்பேற்றுச் செயல்படுவதாலும் எம்மால் பூர்த்தி செய்ய முடியாத செயற்பாடுகளையும் நாம் செய்து முடிக்கலாம். மக்களை முகாமைப் படுத்த எடுக்கும் எந்த முயற்சியும் ஒரு பெருந்திட்டத்தினால் தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தை நாம் **மனித வளங்கள் திட்டம்** என அழைக்கலாம். எனவே மனித வளங்கள் திட்டத்தை இவ்வாண்டில் தீட்டுவதே எமது தலையான செயலாகும்.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகள் கிராமப் புறங்களில் கிடைக்கக் கூடியதாக இருந்த போதிலும், வசதி படைத்த சிறு பிரிவினரே அவற்றை அனுபவிக்கக் கூடிய நிலையிலிருந்தனர். பாரம்பரிய வங்கிகள் கோரிய பிணைகளை வழங்கக் கூடிய நிலையில் வறியோர் இருக்கவில்லை. கிராமிய வறியோரின் கடன் தேவைகள் போதிய அளவில் நிறைவு செய்யப்படவில்லை. வறுமைக்கான முக்கியமான காரணங்களில் இதுவும் ஒன்றாக இருந்திருக்க முடியும். எனவே வறியோருக்கு வங்கித் தொழிலை எடுத்துச் செல்லும் நோக்கில் ஆசிய நாடுகளில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. வறியோருக்குக் கடன் வசதிகளை அளிப்பதன் மூலம் மட்டுமே அவர்களுடைய முழு ஆற்றலையும் வெளிப்படுத்திக் கொள்ள முடியும். இது, குழு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் வறுமை ஒழிப்புக்குப் பங்களிப்புச் செய்யும். இந்தப் பின்னணியில், நிதி நிறுவனங்கள் சமூக அர்ப்பணிப்புடன் இப்பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. அதேவேளையில், வறியோரின் எதிர்விளைவுகளும் சாதகமான வழியில் அமைதல் வேண்டும். இலங்கையின் தேசிய வங்கிகளில் மக்கள் வங்கி இந்த வழியில் பல முன்முயற்சிகளைத் துவக்கி வைத்துள்ளது.

# மக்கள் வங்கியின் குறிக்கோள்களை திரும்பிப் பார்ப்பதற்கான ஓர் எத்தனம்

பீ. ஸ்டீவன் பெர்னான்டோ – துணை ஆளணி மேலாளர், மக்கள் வங்கி

மக்கள் வங்கி, அதன் ஆரம்பக் குறிக்கோள்களை எய்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளின் வெற்றி தோல்விகளை மதிப்பிடுவதற்கு இப்பொழுது தருணம் வந்திருக்கிறது. குறிப்பாக, இந்த வங்கி தனது 30 ஆவது வருடப் பூர்த்தியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இது மிகவும் பொருத்தமானதாக அமையும்.

மத்திய வங்கியின் 1957 ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கை, கிராம மக்களின் கடன் சுமையின் பரிமாணங்களைஎடுத்துக் காட்டியதுடன், அவர்களுக்குக் கடன் வசதிகளை வழங்க வேண்டிய தேவைகளை வலியுத்தியது. கிராமிய கடன் தேவைகளில் 8% ஐ மட்டுமே நிறுவன ரீதியான மூலங்கள் வழங்கியிருந்தன. லேவாதேவிக்காரர்கள், கடைக்காரர்கள், உறவினர்கள் ஆகிய பிரிவினர் கிராம மக்களுக்குக் கடன்களை வழங்கும் பிரதான மூலங்களாகச் செயற்பட்டு வந்தனர். அப்போதைய இலங்கை வங்கி, கிராமிய துறைக்குக் கடன்களை வழங்குவதில் அதிக அளவில் கவனம் செலுத்தவில்லை. இந்தச் சூழ்நிலையில், கிராமியப் பொருளாதாரத்துக்குக் கைகொடுப்பதனையும், கடன் சுமையை ஒழிப்பதனையும், கிராமிய மக்களுக்குக் கடன்களை வழங்குவதனையும் நோக்கங்களாகக் கொண்ட தனியொரு வங்கியை ஸ்தாபிக்க வேண்டிய தேவை பெருமளவுக்கு உணரப்பட்டது. மேலும், அப்பொழுது இயங்கிவந்த கூட்டுறவுச் சமஷ்டி வங்கி, கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்தக் கூடிய அளவுக்கு நிறுவன ரீதியாக பலம் பெற்றிருக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டிருந்தது. இந்த நோக்கத்துக்காகவும் புதிய ஒரு வங்கியை ஸ்தாபிப்பது பற்றிய யோசனைகள் முன் வைக்கப்பட்டிருந்தன.

**1961 ஆம் வருட 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம்**

5. (1) வங்கி அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதில் பின்வரும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பிரயோகிக்க முடியும்:

(அ) உப பிரிவு 2 இன் ஏற்பாடுகளுக்கிணங்க பின்வருவனவற்றை வழங்குதல் :

(i) கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கும், பயிர்ச் செய்கைக் குழுக்களுக்கும் குறுங்கால, நடுத்தர கால, நீண்ட கால கடன்களையும், ஏனைய வசதிகளையும் வழங்குதல்.

(ii) கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கும், பயிர்ச்செய்கைக் குழுக்களுக்கும் குறுங்கால, நடுத்தரகால, நீண்ட கால கடன்கள்.

(iii) வங்கியின் பணிப்பாளர் சபை சிறு அளவு தொழில் முயற்சி என்று கருதும் விவசாய, கைத்தொழில் அல்லது வியாபார முயற்சியொன்றில் ஈடுபடுவதற்கு உத்தேசித்திருக்கும் அல்லது அதில் ஈடுபட்டிருக்கும் எந்தவொரு தனி நபருக்கும் குறுங்கால, நடுத்தரகால, நீண்ட கால கடன்களும், ஏனைய வசதிகளும்; அத்துடன்

(iv) கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கு, தமது தனிப்பட்ட தேவைகளுக்கு அல்லது வீட்டுத் தேவைகளுக்கு அவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு குறுங்காலக் கடன்கள் ;

(ஆ) 1938 ஆம் வருட 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் கீழ், இலங்கை வங்கி மேற்கொண்ட, நடைமுறைப்படுத்திய வியாபார வகைகளுக்கு இணையாக, குறித்துரைக்கப்பட்ட திருத்தங்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் இணங்கிய விதத்தில், வங்கித்தொழிலை மேற்கொள்வதும் நடைமுறைப்படுத்துவதும் ;

(இ) விதித்துரைக்கப்படும் நிபந்தனைக்கிணங்க அடகு எடுக்கும் தொழிலை மேற்கொள்ளுதல் ;

(ஈ) வங்கி ஒரு கடனை அல்லது மேலதிகப் பற்றை வழங்கும் எந்தவொரு நபருக்கும் தொழில்நுட்ப உதவியை வழங்குவது நிலத்தின் பெறுமதியை மதிப்பிடுதல், கடன் பெறுபவர்களின் கடன் பெறக்கூடிய நிலையை மதிப்பிடுதல், தங்கத்தைச் சோதனை செய்தல், வங்கித்தொழில் மற்றும் நிதி என்பவற்றில் ஆட்களைப் பயிற்றுவித்தலை மேற்கொள்வதும், அல்லது அதற்கு அனுசரணை வழங்குவதும் ;

(உ) எந்தவொரு அசையாச் சொத்தினை அல்லது அசையும் சொத்தினைக் கையகப்படுத்துதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுதல், அடமானமாக வைத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வேறேதேனும் ஒரு வகையில் கொடுத்துத் தீர்த்தல் ;

(ஊ) வங்கியின் முடங்கிக்கிடக்கும் நிதிகளை, வங்கியின் பணிப்பாளர் சபை பொருத்தமானது எனக்கருதும் பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்தல் ;

(எ) வங்கியின் பணிகளை மேற்கொள்வதற்கு தேவைப்படும் அதிகாரிகளையும், ஊழியர்களையும் வேலைக்கமர்த்துதல் ;

(ஏ) வங்கியின் அதிகாரிகளினதும், ஊழியர்களினதும் சேவை நிபந்தனைகள் தொடர்பாக விதிகளை உருவாக்குவதும், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் ;

(ஐ) அத்தகைய அதிகாரிகளினதும், ஊழியர்களினதும் நலனுக்காக சேமலாப நிதியங்கள், ஓய்வூதிய நிதியங்கள், மற்றும் திட்டங்கள் என்பவற்றை ஸ்தாபிப்பதும், அத்தகைய நிதியங்களுக்கும், திட்டங்களுக்கும் வங்கியின் நிதிகளிலிருந்து பங்களிப்புகளை மேற்கொள்வதும் ;

(ஒ) வங்கியின் வியாபார நோக்கங்களுக்காக நிதிகளைக் கடனாகப் பெறுவதும், பெறப்பட்ட கடன்களுக்கும் மேலதிகப் பற்றுக்களுக்கும் பிணையை வழங்குவதும் ;

(ஓ) ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் ; அத்துடன்

(ஔ) மேற்சொன்ன அதிகாரங்களைப் பிரயோகிப்பதுடன் சம்பந்தப்பட்ட ஏனைய விஷயங்கள் அனைத்தையும் மேற்கொள்ளல்.

2. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த ஏனைய நபர்களுக்கு கடன்களையும், மேலதிகப் பற்றுக்களையும், ஏனைய வசதிகளையும் வழங்கும் அதிகாரத்தை, அத்தகைய அதிகாரப் பிரயோகத்தினை அமைச்சர், அனுமதிக்கும் வரையில் வங்கி மேற்கொள்ளாது.

3. வங்கி அடகு எடுக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது, 1943 ஆம் வருட 13 ஆம் இலக்க அடகு எடுப்போர் கட்டளைச் சட்டம் அதற்குப் பிரயோகிக்கப்பட மாட்டாது. வங்கி அதன் தலைமை வியாபார இடத்தைக் கொழும்பில் கொண்டிருப்பதுடன், வங்கியின் நடவடிக்கைகளைப் பொருத்தமாக நடத்திச் செல்வதற்கு அவசியமானவை என்று கருதப்படும் கிளைகளையும், முகவரகங்களையும் அது கொண்டிருக்கும்

7. (1) வங்கியின் பொதுக்கணகாணிப்பு, கட்டுப்பாடு, நிர்வாகம் என்பன வங்கியின் பணிப்பாளர் சபையின் பொறுப்பில் விடப்படும். (இச்சட்டத்தில் இதன் பின்னர் இது சபை என்று குறிக்கப்படும்).

(2) சபை வங்கியின் அனைத்து அதிகாரங்களையும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பிரயோகிக்க முடியும்.

8. (1) சபை பின்வரும் பணிப்பாளர்களை உள்ளடக்கியதாக இருக்கும் :

(அ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பதவிவழியில் பணிப்பாளராக இருப்பார்.

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் இரு பணிப்பாளர்கள்.

(இ) கிராமிய அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தற்போதைக்கு ஒரு பணிப்பாளரை நியமானம் செய்வார்.

(ஈ) நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்படும் ஒரு பணிப்பாளர்: அத்துடன்

(உ) உப பிரிவு (2) இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, நியமனம் செய்யப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட இரு :பணிப்பாளர்கள்.

இந்தப் பிரேரணைகளின் விளைவாக, 1961ஆம் வருட 29 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் திகதி மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 4 இன் பிரகாரம், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கமத்தொழில் குழுக்களுக்கும், ஏனைய நபர்களுக்கும் நிதி உதவிகளையும் மற்றும் உதவிகளையும் அளிப்பதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தையும் கிராமிய வங்கித் தொழிலையும், விவசாயக் கடனையும் மேம்படுத்துவதே இந்த வங்கியின் பிரதான குறிக்கோளாக இருந்தது. மக்கள் வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவு செய்யும் விதத்திலேயே வங்கியின் ஒவ்வொரு நடவடிக்கையும் வடிவமைக்கப்பட்டிருந்தது. 1961 ஆம் வருட 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்துக்கு, 1978 ஆம் வருட் 25 ஆம் இலக்க அதிவிஷேட மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அதனையடுத்து அப்போதைய பணிப்பாளர் சபை ஒழிக்கப்பட்டு, புதிய சட்டத்தின் பிரிவு 8 (1) இன் பிரகாரம் 8 உறுப்பினர்கள் கொண்ட பணிப்பாளர் சபை அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டது. வங்கியின் பணிப்பாளர் சபையில் கூட்டுறவு இயக்கத்துக்கு பிரதிநிதித்துவத்தை அளித்து வந்த 1961 ஆம் ஆண்டின் சட்டப்பிரிவு இதனையடுத்து செயலற்றதாகி விட்டது.

மீண்டும் ஒரு முறை 1961 ஆம் வருட 29 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 8, 1980 ஆம் வருட 61 இலக்க மக்கள் வங்கி (திருத்த) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டது. அத்துடன் ஷரத்து 42 விரிவாக்கப்பட்டதுடன், ஷரத்து 42 (அ) அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்சொன்ன சட்டத் திருத்தங்கள் அமுலுக்கு வந்ததனையடுத்து, பிரிவு 12 கீழ் கூட்டுறவு இயக்கம் அனுபவித்து வந்த உரிமைகள் முடிவுக்கு வந்தன. பங்கு மூலதனத்தை 1 கோடி ரூபாவாக உயர்த்தும் பொருட்டு, 20 இலட்சம் ரூபா பெறுமதியான 120,000 பங்குகள் அதிகரிக்கப்பட்டன. இதன் விளைவாக, பங்கு மூலதனத்தில் கூட்டுறவு இயக்கம் அனுபவித்து வந்த 50 சதவீத உரிமை வெறுமனே 3 சதவீதமாகக் குறைந்து விட்டது. பங்கு மூலதனம் அதிகரிக்கப்பட்ட முறை, கூட்டுறவாளர்களிடையே அதிருப்தியைக் தோற்றுவித்ததுடன், அது, வங்கியின் பிரதான குறிக்கோளிலிருந்து விலகி வர்த்தக வங்கித் தொழிலை நோக்கி நகர்ந்து செல்வதற்கான ஒரு முயற்சியாக நோக்கப்பட்டது.

கூட்டுறவாளர்களின் மனப்போக்குகளை ஆதரிக்கும் விதத்தில், மீண்டும் ஒரு முறை 1986 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம், மக்கள் வங்கிச் சட்டமூலம் திருத்தியமைக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தின் போது 1961 ஆம் வருட சட்டத்தின் பிரிவுகள் 4, 5 என்பவற்றை திருத்தியமைப்பதில் கவனஞ் செலுத்தப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டின் சட்டத்தின் பிரிவுகள் 1,2 என்பவற்றில் அசல் சட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பிரிவு 1 கிராமிய வங்கித் தொழிலுக்கும், விவசாய அபிவிருத்திக்கும் அனுசரணை வழங்குவதில் கவனஞ் செலுத்துவதுடன், பிரிவு 2 அடகுத்தொழில், வர்த்தக வங்கியொன்றாகச் செயற்படுதல் என்பவற்றை எடுத்து விளக்குகிறது. மேற்சொன்ன குறிக்கோள்களுக்கு இசைவாக செல்லும் பொருட்டு, பிரதான சட்டத்தின் பிரிவு 5 மீண்டும் ஒரு முறை திருத்தியமைக்கப்பட்டது. மேலும், பிரதான சட்டத்தின் பிரிவு 1 மற்றும் 2 என்பன மாற்றியமைக்கப்பட்டதுடன், 29 அ, 29 இ என்ற இரு பிரிவுகள் மேலும் சேர்க்கப்பட்டன. அத்துடன் பிரதான சட்டத்தின் பிரிவு 30 விலக்கிக் கொள்ளப்பட்டதுடன், பிரிவு 48 திருத்தயமைக்கப்பட்டது. இந்தத் திருத்தப்பட்ட சட்டம், மக்கள் வங்கி இப்பொழுது ஒரு கூட்டுறவு வங்கியாகச் செயற்படவில்லை என்றும், அது ஒரு வர்த்தக வங்கியாகவே செயற்பட்டு வருகிறது என்றும் கூட்டுறவு இயக்கம் கூறி வருவதற்கு மேலும் வலுவூட்டுவதாகவே இருக்கிறது.

### மக்கள் வங்கி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், இல 25 – 1978

*1961 ஆம் வருட 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் இதனகத்து பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது. சட்டத்தின் பிரிவு 8 இரத்து செய்யப்பட்டு அதனிடத்தில் பின்வரும் பிரிவு சேர்க்கப்படுகிறது :*

8. (1) சபை, அமைச்சரினால் நியமஞ்செய்யப்படும் 8 பணிப்பாளர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.
(2) ஒரு நபர் (அ) தேசிய அரசுப் பேரவையில் உறுப்பினராக இருந்தால் அவர் பணிப்பாளராக நியமனஞ் செய்யப்படுவதற்கு அல்லது பணிப்பாளராக தொடர்ந்து செயற்படுவதற்கு தகைமை இழந்தவர் ஆவார்; அல்லது.
(ஆ) இலங்கையில் அமுலிலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் கீழும் சித்த சுயாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது பிரகடனப்படுத்தப்பட்டால்.
(இ) அல்லது இலங்கையில் அல்லது வேறு ஏதேனுமொரு நாட்டில் அமுலிலிருக்கும் சட்டமொன்றின் கீழ் கடனைத் தீர்க்க வகையற்றவராக, அல்லது வங்குறோத்து நிலை அடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் ஏதேனுமொரு நபர் அல்லது,
(உ) இழிந்த நடத்தை தொடர்பாக குற்றம் நிரூபிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனை பெறக்கூடிய குற்றச் செயலொன்றில் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு நபர் அல்லது,
(ஊ) இவ்வங்கி தவிர்ந்த வேறேதேனும் ஒரு வர்த்தக வங்கியில் பணிப்பாளர் அல்லது ஊழியர்.
(9) சபையின் எந்தவொரு கூட்டத்துக்கும் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த எண்ணிக்கை ஐந்து ஆகும்.
(10) உப பிரிவு 9 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கிய விதத்தில், சபையின் கூட்டங்கள் தொடர்பான நடைமுறையையும், அத்தகைய கூட்டங்களில் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் சபை ஒழுங்கு விதிகளை உருவாக்கிக்கொள்ள முடியும். பணிப்பாளர்களில் ஒரு வெற்றிடம் காணப்படும் நிலை அல்லது ஒரு பணிப்பாளரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற ஒரே காரணம், பணிப்பாளர் சபையின் கூட்டத்தை அல்லது நடவடிக்கையை செல்லுபடியற்றதாக ஆக்கிவிட முடியாது.

### மக்கள் வங்கி (திருத்த) சட்டம், இல. 61, 1980

(1) சபை அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட 10 பணிப்பாளர்களை உள்ளடக்கியதாக இருக்கும். இவர்களில் இருவர் கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.
(3) பிரதம சட்டவாக்கத்தின் பிரிவு 12 இதனகத்து ரத்து செய்யப்பட்டு, அதனிடத்தில் பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகிறது.

12. (1) வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா நூறு கோடியாக இருப்பதுடன், இது ஒவ்வொன்றும் ரூபா ஐம்பது பெறுமதியான இருபது இலட்சம் பங்குகளினால் பிரிக்கப்பட்டிருக்கும்.
(2) வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனம், அமைச்சரினால் காலத்துக்குக் காலம் நிர்ணயம் செய்யப்பட்டு, வர்த்தகமானியில் வெளியிடப்படும் தொகையாக இருக்கும்.

(4) பிரிவு 42 ஐ உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு சேர்க்கப்படுகிறது. இது பிரதம சட்டவாக்கத்தில் 42 அ வின் தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

42. (அ) வங்கியின் கடமைகளின் செயலாற்றுகை மற்றும் ஏனைய அதிகாரங்கள் என்பன குறித்த எழுத்து மூலமான பொது அல்லது சிறப்பு பணிப்புரைகளை அமைச்சர் சபைக்கு காலத்துக்குக் காலம் வழங்குவார். அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்க நடப்பது சபையின் கடமையாகும்.

**மக்கள் வங்கி (திருத்த) சட்டம் இல. 32 1986.**

3. 1961 -ம் ஆண்டின் 29-ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவுகள் 4 மற்றும் 5 என்பன இதனகத்து ரத்து செய்யப்பட்டு, அவற்றுக்குப் பதிலீடாக பின்வரும் பிரிவுகள் சேர்க்கப்படுகின்றன.

4. வங்கியின் நோக்கம் பின்வருமாறு அமையும்:

(1) பின்வருவனவற்றை அபிவிருத்தி செய்வதும் அவற்றிற்கு உதவுவதும் -
- (அ) கூட்டுறவு இயக்கம்;
- (ஆ) கிராமிய வங்கித் தொழில்;
- (இ) விவசாயம்; அத்துடன்
- (ஈ) கைத்தொழில்; மற்றும்-

(2) பின்வரும் தொழில்களை நடத்துதல் -
- (அ) வர்த்தக வங்கி;
- (ஆ) அடகு எடுத்தல்; மற்றும்
- (இ) வணிக வங்கி

5. (1) இந்த நோக்கங்களை பின்பற்றுவதில், வங்கி, இப்பிரிவின் உபபிரிவுகள் (3) மற்றும் (4) என்பவற்றில் எடுத்துக் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், தகைமைகள், வரையறைகள் என்பவற்றுக்கு இணங்கிய விதத்தில், பின்வரும் அதிகாரங்கள், நடவடிக்கைகள், செயல்கள் என்பவற்றில் அனைத்தையும் அல்லது ஏதாவதொன்றை பிரயோகிக்க, செயற்படுத்த, மேற்கொள்ள முடியும்.

(அ) அதன் அனைத்துக் கிளைகளிலும், திணைக்களங்களிலும் வங்கித் தொழிலை இலங்கைக்குள்ளோ அல்லது வேறு எங்கேனுமோ, ஸ்தாபித்து, மேற்கொண்டு, நடாத்தி, அபிவிருத்தி செய்து, விரிவாக்குதல்.

(ஆ) குறுங்காலக் கடன்கள், நடுத்தரக்காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள், மேலதிக பற்றுக்கள், முற்பணங்கள் மற்றும் வசதிகள் என்பவற்றை வழங்குதல்.

(இ) I. நடைமுறைக் கணக்குகள், சேமிப்பு வைப்புக்கணக்குகள் மற்றும் ஏனைய கணக்குகள் என்பவற்றைத் திறந்து, பராமரித்து, நிர்வகித்தல்.

II. மாற்றக்கூடிய, கைம்மாற்றக் கூடிய அல்லது மாற்ற முடியாத, கைம்மாற்ற முடியாத மாற்றுண்டியல்கள், கடனுறுதிச் சீட்டுக்கள், பிணைப்பத்திரங்கள், கூப்பன்கள், டிராப்ட்டுகள், கப்பற்படுத்தல் பத்திரங்கள் கடன் பத்திரங்கள், சான்றிதழ்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பவற்றை தீர்த்து வைத்தல், கொள்வனவு செய்தல். மற்றும் விற்பனை செய்தல்.

III. கடன் கடிதங்களையும், சுற்றுக் குறிப்புக்களையும் அளித்தல்.

IV. தங்கம் போன்ற உலோகங்களை வாங்குதல் விற்பனை செய்தல், கொடுக்கல் வாங்கல் செய்தல் மற்றும் மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடல்.

V. கடன்களையும், முற்பணங்களையும் பேசித்தீர்த்தல் வைப்பாக பணம், பிணைப்பத்திரங்கள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்களைப் பெறல்; அல்லது பாதுகாப்பாக வைப்பதற்கோ, வேறு ஏதேனும் நோக்கத்திற்கோ அவற்றைப் பெறுதல்.

VI. பணத்தையும், பிணைப்பத்திரங்களையும் சேகரிப்பதும், அனுப்புதலும்.

இந்த நிலைமைகளின் கீழ், இந்த வங்கி அதன் ஆரம்பக் குறிக்கோள்களை எவ்விதம் நிறைவு செய்ய முடியும் என்ற கேள்வியை எழுப்பலாம். வங்கியின் பிரதான குறிக்கோள் கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்துவதாக இருந்த போதிலும், இது தொடர்பான தற்போதைய நிலைமைகளை ஆழமாகப் பகுப்பாய்வு செய்யாமல் முடிவுகளுக்கு வர முடியாது. இந்த முயற்சியில் உண்மையான ஆர்வத்துடன் இன்னும் நாம் ஈடுபட்டுள்ளோமா என்பது குறித்தும், இந்தக் குறிக்கோளை எய்தும் விஷயத்தில் எமது பங்களிப்பு எந்த அளவுக்கு வழிகோலியுள்ளது என்பதையும் கண்டறிவதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் தொடர்ந்து காணப்பட்டு வரும் உள்ளார்ந்த அமைப்பு ரீதியான பலவீனங்களின் பின்னணியில் நோக்கும் போது, அர்ப்பணிப்பு மிக்க எந்தவொரு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமும் வங்கி இந்த இயக்கத்தை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பது குறித்து ஒருவருக்கு சந்தேகங்கள் எழ வாய்ப்பிருக்கிறது. மக்கள் வங்கியின் முழுச் சொத்துக்களும் கூட்டுறவு இயக்கத்தின் மூலவளங்களினால் மட்டும் நிதிப்படுத்தப்பட்டிருக்காத ஒரு நிலை காணப்படும் பின்னணியில், தனது நல்ல வாடிக்கையாளர்களின் வைப்புக்களுக்கு எவ்விதம் பதில் சொல்லது என்ற தர்மசங்கடமான நிலையிலும் வங்கி உள்ளது.

கிராமிய வங்கிகள், கிராமிய மக்களைக் கடன் சுமையிலிருந்து விடுவிக்கும் நம்பிக்கையுடன் வைப்புக்களைத் திரட்டி வருகின்றன. எனினும், பின்னர் இந்நிதிகள் மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு, அதன் சொந்த நிதிகளின் பெருக்கத்துக்குப் பங்களிப்புச் செய்து வந்துள்ளன என்பதை எவரும் மறந்துவிட முடியாது. கிராமிய வங்கிகள் கூட்டுறவு இயக்கத்தின் பிரிக்க முடியாத ஒரு பாகமாக செயற்பட்டு வருவதுடன் விவசாயக் கடன்களையும், ஏனைய கடன்களையும் வழங்கும் பொறுப்பும் அவற்றுக்குண்டு. மேலும், மக்கள் வங்கியின் முகவர் அமைப்பாகச் செயற்பட்டு, இவ்வங்கி அடகு எடுத்தல் தொழிலிலும் ஈடுபட்டு வருகிறது. ஆனால், இந்த உறவுநிலையை தொடர்ந்தும் பேணி வருவது கிராமிய வங்கிகளுக்குச்சிரமமாக உள்ளது. தம்மீது இறுக்கமாகப் பதிந்துள்ள மக்கள் வங்கியின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு கிராமிய வங்கிகள் முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ள ஒரு சூழ்நிலைக்கு மத்தியில், மக்கள் வங்கி இரு தெரிவுகளை தன் முன் கொண்டுள்ளது. அதாவது, தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கிராமிய வங்கிகளை அபிவிருத்தி செய்வது; அல்லது சாதாரண பரிசீலனை நடைமுறைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதற்கூடாக பணிகளைத் தொடர்புபடுத்துவது ஆகிய இரண்

(19 ம் பக்கம் பார்க்க)

அட்டவணை 1
கூட்டுறவு கிராமிய வங்கிகளின் விஸ்தரிப்பு

| வருடம் | கிளைகளின் எண்ணிக்கை | மொத்த வைப்புக்கள் (ரு.) | மொத்த முற்பணங்கள் (ரு.) |
|---|---|---|---|
| 1977 | 544 | 17,5462,200 | 116,883,300 |
| 1987 | 955 | 1,560,178,459 | 708,781,964 |
| 1988 | 985 | 1,908,359,745 | 829,150,196 |
| 1989 | 996 | 2,211,886,541 | 950,404,585 |
| 1990 | 1034 | 2,497,322,703 | 1,450,886,602 |

அட்டவணை 2
கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்

| | | |
|---|---|---|
| நிலுவை | 1987 | Rs. 35,500.00 |
| | 1988 | Rs. 39,500.00 |
| | 1989 | Rs. 43,500.00 |
| | 1990 | Rs. 47,500.00 |
| வட்டிக்கணக்கில் | 31.12.88 | Rs. 11,435,422.83 |
| நிலுவை | 31.12.88 | Rs. 15,745,355.73 |
| | 31.12.88 | Rs. 20,185,415.97 |

அட்டவணை 3 கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்துக்கு ஊடாக கூட்டுறவு இயக்கத்துக்கு செய்யப்பட்ட பங்களிப்பு

| வருடம் | ரூபா |
|---|---|
| 1985 | 170,450 |
| 1986 | 193,932 |
| 1987 | 727,259 |
| 1988 | 854,359 |
| 1989 | 364,254 |
| 1990 | 2,374,940 |

# அபிவிருத்தி வங்கித் தொழில் – மக்கள் வங்கியின் செயலாற்றுகை குறித்த ஒரு கண்ணோட்டம்

எச். களுபண்டா
துணை பொது மேலாளர்
(அபிவிருத்தி நிதி) மக்கள் வங்கி

வறுமையை ஒழிக்கும் அரசாங்க திட்டமான சனசக்தியின் முதலாவது கட்டம் நிறைவேறும் இவ்வேளையில், கிராமிய கடன் திட்டத்தின் முன்னோடியான மக்கள் வங்கியும் தனது 30வது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடுகின்றது. எனவே, கடந்த முப்பது ஆண்டுகளில், மக்கள் வங்கி வறுமையை ஒழிப்பதில் எத்தகைய முயற்சிகளைக் கையாண்டு வந்தது என்பது பற்றி நாம் மீளாய்வது மிகவும் பொருத்தமானதாகும்.

கிராமிய மக்களுக்கும் ஏனைய குறைந்த வருவாய் பெறும் குழுக்களுக்கும் அவசியமான நிறுவகப்படுத்தப்பட்ட கடன் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1961ம் ஆண்டு ஜூலை மாதம் 01ம் திகதி மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. ஏற்கனவே, செயற்பட்டு வந்த நிதி நிறுவனங்கள் இக் குழுக்களை புறக்கணித்து வந்தன. ஏனெனில், இந்நிதி நிறுவனங்கள் பாரம்பரிய வங்கிப்படுத்தல் நடைமுறைகளை கடைப்பிடித்து வந்தமையினால் மிகவும் பாதுகாப்பான முறைப்படி பணத்தைத் திரும்பப் பெறக்கூடிய துறைகளுக்கே கடன் உதவிகள் செய்து வந்தன. இப்பெரும் இடைவெளியை நிரப்பும் பொருட்டு, "கூட்டுறவுதுறைகள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், விவசாய குழுக்கள், மற்றும் ஏனையோருக்கும் நிதி மற்றும் உதவிகளை வழங்குவதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தையும், கிராமிய வங்கித் தொழிலையும், விவசாய கடன்களையும் அபிவிருத்தி செய்வதற்கு" மக்கள் வங்கிக்கு, சட்டத்தின் 4ம் பிரிவு அதிகாரம் வழங்கியுள்ளது.

எனவே மக்கள் வங்கி, ஏழைகளின் வங்கியாகவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வங்கியின் முதலாவது தலைவரான திரு. வின்சன்ட் சுபசிங்க, தன்னைத் தானே மக்களின் சேவைகளுக்கு அர்ப்பணித்த, அனுபவம் மிக்க கூட்டுறவாளர் ஆவார். கிராமிய மக்களின் பொருளாதார தேவைகளை அவர் நன்கு அறிந்திருந்தார். இந்த மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக இப்புதிய வங்கி முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். இலங்கையின் வங்கித் தொழில் கருதுகோளை புரட்சிகரமாக்குவதில் மக்கள் வங்கி பல்வேறு வழிகளைக் கையாண்டது. எனவே, மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டபோதுதான் வங்கித்துறையை சாதாரண மக்களிடையே எடுத்துச் செல்லும் மக்கள் மயமாக்கும் நிகழ்வுப் போக்கு இடம் பெற்றது என்று கூறுவது தவறாக இருக்க முடியாது.

## அடகு பிடித்தல்

ஆரம்பத்திலேயே, சாதாரண மக்களை கடன் பிடியிலிருந்து காப்பாற்றி நிவாரணம் அளிக்கும் பொருட்டு மக்கள் வங்கி அடகு பிடித்தல் திட்டமொன்றையும் ஆரம்பித்து வைத்தது. உலகில் வர்த்தக வங்கியொன்று இத்தகைய திட்டமொன்றை மேற்கொண்ட முதற்றடவை இதுவாகும். 1960ம் ஆண்டுக்கு முன்னர், நம்நாட்டுப் பிஜைகளல்லாதோர் சிலரின் ஏகபோக உரிமையாகவே அடகு பிடிக்கும் தொழில் இருந்து வந்தது. இவர்கள் அபரிமிதமான வட்டியை மக்களிடமிருந்து கறந்து வந்தனர். பாதுகாப்பு, காப்புறுதி ஆகியவற்றின் காரணமாக வங்கியும் அதிகமான வட்டியை (வங்கியின் ஏனைய கடன் விகிதங்களுடன் ஒப்பிடும்போது) இதற்கென அறவிட வேண்டியுள்ளது. இருந்தபோதிலும், தனியார் அடகு பிடிப்போரின் விகிதங்களிலும் பார்க்க, மக்கள் வங்கி அறவிடும் 30% வட்டி நிச்சயமாகவே மிகவும் குறைவாகவே இருக்கின்றது. மேலும் 1000/- ரூபா வரையான சிறிய முற்பணங்களுக்கு குறைந்த வட்டி வீதமான 20% ஐ அறவிடுவதன் மூலம் குறைந்த வருமானப் பிரிவினருக்கு நிவாரணம் வழங்க வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. 30.04.1991 அன்றுள்ளவாறு மக்கள் வங்கி 967,792 நபர்களுக்கு 3,067,000 ரூபாவை அடகு முற்பணமாக வழங்கியிருந்தது. வங்கி இத்திட்டத்தின் மூலம் கடந்த சில வருடங்களில் மக்களின் நம்பிக்கையை பெருமளவில் வென்றெடுத்திருக்கிறது.

## கூட்டுறவுத்துறை

வங்கி ஸ்தாபிக்கப்பட்ட மூன்று வருடங்களுக்குள், கூட்டறவு கிராமிய வங்கி ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் 1964ம் ஆண்டில் எடுக்கப்பட்டது. கடந்த 25 வருடங்களில் 1000த்திற்கும் மேற்பட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகள் நாடு முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் வைப்புக்களைத் திரட்டுவதில் கூட்டுறவு கிராமிய வங்கிகள் வெற்றியை ஈட்டின. 31.12.1990 அன்றுள்ளவாறு கிராமிய வங்கிகளில் 2,714,372 வைப்பாளர்கள், மொத்த வைப்புகளாக ரூ. 2,497,322,703 ரூபாவை வைத்திருந்தனர். எவ்வாறிருப்பினும், கூ.கி. வங்கினால் கிராமப் பிரிவுக்கு வழங்கப்படும் கடன் போதியதாயில்லை. வைப்புக்களுடன் ஒப்பிடும்போது, கூ.கி. வங்கிகளால் இவர்களுக்கு வழங்கப்படும் கடனின் தொகை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனினும், நாடு முழுவதிலும் வியாபித்துள்ள கிராமிய வங்கிகள் கடன்களாக கிராமப்புறங்களுக்கு கணிசமான தொகையை - ரூ. 1,450,886,682 - பகிர்ந்தளித்துள்ளன. கூட்டுறவு அமைப்புக்கு நிதி வழங்கும் நிறுவனமான மக்கள் வங்கியானது, அரசாங்க உணவு விநியோகம், உணவு முத்திரை விநியோகம் ஆகிய திட்டங்களுக்கு நிதி வழங்குமுகமாக ரூ. 1,406, 972,806 ஐ கூட்டுறவுத்துறைக்கு வழங்கியுள்ளது. மிகக் குறைந்த வட்டியில், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த நிதித் தேவைகளையும் மக்கள் வங்கி வழங்கி வருகின்றது.


# வறியோருக்கான வங்கித்தொழில்

## விவசாய, மீன்பிடிப் பிரிவுக்கான கடன்கள்

இலங்கையின் விவசாய கடன் சரித்திரத்திலேயே முதன்முதலாக 1967ம் ஆண்டில் அரசாங்க உத்தரவாதங்களுடனும், மத்திய வங்கியின் மீள் நிதிப்படுத்தலுடனும் விவசாய பிரிவுக்கு கடன்களை வழங்குவதற்காக மக்கள் வங்கி தேவையான நடவடிக்கைகளை எடுத்தது. 1967க்கு முன்னர் விவசாய கடன்கள் அரசாங்க திணைக்களங்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டபோதிலும், சரியான கண்காணிப்பு இல்லாமையினால் கடன்களை மீளப்பெற முடியாது போயிற்று. பின்னர் அக்கடன்களை தள்ளுபடி செய்யவேண்டியிருந்தது.

வங்கிகளினால் விவசாயக் கடன் திட்டங்கள் கையேற்கப்பட்ட பின்னர், வழங்கப்பட்ட கடன் தொகையும் அதிகரித்தது. வங்கிகளின் விவசாய கடன் திட்டத்தின் கீழ், கடன் வசூல் ஊக்கமளிக்கக் கூடியதாயில்லாதபோதும், மக்கள் வங்கி ரூ. 2,313,968,000 முற்பணமாக வழங்கி, அவற்றில் 1,496,383,000 ரூபாவை திரும்பப் பெற்றுள்ளது. 31.12.1990 வரை ரூ. 817,585,000 வசூலாகாமல் இருக்கின்றது. விவசாயத்திற்காக கொடுக்கப்படும் கடன் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இவற்றை வங்கிப் பிரிவு மாத்திரம் சீர் செய்ய முடியாது. இதை நாம் விரிவான முறையில் நோக்க வேண்டும். எனினும், கடன் பெற்று அவற்றை ஒழுங்காகத் திருப்பிக் கொடுக்கும் விவசாயிகளுக்கு வங்கியும் திருப்தியான சேவையை வழங்கி வருகின்றது. அண்மையில் விவசாயிகள், தாம் பெறும் கடன்களைத் திருப்பக் கொடுக்க ஊக்கமளிக்கும் பொருட்டு, வங்கி விவசாயிகள் கடன் அட்டை, சான்றிதழ் போன்ற பல்வேறு சலுகைகளை அறிவித்தது. விவசாய பிரிவுக் கடன் வழங்குவதோடு மீன்பிடி பிரிவினருக்கும் அதிகமான கடன்களை மக்கள் வங்கி வழங்கி வருகின்றது. 1991 மே மாதம் 31ம் திகதி அன்று 2435 மீன்பிடியாளருக்கு ரூ. 111,589,913 கடன் வழங்கப்பட்டிருந்தது.

வறியோருக்கான விசேஷ கடன் திட்டங்கள்




1. தொழில் துவங்குவதற்கான கடன்திட்டம்
2. சுய தொழில் கடன் திட்டம் (நிஸ்கோ)
3. நாடு தழுவிய சுய தொழில் வாய்ப்பு கடன் திட்டம்
4. குறை வருமானப் பிரிவினர் மின்சாரம் பெறுவதற்கு உதவும் கடன் திட்டம்
5. "கைமாற்று" கடன் திட்டம்
6. சனசக்தி முதல் சுற்று நலன் பெறுவோர்
7. சனசக்தி இரண்டாவது சுற்று நலன் பெறுவோர்

## வங்கிப்படுத்தல் பழக்கங்களை கற்பித்தல்

நம் நாட்டு மக்களிடையே மக்கள் வங்கி எவ்வாறு வங்கிப்படுத்தல் பழக்கங்களைப் பரப்புகின்றது என்பதை நாம் விரிவாகத் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். வங்கிப்படுத்தல் செயற்பாடுகளை ஆரம்பித்த போது, நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப வைப்புக்கான தேவைகளை வங்கி குறைந்த மட்டத்தில் வைத்திருந்தது. குறைந்த வருமானம் பெறுவோரை இவ்வழிமுறை அதிகமாகக் கவர்ந்தபடியினால் இவர்களில் பலர் வங்கியின் வாடிக்கையாளரானார்கள். மேலும், வறுமையால் பாதிக்கப்பட்ட ஏழைகளின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ஆகக் குறைந்த அளவில்–அதாவது ரூ. 250 தொடக்கம் ரூ. 500 வரை–முற்பணமாக வழங்கும் மிகவும் துணிகரமான தீர்மானங்களையும் மக்கள் வங்கி எடுத்தது. இக்கால கட்டத்தை பரிச்சயம் செய்துகொண்டுள்ள எம்மைப் போன்றவர்கள், இச் சமயத்தில் மக்கள் வங்கிக்கு முன் நின்று தங்கள் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்த மக்களின் நீண்ட வரிசைகளை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். இப்படியான வரிசைகளில் நின்றவர்களில் பெரும்பாலானோர் தொழிலாளராவர். (உதாரணமாக துறைமுகத் தொழிலாளர், புகையிரத நிலையத் தொழிலாளர், இ.போ.ச. தொழிலாளர்கள் வைத்திய சாலையில் வேலை பார்ப்போர், மற்றும் அரச திணைக்களங்களில் வேலை பார்க்கும் இலிகிதர்கள், காரியால உதவியாளர்கள் போன்றோர்). நன்கு ஸ்தாபிதமான வங்கிகளில் இவர்களுக்கு வங்கிப்படுத்தல் சலுகைகள் கிடைக்காதிருந்தமையே இதற்கான காரணமாகும்.

நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் அமுலாக்கப்பட்ட முனைப்பு மிகுந்த துரித கிளை விஸ்தரிப்புத் திட்டம் வங்கிப் பழக்கவழக்கங்களை மக்களிடையே ஜனரஞ்சமாக்குவதில் பெரியதொரு பங்கினை வகித்தது. இன்று மக்கள் வங்கி 324 கிளைகளைக் கொண்டுள்ளது. மக்கள் வங்கியின் விசாலிப்புத் திட்டத்தினை தொடர்ந்து ஏனைய வங்கிகளும் தரமான வங்கிச் சேவைகளை மக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன், கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் கிளைகளைத் திறந்து வைத்தன. வாடிக்கையாளருடனான நாளாந்த வர்த்தக அலுவல்

களில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளை முதல்முதலாக நடைமுறைகளுக்கு கொண்டுவந்த பெருமையும் மக்கள் வங்கிக்கே உரியதாகும்.

மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்தாண்டுகளில், அபிவிருத்தி வங்கிப்படுத்தல் முயற்சிகளிலேயே அது அதிகளவில் ஈடுபட்டு வந்த போதிலும், அடுத்த கட்டத்தில் அபிவிருத்தி வங்கிப்படுத்தலிலிருந்து வர்த்தக வங்கி முறைக்கு அது மாறி வந்ததை எவரும் கண்டு கொள்ளக்கூடியதாயிருக்கிறது. இக்கால கட்டத்தில், இலாபங்களை உயர்த்திக்கொள்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இரண்டு அரச வங்கிகளுக்கிடையேயும் வர்த்தக முயற்சிகளில் போட்டி ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக, வங்கி ஊழியர்களும் முகாமையாளர்களும் அவர்களிடம் வரும் வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்கி சுலபமாக இலாபமீட்டும் வழியைப் பின்பற்றத் தொடங்குகின்றனர். அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டுள்ள மக்களிடம் சென்று வங்கிப்படுத்தலை அவர்கள் மேற்கொள்ள முயல்வதில்லை. எனவே, இக்கால கட்டத்தின் போது வறியவர்களுக்குச் சேவை செய்வதிலிருந்து அதிக இலாபத்தை பெறுவதை மட்டுமே கருத்தில் கொண்டு வசதியுள்ளவர்களுக்குச் சேவை செய்யும் நோக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டதை காணக்கூடியதாயிருந்தது. இதன் மூலம் மக்கள் வங்கியை, இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கியொன்றாக மாற்றக் கூடியதாகவும் இருந்தது. மூன்றாம் கட்டத்தில் இம்முறை முற்றாக மாறியது. அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டம், அரச வங்கிகளின் கொள்கைகளை அதற்கேற்றவாறு மீளத் திட்டமிட வழிவகுத்தது. எனவே, குறைந்த வருவாய் பெறும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வங்கியானது பல்வேறு கடன் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இக்கடன் வழங்கும் திட்டத்தின் முக்கிய நோக்கம் சுயதொழில் வாய்ப்பை உண்டாக்குவதாகும். செய்திட்டத்தின் முடிவான சாத்தியத்தையே குறிக்கோளாகக் கொண்டு இக்கடன் திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன. முக்கியமாக கடந்த மூன்றாண்டுகளில் 22 அபிவிருத்திக் கடன் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களில் சில, இலங்கை மத்திய வங்கியின் மீள் நிதிப்படுத்தும் ஒழுங்குகள் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவை செயல்படுத்தப்பட்ட குறைந்த காலத்திலேயே ஒரு சில கடன் திட்டங்கள் மிகவும் பிரபல்யமாகி அதன்மூலம் கிராமத்திலுள்ள வறியவர்களுக்கும் தேவையானவர்களுக்கும் அதிகளவான கடன்களை வங்கி வழங்கக்கூடியதாயிருந்தது. மேன்மை தங்கிய ஜனாதிபதியின் தீர்மானத்தின்படி இரு அரச வங்கிகளினாலும் அமுலாக்கப்பட்ட "பிரஜா நய நியாமக்க திட்டம்" புதுமையான கடன் திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தை முதல்முதலாக அமுல் செய்தபோது ஒருசில ஆரம்ப கட்டப் பிரச்சினைகளை வங்கி சமாளிக்க வேண்டியிருந்தது. ஆனால், இச்செய்முறை அமுலாக்கப்பட்ட மூன்றாண்டுகளில் இத்திட்டம் சாத்தியமானது என்பதும், சம்பிரதாயமற்ற கிராமிய கடன்களைத் தீர்ப்பதில் மிகவும் அனுகூலமானது என்பதும் நன்கு தெரியக்கூடியதாகவிருந்தது. வங்கியும் மிகக் குறைந்த அபாயத்துடனேயே செலாற்றியது. 1991 மே 31ஆம், திகதி வரை, மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்ட "பிரஜா நய நியாமக்க", முகவர்களின் எண்ணிக்கை 4155 ஆகும். இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 185,590,000 ஆகும். இதனால் அனுகூல மடைந்தோரின் எண்ணிக்கை 49,153 ஆகும். இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 192,672,360 ஆகும். சமுதாயத்திலுள்ள வறிய மக்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்தும் பொருட்டு மக்கள் வங்கி கடந்த முப்பதாண்டுகளில் பல்வேறு புதுமை வழிகளைக் கடைப்பிடித்து வந்தது என நாம் கூறுவது மிகப் பொருத்தமானதாகும். இம்முயற்சிகளில் வர்த்தக வங்கி முயற்சிகளின் பாரம்பரிய முறைகளிலிருந்து விலகி, அபிவிருத்தி வங்கி முறைகளை விருத்தி செய்யும் பொருட்டு, அது புதிய பாதையில் சென்றுள்ளது எனலாம். எனினும், இரண்டுக்குமிடையே சரியான சம நிலையையும் இது நிலைநாட்டியுள்ளது.

(16 ம் பக்கத் தொடர்ச்சி)

டுமே இந்தத் தெரிவுகளாகும். சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கேற்ப நடவாதிருத்தல், கிராமிய வங்கிகள் வேறு வர்த்தக வங்கிகளில் நிதிகளை வைப்புச் செய்தல், மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர்கள் கிராமிய வங்கிப் பரிசீலனை அலுவர்களைப் பணிக்கமர்த்துவதைத் தவிர்த்துக்கொள்ளல் போன்றவை காரணமாக தற்போதைய சிக்கலான நிலைமை மேலும் மோசமடைகிறது. கிராமியத் துறைகளிலிருந்து திரட்டப்படும் நிதிகளை நகர வர்த்தகத் துறைக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு வங்கி திசைதிருப்பி வரும் நடைமுறை காரணமாகவே இந்தக் குழப்பமான நிலை தோன்றியுள்ளது என சிலர் வாதிட்டு வருகின்றனர். இதே வேளையில் மக்கள் வங்கி கூட்டுறவு இயக்கத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில் கூட்டுறவு அபிவிருத்தி நிதியமொன்றை ஸ்தாபித்துள்ளது. வங்கி தனது வருடாந்த இலாபத்தில் ஒரு பகுதியை இந்த நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்து வருகிறது.

மறு புறத்தில், வங்கி பிரஜா நய நியாமகத் திட்டத்திற்கூடாக தனியார் துறை கடன் கொடுப்போருக்குப் பதிலாக, முறைசாரா கடன் வழங்கலை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கிராமிய கடன் சுமைக்கு நிவாரணம் அளித்து வந்த போதிலும், பிரஜா நய நியாமக திட்டத்திற்கூடாக வங்கி (தனியார்) கடன் வழங்கும் முகவர்களை ஊக்குவித்து வருகின்றது என ஒரு சாரார் வாதிட்டு வருகின்றனர். வங்கி அரச அபிவிருத்திச் செய்திட்டங்களுக்கு, பெருமளவுக்குத் தளர்த்தப்பட்ட பிணை நிபந்தனைகளின் கீழ் கடன்களை வழங்கியமை காரணமாக உண்மையான வர்த்தக வங்கியொன்றாக அதனால் செயற்பட்டு வர முடியாதிருந்தமையினாலேயே அதன் முன்னேற்றம் மந்தமடைந்துள்ளது என்று பிறிதொரு சாரார் வாதிட்டு வருகின்றனர். இந்த விவாதங்களின் பின்னணியில், வங்கியின் எதிர்காலம் எவ்விதம் அமையும் என்பதனை முன்கூட்டியே கூறுவது கடினமாக இருந்த போதிலும், இவ்வங்கி இதுவரையில் தன்னை மிக உறுதியாக ஸ்தாபித்துக் கொண்

(61 ம் பக்கம் பார்க்க)

# மூன்றாவது உலகப் போர்: வளைகுடாப் போர் மற்றும் புதிய உலக ஒழுங்கு என்பவற்றின் அரசியல் பொருளாதாரம்

அந்ரே குந்தர் பிராங்க்

''அந்ரே குந்தர் பிராங்க், சர்ச்சைக்குரிய ஒரு மனிதரின் அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளார்'' என்று இம்மானுவேல் வலஸ்ரீன் எழுதுகிறார். அவருடைய கருத்துக்கள் விரிவான கலந்துரையாடல்களுக்கும், ஆர்வமிக்க விவாதங்களுக்கும், துரித வாசிப்புக்களுக்கும் உள்ளாகி வருகின்றன என்பதே இதன் பொருளாகும்.

மக்மிலன் பதிப்பாக வெளிவந்துள்ள பேராசிரியர் பிராங்க் எழுதிய ''விமர்சனமும் எதிர்விமர்சனமும்'' என்ற நூலின் அறிமுகத்தில் அவரைப்பற்றி பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது :

அந்ரே குந்தர் பிராங்க், தங்கியிருக்கும் கோட்பாட்டின் தோற்றுவிப்பாளர் என்ற முறையிலும், அதன் பிரதான பேச்சாளர் என்ற முறையிலும் இது தொடர்பாகவும், பல சமகால பிரச்சினைகள் தொடர்பாகவும் நிகழ்ந்த பல்வேறு கோட்பாட்டு, கருத்தியல் மற்றும் அரசியல் சர்ச்சைகளில் பங்கேற்றுள்ளார். ''புரட்சிக்கு பங்களிப்புச் செய்வதற்கும் ...... இலத்தீன் அமெரிக்க புரட்சியையும், கியூபாவின் புரட்சியில் அது பெற்றுள்ள உற்சாகத்தையும் ஒன்று திரட்டுவதற்குமென'' தனது ஆரம்ப குறிப்புக்களை அவர் எழுதினார். கடந்த 15 ஆண்டு காலமாக உலகெங்கிலும் வளர்ந்து வந்துள்ள பழமைவாதம் மற்றும் பிற்போக்கு என்பவற்றுக்கு மத்தியில், புரட்சிகர நம்பிக்கையிலும், சீர்திருத்த வாதத்தை விமர்சிப்பதிலும் ஈடுபட்டிருந்த அவர், இப்பொழுது, பிற்போக்கு வாதத்திலும் பார்க்க, குறைந்த அளவு தீமை என்ற முறையில் சீர்திருத்தவாதத்தை ஏற்றுக்கொள்கிறார்.

பேர்லினில் பிறந்து, அமெரிக்காவில் கல்வி கற்ற பிராங்க், வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், இலத்தீன் அமெரிக்காவிலும் உள்ள பல பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம், வரலாறு, சமூகவியல் போன்ற பாடங்களை – குறிப்பாக மூன்றாவது மண்டல அபிவிருத்தி குறித்து – போதித்து வந்துள்ளார். அவர், தற்பொழுது அம்ஸ்டர்டாமில் அமைந்துள்ள வளரும் பிராந்தியங்களுக்கான சமூக-பொருளாதார கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், அபிவிருத்தி பொருளியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் குறித்த பேராசிரியராகவும் பணிபுரிந்து வருகிறார்.

## மூன்றாவது உலகப்போர் அறிமுகம்

வளைகுடாப் போரினை, இந்த தலைப்பின் இரு அர்த்தங்களில் மூன்றாவது உலகப்போர் என்று வர்ணிக்க முடியும். முதலில், இப்போர், வறிய மூன்றாவது மண்டல நாடொன்றுக்கு எதிராக,வளமார்ந்த வட புலத்தையும், எண்ணெய்ச் செல்வம் மிக்க சில அரபு இராச்சியங்களையும் இலஞ்சம் ஊட்டப்பட்ட ஒரு சில பிராந்திய வல்லரசுகளையும் கூட்டுச்சேரச் செய்தது. அந்த வகையில், தென் புலத்தின் மீது தொடுக்கப்பட்ட வட புலத்தின் போர் என்ற முறையில் அதனை மூன்றாவது உலகப்போர் என்று குறிப்பிட முடியும். அரபு நாடுகளிலும் முஸ்லிம் நாடுகளிலும் மட்டுமல்லாமல், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும், இலத்தீன் அமெரிக்காவிலும் – அதாவது மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த உலகின் அனைத்துப் பாகங்களிலும் – அது அவ்விதமே கருதப்பட்டு வருகிறது. மூன்றாவது மண்டலமெங்கினும் வாழும் கோடான கோடி மக்கள் (எவருடைய நேசத்தையும் வென்றிராத சர்வாதிகாரி சதாம் ஹுஸைனுக்கு சார்பான நிலைப்பாட்டினை எடுக்க வேண்டியிருந்த போதிலும் கூட) இப்போருக்கெதிராகவும், வட புலத்துக்கு எதிராகவும் தமது எதிர்ப்புணர்ச்சியை, வெளிக்காட்டினார்கள்.

இப்போரின் போது வடபுல உலகெங்கணும் வெளிக்காட்டப்பட்ட இன உணர்வு மனப்பான்மையும் கூட இதனையே – அதாவது இது வடக்கில் வாழும் ''எமக்கும்'', மூன்றாவது மண்டலத்தின் தெற்கைச் சேர்ந்த ''அவர்களுக்கும்'' இடையில் மூண்டுள்ள போர் என்ற மனப்பதிவையே – உணர்த்துவதாக இருந்தது.




இரண்டாவதாக, வளைகுடாப் போரானது, மூன்றாவது உலகப் போரின் மூர்க்கமான தொடக்கத்தைக் குறிக்கும் அபாயகரமான போரொன்றாக இருந்தது. இராக் மீது பொழியப்பட்ட குண்டுகளின் நிறை உலகப் போரொன்றின் பரிமாணங்களில் காணப்பட்டது. ஒருபுறமிருக்க, இப்போருக்கூடாக, புதிய உலக ஒழுங்கொன்றை துவக்கி வைப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இந்த புதிய உலக ஒழுங்கின் மூலம் ''நேச நாடுகளின்'' உலகளாவிய அணி, சமூக பொதுக் கட்டமைப்புக்களை நிர்மூலம் செய்து, ஆயிரக்கணக்கான மனிதர்களை கொன்று குவிக்கக் கூடியதாக இருந்தது. ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் அணிதிரண்ட நேச நாடுகள், சார்பு ரீதியில் சிறியதொரு சர்வதேச தகராறினை தீர்த்து வைப்பதில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் நடைமுறையினைத் துறந்து, பாரிய, அழிவுகரமான, கொடூரமான, அனாவசியமான போரொன்றைத்

தொடுக்கும் வழியைத் தெரிவு செய்தன. அவ்வாறு செய்ததன் மூலம் புதிய உலக ஒழுங்கொன்றை கட்டியெழுப்பும் தமது அச்சுறுத்தலை அவர்கள் மிகத்தெளிவாக வெளிப்படுத்திக் காட்டினார்கள். எதிராக கிளம்பும் எந்த ஒரு நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக - அவர்கள் வறியவர்களாக வும், நலிவுற்றவர்களாகவும், தெற்கின் மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்தவர் களாகவும் இருக்கும் வரையில்-இதே இராணுவச் சக்தியையும், பெருநாசத் தையும் மீண்டும் மீண்டும் எடுத்து வரும் விதத்திலேயே இந்த உலக ஒழுங்கு கட்டியெழுப்பப்படுகிறது.

கெடுபிடி யுத்தத்தின் முடிவினை யடுத்து, மூன்றாவது உலக (சூடான) யுத்தம் கிழக்குக்கும், மேற்கிற்குமிடை யேயோ அல்லது மேற்கிற்கும் மேற் கிற்கும் இடையிலேயோ இடம்பெறப் போவதில்லை. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் மேற்கு - மேற்கு யுத்தங்கள் இல்லாதொழிந்து விட்டன. கொரியா, வியட்னாம் அங்கோலா, நிகாராகுவா போன்ற பிராயந்தியங் களிலும், மூன்றாவது மண்டலத்தின் வேறு சில பகுதிகளிலும் கிழக்கு-மேற்கு கெடுபிடி யுத்தம் நிகழ்த்தப் பட்டது. இப்பொழுது மேற்கு-மேற்கு கெடுபிடி யுத்தங்கள், தொடர்ச்சியான வடக்கு-தெற்குப் போராட்டங்களாக நிலைமாற்றங்கண்டு வருகின்றன. ஈராக்கில் நிகழ்ந்த வளைகுடாப் போர் இதற்கு சரியான உதாரணமாகும். இன்றைய நிலையில், இத்தகைய போராட்டங்கள் மூன்றாவது மண்டல நாடுகளில் இந்த மக்களின் செலவி லேயே யுத்தங்களாக நடத்தப்படுகின் றன. வடக்குக்கும் - தெற்கிற்கும் இடை யிலான இடைவெளியும், மோதல்களும் வரவரக் கூர்மையடைந்து வருகின் றன. பழைய உலக ஒழுங்கின் எந்த ஒரு கெடுபிடிப் போராட்டத்தையும், தென்புல மக்களின் செலவில், தாம் விரும்பும் நேரத்தில், அந்த மண்ணி லேயே உக்கிரமான போரொன்றாக மாற்றியமைக்கும் உரிமையையும், அச் சுறுத்தலையும் புதிய உலக ஒழுங்கில் வட புலத்தின் வல்லமை மிக்க நாடுகள் தம்வசம் வைத்துக் கொண்டுள்ளன என்ற சமிக்ஞையையே வளைகுடாப் போர் காட்டுகிறது. எனவே, இன்றைய உலகம், மூன்றாவது உலகப் போரின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது.

இக்கட்டுரை, இந்த உலகப் பின்ன ணியில் வைத்து வளைகுடாப் போர் மற்றும் எழுச்சி பெற்றுவரும் புதிய உலக ஒழுங்கு என்பவற்றை பரி சீலனை செய்கிறது. மேலும், காட்சிகள் விரியும் இந்த முக்கியமான நாடகத்தின் தலைமை நடிகர்களின் அரசியல், பொருளாதார உள்நோக்கங்கள் மற்றும் நடவடிக்கைகள், அவற்றின் பின் விளைவுகள் என்பன குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்படுகிறது. ஒரு புதிய உலக ஒழுங்குக்கான வளை குடாப் போரின் கதாநாயகன் பாத்தி ரத்தை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஏற்றி ருந்தார். எனினும், வளைகுடாப் போரை ஊக்குவித்து, நிகழ்த்திக் காட்ட யதற்கு பின்னணியிலிருந்த காரணங் கள், செயல்முறைகள் அல்லது நோக் கங்கள் போன்றன குறித்த உண்மை களை அவர் ஒருபோதும் வெளிப்படுத் தவில்லை. உண்மையிலேயே, ஜோர்ஜ் புஷ் அமெரிக்கப் பொதுமக்களையும், உலகத்தையும் ஏற்கனவே ஏமாற்றியிருந் தார். அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக் குப் போட்டியிட்டபோது, மக்கள் முன்னிலையில், "புதிய வரிகள் எவையு மில்லை" என்ற சுலோகத்தை அவர் முன்வைத்தார். மேலும், "கனிவு மிக்க மென்மையான ஒரு ஜனாதிபதி" என்ற ஒரு பிம்பத்தை முன்வைத்தும் பிரச் சாரம் மேற்கொள்ளப்பட்டது. இவற்று க்குப் பதிலாக, ஜனாதிபதி புஷ், இன்று வளைகுடாவில் புதிய உலக ஒழுங் கொன்றுக்கான யுத்தமொன்றை நிகழ்த் திக் காட்டுகிறார். ஜனாதிபதித் தேர்தலின் போது, அவருக்கொதிராகப் போட்டியிட்ட குடியரசுக்கட்சி வேட் பாளர் மைக்கல் டுகாக்கீஸ், ஜோர்ஜ் புஷ் பொய்யான வாக்குறுதிகளை அளி த்து வருகிறாரென்று மிகவும் தெளி வாகவே எச்சரிக்கை விடுத்திருந்தார். ஆனால், துரதிர்ஷ்வசமாக, அமெரிக்க மக்களோ உலகமோ இதற்கு செவி சாய்க்கவில்லை. ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன், முதலில், அவர் புதிய வரிகளை அறிவித்தார். பின்னர் இடம்பெற்ற பொருளாதார மந்தம், போர் என்பவற்றினையடுத்து இத்தகைய' வரிகளை மேலும் உயர்த்த வேண்டியிருந்தது. மேலும், அவர் தனது பிரச்சாரத்தின் போது, விசேஷ கவனத்துடன் பாதுகாத்து வளர்ப்பதாக வாக்குறுதியளித்திருந்த கல்வி, சுற்றுச் சுழல் போன்றவற்றையும் புறக்கணித் தார்.

ஜனாதிபதி புஷ்ஷே இந்தப் போரை உருவாக்கினார். அதற்கென, புதிய உலக ஒழுங்கு என்ற ஒரு கருத்தினை அவர் முன்வைத்தார். எனவே, இதற் கான உடனடிப் பொருளாதாரக் கார ணங்களையும் (கீழே மறைந்திருக்கும்) பூகோள - அரசியல் பொருளாதாரக் காரணங்களையும் தோண்டியெடுப்ப தற்கு மிகவும் விரிவான ஒரு பரிசீலனை அவசியமாகும். இறுதியாக, புதிய உலக ஒழுங்கில் அமெரிக்கா பெற்று ள்ள இடம் குறித்தும் நாம் ஆராய வேண்டியுள்ளது. இந்த முக்கியமான கேள்விகளுக்குரிய விளக்கங்களையும், விடைகளையும் கண்டறிந்து கொள்வ தற்கு ஒரு பங்களிப்பினை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எனவே, இக்கட்டுரை, வளைகுடாப் போரில் ஐக்கிய அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கை கள் மற்றும் அது வகித்து வந்த பொறுப்பு என்பவற்றில் கவனம் செலுத்துகிறது. வளைகுடா நெருக்கடி மற்றும் போர் என்பன குறித்த இக் கட்டுரை ஆசிரியரின் முன்னைய நான்கு கட்டுரைகள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றை ஒன்று திரட்டுவதற்கும், விரிவுபடுத்துவதற்கும் ஆவணப்படுத்தி, பிந்திய தகவல்களையும் சேர்த்துக் தொகுப்பதற்கும் இங்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இக்கட்டுரை களில் ஒன்றான, "உங்கள் இரு வீடுகளி லும் உள்ள சாபம்" என்ற கட்டுரை இதில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. ஏனெ னில், இந்த மோதல் தொடர்பான இரு தரப்புக்களினதும் பொறுப்புக் களை அது மிகவும் முக்கியமாக வலியுறுத்தி வருகிறது. எனினும், அண்மைக் காலத்தில் துக்ககரமான பல நிகழ்வுகளைக் கட்டவிழ்த்து விட்ட வகையில், அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் பெருமளவிற்கு வெளிக் காட்டி வந்த பொறுப்பற்ற மனோ பாவத்தை பகுப்பாய்வு செய்து அதனை உலகத்துக்கு அம்பலப்படுத்த உதவு வது மிக முக்கியமான ஒரு பணியாக மாறியுள்ளது. இதேவேளையில், இது தொடர்பான மேலும் பல சாட்சி

யங்கள் இப்பொழுது பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளன. மேற்கு நாடுகளில், சார்பு ரீதியாக, இது குறித்து வரையறுக்கப்பட்ட அளவிலேயே சாட்சியங்கள் கிடைக்கக் கூடியதாகவுள்ளன. நான் முக்கியமாக "இன்டர் நஷனல் ஹெரால்ட் டிரிபியூன்" பத்திரிகையில் வெளிவந்த செய்திகளையே பெருமளவிற்குப் பயன்படுத்தியிருக்கின்றேன். எப்படியிருந்தபோதிலும், ஐக்கிய அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் செயல்கள், நடவடிக்கைகள் என்பன ஒரு மூன்றாவது மண்டல நாட்டின் அல்லது தலைவரின் நடவடிக்கைகள், செயல்கள் என்பவற்றைக் காட்டிலும் அதிகளவு முக்கியத்துவத்தையும், வன்மையையும் பெறுகின்றன. ஆகவே, இந்த நிலையில், இந்த நாடகத்தின் முக்கிய கதாபாத்திரங்களின் உலகைக் குலுக்கும் நடவடிக்கைகள் மற்றும் பின்விளைவுகள் என்பன குறித்து அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

### வளைகுடாப் போருக்கான மேற்கின் போலிக் காரணங்கள்

ஜனாதிபதி சதாம் ஹூசைனின் கீழ், ஈராக், குவைத் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்ட செயல், சர்வதேச சட்டத்தை அப்பட்டமாக மீறிய ஒரு செயல் என்பது கருத்து முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயமாகும். எனினும், புதிய உலக ஒழுங்குக் கோட்பாட்டினையும், சர்வதேச சட்டத்தையும், ஐ.நா. சாசனத்தையும் பாதுகாப்பதற்காகவே வளைகுடாப் போர் துவக்கப்பட்டது என்று கூறுவது வெறும் பொய்யாகும். உண்மையிலேயே இந்த சாக்கு, குறிப்பாக ஜனாதிபதி புஷ்ஷைப் பொறுத்த வரையிலும் - ஐ.நா. வில் அவருக்கு ஆதரவு காட்டிய அவருடைய மேற்கத்தைய கூட்டாளிகள் மற்றும் நாடுகள் என்பவற்றைப் பொறுத்தவரையிலும் அவநம்பிக்கை வாதத்தின் உச்ச வெளிப்பாடாகவே தெரிந்தது.

இந்த விதத்திலான வேறு சில ஆக்கிரமிப்புக்களும், ஐ.நா. சாசனம் மற்றும் ஐ.நா. தீர்மானங்கள் என்பன தொடர்பான பல மீறல் சம்பவங்களும் இத்தகைய எதிர்விளைவுகள் எவற்றையுமே சந்திக்காதிருந்துள்ளன. அது மட்டுமன்றி, அத்தகைய சில மீறல்கள் கவனத்திலெடுக்கப்படக்கூட இல்லை. இந்தோனேஷியா கிழக்குத் தைமூருக்கு படையெடுத்துச் சென்று, பாரியளவில் மனிதப் படுகொலைகளைச் செய்து, அப்பகுதியையே துவம்சம் செய்த போது உலகம் அதனை கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை மற்றும் அயல்நாடுகள் மீதான அதன் தொடர்ச்சியான படையெடுப்புக்கள் என்பன காரணமாக ஐ.நா. வும் அதன் உறுப்பு நாடுகளும் அந்நாடு மீது வியாபாரத்தடைகளை விதித்திருந்தன. எனினும், தென்னாபிரிக்காவுக்கு எதிராக போர்தொடுக்க வேண்டுமென்று எவரும் யோசனை கூறவில்லை. ஆப்கானிஸ்தான் மீதான சோவியத் ஆக்கிரமிப்பு, கடுங்கண்டனத்தையும், எதிர்ப்பையும் அவசியப்படுத்திய ஓர் அத்துமீறல் சம்பவமாகும். எனினும், பாதுகாப்புக் கவுன்சில் அதற்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. சோவியத் யூனியனுக்கெதிராக எதிராக்கிரமிப்பு எதுவும் நிச்சயமாக மேற்கொள்ளப்படவில்லை. ஈரான் மீதான ஈராக்கியப் படையெடுப்புக்கு எந்த அணி அரசியல் மற்றும் இராணுவ ஆதரவினை வழங்கியதோ அதே அணிதான் இன்று, குவைத்துக்கெதிராக ஈராக் மேற்கொண்ட ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்குப் போர் தொடுத்திருக்கிறது.

ஆக்கிரமிப்பிலிருந்தும், முற்றுகையிலிருந்தும் குவைத்தை விடுவிப்பதற்கென ஓர் அணியில் திரண்டிருக்கும் அரசுகளில் பல, தாமே அத்தகைய பல ஆக்கிரமிப்புக்களில் ஈடுபட்ட அரசுகளாகும். இன்னமும் கூட, மற்றவர்களின் பிராந்தியங்களை இந்த நாடுகள் தமது இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டுள்ளன.

இஸ்ரேல், ஐ.நா. வின் 242 ஆம் தீர்மானத்தை மீறி, மேற்குக்கரை, கோலான் பகுதி, காஸா முனை போன்ற பல பிரதேசங்களை ஆக்கிரமித்து, தன்வசம் வைத்துக் கொண்டுள்ளது. மேலும், அது லெபனான் மீது படையெடுத்ததுடன் தென் லெபனான் மீது அது நிதர்சனமான இராணுவக் கட்டுப்பாட்டை இப்பொழுது வைத்துக் கொண்டுள்ளது. சிரியா, லெபனான் மீது படையெடுத்ததுடன், வட லெபனானில் சில பகுதிகளை இன்னும் அது தனது இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. துருக்கி 1974 இல் சைப்பிரஸ் மீது ஆக்கிரமிப்பினை நடத்தியது. இன்னமும் கூட தன் இராணுவத்தின் ஒரு பகுதியை அந்நாட்டில் வைத்திருக்கிறது மொரோக்கோ மேற்கு சகாராமீது படையெடுத்து அதனைத் தன்வசம் எடுத்துக் கொண்டது. மிகச் சமீபத்தில், ஐக்கிய அமெரிக்கா நிகாராகுவா மீது போர் தொடுத்தது. மேலும், அது கிரனடா மீது படையெடுப்பை நடத்தியதுடன், இப்பொழுதும் அதனைத் தன்வசம் வைத்துக் கொண்டுள்ளது. இது தவிர, பனாமா மீது போர் தொடுத்த ஐக்கிய அமெரிக்கா இப்பொழுது அந்நாட்டை தனது இராணுவ முற்றுகையின் கீழ் வைத்திருக்கிறது. எனவே, ஈராக்கிற்கு எதிராகத் திரண்ட நேச அணியில், குறைந்தது ஆறு அரசுகளாவது, ஐ.நா. உறுப்பு அரசுகள் மீது அண்மையில் படையெடுப்புக்களை மேற்கொண்ட நாடுகளாக இருந்தன. அவ்விதம் படையெடுப்புக்குட்படுத்தப்பட்ட நாடுகளை (அல்லது அவற்றின் சில பகுதிகளை) இன்னமும் தம்வசம் வைத்துக்கொண்டுள்ள அரசுகளாவே அவை உள்ளன. இந்த "அசிங்கமான" ஆறு அரசுகளும், சர்வதேச சட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, நிச்சயமாக குவைத்தை ஆதரிக்கவில்லை. ஏனெனில் அவை சர்வதேச சட்டத்தை ஏற்கனவே மீறியிருந்ததுடன், இப்பொழுதும் மீறிக் கொண்டிருக்கின்றன. அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் - அவருடைய கைகளும் கூட அவ்வளவு சுத்தமானவையல்ல - "பல வந்தமாக கைப்பற்றிக் கொள்ளுதல் குறித்த உதாரணங்கள் உலகெங்கும் சிதறிக்கிடக்கின்றன" என்றும் கூறியிருந்தார்.

குறிப்பிட்ட சில இலத்தீன் அமெரிக்க நாடுகளைத் தவிர, துரதிர்ஷ்டவசமாக, வேறு எந்த ஒரு நாடும் - ஜனாதிபதி சதாம் ஹூசைனும் கூட - குவைத் மீதான ஈராக்கியப் படையெடுப்பை, பனாமா மீதான அமெரிக்கப் படையெடுப்புடன் தொடர்புபடுத்திப் பேசவில்லை. ஜனாதிபதி சதாம் ஹூசைன் குவைத் மீது படையெடுப்பதற்கு எட்டு மாதங்களுக்கு முன்னரேயே ஜனாதிபதி

புஷ் பனாமா மீது ஆக்கிரமிப்பைத் தொடுத்திருந்தார். அமெரிக்காவின் இந்த வெளிநாட்டுப் படையெடுப்பு காரணமாக, இறைமை அரசான பனாமாவில் 4000 – 7000 வரையிலான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். மேலும், பனாமா இப்பொழுது, அமெரிக்காவினால் விசுவாசமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஒரு "ஜனாதிபதியினாலும்" இரு "உப ஜனாதிபதிகளினாலும்" "ஆளப்பட்டு" வருகிறது. அத்துடன் அமெரிக்க இராணுவத் தளமொன்றும் அங்கு அமைக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி புஷ் 27,000 படை அணியுடன் பனாமா மீது தொடுத்த ஆக்கிரமிப்புக்கு "ஒரு போதைப் பொருள் கடத்தல்காரனைப் பிடிப்பதற்காக" என "நியாயமான காரணம்" கூறப்பட்டது. இது ஒரு பச்சைப் பொய்யாகும்; இப்படையெடுப்புக்கு ஒரு வருடத்துக்குப் பின்னரும் கூட அந்நாட்டில் போதைவஸ்து வியாபாரம் வழமைபோல இடம் பெற்றுக் கொண்டிருந்தது. ("இன்டர்நஷனல் ஹெறால்ட் ட்ரிபியூன்", ஏப்ரல் 20, 21 – 1991). அது மட்டுமன்றி, ஜெனரல் நொரீகாவுக்கு எதிரான ஆவண ரீதியான சாட்சியங்களாக, அமெரிக்க நீதித் திணைக்களத்தினால் ஒரு துரும்பைக் கூட முன்வைக்க முடியாதிருந்தது. பனாமா மீதான, ஜனாதிபதி புஷ்ஷின் படையெடுப்புக்கான உண்மையான காரணங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. நொரீகாவுக்கும் ஜக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலேற்பட்ட மனக்கசப்புக்கான உண்மையான காரணம் போதைவஸ்து வியாபாரமல்ல என்றும், பிந்திய 1980களில் நிகாராகுவா மீதான கொன்ட்ராஸ் படையெடுப்பின் போது, சி.ஐ.ஏ. அமைப்புக்கு உதவுவதற்கு நொரீகா மறுத்தமையே இதற்கான உண்மையான காரணமென்றும் அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். இப்படையெடுப்புக்குப் பிறிதொரு காரணமும் வழிகோலியிருக்க முடியும். அதாவது, சோவியத் யூனியன் சிதறிவரும் ஒரு நிலையில், இனித் தொடர்ந்தும் சோவியத் பூச்சாண்டியை, தமது நடவடிக்கைகளுக்கு ஒரு காரணமாக முன்வைக்க முடியாதிருக்கும் யதார்த்த நிலையை அமெரிக்கா உணர்ந்திருந்தது. எனவே, இன்னொரு பயங்கரமான பூச்சாண்டி (வளைகுடாவில்) கிடைக்கும் வரையில், போதை வஸ்துக் கடத்தல் பயங்கரவாதத்தினை ஒரு சாக்காக காட்டவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இருந்திருக்க வேண்டும். எனினும், அதிகளவிலான பொருள் ரீதியான ஊக்குவிப்புக்கள் குறித்தும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. பனாமா மீது படையெடுத்து, அமெரிக்கா அதனைத் தன்வசம் வைத்துக் கொண்டதற்கு கூறப்பட்ட மற்றொரு காரணம், பனாமாக் கால்வாய் மீது தனது செல்வாக்கை வைத்திருக்க அது விரும்பியது என்பதாகும். பனாமாக் கால்வாய் தொடர்பான காட்டர் – டொரிஜோர்ஸ் உடன்படிக்கை பூர்த்தி செய்யப் படுமென்று அமெரிக்கா அஞ்சிக் கொண்டிருந்தது. அந்த ஒப்பந்த விதிகளின் பிரகாரம், அமெரிக்கா, 2000 – ஆவது ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி இக்கால்வாயையும் அதன் வலயத்தையும் பனாமாவிடம் கையளித்தல் வேண்டும். இந்த நிலையில், ஜனாதிபதி சதாம் ஹூசைனின் குவைத் மீதான ஆக்கிரமிப்பினை கண்டனம் செய்வதற்கு, கடவுளையும், சர்வதேச சட்டத்தையும், தார்மீக நெறிகளையும் சாட்சிக்கு அழைப்பதற்கு ஜனாதிபதி புஷ்ஷிற்கு என்ன அருகதை இருக்கிறது ? பனாமாவின் இறைமையை மீறியதன் மூலம் ஜனாதிபதி புஷ் உருவாக்கவிருக்கும் புதிய உலக ஒழுங்கை பாதுகாப்பதற்கு பாதுகாப்புக் கவுன்சில் எவ்வித தீர்மானங்களையும் நிறைவேற்றவில்லை. மாறாக, சர்வதேச சட்டத்தை மீறியதற்கும், பனாமாவில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டதற்கும் ஜனாதிபதி புஷ் முழு ஆதரவையும் பெற்றார். ஜனாதிபதி ரீகன் கிரனடா மீது படையெடுத்து, அதனைக் கைப்பற்றிய போதும் கூட இதே நிலையே காணப்பட்டது (கிரனடாவை இன்னும் அமெரிக்காவே நிர்வகித்து வருகிறது).

ஒரு தனிப்பட்ட மூன்றாவது மண்டல நாட்டுக்கெதிராக, மேலைய உலகம் மேற்கொண்ட முதலாவது முக்கியமான யுத்தம் பாக்லாந்து யுத்தமாகும். இந்த யுத்தத்தின் போது மூன்றாவது மண்டல நாடான ஆர்ஜென்டீனா, வடபுலத்தைச் சேர்ந்த எந்த ஒரு நாட்டிலிருந்தும் எத்தகைய ஆதரவையும் பெற்றுக் கொள்ளவில்லை. இன்று, அதே பழைய நேட்டோ அணி, உயர்ந்த குரலில் கடவுளிடமும், நீதியிடமும் முறையிடுவதும், அதே காரணத்திற்காக, மூன்றாவது மண்டல நாடொன்றுக்கு எதிராக இணைந்து போர் தொடுப்பதும் எந்த நியாயத்தைச் சேர்ந்தது ?

## போருக்கான பொருளாதாரக் காரணங்கள்

இப்போருக்கான மிக வெளிப்படையான பொருளாதாரக் காரணம் எண்ணெய் ஆகும். டொலரின் பெறுமதியில் புதிதாக ஏற்பட்ட வீழ்ச்சியையடுத்து – எண்ணெய், டொலரிலேயே விலையிடப்படுகிறது – எண்ணெய்யின் உண்மையான விலை மீண்டுமொரு முறை வீழ்ச்சி கண்டிருக்கிறது. ஈராக், குவைத்துக்கெதிராக, தன் சார்பிலும், ஏனைய அரபு அரசுகள் மற்றும் எண்ணெய் உற்பத்தியாளர்கள் ஆகியோர் சார்பிலும் சில சட்டபூர்வமான கோரிக்கைகளைக் கொண்டிருந்தது. சதாம் ஹூசைன், படையெடுப்பின் மூலம் இக்கோரிக்கைகளை வலியுறுத்திய போது, அவர் ஜக்கிய அமெரிக்காவின் வாடிக்கையாளர்களாக இருந்த வேறு சில எண்ணெய் நலன்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்தார்.

ஜனாதிபதி ஹூசைன், அரசியல், பொருளாதார காரணங்களின் நிமித்தம் குவைத் மீது படையெடுப்பை நிகழ்த்தினார். ஈராக் – ஈரான் போர் காரணமாக கடன் சுமை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டுவந்த ஒரு வேளையில், இக்கடன்களைத் தீர்ப்பதற்காக உபயோகிக்கப்பட வேண்டிய எண்ணெய் மூலமான வருவாய்கள் வீழ்ச்சியடைந்து கொண்டு வந்த ஒரு பின்னணியில், உள்நாட்டிலும் இப்பிராந்தியத்திலும் தனக்கு ஆதரவு நிலையைத் திரட்டிக் கொள்வதற்காக இவர் இம்முயற்சியை மேற்கொண்டார். "செல்வத்தை உற்பத்தி செய்யும் மூலவளங்களின் ஏற்றத்தாழ்வான பகிர்வும், செல்வந்தருக்கும், வறியோருக்குமான இடைவெளியும் பிராந்திய நெருக்கடி நிலைமைக்கு தூபமிட்டு வந்தது. இது முழு உலகினதும் வாழ்க்கைத் தரங்களின் மீது மிக மோசமான தாக்கங்

களை எடுத்து வரும் ஒரு போராட்ட மாக இருக்கிறது" என்று டைம் சஞ்சிகை (ஆகஸ்ட், 20 ) எழுதியிருந்தது. ரிச்சர்ட் நிக்சன் இது குறித்து பின் வருமாறு எழுதியிருந்தார்.

"எண்ணெய்க்காகவே நாங்கள் வளைகுடாவுக்குச் சென்றோமென்று செனட்டர் பொப் டோல் கூறும் அதே வேளையில், அரசுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர், தொழில்களுக்காவே நாம் தலையிட்டோம் என்று குறிப்பிட்டிருந் தார். முழுக்க முழுக்க சுயநலத்தினடிப் படையில், எமது நடவடிக்கைகளை நியாயப்படுத்தியமைக்காக அவர்கள் இருவரும் கடுமையான விமர்சனத்து க்கு உள்ளாக்கப்பட்டனர். முக்கியத் துவம் மிகுந்த எமது பொருளாதார நலன்களை பாதுகாத்துக் கொண்ட மைக்காக நாம் மன்னிப்புக் கோரத் தேவையில்லை. அமெரிக்கா இதில் தலையிட்டிருக்கா விட்டால், ஒரு சர்வ தேசத் திருடன் இன்று உலகின் 40 சதவீதத்துக்கும் மேற்பட்ட எண் ணெய்யை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்திருப்பான். எவ்வாறெனி னும், இது வெறும் எண்ணெய்த்தொடர் பான ஒரு யுத்தம் மட்டுமல்ல; ஒரு கொடுங்கோலனின் கொடூரங்கள் குறித்த ஒரு யுத்தமாகவும் இது இருக்க வில்லை; அது ஜனநாயகம் குறித்த ஒரு யுத்தமும் அல்ல; சமாதானம் குறித்த ஒரு யுத்தமாகவே அது இருக் கும். அதனாலேயே வளைகுடா மீதான எமது அர்ப்பணிப்பு, மகத்தான ஒரு தார்மீக பிரயத்தனமாக இருக்கிறது."

இதே ரிச்சர்ட் நிக்ஸன் தான், மோசடி மற்றும் ஏமாற்று வேலை என்பன குறித்து தனக்கெதிராக காங் கிரஸ் கொண்டுவர முயன்ற குற்றப் பிரேரணையைத் தடுக்கும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதிப் பதவியை ராஜினாமா செய்தார் என்பதனை மீண்டும் நினைவு கூர வேண்டிய அவசியமில்லை. வியட்னாமுக்கெதி ராகப் பெருமளவில் குண்டுகள் வீசி, போரொன்றை நடத்தியவரும் இவரே யாவார்.

### உள்நாட்டுப் பொருளாதார மந்தம்

இப்போரில் ஈடுபடுவதற்கான மற்று மொரு உடனடிப் பொருளாதாரக் காரணம், உள்நாட்டுப் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொள்வதாக (அல்லது உள்நாட்டில் இப்பின்னடை யின் பின்விளைவுகளை எதிர்கொள்வ தாக) இருந்தது. அரசுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் இதனையே தெரியப் படுத்தினார். உண்மையிலேயே, புதிய உலகப் பொருளாதார மந்தமொன்றின் முன்னிலையில், தாம் உள்நாட்டில் எதிர்கொண்ட அரசியல், பொருளா தாரப் பிரச்சினைகளை சமாளிக்கும் பொருட்டே ஹூசைன், புஷ் ஆகிய இரு ஜனாதிபதிகளும் இந்த யுத்தத்தைத் தொடக்கினார்கள். இதற்கான சமீ பத்திய முன்நிகழ்வு ஒன்றும் இருந்தது. கடந்த உலகப் பொருளாதார மந்தத்தின் போது, ஆஜென்டீனிய ஜனாதிபதி கல்டீரியும், பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிரட் தட்சரும் 1982 இல் போக்லாந்து யுத்தத்தைத் தொடக்கி, உச்ச கட்டத்தில் நடாத்தினார்கள். இதற்கான காரணம், இவ்விருவருமே, உலகப் பொருளாதார மந்தத்தின் விளைவாக உருவான உள் நாட்டு அரசியல் பிரச்சினைகளை அவ்வேளையில் சந்திக்கொண்டிருந் தார்கள் என்பதாகும். இந்தப் போர், மிக முக்கியமாக, தென்மண்டலத்தி லிருந்த தனியொரு நாட்டுக்கெதிராக முழுமேலைய உலகத்தையும் ஒன்று திரட்டியிருந்தது.

குவைத் மீதான ஈராக் படையெடுப்பு குறித்த அமெரிக்க எதிர் நடவடிக்கை இவ்வளவு வன்மையானதாக இருந்தது ஏன்? எது சாத்தியம்? எந்தளவுக்கு எதிர் நடவடிக்கை அனுமதிக்கக் கூடிய தாக இருக்கும் என்ற வகையில் பெரும் பாலானவர்கள் எண்ணியிருந்ததற்கும் வெகு அப்பால் அமெரிக்கா சென்று விட்டது. ஈராக், ஈரானைத் தாக்கிய போது அல்லது இஸ்ரேல் லெபனான் மீது படையெடுத்தபோது -அது இன்ன மும் சில அரபுப் பிரதேசங்களை தன்வசம் வைத்திருக்கிறது என்பது ஒருபுறமிருக்க - இந்த எதிர்நடவடிக்கை மேற்கொள்ளப்படாதது ஏன்? அமெரி க்காவின் நண்பர்கள் மற்றும் பகை வர்கள் என்போர் தொடர்பான அதன் வேறுபட்ட நலன்களிலேயே இதற்கான விளக்கம் ஓரளவுக்குத் தங்கியிருக்கிறது.

எனினும், இந்த அமெரிக்க நட வடிக்கை மேற்கொள்ளப்பட்ட நேரம், உள்நாட்டுப் பொருளாதாரத் தேவை கள் மற்றும் அரசியல் போராட்டங்கள் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டதாக உள்ளது. ஜனாதிபதி புஷ் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது போயிருந்தமை யால் அவருடைய உள்நாட்டுச் செல் வாக்கு நிலை மங்கிக் கொண்டு வந்தது. எதிரில் வந்து கொண்டிருந்த பொரு ளாதார மந்தம், அவர் மீதிருந்த மக்கள் அபிமானத்தை மேலும் வீழ்த்துவதாக இருந்தது. அத்துடன், வளர்ந்து வரும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும், கெடுபிடி யுத்தத்தின் முடிவும் அவர் மீது மேலும் பல நிர்ப்பந்தங்களை எடுத்து வந்தன. இந்தச் சூழ்நிலையின் போது, வரலாற்று முன்னிகழ்வு ஒன்றின் அடிப்படையிலேயே அவர் இதற்கு எதிர்விளைவு காட்டினார். இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட மந்த நிலைகளின் போது, அமெரிக்காவில் ஆட்சியில் இருந்தவர்கள் - குடியரசுக் கட்சியாக இருந்தாலும் சரி, ஜனநாயகக் கட்சியாக இருந்தாலும் சரி - இத்தகைய பின்னடைவு நிலைகளை எதிர் கொள் ளும் போது, போர் இயந்திரத்தை முடுக்கிவிடுவதற்கான நிகழ்ச்சிகளை அல்லது வாய்ப்புக்களை தூண்டிவந்தி ருக்கிறார்கள் என்பதனை நாம் அவ தானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்னர், 1949 இல், அமெரிக்கா முத லாவது பொருளாதாரப் பின்னடை வைச் சந்தித்தது. இந்தப் பின்னடை வின் போது, இது, 1930 களில் மாபெரும் பொருளாதார மந்தத்தின் நினைவுகளை மீண்டும் ஒரு முறை எடுத்துவரக் கூடுமென்று சிலர் அஞ்சி னார்கள். இதனையடுத்தே, ட்ரூமன் 1950 இல் கொரியப் போருக்கு மிகுந்த முனைப்புடன் பங்களிப்புச் செய்திருந் தார். 1953/54 ல் ஏற்பட்ட பின்னடை வின் போது, அமெரிக்கா, அரசியல் சாசன ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட கௌதமாலாவின் அர்பின்ஸ் அரசாங் கத்தை இராணுவ ரீதியாகத் தூக்கி யெறியும் முயற்சியில் தலையிட்டது. 1957/58 பின்னடைவையடுத்து, ஐசன் நோவர், 1958 இல் லெபனானில் தலையிட்டார். 1967 இன் பின்னடைவு ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளிலே முக்கியமாகக் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில், அந்த மந்தம், ஆரம்ப கட்டத்திலேயே இருந்தது. ஏனெனில்,

ஜனாதிபதி ஜோன்சன், வியட்நாமில் தீவிரமான யுத்தத்தில் பங்கேற்றுக் கொண்டதன் மூலம் அமெரிக்கா இப் பின்னடைவினை பெருமளவிற்குத் தவிர்த்துக் கொண்டது. எனினும், ஜோன்சன் 1964 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது, வியட்நாம் யுத்தத்துக்கெதிரான வாக்குறுதிகளை வழங்கியே தனது பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தார். 1968 இன் வியட்நாமிய டெட் தாக்குதல் மற்றும் 1969/70 பின்னடைவினையடுத்து இந்தோ சீனாவில் - கம்போடியாவிலும் - அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள் மேலும் தீவிரமடைந்தன.

1979 இன் பின்ன்டைவின் போது ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர்இரண்டாவது கெடுபிடி யுத்தத்தைத் துவக்கி வைத்தார். ஐரோப்பாவின் ஏவுகணைகளை வைத்திருத்தல், நேட்டோ வரவுசெலவுத் திட்டத்தை வருடாந்தம் மூன்று சதவீதம் அதிகரித்தல் ஆகிய தீர்மானங்களுக்கு முன்னர், 1979 டிசம்பரில் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. இதற்கு அமெரிக்கா, எதிர்பாராத அளவுக்கு, மிகக் கடுமையான எதிர் விளைவினைக் காட்டியது. இது 1979 இன் பொருளாதாரப் பின்னடைவுக்குப் பின்னரேயே இடம்பெற்றது. 1981/ 82 இல் இடம் பெற்ற பொருளாதாரப் பின்னடைவின் போது, ரீகன் பாரிய ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டிருந்தார். கிரனாடா மீதும் அவர் மிதமிஞ்சிய கவனம் செலுத்தினார். பொருளாதாரப் பின்னடைவுகள் மற்றும் இராணுவச் செலவு வெட்டுக்கள் என்பன குறித்த அச்சுறுத்தல்களும், பனாமாவைப் பொறுத்தளவில், மிதமிஞ்சியளவில் நடவடிக்கை எடுப்பதற்கு அவரைத் தூண்டிய காரணிகளாக இருந்தன. இதைவிடவும் பேரளவு மட்டத்திலான பின்னடைவு அச்சுறுத்தல்களும், வரி/ பற்றாக்குறைப் பிரச்சினையில் அவருடைய செல்வாக்கு சரிந்து சென்றதும், இராணுவச் செலவு வெட்டுக்களும் ஈராக்குக்கெதிராக மேலும் தீவிரமாக எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவரைத் தூண்டிவிட்ட காரணிகளாக இருந்தன.

**1990 களில் உலகப் பொருளாதார மந்தம்**

வளைகுடா நெருக்கடி உலகப் பொருளாதாரப் பின்னடைவை எடுத்து வந்ததா அல்லது அத்தகைய பின்னடைவொன்று வளைகுடா நெருக்கடியைத் தோற்றுவித்ததா என்பது குறித்து அமெரிக்க நிர்வாகமும், பத்திரிகைகளும் கலந்துரையாடி வருகின்றன. 1989/90 பொருளாதார மந்தம் குவைத் மீது ஈராக் படையெடுப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னரேயே தொடங்கியிருந்தது. இது முதலில் ஜனாதிபதி புஷ்ஷின் பனாமா மீதான படையெடுப்புக்கு வழிகோலியது. அதனையடுத்து, வளைகுடா நெருக்கடியும், யுத்தமும் ஏற்பட்டன. வளைகுடாவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள், அமெரிக்கப் பொருளாதாரத்தை ஸ்திரமாக்குவதற்கு உதவியிராவிடில் அமெரிக்காவின் பொருளாதார நிலை இன்னும் மோசமாக இருந்திருக்குமென்று ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் குழுவின் தலைவரான மைக்கல் பொஸ்கின் குறிப்பிட்டிருந்தார்.

வளைகுடா நெருக்கடிக்கும் போருக்கும் சில காலங்களுக்குமுன்னரேயே பொருளாதாரப் பின்னடைவு மிகவும் தெளிவாகத் தெரியத் தொடங்கியிருந்தது. சில பத்திரிகைத் தலைப்புக்களும் (பெரும்பாலும் இன்டர்நஷனல் ஹெரல்ட் டிரிபியூன் பத்திரிகையில் அவ்வப்போது இடம் பெற்ற) சில குறிப்புக்களும் இதனை எடுத்துக் காட்டுகின்றன. "ஐக்கிய அமெரிக்க இலாபங்கள்: மந்தமொன்றுக்கான அறிகுறி," "ஐக்கிய அமெரிக்க வருமானங்களில் 1.3 சதவீதம் வீழ்ச்சி", "ஐக்கிய அமெரிக்காவில், பின்னடைவொன்றுக்கான அறிகுறிகளுக்கு மத்தியில் திவால் நிலைகள் பெருக்கம்", "அமெரிக்கக் கம்பனிகளின் கடன் சுமை பெருகுகிறது", "இருபது பெரிய வங்கிகள் வீழ்ச்சி நிலையில் உள்ளன", "பல பாரிய நிறுவனங்கள் திவால் நிலையை அண்மித்துக் கொண்டிருக்கின்றன – காங்கிரஸ் ஆய்வு", போன்ற பத்திரிகைத் தலைப்புக்களை உதாரணங்களாக காட்டலாம்.

பொருளாதார மந்தம் ஏற்கனவே உலகெங்கிலும் வியாபித்து விட்டது. கனடாவும், அவுஸ்திரேலியாவும் கடும் பின்னடைவில் சிக்கியுள்ளன. ஐக்கிய இராச்சியத்தின் மந்தம் எதிர்பார்த்ததை விடவும் மிகவும் மோசமாக உள்ளது. பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, நெதர்லாந்து (சுவிட்சர்லாந்தும் கூட) குறைந்த அல்லது எதிர்மறை வளர்ச்சி வீதங்களைக் கொண்டுள்ளன. ஆபிரிக்கா கடும் மந்தத்தில் சிக்கியிருக்கிறது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் மொத்தத் தேசிய உற்பத்தியும், தலைக்குரிய தேசிய உற்பத்தியும் 1990 இல் வீழ்ச்சியடைந்துள்ளன. கிழக்கு ஐரோப்பாவில் 1990 இல் மட்டும் 20 சதவீத பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சோவியத் யூனியனிலும் இதே நிலைதான். சீனா, இந்தியா போன்ற நாடுகள் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளை எடுத்துவரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளன. 1990 களின் தொடக்கத்தில் ஜப்பான், ஜேர்மனி ஆகிய நாடுகள் இதற்கு விதிவிலக்குகளாக இருக்க முடியுமா? ஆனால், ஜேர்மனியின் பொருளாதார நிலையும் அவ்வளவு பிரகாசமானதாகத் தென்படவில்லை. இரு ஜேர்மனிகளினதும் இணைப்பு மிக மோசமான பொருளாதாரப் பின்விளைவுகளை எடுத்து வந்ததாகவும் அடுத்த தினத்திலேயே டொய்ஸ் மார்க் வீழ்ச்சி கண்டதாகவும் ஜேர்மனியின் வங்கித் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் மட்டுமன்றி கொரியா, தாய்வான் போன்ற நாடுகளிலும் வளர்ச்சி விகிதங்கள் ஏற்கனவே வீழ்ச்சியடைந்துள்ளன. ஜப்பானில் 1990 ல் பங்குச் சந்தை 40 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. மெய்ச்சொத்துக்களின் விலைகள் ஊசலாடி வருகின்றன. ஜப்பானிய முதலீட்டாளர்களும் ஊக வியாபாரிகளும் உள்நாட்டில் தமது நட்டங்களை ஈடுசெய்து கொள்ளும் நோக்கில், வெளிநாடுகளிலிருந்து தமது முதலீடுகளை வாபஸ் பெற்றுக் வருகின்றனர். ஜப்பானிலும் புதிதாகத் தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளிலும் கடுமையான பொருளாதாரப் பின்னடைவொன்று ஏற்படுவதற்கான அறிகுறிகள் மிகத்தெளிவாகத் தெரிகின்றன. எந்த வழியில் பார்த்தாலும், உலகப் பொருளாதாரத்தில், (ஜப்பானியப் போட்டி இடம் பெறாதிருப்பது ஒருபுறமிருக்க) ஜப்பானின் ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்கள் மிக மங்கலாகவே தெரிகின்றன.

ஆகவே எண்பதுகளின் தொடக்கத்தில் உலகெங்கிலும் நிலவிய கடுமை

யான பொருளாதாரப் பின்னடைவினையும் பார்க்க, மிகவும் மோசமான ஒரு பின்னடைவு, 1990 களில் உருவாகும் என்பதனையே போக்குகள் அனைத்தும் காட்டுகின்றன. உலகின் பிரதான வியாபாரப் பிராந்தியங்களான அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் மற்றும் அவற்றின் மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த வியாபாரக் கூட்டுக்கள் ஆகிய வற்றுக்கிடையிலான பிராந்திய ரீதியான, துறைவாரியான திரண்ட ஏற்றத் தாழ்வுகளை இந்தப் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமாக்கி வருகின்றது.

இந்த நிலை மற்றுமொரு நெருக்கடிக்கும், மற்றுமொரு பின்னடைவுக்கும் உலகினை இட்டுச் செல்ல முடியும். இத்தகைய ஒரு பின்னடைவின் போது பலபக்க உலகப் பொருளாதார நிதி அமைப்புக்குள் பழைய அமெரிக்க மேலாதிக்கத்தினை (அல்லது மாற்று முறையிலான ஜப்பானிய புதிய மேலாதிக்கத்தை) திணிப்பது மிகவும் கஷ்டமான ஒரு காரியமாகவே இருக்கும்.

### மேற்கு - மேற்குப் போட்டி

வளைகுடாப் போருக்கு வழிகோலிய, அமெரிக்காவின் போர்க் குணம் கொண்ட நிலைப்பாட்டுக்கான மேலதிக காரணங்கள், உலகெங்கிலும், அமெரிக்கப் பொருளாதார நலன்களையும் பூகோள-அரசியல் நலன்களையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை இருந்தமையாகும். இந்த அமெரிக்க நலன்களுக்கெதிரான பிரதான அச்சுறுத்தல்கள், ஜப்பானிலிருந்தும், ஜேர்மனியிலிருந்தும் வந்த போட்டியாகும். இன்னும் சரியாகச் செல்வதானால் ஜப்பானின் தலைமையுடன் ஆசியாவிலிருந்தும், ஜேர்மனியின் தலைமையுடன் ஐரோப்பாவிலிருந்தும் வந்த போட்டியாகும். சோவியத் அச்சுறுத்தல் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டிருந்தது. கெடுபிடி யுத்தம் முடிந்து விட்டதையும், ஜப்பானும், ஜேர்மனியும் வெற்றி பெற்றுள்ளதையும் நாம் அவதானித்தோம். 1980 களின் ரீகன் வாதம், சோவியத் யூனியனைப் போட்டியிலிருந்து அப்புறப்படுத்த உதவியது. ஆனால், அமெரிக்கப் பொருளாதாரத்தையும், அமெரிக்க அரசாங்க வரவு செலவுத் திட்டத்தையும் ஜப்பானுக்கும் ஐரோப்பாவுக்கும் அடகுவைத்தே இந்த வெற்றியை ஈட்ட வேண்டியிருந்தது. ஐக்கிய அமெரிக்கா இப்பொழுது, அதன் பிரதான பொருளாதார எதிரிகளின், தொடர்ச்சியான மூலதன உட்பாய்ச்சல்களிலேயே தங்கியிருக்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஜப்பான் இப்பொழுது விலகிக் கொள்ளத் தொடங்கியிருக்கிறது. பாரிய பின்னடைவின் பின்னணியில், ஜப்பான் இப்பொழுது பொருளாதார ரீதியில் அமெரிக்காவின் காலை வாரி விடுவதற்கு முயன்று வருகின்றது. அதே வேளையில், பல இடங்களில் வர்த்தகப் பொருளாதாரத் தகராறுகளும் வளர்ந்து வருகின்றன. ஒரு புறம், ஜப்பான் மிகத் தெளிவாகவே ஒத்துழைப்பினை மறுப்பதுடன், மறு புறம், ஐரோப்பா விவசாய மானியங்கள் போன்ற விஷயங்களில் மிகக் கடுமையான நிலைப்பாட்டினை எடுத்து வருகின்றது.

ஜூலையில் இடம்பெற்ற ஏழு கைத்தொழில் நாடுகளின் ஹூஸ்டன் உச்சி மகாநாட்டின் போது, "வாழு; வாழ விடு" என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது போல் தோன்றியது. ஒவ்வொரு நாடும் தமக்கே உரிய சொந்த வழியைப் பின்பற்றுவதற்கு இசைந்ததுடன், ஏனைய நாடுகள், வேறுவழியின்றி தலையசைத்து அதற்கு அங்கீகாரம் அளித்தன. இந்த உச்சி மகாநாட்டின் போது, ஜப்பானியப் பிரதமர் கைபு சீனாவுக்கு பாரியளவில் கடன் வழங்கும் திட்டமொன்றை அறிவித்தார். அதேபோல ஜேர்மன் அதிபர் கோல் சோவியத் யூனியனுக்கு அரச உத்தரவாதத்துடனான 500 கோடி டொய்ஸ் மார்க் கடனொன்று வழங்குவது தொடர்பான தனது முடிவைத் தெரிவித்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் "அமெரிக்க முன் முயற்சிக்கான மாபெரும் தொழில் முனைவு" என்றழைக்கப்படும் அலஸ்காவிலிருந்து பெட்டகோர்னியா வரையில் செல்லும் சுதந்திர வர்த்தக வலையமொன்றுக்கு 700 கோடி டொலர்களை வழங்கும் தமது திட்டத்தை வெளியிட்டார். இந்த ஒவ்வொரு விஷயத்திலும், பங்குபற்றிய ஏனைய நாடுகள் இந்த யோசனைகளைக் கேட்டு ஏற்றுக் கொண்டதைத் தவிர, அவற்றில் பங்குபற்றுவதற்கோ அல்லது அவற்றைத் தடுப்பதற்கோ எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. சோவியத் பேச்சாளரான கெராஸிமோ இதனை "சினாட்ரா கோட்பாடு" என்று வர்ணித்திருந்தார்.

ஜேர்மனியின் முதல் முன்னுரிமை, இரு நாடுகளினதும் இணைப்பாகவே இருந்தது. இதற்காக பொருளாதார சமூகச் செலவினங்கள் பிரமாண்டமான அளவில் இருந்ததுடன், அந்த மக்களும் அரசாங்கங்களுமே அவற்றை ஏற்க வேண்டியிருந்தது. இதுவரையில் ஜேர்மனியின் மேற்குப் பாகத்தில் உள்ள தனியார் கைத்தொழில்கள் ஜேர்மனியின் கிழக்குப் பாகங்களில் முதலீடுகளை மேற்கொள்வது மிக மெதுவாகவே இடம்பெற்று வந்துள்ளது. இந்த முதலீடுகள் கிழக்கைரோப்பாவைப் பொருத்தவரையில் இதைவிடவும் குறைவாகும். ஜேர்மனி தனது பயணத்தை உரியமுறையில் துவக்குவதற்கு இன்னும் எவ்வளவுகாலம் பிடிக்கும் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இது தவிர, உலகச் சந்தைக்கான ஏற்றுமதிகளில் பெருமளவிற்குத் தங்கியிருக்கும் ஒரு பொருளாதாரம் என்ற முறையில், ஜேர்மனி, உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்தத்தின் விளைவாக ஏற்றுமதிச் சந்தைகள் வீழ்ச்சியடைந்து வருவதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளது.

### பொருளாதாரப் பலவீனத்தை ஈடு செய்வதற்கு இராணுவ ஆற்றலைப் பயன்படுத்துதல்

அமெரிக்கர்களுக்கு மகிழ்ச்சிகரமான நாட்கள் மீண்டும் உதயமாகி விட்டன என்று லண்டனிலிருந்து வெளிவரும் "சன்டே டெலிகிராப்" (ஜனவரி, 20,1991) பத்திரிகை எழுதியிருந்தது. அது மேலும் பின்வருமாறு எழுதியிருந்தது. "இது பல துருவங்களைக் கொண்ட ஒரு உலகமாக இனி இருக்கப்போவதில்லை, ஒரு புதிய உலக ஒழுங்கு உருவாகுமானால், அது, ஐக்கிய அமெரிக்க இராணுவச் சக்தியை அடிப்படையாக் கொண்டதாகவே இருக்கும். இதில் பிரிட்டன் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும். சதாமின் தலை அதன் முதலாவது வெற்றிக் கிண்ணமாகும்". மேலும், "அமெரிக்கத் தேசிய நலன்" என்று

சமயோசிதமான முறையில் குறிக்கப்படும் விஷயம் குறித்தும் இப்பத்திரிகை தனது அவதானிப்புக்களைத் தெரிவித்துள்ளது. "தாக்கமான நடவடிக்கையொன்றை எடுக்கும் ஆற்றல் கொண்ட இராணுவ ஆற்றல் அமெரிக்க இராணுவத்துக்கே உள்ளது. ஜப்பானின் அல்லது ஜேர்மனியின் பொருளாதார ஆற்றல் முற்றிலும் பயனற்றதாகும்". இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பின்னர் ஜப்பானுக்கும் ஜேர்மனிக்கு மெதிராக தனது இராணுவ வல்லமையைப் பயன்படுத்தும் வாய்ப்பு ஐக்கிய அமெரிக்காவுக்குக் கிடைக்கவில்லை. இப்பொழுது சோவியத் இராணுவ அச்சுறுத்தல் மங்கிக் கொண்டுவரும் ஒரு நிலையில், இதனைச் செய்து காட்டுவதற்கு இனியும் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காது. எனினும், ஐக்கிய அமெரிக்கா – இப்பொழுது சோவியத் தொந்தரவு ஒழிந்துவிட்ட நிலையில்-மூன்றாவது மண்டல நாடுகளுக்கெதிராக தனது இராணுவ வல்லமையை, தான் நினைக்கும் விதத்தில் வெளிப்படுத்திக் காட்டுவதற்கு நல்லதொரு வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், வளைகுடா நெருக்கடி, ஜப்பான் ஜேர்மனி போன்ற பொருளாதார ரீதியில் பலம்பெற்ற பிரதான நாடுகளுக்கெதிராக அமெரிக்காவின் மேலாதிக்க நிலைசரிந்து கொண்டிருக்கும் ஒரு நிலையில், அமெரிக்காவிடமுள்ள ஒரேயொரு சக்தியை – அதாவது அதன் இராணுவ சக்தியை – வெளிப்படுத்திக் காட்டுவதற்கு பொன்னான ஒரு வாய்ப்பினை அளித்தது. உண்மையிலேயே, இப்போர் நிகழ்ந்த ஈராக் மற்றும் மூன்றாவது மண்டலம் என்பவற்றின் செலவிலேயே இந்த சாகஸம் செய்து காட்டப்பட்டுள்ளது. 1945 தொடக்கம், விதிவிலக்கின்றி எல்லா கிழக்கு – மேற்குப் போர்களும் மூன்றாவது மண்டல மண்ணிலேயே நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. இப்பொழுது மேற்குக்கும் மேற்கிற்கும் இடையிலான போட்டியையும் கூட இந்த மண்ணிலேயே நடத்திக் காட்ட வேண்டியிருக்கிறது.

பழைய உலக ஒழுங்கு பொதுவாக மேற்கு-கிழக்கு மோதல்களையும், வடக்கு-தெற்கு மோதல்களையும் கொண்டிருந்தது என்றே கருதப்பட்டு வந்தது. எனினும், அண்மைக்காலத்தில் கிழக்கு-மேற்கு மோதல்கள் மங்கி மறைந்து சென்றுள்ளதுடன், வடக்கு-தெற்கு மோதல்கள் நாளுக்கு நாள் அளவில் பெருகிவந்துள்ளன. எனவே, வட அமெரிக்கா, மேற்கைரோப்பா, ஜப்பான் தலைமையிலான கிழக்காசியா போன்றவற்றுக்கிடையிலான மோதல்கல் இப்பொழுது மிகவும் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்துள்ளன. ஆகவே, இந்த நிலையில், சமீபகால வரலாறு, "உலக பொருளாதாரத்தின் அரசியல் எதிர்முரண்நிலைகளைக் கொண்டிருக்கிறது" (பிராங்க் 1984/1987) என்று கூறப்படுகிறது. 1945 ன் பின்னர் உலக பொருளாதார நிலைமைகள் சர்வதேச, தேசிய அரசியலையும், சமூகக் கொள்கைகளையும் வடிவமைத்து வந்துள்ளன. குறிப்பாக, 1967 ன் பின்னர் உலக பொருளாதார நெருக்கடியால் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதார மோதல்களும் வாய்ப்புக்களும் சர்வதேச உறவுகள் மற்றும் தேசிய கொள்கைகள் என்பவற்றின் வடிவமைப்பில், சித்தாந்த, அரசியல் கெடுபிடி யுத்தத்திலும் பார்க்க முக்கியமான பங்கொன்றை வகித்து வந்துள்ளன. பல கிழக்கு-மேற்கு முரண்பாடுகள் போலியானவையாக இருந்ததுடன், அவை உண்மையான வடக்கு-தெற்கு மோதல் நிலைகளை மூடி மறைப்பதற்கான சால்ஜாப்புக்களாகவே இருந்தன. 1974 – ன் பின்னர் தென் மண்டலத்தில் 14 புரட்சிகள், இடம்பெற்றுள்ளன. ஆனால், இப்புரட்சிகள், இவை எத்தகைய புரட்சிகளாக இருக்க வேண்டும் என்று கருதப்பட்டனவோ அத்தகைய புரட்சிகளாக உருவாகி வரவில்லை.

இந்த கிழக்கு –மேற்கு மோதலின் பெரும்பகுதி – குறிப்பாக மொஸ்கோவுக்கும் வாஷிங்டனுக்கும் இடையிலான முரண்பாடுகள் வடக்கு-தெற்கு போராட்டங்களை மூடிக்கிடக்கும் புகை மண்டலமாகவே இருந்து வந்துள்ளது என்பதனை இந்த அவதானிப்புக்கள் காட்டுகின்றன. இன்றைய உலகின் பொருளாதார, தொழில்நுட்ப் அபிவிருத்தி இப்பொழுது புத்துயிர்ப்பு நெருக்கடியொன்றுக்கூடாக சென்று கொண்டிருக்கின்றது. இந்த நிலை, மீண்டும் ஒரு முறை உலகின் கிழக்கு-மேற்கு அரசியல் பிரிவின் முக்கியத்துவத்தை குறைத்துவிட அல்லது ஒழித்துவிட முடியும். ஆனால், அதே வேளையில், வடக்கு-தெற்கு பொருளாதார பிரிவினை வரவர மோசமடைந்து வரும் போக்கே தென்படுகிறது.

உலக பொருளாதார முரண்பாடுகள், அரசியல் ரீதியில் சாத்தியமானதும், விரும்பத்தக்கதுமான "அகண்ட ஐரோப்பிய நட்புணர்வொன்றை" எடுத்து வரும் என்று "ஐரோப்பாவின் சவால்" (1983/1984) என்ற கட்டுரையில் விளக்கியிருந்தேன். அரசுகளின் கொள்கைகள், அரசியல் கூட்டுக்களின் தடங்கல்கள், அவர்களுடைய சித்தாந்த சாய்வுகள் என்பவற்றையும் மீறி இது இடம் பெற முடியும். குறிப்பாக உலக பொருளாதாரமொன்றில், "தேசிய அபிவிருத்தியை" எடுத்து வரும் விஷயத்தில், "சுயவிருப்பிலான" அரச கொள்கைகள் மற்றும் அரசியல் என்பன சக்தியற்றவையாக இருந்தமையும் மேற்கிலும், தெற்கிலும், வடக்கிலும் மிகுந்த முக்கியத்துவம் கொண்ட மாற்று இயக்கங்கள் எழுச்சியடைவதற்கான அடிப்படையாக இருந்தது. அதே வேளையில், இந்த சம்பந்தப்பட்ட பகுப்பாய்வுகளும், முற்கணிப்புக்களும் அவற்றின் காலத்தில் நிலவிய சித்தாந்த ரீதியான சூழலில் யதார்த்தமாற்றவையாக தென்பட்டபோதிலும் இப்பொழுது அவை கடும் யதார்த்தங்களாக உருவாகியுள்ளன. எனினும், இந்த "எதிர் முரண்" மாற்றங்களும், பின்விளைவுகளும் மாற்றமடைந்து வரும் உலக பொருளாதார நிலைமைகளின் தர்க்க ரீதியான எதிரொலிகள் மட்டுமேயாகும். இப்பொழுது கெடுபிடி யுத்தம் முடிந்து, ஜேர்மனியும் ஜப்பானும் வெற்றி கண்டுள்ளன ! எனினும், அமெரிக்கா, உலக ஒழுங்கில் அதன் ஸ்தானத்தை காத்துக் கொள்வதற்வதற்கு முயற்சி செய்ய அவசியமான சக்தியையும், அரசியல் அபிலாஷைகளையும் இன்னமும் கொண்டுள்ளது. அதுவும் இப்பொழுது மூன்றாவது மண்டல தெற்கின் செலவில் அது அதனை சாதித்துக் கொள்ள முயன்று வருகிறது.

வளைகுடா நெருக்கடியின். படிப்படியான வளர்ச்சி சமீபகால அரசியல், பொருளாதார உறவுகளில் இடம் பெற்ற மூன்று முக்கிய விலகல்களிலிருந்தே தோன்றியது.

1. வளைகுடாப் போரில் காட்டப்பட்ட அமெரிக்காவின் சுறுசுறுப்பு மிகுந்த ஆர்வம் அரசியல், பொருளாதார காரணமொன்றால் தூண்டப்பட்டுள்ளதை காண முடிகிறது. இப்பிரச்சினை, எண்ணெய் ஆகும். எண்ணெய்க்கான இந்த போராட்டத்தில் முழு அமெரிக்காவும் திரண்டெழுந்து, தமது உள்நோக்கத்தை மூடி மறைத்துக் கொள்வற்காக, சர்வதேச சட்டத்தில் சிறிய நாடுகளை "பாதுகாத்துக்கொள்வது" என்ற வேண்கோள் விடுக்கப்பட்டது.

2. இந்த அணி திரட்டல், கிழக்கு–மேற்கு சித்தாந்த போர்வை பாசாங்கு எதுவுமின்றி, முழுக்க தெற்குக்கு (அதன் ஒரு பாகத்துக்கு) எதிரானதாகவே உருவாக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்க ஜனரஞ்சக எதிர்ப்பு – அப்பாவி அயலவர்கள் மீது தொடுக்கப்பட்ட சில தாக்குதல்களும் பயமுறுத்தல்களும்–அரபு பூச்சாண்டியை முன்வைத்து தொடுக்கப்பட்டதாகவே இருந்தது. அரேபியர்கள் உதவாக்கரைகள் என்ற ஜனரஞ்சக மனப்பதிவே அமெரிக்காவெங்கிலும் காணப்பட்டது. கெடுபிடி யுத்தத்தின் முடிவு, சோவியத் யூனியனினதும், வோர்சோ ஒப்பந்தத்தினதும் சீர்குலைவும் உண்மையான எதிரியொன்றின் இடத்தில் வெற்றிடமொன்றை உருவாக்கியிருந்தது. இது இன்னொரு இலக்கை நியாயப்படுத்த வேண்டிய தேவையை எடுத்து வந்ததும் உண்மையிலேயே, வெளிப்படையான கிழக்கு–மேற்கு மோதல்களின் பெரு–பகுதி, உள்ளே மறைந்திருக்கும் வடக்கு/மேற்கு–தெற்கு போராட்டத்தை மூடி மறைப்பதற்கான வசதியான ஒரு போர்வையாகவே இருந்து வந்துள்ளது. இப்பொழுது இந்த வடக்கு–தெற்கு போராட்டத்தை பகிரங்கமாக வெளியில் எடுத்து வருவது தவிர வேறு மாற்றுவழி எதுவும் இல்லாத நிலை தோன்றி விட்டது. போதை வஸ்துக் கடத்தல் மற்றும் தனிநபர் பயங்கரவாதம் என்பன பயனளிக்கக் கூடிய (ஆனால் வரையறுக்கப்பட்ட) மாற்று இலக்குகளாக உள்ளன. ஒரு நாடு இத்தீங்குகளுக்கு அனுசரணை காட்டி அவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது எனபதனை நிரூபித்த முடியுமானால் அது மிகச் சிறந்த ஒரு இலக்காக இருக்க முடியும். லிபியாவின் விஷயத்தில் (தவறாக) இவ்வாறே கூறப்பட்டது. பனாமாவைப் பொறுத்தவரையில், போதைவஸ்துப் பயங்கரவாதமே வெளிப்படையாக எதிரி என்று கூறப்பட்டது. இவ்விரண்டும் இணைக்கப்பட்டு ஜெனரல் நொரீகா மீது குற்றஞ் சாட்டப்பட்டதுடன், இவை உடனடியாகக் கிடைக்கக் கூடிய சித்தாந்த ரீதியான பதிலீடுகளாகக் காணப்பட்டன. ஏனெனில், அப்பொழுது சோவியத் பூச்சாண்டி இல்லா தொழிந்திருந்தது. இதில் மிகவும் முக்கியமான விஷயம், இந்த இலக்கு மூன்றாவது மண்டலத்தில் அமைந்திருந்தது என்பதாகும். இப்பொழுது, பெரிய மூன்றாவது மண்டல நாடொன்றுக்கு எதிராக (அதன் உத்தேச அச்சுறுத்தலைக் கவனத்திலெடுத்து) உண்மையான போரொன்றுக்காக அணிதிரள்வது சாத்தியமாக இருக்கும்.

(3). வளைகுடாப் போரின் போது, தென் மண்டலத்துக்கெதிராக முழு வடபுலமும் ஏகோபித்த முறையில் ஒரு நேச அணியில் ஒன்று திரண்டிருந்தது என்பது மூன்றாவது மிகப் பெரிய மாற்றமாகும். ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியன், சீனா மற்றும் (அமெரிக்காவினால் மிக எளிதாக மடக்கிவிடக் கூடிய) எகிப்து, பாகிஸ்தான் போன்ற நாடுகள் அனைத்தும் இந்த நேச அணியில் உள்ளடங்கியிருந்தன. இந்தப் புதிய அணியின் தோற்றம் புதியதொரு மாறுதல் என்றே கூறவேண்டும். இது வருங்கால சர்வதேச உறவுகளுக்கும் அச்சுறுத்தலாக தென்படுகிறது. "நோக்கத்தில் காணப்படும் கருத்தொருமித்த நிலை வியப்பூட்டுவதாக உள்ளது" என்று ''டைம்'' சஞ்சிகை எழுதியிருந்தது. "உலகம் இவ்வளவு உறுதியாக ஒன்றுபட்டு நின்ற ஒரு காலகட்டத்தை என்னால் நினைவு படுத்திப் பார்க்க முடியவில்லை" என்று பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தட்சர் குறிப்பிட்டிருந்தார். "உலகம்" என்பதன் மூலம் அவர் வட புலத்தையே குறிப்பிட்டார். சதாமுக்கு எதிரான அணி தாக்கமிக்கதாக இருக்கவேண்டுமானால், வறிய அரபு நாடொன்றுக்கெதிராக செல்வந்த மேலைய உலகம் ஒன்று திரண்டுள்ளது எண்ணம் உருவாக இடமளிக்கக்கூடாது என்பதில் ஜோர்ஜ் புஷ் மிகக் கவனமாக நடந்து கொண்டார். இந்த ஆழ்ந்த கரிசனையுடனேயே இந்த அணி ஒன்று சேர்க்கப்பட்டது.

## அரசியல் பொருளாதாதரக் காரணங்கள்

குவைத் மீதான ஈராக் படையெடுப்பு, எதிர்பாராமல் திடீரெனத் தோன்றிய ஒரு மின்னல் அல்ல. இதனை ஒரு சாக்காகப் பயன்படுத்தி, இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இடம்பெற்ற நாசகரமான யுத்தமொன்றை நிகழ்த்துவதன் மூலம் அமெரிக்கா அதன் புதிய உலக ஒழுங்கை துவக்கி வைத்தது.

"குவைத்தைத் திருடிக் கொள்ளும் செயல், வெறும் பேராசையினால் ஏற்பட்டதோ அல்லது தேசிய வெறுப்பினால் ஏற்பட்டடதோ அல்ல. ஈரானுடனான யுத்தத்தினால் அழிவுற்றிருந்த ஈராக்குக்கு, தேசிய அளவில் திருட்டுச் செய்வதே அதன் முன்னிருந்த சாத்தியமான ஒரே மாற்றுவழியாக இருந்தது. மேலைத்தேச நாடுகளும், வளைகுடாவில் எண்ணெய் உற்பத்தி செய்யும் சிறிய எமிரேட்டுகளும் அனுபவித்து வரும் வாழ்க்கைத் தரங்களை அனுபவிக்கும் பொருட்டு அது இந்த சாகசத்தில் இறங்க வேண்டியிருந்தது. இந்த நிலையில், வறுமையிலிருந்தும், பின்தங்கிய நிலையிலிருந்தும் எழுந்து வருவதற்கென தற்கொலைக்சொப்பான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது." ("இட்டர்நஷனல் ஹெரால்ட் டிரிபியூன்", மார்ச் 5)

ஈராக், குவைத்துக் கெதிராக கொண்டிருந்த மனக்குறைகள் காலனி ஆட்சிக் காலத்திலிருந்து தொடர்ந்து வருபவையாக இருந்தன. ஆனால், குவைத்தின் நடவடிக்கையினாலும், ஆத்திரமூட்டலினாலும் இந்த அதிருப்தி நிலை மேலும் தீவிரமடைந்திருந்தது.

(அடுத்த இதழில் தொடரும்)

# அரச பொருளாதாரம், பிரிவினைவாத கொள்கைகள் மற்றும் ஜனரஞ்சக அரசியல்

பீ. உன்னிகிருஷ்ணன்

பழம் பெரும் இந்தியப் பத்திரிகையாளரான உன்னி கிருஷ்ணன், மாஸ்கோவிலும் கொழும்பிலும் பீ.ரீ.ஐ. (பிரஸ் டிரஸ்ட் ஒவ் இந்தியா) நிருபராக பணி புரிந்தவர். தற்பொழுது அந்த நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளாராக செயற்பட்டு வருகிறார்.

இந்தியா, 1991 ன் நடுப்பகுதியில் பல முனைகளைக் கொண்ட பாரிய நெருக்கடியொன்றுக்குள் சிக்குண்டு தத்தளிக்கிறது. இது கடந்த நான்கு தசாப்த காலமாக மத்திய அரசாங்கத்தினாலும் பெரும்பாலான மாநில அரசாங்கங்களினாலும் - தொடக்கத்தில் நல்ல நோக்கத்துடன் - பின்பற்றப்பட்டு வந்த அரசியல் மற்றும் சமூக கொள்கைகளின் கூட்டு மொத்த விளைவொன்றாகும். இந்தக் கொள்கைகள், ஒரு புறம், பொருளாதாதரத்தில் அரச ஆதிக்கம் மேலோங்கி நிற்கும் கொர்பச் சேவுக்கு முற்பட்ட சோவியத் மாதிரியின் செல்வாக்கைக் கொண்டிருந்தன. மறு புறம், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அன்றைய இந்தியாவில் மிக வசதியாக பின்பற்றி வந்த சமூகப்பிரச்சினைகளை மத அடிப்படையிலான, இன அடிப்படையிலான அணுகுமுறையில் நோக்கும் முறையினால் - மார்க்சிச வர்க்கப் பகுப்பாய்வினை முற்றிலும் நிராகரித்து- அவை நிர்ணயிக்கப்பட்டன.

சுதந்திரத்தையடுத்து, இக்கொள்கைகள், நாட்டினை பொருளாதார அடிப்படையில் தற்சார்பு கொண்டதாகவும், செழிப்புமிக்கதாகவும் உருவாக்குவதற்கும், கல்வி வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கும், வறியோருக்கும் செல்வந்தருக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கும் அவசியமானவையென கருதப்பட்டன. ஆனால், இவற்றுக்கு மாறாக, இன்றைய இந்தியா, உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றாக (தலைக்குரிய மொ.தே.உ. நியதிகளிலும், மானிட அபிவிருத்தி குறி காட்டிகளின் அடிப்படையிலும் இந்தியா மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. அத்துடன், மொத்த குடித்தொகையில் அரைவாசிப்பேர் இன்னமும் எழுத்தறிவற்றவர்களாக இருப்பதுடன் வாழ்க்கைத்தர ஏற்றத்தாழ்வுகள் தெட்டத் தெளிவாக உள்ளன) இருந்து வருகிறதென்றால் அரச கட்டுப்பாட்டுனான பொருளாதாரமும், சமூக பிரிவினைவாத கொள்கைகளும் இலாபகரமானவை என்பதனை பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகள் கண்டுகொண்டுள்ளனர் என்பதே அதற்கான காரணமாகும்.



இந்தியாவின் முதலாவது பிரதம, மந்திரி ஜவகர்லால் நேரு 1950 களின் நடுப்பகுதியில், ஆயுள் காப்பீட்டுத் தொழிலை தேசியமயமாக்குவதற்கு பாராளுமன்றத்தின் மூலம் சட்டவாக்கத்தைக் கொண்டுவந்த போது நிதிசார் முறைகேடுகளை தடுத்து நிறுத்த வேண்டுமென்ற விருப்பபே அவரது; அந்த நடவடிக்கைக்கு தூண்டுதலாக இருந்தது அப்போது காப்பீட்டுக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தி வந்த ஒருசில தொழிலதிபர்கள் இந்த முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தனர். முதலீடு செய்யக்கூடிய ஆயுள்காப்பீட்டு நிதிகள் மீதான அரசின் கட்டுப்பாடு பொது நலனை மேம்படுத்துவதிலும் பார்க்க தனியார் நலனை மேம்படுத்துவதற்கே பயன்படுத்தப்படுதுவதற்கு வழிகோல முடியுமென்பதனை தனது வாழ் நாட்களிலேயே அவர் கண்டு கொண்டார். நேருவின் நிதி அமைச்சர்களில் ஒருவர் இந்த விடயம் தொடர்பாக ராஜினாமாச் செய்ய வேண்டியிருந்தது.

மிகப்பெரிய வர்த்தக வங்கிகள் 1960களின் முடிவில் தேசியமயமாக்கப்பட்ட வேளையில் ஜனங்களைக் கவரும் வெறும் அரசியல் பம்மாத்தே இதன் பின்னணியிலிருந்த கிரியா ஊக்கி என்ற விஷயம் மிகத் தெளிவாகத் தெரிந்தது. திருமதி இந்திரா காந்தி அப்போது காங்கிரஸ் கட்சி பழம்புள்ளிகளுடன் ஓர் இழுபறிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அத்தகைய சந்தர்ப்பத்தில், தனது மேலாதிகத்தை ஸ்தாபித்துக் கொள்ளும் பொருட்டு தீவிரமான நிலைப்பாடொன்றை மேற்கொள்வது பலனளிப்பதாக இருக்குமென்பதை அவர் கண்டு கொண்டார். வங்கிகளின் தேசியமயத்துக்கூடாக '"கரிபிஹட்டாவோ" (வறுமையை ஒழிப்போம்) என்ற சுலோகத்தை அவர் முன்வைத்தார். தேசிய மயமாக்கத்துக்குப் பின்னரும் கூட, வங்கி மோசடிகள்முன்னரைப் போலவே காலத்துக்காலம் வெளிச்சத்துக்கு வந்தன. வங்கி நிதிகள் மீதான கட்டுப்பாடு, காப்பீட்டு நிதிகள் மீதான கட்டுப்பாட்டைப் போலவே அனுசரணை வழங்குவதற்கான சக்தி வாய்ந்த ஒரு வழிமுறையாக இருந்தது. இந்த நிலையில், தனியார் துறை கைத்தொழில் ஜாம்பவான்களுக்கும் அதே போல கிராமிய, நகர வறியோருக்கும் அவர்களுடைய வாக்குப் பலத்தைக் கவனத்திலெடுத்து பெருந்தொகையான கடன்கள் (மீண்டும் அவற்றை வசூல் செய்வதற்கான எவ்வித எதிர்பார்ப்புக்களுமின்றி) வாரி வழங்கப்பட்டன.

தேசியமயமாக்கலுடன் இணைந்த வகையில், கைத்தொழில்களையும்,

வியாபாரத்துறையையும் கட்டுப்படுத்தும் அரசாங்க ஒழுங்கு விதிகள் மிதமிஞ்சிய அளவுக்கு உருவாக்கப்பட்டிருந்தன. சுதந்திரா கட்சியின் ஸ்தாபகரான திரு. சக்கரவர்த்தி ராஜகோபலாச்சாரியார் லைசென்சுகள், கட்டுப்பாடுகள், பேர்மிட்டுகள் என்பவற்றைக் கொண்ட இந்த முறையை ஆரம்பத்திலேயே எதிர்த்து நின்றார். "முதலாளியைக் கண்காணிப்பதற்காக அரசியல்வாதியை நியமனம் செய்யும் யோசனை, அவர்கள் இருவரும் ஒரே விதமான ஆட்கள் என்ற உண்மையின் கண்டுபிடிப்பின் மூலம் சீர்குலைந்துள்ளது. அரசியல்வாதியாக மாறுவதற்குள்ள ஒரே வழி, முதலாளியாக இருப்பது தான் என்ற நிலை காணப் பட்ட கட்டத்தை இப்பொழுது நாங்கள் தாண்டிவிட்டோம். திடீரென முதலாளியாக மாறுவதற்கு அரசியல்வாதியாக இருப்பதே மிகச் சிறந்த வழி என்ற கட்டத்தை இப்போது அண்மித்துக் கொண்டிருக்கிறோம்" என்று இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜி.கே. செஸ்டேர்டன் எழுதியது மிகப் பொருத்தமானதென்பது இப்போது அதிகரித்தளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

தேசியமயமாக்கல் மற்றும் கட்டுப்பாடுகள் என்பன தவிர வளர்ந்து வரும் பொதுத்துறைக் கைத்தொழில்கள், வியாபார முயற்சிகள் என்பன அரசியல்வாதிகளினதும், அதிகாரிகளினதும் களிப்பூட்டும் வேட்டை நிலங்களாக இருந்து வந்துள்ளன. ஓர் அமைச்சராகவோ, ராஜாங்க அமைச்சராகவோ வர முடியாது போன ஓர் அரசியல்வாதிக்கு உள்ள அடுத்த மிகச் சிறந்த தெரிவு மத்திய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் பொதுத்துறைக் தொழில் முயற்சியொன்றில் தலைவர் பொறுப்பை ஏற்பதாகும். பொதுத்துறைத் தொழில் முயற்சி ஒன்றின் தலைவர் என்ற முறையில், அவர் அதற்கு சம்பளம் பெறாமல் இருக்கலாம். ஆனால், தளவாடங்களுடன் கூடிய இலவச வீட்டு வசதி, சாரதியுடன் கார் விமானத்திலும், ரயிலிலும் இலவசப்பயணம் மற்றும் சலுகைகள் என்று அவருக்கு பெருந்தொகையான அனுகூலங்கள் கிட்டுகின்றன. அதேபோல, அதே காரணங்களுக்காக, பொதுத்துறையும் மிகுந்த கவர்ச்சிகரமானதாக உள்ளது. பொதுத்துறைத் தொழில் முயற்சிகளின் முகாமைப் பணிப்பாளர்களாக நியமனம் செய்யப்படும் அதிகாரிகள் வர்க்கத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இதே சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள். நிர்வாக இயந்திரத்தின் நடுத்தரத்திலும் கீழ் மட்டத்திலும் இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான ஊழியர்களைப் பொருத்த வரையிலும் கூட, பொதுத்துறை ஆசைகளைத் தூண்டிவிடும் ஒரு துறையாகவே இருந்து வருகிறது. பொதுத்துறைத் தெழில் முயற்சி ஒன்றுக்கு பதில்கடமைக்கு அனுப்பப்படுவதன் மூலம் ஓர் அதிகாரி, வரிசையிலிருந்து விலகி உடனடியாக அடுத்த உயர் மட்டத்தை எட்டிவிடமுடியும். சிவில், இராணுவ, மற்றும் துணை இராணுவ சேவைகளைப் போலவே பொதுத்துறையில் பணிபுரியும் ஊழியர்களும் இந்திய வறுமை என்ற மாபெரும் சமுத்திரத்தில், பாதுகாப்பு சலுகை என்ற தீவுகளைப் பெற்றுக் கொள்ளும் நபர்களாக உள்ளனர். அரசாங்கக் கலண்டரில் சம்பளத்துடன் கூடிய வருடாந்த லீவு தவிர ஏனைய விடுமுறை நாட்களும் ஆங்காங்கே நிறையக் காணப்படுகின்றன. அத்துடன் பயன்படுத்தாத லீவுக்குப் பதிலாக பணம் பெற்றுக் கொள்ளும் வசதியும் உள்ளது. லீவு பெற்று பிரயாணம் மேற்கொள்ளவும் சலுகை அளிக்கப்படுகிறது. இலவச மருத்துவ உதவி, வீட்டு வாடகை அலவன்ஸ் பணவீக்கத்தை தாக்குப் பிடிப்பதற்கான பஞ்சப்படி, வருடாந்த ஊக்குவிப்பு ஊதியம், ஊதியங்கள் காலத்துக்கு காலம் உயர்ச்சிப் போக்கில் திருத்தி அமைக்கப்படல், பணிக் கொடை, ஓய்வூதியம் போன்ற தொழில் முடிவுச் சலுகைகள் போன்ற எண்ணற்ற சலுகைகளை இவர்கள் அனுபவித்து வருகிறார்கள். இத்தகைய சமூகப் பாதுகாப்பு முறைகள், உழைப்பில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் – நிலமற்ற கூலி விவசாயிகளை உள்ளடக்கிய விதத்தில்' – வழங்கப்படுவதாக இருந்தால் அவை விரும்பத்தக்கவை ஆகும். ஆனால், இங்குள்ள பிரச்சினை சலுகை படைத்த சிறு பிரிவினருக்கு மட்டுமே இந்த அனுகூலங்கள் சென்றடைகின்றன என்பதாகும்.

**வெள்ளை யானைகள்**

ஒரு பொதுத்துறைத் தொழில் முயற்சி நட்டத்தில் இயங்கினால்– ஒரு பொருளில் அல்லது சேவையில் ஏக போக நிலை அனுபவிக்கும் ஒருசில அமைப்புக்கள் அல்லது நிர்வகிக்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் இயங்கும் சில அமைப்புக்கள் இலாபம் காட்டுகின்றன– பொதுத்துறை பொது மக்களின் நன்மைக்காகவே இயங்கி வருகின்றதென்றும், அதனால் இலாப நோக்கினை முதல் நிலையானதாகக் கணிக்க முடியாதென்றும் அதற்குக் காரணம் காட்டப்படுகின்றது. பொது மக்களின் நலனை இவை மேம்படுத்தியுள்ளனவா என்ற விஷயம் விவாதத்துக்குரியதாக இருக்கலாம்; ஆனால், பொதுத்துறை, அதில் பணிபுரியும் ஊழியர்களின் நன்மைக்காக செயற்பட்டு வருகின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தேசிய வங்குரோத்து நிலைக்கு பொதுத்துறையின் பங்களிப்புக் குறித்து நாடு பெருமளவுக்கு விழிப்படைந்துவரும் இவ்வேளையில், மத்திய பொதுத்துறைத் தொழில் முயற்சிகளின் அதிகாரிகள் பரிச்சயமான ஒரு வேண்டுகோளினை மீண்டும் ஒரு முறை வலியுறுத்தி, முன்வைத்துள்ளனர். "அதிகளவில் விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்ட பொதுத்துறை, தனியார்துறையைக் கவர்ந்திழுக்காத பல துறைகளுக்குள் பிரவேசித்துள்ளது. எனவே, இக்காரணத்தினால் இது இலாப நோக்கினால் மட்டுமே வழிப்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட முடியாது". இந்த வாசகம் தேசிய அதிகாரிகளின் சம்மேளனத்தினால் 1991 ஜூன் மாதத்தில் புதிய அரசாங்கத்தின் நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில் இடம் பெற்றிருந்தது. கடந்த சில தசாப்தங்களில் குறிப்பிட்ட சில பிரிவுகளில் தனியார்துறை நுழைவதனை அரசாங்கக் கொள்கை தடுத்து வந்துள்ளது. இரண்டாவதாக, குறிப்பிட்ட சில பிரிவுகளிலிருந்து தனியார்துறை பலவந்தமாக வெளியே தள்ளப்பட்டது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் தலைநகரில் சில்லரை மது வியாபாரத்தை தேசிய மயமாக்கியதாகும். இது நுகர்வோரைப் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியது.

அரசாங்கச் செலவினங்கள் தொடர்ந்தும் ஊதாரித்தனமான முறையில்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் செலவினை உடனடியாகச் சேமிக்க வேண்டிய அவசியமிருந்த போதிலும், அரச ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் வேண்டாத பயணங்களை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். புதுடில்லியில் ஜூன் 24ம் திகதி வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகைக் குறிப்பு, 1986 – 1989 நான்கு வருடகாலப் பிரிவுக்கான விடுமுறைப் பயணச் சலுகையை பெற்றுக் கொள்வதற்கான கருணைக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டது.

அதிர்ஷ்டவசமாக, இந்த அறிவிப்பின் திகதி, புதிய அரசாங்கம் தனது பணிகளைத் துவங்குவதற்கு முன்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென்பதனை காட்டுகிறது. இந்தியாவை இந்தப் பொருளாதார சகதியிலிருந்து மீட்டெடுப்பதற்கான நம்பிக்கை, இந்தியா இறுக்கமான நிதிசார் ஒழுங்கொன்றினைப் பின்பற்ற வேண்டிய தேவையுள்ளதென்ற புத்தி ஜீவிகளின் அங்கீகாரத்தில் காணப்படுகிறது. தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த போது, தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த இந்தியாவின் முன்னணி இடதுசாரி பொருளியலாளரான கலாநிதி கே. என். ராஜ், இடதுசாரிக் கட்சிகள் இந்தியாவின் மீட்சிக்கு ஏதேனும் பங்களிப்பு செய்ய வேண்டுமானால், தமது சிந்தாந்த ரீதியான சுமைகளை அவை விட்டு விட வேண்டுமென்று குறிப்பிட்டதும் இந்த அங்கீகாரத்தையே பிரதிபலிப்பதாக உள்ளது.

## சமூகப் பிரிவினைவாதக் கொள்கைகள்

துதிர்ஷ்டவசமாக, சமூகப் பிரிவினைவாதக் கொள்கையின் அபாயம் குறித்து இந்த அளவுக்காவது ஓர் அங்கீகாரம் ஏற்பட்டிருப்பதற்கான அடையாளங்களைக் காண முடியவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியாளார்கள் தமது ஆட்சிக்கு மதச் சிறுபான்மையிடமிருந்தும் பிராமண இந்து சமூகக் கட்டமைப்பில் தாழ்ந்த சாதிகள் எனக் கருதப்பட்ட மக்கள் பிரிவினரினதும் ஆதரவைப் பெறும் நோக்கில், ஓர் ஒழுங்கு முறையில் இந்தியாவைப் பிரித்து, இந்தியனுக்கெதிராக இந்தியனை மோதவிடும் ஒரு நோக்கில் நுணுக்கமான முறையில் கொள்கைகளை வகுத்துக் கொண்டிருந்தனர். 1909 ஆம் வருட இந்தியக் கவுன்சில்கள் சட்டத்தின் கீழ் முஸ்லிம்களுக்கென தனித்தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. 1919 ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டம் பஞ்சாப்பில் வாழும் சிக்கியர்களுக்கும், சென்னை மாகாணத்தில் வாழும் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும் தேர்தல் தொகுதிகளை விஸ்தரித்தது. 1935 ஆம் வருட இந்திய அரசாங்கம் சட்டம் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கும் (தீண்டத்தகாத சாதியினருக்கும்) மகளிருக்கும் தொகுதிகளை ஒதுக்கியது. அத்துடன் முஸ்லிம் மகளிருக்கென சில தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

சுதந்திர இந்தியாவின் 1950 ஆம் வருட அரசியல் சாசனம், மத அடிப்படையிலான புறம்பான தேர்தல் தொகுதிகளை இல்லாதொழித்தது. எனினும், அரசாங்கக் கொள்கைகளும் அரசியல் சாசனத்தின் குறிப்பிட்ட சில ஷரத்துக்களும் மத ரீதியான சிறுபான்மையினரின் – குறிப்பாக முஸ்லிம் மக்களின்–தனித்துவ அடையாள உணர்வினைப் பாதுகாப்பதற்கும், பிரதானப்படுத்துவதற்கும் வழிகோலியுள்ளன.

1950 களில் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை போன்ற சட்டங்கள் தொடர்பாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போது, ஜவகர்லால் நேரு இந்துக்கள் மீது மட்டுமே கவனம் செலுத்தினார். “அரசு, இந்தியப் பிராந்தியம் முழுவதிலும் வாழும் குடிமக்கள் அனைவருக்கும் ஒரே சீரான சிவில் சட்டக்கோவை ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சியை மேற்கொள்ளும்” என்ற அரசியல் சாசனத்தின் 44 வது உறுப்புரைக்கு முரண்பட்டதாகவே இது இருந்தது. இந்துக் குடும்பச்சட்டம் திருத்தப்பட்ட பின்னர், ஓர் இந்துவைப் பொறுத்தவரையில், அவர் இருதார மணம் செய்வது ஒரு குற்றச் செயலாகும். ஆனால், ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரையில் அவர் ஒரே நேரத்தில் நான்கு மனைவியரை மணம் செய்ய முடியும். ஓர் இந்து மனைவி தன் கணவன் பிறபெண்களுடன் உறவு கொள்ளுதல், விட்டுச் செல்லுதல், சித்திரவதை செய்தல் அல்லது அவனுக்கு சித்த சுவாதீனமின்மை, குணப்படுத்த முடியாத நோய் காணப்படல் போன்றவற்றின் அடிப்படையில் கணவனிடமிருந்து விவாக விலக்குக் கோர முடியும். ஆனால், கிறிஸ்தவச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டுள்ள ஒரு பெண் விவாக விலக்குப் பெறுவதற்கு (பிற பெண்களுடன் தொடர்பு, மற்றும் சித்தரவதை போன்ற) இரட்டைக்குற்றங்களை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

“நேரு, முஸ்லிம் சமுதாயத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விருப்பில், சட்டத்துக்கு முன்னால் இந்திய மகளிர் அனைவருக்கும் சமத்துவ அந்தஸ்தைத் தர தவறிவிட்டார்” என்று நேருவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய எஸ். கோபால் குறிப்பிட்டுள்ளார். ராஜீவ் காந்தி அரசால் முன்வைக்கப்பட்டு, 1986 ல் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்ட பாரபட்சம் காட்டும் மற்றுமொரு சமீபத்திய சட்டம் முஸ்லிம் மகளிர் சட்டமாகும். இதனையடுத்து முஸ்லிம் பழமை பேணுவோர் 1985 ஆம் வருட சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு எதிராக எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர். முஸ்லிம் ஆண்கள், ஏனைய இந்தியர்களைப் போலவே, விவாக விலக்குச் செய்யப்பட்ட, பணத் தேவையிலிருக்கும் ஒரு மனைவிக்கு குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் ஜீவனாம்சம் செலுத்த வேண்டிய கடப்பாடு உள்ளதென்பதனை இத்தீர்ப்பு வலியுறுத்தியிருந்தது. முஸ்லிம் மகளிர் சட்டம் இந்தத் தீர்ப்பினைச் செல்லுபடியற்றதாக்கி, விவாக விலக்குப் பெற்று உதவியற்ற நிலையிலிருக்கும் ஒரு மனைவியின் பராமரிப்புக்கு கணவனைத் தவிர அனைவரும் பொறுப்பானவர்கள் என்பதனை வலியுறுத்தியது.

அரசியல் சாசனம், மதத்தினடிப்படையில் குடிமக்களுக்கிடையே பாரபட்சம் காட்டுவதாக இருக்கிறது. முழுவதும் அரச நிதிகளினால் நிர்வகிக்கப்பட்டுவரும் கல்வி நிறுவனங்களில் மதபோதனை செய்வதனை உறுப்புரை 28 தடைசெய்கிறது எனினும், ஏனைய நிறுவனங்களில் – அந்நிறுவனங்கள் அரச நிதியிலிருந்து உதவியைப் பெற்றுக் கொண்ட போதிலும் – அதனை அது அனுமதிக்கிறது.

உறுப்புரை 30 மதம் மற்றும் மொழிச் சிறுபான்மையினர் தாம் விரும்பும் விதத்தில் கல்வி நிறுவனங்களை ஸ்தாபித்து, அவற்றை நிர்வகித்து வருவதற்கு உரிமையளித்துள்ளதுடன், அத்தகைய நிறுவனங்கள் அரச உதவியைப் பெறுவதற்கான உரித்தினையும் அளித்துள்ளது. கடந்த சில வருடங்களாக காஷ்மீரில் ஜமாஅதே இஸ்லாமி இயக்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் சுமார் 200 பாடசாலைகள் மதபோதனை என்ற பெயரில் வெறித்தனமான கோட்பாடுகளைப் புகுத்தி வருகின்றன. இவை 1990 ஜனவரி மாதத்தில், பிரிவினைவாதச் சக்திகளின் பகிரங்கக் கிளர்ச்சிகளை அடுத்து மாநில நிர்வாகத்தினால் (தாமதமாகவேனும்) மூடப்பட்டன.

சாதி என்பதும் மதத்தைப் போலவே ஒரு பிரிவினைவாதக் காரணியாக இருந்து வந்துள்ளது. சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பிராமணரல்லாத இந்து சாதிகளைச்சேர்ந்த, உயர்ந்த பொருளாதார நிலையிலிருந்த உறுப்பினர்களுக்கு ஆதரவளித்து வந்தது. இவர்கள் தலைமையிலான அரசியல் கட்சிகள் பிராமணர்களின் ஆதிக்கத்திலிருந்த காங்கிரஸ் கட்சிக்கெதிராக ஆட்சியாளர்களுக்கு விசுவாசம் காட்டுபவையாக இருந்தன. உதாரணமாக, சென்னை மாகாணத்தில் 1937 ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி மாகாண சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்ட முன்னர், ஜஸ்டிஸ் கட்சி, கடுமையாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் ஆட்சியதிகாரத்தில் இருந்தது. மாகாண சிவில் சேவைக்கு ஆட்களைத் திரட்டுதல் மற்றும் பதவி உயர்வுகளை அளித்தல் என்பவற்றில் பிராமணர் அல்லாதவர்களுக்கு முன்னுரிமைச் சலுகையை அளிக்கும் ஜஸ்டிஸ் கட்சி அரசாங்கத்தின் கொள்கையை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஊக்குவித்தனர். (காங்கிரஸ் அரசாங்கம் இக்கொள்கையை மாற்றியமைக்கவில்லை). தொழில்சார் கல்லூரிகளில் அனுமதி கோரி நிற்கும் பிராமணரல்லாத மாணவர்களுக்கும் முன்னுரிமைச் சலுகை அளிக்கப்பட்டது. பல நூற்றாண்டு காலமாக சமூக வரலாற்றில் இடம் பெற்றுவந்த சில பாரபட்சங்களை சீர் செய்வதற்காக இந்த நடவடிக்கை அவசியமானதாக இருந்தது. இக்காலம் முழுவதிலுமே கல்வித் துறையில் பிராமணர்களின் ஏகபோக நிலை நிலவி வந்துள்ளது. ஆனால், இதற்கான மிகச் சிறந்த வழி, கல்லூரி நுழைவுக்கு தகுதி பெறும் அனைத்து மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளக் கூடியமுறையில் பெருமளவு மருத்துவக் கல்லூரிகளையும், பொறியல் கல்லூரிகளையும் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகும்.

இந்திய அரசியல் சாசனம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி அமுலுக்கு வந்த போது சமத்துவம், பாரபட்சமற்ற நிலை என்பவற்றுக்கான அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு செயல் என்ற முறையில், சாதி அடிப்படையிலான முன்னுரிமைச் சலுகைச் சாத்தியப்பாடு நீக்கப்பட்டது. குறிப்பாக, 1951–52 குளிர்காலத்தில் சர்வஜனவாக்குரிமை அடிப்படையில் முதலாவது பொதுத்தேர்தல் இடம்பெற இருந்த சூழ்நிலையில், பிராமணர் அல்லாத சாதியினர் தமக்குச் சாதகமான ஷரத்தினை இழந்து விடுவதனை மத்திய அரசாங்கம் விரும்பவில்லை. எனவே, (செடியூல்ட் சாதியினர் தவிர) சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கிய சாதியினர் –அதாவது ஏனைய பின் தங்கிய வகுப்பாருக்கு – வித்தியாசம் காட்டுவதற்குச் சார்பாக 1951ல் அரசியல் சாசனம் திருத்தியமைக்கப்பட்டது. இதற்கு காலவரையறை எதுவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை; அத்துடன் ஏற்கனவே முன்னுரிமைச் சலுகையைப் பெற்றுள்ள நிலையைப் பரிசீலனை செய்து அவற்றை மறுப்பதற்கான ஏற்பாடுகளும் இருக்கவில்லை. தமிழ்நாடு தவிர்ந்த பல மாநில அரசுகள் கல்லூரி நுழைவுகளிலும் பொதுத்துறைத் தொழில் வாய்ப்புக்களிலும் சாதி அடிப்படையில் பாரபட்சம் காட்டும் நடைமுறையைப் பின்பற்றி வந்தன. இதே வேளையில், தமிழ் நாடு மாநிலத்தில் ஏனைய பின்தங்கிய வகுப்புக்களைச் சேர்ந்த சார்பு ரீதியில் முன்னேறி இருந்த பிரிவினருக்கும், அவர்களில் வளர்ச்சி குன்றிய நிலையிலிருந்த பிரிவினருக்குமிடையில் நலன்கள் மோதிக்கொள்ளும் ஒரு பிரச்சினை இருந்தது. அத்தகைய பின்தங்கிய பிரிவொன்றான வன்னியர்கள் 1988 இல் சனத்தொகை விகிதத்துக்கேற்ப இட ஒதுக்கீட்டைப் பெறுவதற்கான கிளர்ச்சி ஒன்றைத் துவக்கினார்கள்.

**மண்டல் கமிஷன்**

பி.பி. மண்டல் தலைமையின் கீழான, பின்தங்கிய சாதிகளுக்கான கமிஷன் 1980 டிசம்பரில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. உயர்கல்வி யிலும் பொதுத்துறைத் தொழில் வாய்ப்புக்களிலும் சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடுகளை அறிமுகஞ் செய்வதனை முதல் முறையாக இந்த அறிக்கை சிபார்சு செய்தது. இந்தச் சிபார்சுகள் பத்தாண்டு காலம் குளிர்ப்பதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. மண்டல் அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக 1990 ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி திரு. வி. பி. சிங் திடீரென அறிவித்ததனையடுத்து, ஒரு எரியும் பிரச்சினையாக இது மாறியது வி. பி. சிங் அப்போது சிறுபான்மை அரசொன்றுக்குத் தலைமைதாங்கிக் கொண்டிருந்தார்; சிந்தாந்த அடிப்படையில் இரு துருவங்களாகச் செயற்பட்டு வந்த கம்யூனிஸ்டுகளினதும் பாரதீய ஜனதாக் கட்சியினதும் ஆதரவில் அவரது அரசாங்கம் பதவியிலிருந்தது. அதே வேளையில், திரு. சிங்கின் சொந்த ஜனதா தள் கட்சிக்குள்ளேயே கோஷ்டிப் பூசல்கள் மலிந்திருந்தன. இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஒடுக்கப்பட்ட பின்தங்கிய சாதியினரின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியுமென உண்மையிலே அவர் நம்பினார். அவருடைய இந்த தீர் மானம் குறிப்பாக வட இந்தியாவில் பரவலான எதிர்ப்பையும், ஆர்ப்பாட்டங்களையும் வன்முறையையும் தூண்டி விட்டது. பல மாணவர்கள் – ஆண்களும், பெண்களும் – தமக்குத் தாமே தீ மூட்டிக் கொண்டனர். கலக்க மூட்டும் இந்த நிகழ்வுகள் வி. பி. சிங்கின் நிலைப்பாட்டை அசைத்துவிட வில்லை. பாரதீய ஜனதாக் கட்சி, சிங் ஆரசாங்கத்துக்கு அளித்து வந்த ஆதரவினை விலக்கிக் கொண்டதையடுத்து, நவம்பர் 7 ஆம் திகதி அவர் ராஜினாமாச் செய்ய வேண்டியிருந்தது. இதனையடுத்து திரு. சந்திரசேகர், காங்கிரஸ் கட்சி வெளியிலிருந்து அளித்து வந்த ஆதரவுடன், மற்றுமொரு சிறுபான்மை அரசை அமைத்தார். ஆனால், காங்கிரஸ் கட்சி அவருக்குத் தொல்லை களைக் கொடுத்ததையடுத்து

1990 மார்ச் மாதம் 6ஆம் திகதி அவர் தனது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார். எனினும், 10 வது லோக்சபைக்கு இடம் பெறவிருந்த மே/ஜூன் தேர்தல்கள் முடிவடையும் வரையில் காபந்துல் பிரதம மந்திரியாக அவர் தொடர்ந்து செயற்பட்டு வந்தார். தற்போதைய காங்கிரஸ் அரசு, உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் மண்டல் அறிக்கை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பதனை இனிமேல் தான் பார்க்க வேண்டும்.

பேரளவில் வறுமையும், எழுத்தறிவின்மையும் நிலவி வரும் ஒரு சூழ் நிலையில், மதம், சாதி என்பவற்றின் அடிப்படையிலான சமூக வன்முறைகள் வெடித்துக் கிளம்புவது துக்ககரமான ஒரு அபத்தமாகும். வறிய குடும்பக்களைச் சேர்ந்த பிள்ளைகள் - அவர்கள் பாடசாலைகளில் சேர்ந்து கொள்ளக் கூடியவர்களாக இருந்தால் - ஒருசில வருடங்களில் கல்வியை விட்டுச் சென்று விடுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், உயர்கல்வியிலும் அரசாங்கத் தொழில்களிலும் இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில் எத் தகைய அர்த்தமும் இருக்கப்போவதில்லை.

இந்துமத ஊர்வலங்களின் போது பள்ளிவாசல்களுக்கு முன்னால் இசையை முழக்கிக் கொண்டு செல்லுதல் இந்து முஸ்லிம் மோதல்களுக்கான மிகப் பழைய காரணங்களில் ஒன்றாகும். கடந்த இரண்டு வருடங்களில் அயோத்திக் கோயில் - பள்ளிவாசல் சர்ச்சையில் இது மேலும் தீவிரமடைந்தது. மதங்களுக்கிடையிலான பிரிவினையை அடிப்படையாகக்கொண்ட மோதல்கள் அரசியல் கட்சிகளினால் தீவிரப்படுத்தப்படுகின்றன. இவர்கள் மத ஆர்வத்தினாலோ, மதச்சார்பின்மை குறித்த அக்கறையினாலோ இதனைச் செய்வதில்லை. தேர்தலின் போது குறிப்பிட்ட சமூகங்களிலிருந்து வாக்குகளைக் கவர்ந்து கொள்ளும் நோக்கிலேயே அவ்வாறு செய்கின்றனர். மதச்சார்பற்ற இந்த அரசியல் கட்சிகள் முஸ்லிம் மக்களை இந்திய தேசத்துக்குள் வாழும் ஓர் உபதேசியமாக கருது வதற்குத் தயங்குவதில்லை. முஸ்லிம் லீக் சமீபத்தைய தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் தோழமைக் கட்சிகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. வேறு சில சந்தர்ப்பங்களில் கம்யூனிஸ்ட்டுகளுடன் அது தோழமை பாராட்டி வந்துள்ளது. கேரளாவின் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான அமைச்சரவை, முஸ்லிம் லீக்குடன் இணைந்திருந்த போது மாலாப்புரம் என்ற பெயரில் ஒரு முஸ்லிம் பெரும் பான்மை மாவட்டத்தை உருவாக்கியது. மறுபுறம், பாரதிய தனதாக் கட்சி அதன் ஓரிரு முஸ்லிம் வேட்பாளர்களை பெரும் சங்கத்தில் ஆழ்த்தும் விதத்தில் இந்துக் கோஷத்தை எழுப்பி வருகிறது.

எனினும், நம்பிக்கையின் ஒளிக்கீற்று ஒன்று தென்படுகிறது. சமீபத்திய தேர்தல்களின் முடிவுகள் மதத்தினையும் சாதியினையும் தமது சொந்த இலாபங்களுக்குப் பயன்படுத்தும் வழியை இனிமேலும் தொடரமுடியாத ஒரு நிலை தோன்றியுள்ளதென்பதனைக் காட்டுகின்றது. வி. பி. சிங்கின் ஜனதா தள் கட்சி லோக்சபையில் இதுவரையில் 55 தொகுதிகளை மட்டுமே வென்றிருப்பதனால் மண்டல் கமிஷனை பயன்படுத்திக் கொள்ளும் ஒரு நம்பிக்கை சிதறுண்டு போயுள்ளது. அதே வேளையில், சர்ச்சைக்குரிய அயோத்தி அமைந்துள்ள உத்தரப் பிரதேச மாநிலத்தில் மட்டுமே பாரதிய ஜனதாக்கட்சி பெரும் பான்மை இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. நாட்டின் வேறு பல மாநிலங்களிலும் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த போதிலும் அப்பகுதிகளில் பாரதிய ஜனதாக் கட்சி கணிசமான வெற்றிகளைப் பெற முடியவில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை, முஸ்லிம் வாக்குகள், முஸ்லிம்களைத் தமது நண்பர்களாகக் கருதும் எந்த ஒரு கட்சிக்கும் தனியாகச் சென்றுவிடவில்லை. ஏனைய பின்தங்கிய சாதிகளின் வாக்குகளைப் போலவே முஸ்லிம் வாக்குகளும் பிளவுபட்டுள்ளமை ஏற்றுத்தாழ்வினையும், அநீதியினையும் மறைத்துக் கொண்டிருக்கும் மதம், இனம் என்ற சுவர்கள் தகர்த் தெறியப்பட்டிருக்கும் அறிகுறியையே காட்டுகின்றது.

மேலும், பத்தாவது லோக் சபாவில் பல்வேறு கட்சிகளின் பலம் நியாயமான முறையில் பகிரப்பட்டுள்ளது. ஒரு தனிக் கட்சியின் ஆதிக்கம், ஒரு தனி நபரின் ஆதிக்கம் என்பன கடந்தகாலத்தின் நிகழ்வுகளாகி விட்டன. கடந்த காலத்தில் காங்கிரஸ் கட்சி பாராளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மையை- சில சந்தர்ப்பங்களில் ஐந்தில் நான்கு பங்கினை - பெற்றுக் கொண்டுள்ளது. இது பல நிறுவனங்களின் அழிவுக்கு வழிகோலியது. அரசியல் சாசனத் திருத்தத்துக்கூடாக குடியரசின் ஜனாதிபதியின் அந்தஸ்து ஓர் இறப்பர் ஸ்டாம்ப் அளவுக்கு தாழ்த்தப்பட்டு விட்டது. வளைந்து போகக்கூடிய பல தனி நபர்கள் மாநில ஆளுனர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் மத்திய ஆட்சியின் முகவர்கள் போல பல சந்தர்ப்பங்களில் செயற்பட்டு வருகிறார்கள். பாரிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் தனிப்பட்ட ஒரு சிறு குழுவின் ஆலோசனையுடன் பிரதமரினால் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய கருத்தொற்றுமையைப் பெறக்கூடியதான பரவலான கலந்துரையாடல்களின் நன்மை இந்த நிலையில் கிட்டுவதில்லை.

மாறாக, தற்போதைய காங்கிரஸ் அரசாங்கம் (அதன் தலைவரான ராஜீவ் காந்தி கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதன் விளைவாக எழுந்த அனுதாப அலையினால், ஜூன் மாதத்தில் நடந்த இரண்டாம் கட்ட வாக்கெடுப்பின் போது அதன் வாக்குப்பலம் அதிகரித்திருந்த போதிலும்) போதிய பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. தோழமைக்கட்சிகளின் ஆதரவுடனும் கூட அது ஒரு பெரும்பான்மை அரசாங்கமாக இருக்கவில்லை. இதன்காரணமாக, ஏனைய அரசியல் கட்சிகளை உதறித்தள்ளிவிடாது, அது அவற்றுடன் இணைந்து செயலாற்ற பழகிக் கொள்ள முடியும். இன்றைய நிலையில் நாட்டை மீண்டும் ஒரு தேர்தல் களத்தில் புகுந்த எந்த ஒரு கட்சியும் விரும்பவில்லையாதலால், மற்றக்கட்சிகளும் கூட நியாயமான, அனுசரணையான முறையில் நடந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. காஷ்மீர் மற்றும் பஞ்சாப் கிளர்ச்சிகள் குறித்த கருத்தொருமித்த ஒரு அணுகுமுறையின் அவசியம் எப்போதோ உணரப்பட்டிருக்கிறது. இன்றைய நிலையில், அதனை உருவாக்கியெடுக்க முடியும். எனவே, அரசியல் சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகிய மூன்று முனைகளிலும் உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடு சந்தித்து வந்த மிக மோசமான நெருக்கடி முடிந்து விட்டது என்று கூறமுடியும்.

நூலகம்

# நேரு - காந்தி யுகத்துக்கு பின்னர் இந்தியா

அஸ்வினி கே. ரே

*பேராசிரியர் ரே புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் அரசியல் கற்கைகள் மையத்தின் தலைவராவார்.*

படுகொலை செய்யப்பட்ட இந்திய்ப் பிரதமர் ராஜீவ் காந்தி, செயல் முனைப்பு மிக்க ஓர் இளைஞராகவும், அர்ப்பணிப்பு மிக்க ஒரு புத்திரராகவும், இளம் கணவராகவும், அன்பு மிகுந்த தந்தையாகவும் இருந்து வந்தார். அவருடைய ஆளுமையின் குணாம்சங்கள் குறித்த இந்தப் புகழுரைகள் நாட்டின் அரசியல் தலைவர்களின் தனித்துவமிக்க ஒருவர் என்ற நிலையை அவருக்குக் கொடுக்கவில்லை. இந்திய அரசியல் தலைவர்களிலிருந்து அவரை வேறுபடுத்திக்காட்டிய அம்சம், அவருடைய தனித்துவமான வாரிசுரிமையாகும். தூய்மையான பிராமணியப் பாரம்பரியத்தில் உதித்த அவருக்கு பிறப்பிலேயே கவர்ச்சிகரமான தோற்றம் அமைந்திருந்தது. அதுமட்டுமன்றி, கணிசமானளவு செல்வமும் காந்தி - நேரு பாரம்பரிய பெருமையும் அவருக்கு மேலும் பலமூட்டுவனவாக இருந்தன.

இந்த வாரிசுரிமை, ஒரு வகையில் முன்கூட்டியே நிர்ணயம் செய்யப்பட்டதாகவே இருந்தது. தனது பெயரை கட்சியின் பெயராக மாற்றிக்கொண்ட அவரது தாயார் தனக்குப் பின் தனது பிள்ளைகளுக்கு அக்கட்சியை வெகுமதியாக அளித்தார். அந்தக் கட்சியிலிருந்த ஏனைய தலைவர்கள் - இவர்களில் சிலர் ராஜீவ் காந்தியின் தாத்தாவின் சமகாலத்தவர்களாக இருந்துள்ளனர். இந்த வாரிசு முறையை மக்களைக் கவர்ந்திழுக்கும் அவரின் தனித்துவமான வசீகர ஆளுமை என்று குறிப்பிடுகிறார்கள். காங்கிரஸ் கட்சியானது நாட்டுக்குள்ளும், நாட்டுக்கு வெளியேயும் மேலைத்தேச அரசியல் கோட்பாட்டின் தேவைகளுக்கு இணங்கிச் செல்லும் ஓர் அரசியல் கட்சியாக கருதப்பட்டு வந்திருக்கிறது.

ராஜீவ் யுகத்தைச் சேர்ந்த புதிய தலைமுறைக் கூட்டாளிகள், தொடர்பு சாதனங்களை நுகர்வுவாதக் கலாச்சாரத்தினை உயர்த்திப்பிடிக்கும் வகையில் தொடர்ந்தும் துஷ்பிரயோகம் செய்துவந்துள்ளனர். பொருளாதாரக் தாராளமயமாக்கலை அடுத்து மேலைத்தேச நாடுகள் அவருக்குப் புகழாரம் சூட்டிவந்துள்ளன. ராஜீவ் காந்தி, காங்கிரஸ்கட்சி என்ற பெயரால் அழைக்கப்பட்ட ஸ்தாபனத்தை சவால்கள் எதுவுமின்றி எவ்வாறு தன் தலைமையில் வைத்துக்கொள்ள முடிந்தது என்பதனை இது விளக்குகிறது. நேரு-காந்தி பாரம்பரியத்தின் மாயத் தோற்றம், பல தலைமுறைகள் காலமாக மிக நுணுக்கமாக வளர்த்தெடுக்கப்பட்டு பின் சந்ததியினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது, பல வழிகளில், இந்திய அரசியலுக்கு ஒரு தொடர்ச்சியை அளித்து வந்துள்ளதென்று கூறலாம். செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்த சங்கிலிப்பிணைப்பு சார்பு ரீதியாக அரசியல் ஸ்திரத்தன்மைக்கு பங்களிப்புச் செய்துள்ளது. ஸ்ரீபெரும்புதூர் கொடூரம், அரசியல் கட்டமைப்பின் கடந்த காலத்துடனான பௌதீக இணைப்பினைப் பறித்தெடுத்துள்ளது. ராஜீவின் மரணத்தின் போது நாடெங்கிலும் காணப்பட்ட பரவலான திகிலும் பய உணர்வும் இதனாலேயே ஓரளவுக்குத் தோன்றியிருக்க முடியும். தமக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்த பெரியவர்கள், திடீரென்று தாம் அனாதைகளாகிவிட்ட யதார்த்த நிலையை உணர்ந்து கொண்ட போது தோன்றும் ஒரு மனநிலைக்கு இணையானதாகவே அது காணப்பட்டது. இல்லாவிட்டால், நாடெங்கிலும்- கட்சி எல்லைகளைக் கடந்த நிலையில்- பரவலாகத் தென்பட்ட அரசியல் இழப்புணர்வினை, அதுவும் தேசிய அரசியலில் வரையறுக்கப்பட்ட, தயக்கமான பங்கினை மட்டுமே வகித்து வந்த ஒரு அரசியல் வாதிக்கு அத்தகைய அனுதாப அலையொன்று எழுவதற்கான காரணத்தை விளக்க முடியாததாக இருந்திருக்கும். ஆட்சித் தலைமையினை அவரது விதவைக்கு - இறந்த கணவரின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன்னரேயே - வழங்க மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முயற்சிகளையும் இது விளக்குகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது, சமகால இந்திய அரசியல் - பொருளாதாரத்தின் பொதுக் கட்டமைப்பின் சில திரிபுகள் மற்றும் ராஜீவ்காந்தியின் கொடூரமான படுகொலையினால் உருவாக்கப்பட்ட ஊறுபடத்தக்க நிலைமை என்பன நிவாரணத்துடன் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. இந்தியா ஒரு நீண்டகால ஜனநாயகச் செயற்பாட்டினைக் கொண்டிருந்த போதிலும் இந்தியாவின் காலனியாட்சிக்குப் பிற்பட்ட ஜனநாயக பிரக்ஞையின் குறுகிய சமூக அடித்தளமும், பல்வேறு மட்டங்களிலான தொழிற்திறமை மற்றும் அறம் என்பவற்றில் ஜனநாயக நிறுவனங்களின் வளர்ச்சியும் முரண்பாடுகளின் தீர்வும்; கட்சிமுறையினால் உடைக்கப்பட்டிருப்பதும் செயற்படாதிருக்கும் சமஷ்டி அமைப்பும், மறு மலர்ச்சிச் சமூக அடையாளங்களில் உறுதியான அரசியல் வலியுறுத்தலும் பெருகிவரும் அரசியல், சமூக வன்முறையும், அரசின் பலவந்தப்படுத்தும் கருவிகளின் பெருக்கமும், ஒடுக்கு முறைச் சட்டங்களின் அதிகரிப்பும் ஆகிய அனைத்துமே அரசியலமைப்பில் தொடர்ச்சியாகக் காணப்படும் இருப்பு வாத யதார்த்தங்களின் ஒரு பாகமாகவே உள்ளன. அதே போன்று வியாபித்து வரும் பொருளாதார நெருக்கடி, இப்பொழுது, சென்மதி நிலுவை நிலைமையை மிக மோசமான நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றது. இது சர்வதேச நாணய நிதியத்தின் கடனை அவசியப்படுத்துகின்றது. இத் தகைய கடன்கள், இயல்பாகவே அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய நிபந்தனைகளுடனேயே வழங்கப்படுகின்றன. அத்தகைய சீராக்கங்கள் செய்யப்படும் போது உள்நாட்டில் கடுமையான அரசியல் தெரிவுகளை செய்ய வேண்டிய நிலை

ஏற்படுவதுண்டு. இந்த அனைத்துத் துறைகளிலும், கடந்த பல வருடங்களாக பெரும்பாலான பிரச்சினைகள் உருவாக்கிக் கொண்டு வந்துள்ளன. ராஜீவ் அரசியலில் சேர்ந்த போது அவை மோசமான நிலையில் இருந்தன; அவர் கொலை செய்யப்பட்டபோது அவை படுமோசமான நிலையிலிருந்தன. இந்திய அரசியல்-பொருளாதாரம், பாரிய நெருக்கடிகளில் ஏற்கனவே சிக்குண்டிருக்கும் இவ்வேளையில் ராஜீவின் திடீர் மரணம் புதிய நெருக்கடிக் கூறு ஒன்றினை -அதாவது அரசியல் தலைமைக்கான தேவை - முன்வைத் துள்ளது. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இந்தியாவில், அரசியல் தலைமையில் இதுவரை காலமும் நிலவிவந்த தொடர்ச்சி முதல்தடவையாக இப்பொழுது அறுந்துவிட்டது.

ராஜீவ்காந்தி படுகொலையின் ஒரு மாதத்தின் பின்னர், எமது அரசியல் கட்டமைப்பு, கொடூரமான யதார்த்த நிலைகளுக்கு இசைவாக தன்னைச் சீர்செய்து கொண்டிருப்பதனை காண முடிகிறது. காங்கிரஸ் கட்சி, அதன் தலைவரின் மரணத்தின் மூலம் - அவர் உயிருடன் இருப்பதிலும் பார்க்க - அதிகளவு ஆதாயத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. அனுதாப அலை காரணமாக, கட்சி அதிக வாக்குகளையும், அதிக தொகுதிகளையும் வென்றெடுத்துள்ளதென்பதனை அனைத்துச் சான்றுகளும் காட்டுகின்றன. எனினும், தேசிய பாராளுமன்றத்தில் திட்டவட்டமான ஒரு பெரும்பான்மைப் பலத்தை அதனால் பெற்றுக் கொள்ள முடியாமற் போய்விட்டது. இது தவிர, காங்கிரஸ் கட்சி நீண்ட காலத்துக்குப் பின்னர் தனக்குப் பரிச்சயமில்லாத ஒரு பணியை - அதாவது புதிய ஒரு தலைவரைத் தெரிவு செய்யும் பணியை-எதிர்கொண்டது. இந்தச் சூழ்நிலையில், கட்சி, சில ஆரம்ப தடுமாற்றங்களுக்குப் பின்னர் இந்திரா காந்திக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட கருத்தொற்றுமை மூலம் தலைவரைத் தெரிவு செய்யும் நடைமுறையைப் பின்பற்றியது. ஜனநாயக நடைமுறைகளுக்குக் கிடைத்த இந்த வரையறுக்கப்பட்ட சலுகை, முதன் முதலாக இந்தி பேசும் இந்துக்களின் பெரு நிலமான உத்தரப் பிரதேசத்துக்கு வெளியிலிருந்து ஒரு தலைவரைத் தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பினை நாட்டுக்கு அளித்தது. கட்சியின் சமீபத்திய கடந்த காலத்தின் பின்னணியில் நோக்கும் போது, இந்த இரண்டு முன்னேற்றங்களும், ஒரு வகையில், புரட்சிகரமானவை என்றே கூறவேண்டும்.

தனி நபர்களுக்கான அதிகாரப் போராட்டத்தில், அரசியல் முதன்மை நிலை மீள வலியுறுத்தப்படும் ஒரு நிலையையும் இப்பொழுது காண முடிகிறது. அதாவது, இந்த அதிகாரப் போராட்டம், பிறப்பின் மூலம் தலைவர்களாக ஆக்கப்பட்டவர்கள் இல்லாத நிலையில், தனிநபர்களுக்கும் குழுக்களுக்குமிடையில் காணப்படுகிறது. இத்தகைய கூட்டு அரசியல் தேசிய அரசியலை மைய நிலைக்கு உறுதியாக எடுத்து வரமுடியும். அது மட்டுமன்றி, தீர்மானங்களை எடுப்பதில் பரவலான ஒரு கருத்தொற்றுமை நிலை உருவாகும் அனுகூலத்தையும் இது அளிக்கும்.

1960 களின் நடுப்பகுதியில் திருமதி. இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சியை இரண்டாக உடைத்ததன் பின்னர், இத்தகைய ஜனநாயகப் பண்புகள் இக்கட்சிக்குள் காணப்படவில்லை. இந்தியா, பல தேசிய இனங்களைக் கொண்ட, பரந்த வீச்சில் பன்முகத் தன்மை நிலவி வரும் பரந்து விரிந்த சமூதாயமொன்றாக இருந்து வருகிறது. இந்த சூழ்நிலையில், மோதல் நிலைமைகளை அடக்குமுறை மூலம் சமாளிப்பதற்கு மிகச் சில தெரிவுகளே கிடைக்கின்றன. அத்துடன், இந்திய ஜனநாயக நிறுவனங்கள் பலவீனமடைந்து போயுள்ளன. திருமதி இந்திரா காந்தியின் அவசரகால நிலைப் பிரகடனம் இதனை நன்கு எடுத்துக்காட்டியது. கருத்தொற்றுமையுடனான அரசியல் நிகழ்வுப் போக்கின் முதன்மை நிலையை நோக்கிய இத்தகைய அமைப்பு ரீதியான நிர்ப்பந்தங்கள் தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கான இலட்சியங்களையும் முன்னெடுத்து வருவனவாக உள்ளன. வசீகர ஆளுமை கொண்ட தலைமையொன்று இல்லாதிருப்பதும் இந்த நிகழ்ப்போக்குக்கு உதவ முடியும்.

மாண்பொருளியல் துறையைப் பொறுத்த வரையில், ராஜீவ் காந்தியின் மரணம், கிடைக்கக் கூடியதாக இருக்கும் கொள்கைத் தெரிவுகளில் தராதியான மாற்றங்கள் எதனையும் எடுத்து வரவில்லை. பொருளாதார நெருக்கடியின் யதார்த்த நிலையும், சர்வதேச நாணய நிதியக் கடன்களைத் தவிர்க்க முடியாமையும், அக்கடன்களுடன் இணைந்து வரும் அமைப்பு ரீதியான சீராக்கங்கள் குறித்த நிபந்தனைகளும் இந்தியப் பொருளாதாரத்துக்கு அதிகரித்தளவிலான நிர்ப்பந்தங்களை எடுத்து வர முடியும்.

இந்த நிர்ப்பந்தங்களும், நிபந்தனை விதிப்புகளின் உள்நாட்டு அரசியல் தாக்கங்களும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் தவிர்க்க முடியாத தாக்கத்தினை எடுத்துவரும். ஆனால், இந்தப் புதிய நிர்ப்பந்த நிலமை, ராஜீவ் காந்தியின் மரணத்துடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. இந்த நிலையில், எந்தவொரு பிரதம மந்திரிக்கும் - ஒரு கம்யூனிஸ்ட் பிரதமராக வந்தாலும் கூட - முன்னால் வரையறுக்கப்பட்ட சில தெரிவுகளே உள்ளன. இந்த வகையில் நோக்கும் போது, ராஜீவின் படுகொலையைத் திட்டமிட்டதாக பரவலாகச் சந்தேகிக்கப் படும் நபர்கள், வெறுமனே ஒரு அப்பாவியைப் படுகொலை செய்துள்ளது போல் தோன்றுகிறது. ஆனால், இப்படுகொலை, கொலைகாரர்கள் எவ்விதத்திலும் எதிர்பார்த்திராத பின்விளைவொன்றினை எடுத்துவரும் வாய்ப்பிருக்கின்றது. அதாவது, ராஜீவ் காந்தி, துரதிர்ஷ்டவசமாக, அவரது நெருங்கிய ஆலோசகர்களாலும் நெருக்கமான குழுவினராலும் ஊக்குவிக்கப்பட்டு, பிராந்திய அரசியலில் தலையிடுவதற்கு தூண்டப்பட்டிருந்தார். ஆனால், வருங்கால இந்தியப் பிரதமர் எவரும் இத்தகைய சாகசங்களில் ஈடுபடுவதற்கு பெருமளவுக்கு தயக்கம் காட்ட முடியும் என்பதனையே இது காட்டுகிறது. இந்தியாவின் தேசிய அரசியலில், தலைவர்களின் தனிப்பட்ட ஆளுமை என்ற அம்சத்துக்கு அதிகளவுக்கு முக்கியத்துவம் தரப்படாத நிலை உருவாகும் போல் தோன்றுகிறது. இது நாட்டுக்கு நல்லதென்றே கூற வேண்டும்.

(43 ம் பக்கம் பார்க்க)

# பாரிய, பல பரிமாணங்களைக் கொண்ட அமைப்பு ரீதியான மாற்றங்கள்

சுமித் சக்கரவத்தி

*இந்தியாவின் முற்போக்கு பத்திரிகையாளர்களில் ஒருவராக நன்மதிப்பைப் பெற்றிருக்கும் சுமித் சக்கரவர்த்தி ''மெயின்ஸ் ட்ரீம்'' பத்திரிகையின் சிறப்பு நிருபராவர்.*

"சனத்தொகை அடிப்படையில், புவிக்கோளின் இரண்டாவது மிகப் பெரிய தேசமான இந்தியா, பிரிட்டனிலிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் கடந்துபோன 44 ஆண்டுகால அதன் வரலாற்றில் இதுவரையில் சந்தித்திராத மிக மோசமான நெருக்கடியொன்றுக்குள் இப்பொழுது சிக்கித் தவிக்கிறது. பெரும் குழப்ப நிலையை நோக்கிய இந்த நகர்வு, மேலைத்தேச நாடுகளினால் அதிகளவில் கவனிக்கப்படாத ஒரு சூழ்நிலையில் - பாரசீக வளை குடாவிலும், மத்திய ஐரோப்பியாவிலும் இடம் பெற்று வந்த நிகழ்வுகளில் உலகின் கவனம் திரும்பியிருந்த ஒரு காலகட்டத்தில் - நிகழ்ந்து வந்துள்ளது. எனினும், இன்றைய இந்தியாவின் கொந்தளிப்பு, சோவியத் யூனியனின் சிதைவினைப் போலவே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இது நாட்டின் வருங்கால நிகழ்வுகளின் திசை வழியில் நிச்சயமாகத் தாக்கங்களை எடுத்து வரும்".

"வியாபித்துவரும் இந்த அரசியல், பொருளாதார நெருக்கடி, ஒப்பீட்டு ரீதியாக, ஒரே நேரத்தில் திடீரென்று எழுந்த பல கொந்தளிப்புக்களின் ஒரு தொகுப்பாக தெரிகிறது. ஜாதிவெறி, மதக்கலவரங்கள், பணவீக்கத்தின் பெருக்கம், பொருளாதாரப் பின்னடைவு, அரசாங்கம் வங்குரோத்து நிலைமையை அண்மித்து வந்தமை, மூர்க்கமான பிராந்தியக் கிளர்ச்சிகள் ஆகிய அனைத்தும் இந்த நெருக்கடியில் ஒன்று திரண்டிருந்தன. இப்பொழுது முழு அமைப்புமே நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்றது".

இவ்வாறு "வாஷிங்டன் போஸ்ட்" பத்திரிகையில் ஜேம்ஸ் கிளார்ட் எழுதியிருந்தார். இந்தக் கருத்துக்களை ஒருவர் ஏற்கலாம்; அல்லது ஏற்காது விடலாம். எனினும், இன்றைய இந்தியா எதிர்நோக்கியுள்ள நெருக்கடி, சுதந்திரத்துக்கு பிற்பட்ட அதன் வரலாற்றில், இதுவரை காலமும் அந்நாடு கண்டிராத ஒன்று என்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. இக் கட்டுரையை ஜேம்ஸ் கிளார்ட் இவ்வாண்டின் ஏப்ரல் மாதத்தில் எழுதியிருந்தார். இதன் பின்னர், இந்தியா அதன் பத்தாவது மக்களவைக்கான பொதுத்தேர்தலை நடாத்தி முடிக்கும் கடுமையான அனுபவத்தைச் சந்தித்தது. கடந்த நாற்பது வருட காலத்தில் நாடு சந்தித்த மிக மோசமான பொதுத் தேர்தலாக இது இருந்தது. மூன்று கட்ட தேர்தலில் முதலாவது நாளன்று (மே 20) இடம்பெற்ற வன்முறைகளின் போது ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கொலையுண்டனர். அதற்கடுத்த நாள் (மே 21) முன்னாள் பிரதமரும் நாட்டின் மிகப் பெரிய அரசியக் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ராஜீவ் காந்தி, தமிழ்நாடு மாநிலத்தில் ஸ்ரீ பெரும்புதூரில் இடம் பெற்ற கொடூரமான குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் உயிரிழந்தார். இந்தக் கொடூர நிகழ்வு, முழு நாட்டையும் வியப்பிலும், திகைப்பிலும் ஆழ்த்தியது. இதனையடுத்து, தேர்தல் நிகழ்வுப் போக்கு மூன்று வாரங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

ராஜீவ் காந்தியின் தாயாரும், சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இந்தியா கண்ட மிகப் பெரிய அரசியல் புள்ளிகளில் ஒருவருமான திருமதி இந்திரா காந்தி, 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி, அவரது சொந்தப் பாதுகாவலர்களாலேயே சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தப் பேரிழப்பினை அடுத்து நாடு பெரும் துயரில் மூழ்கியது. அதேவேளையில், ஆளும் கட்சியைச் சேர்ந்த சில சமூக விரோதக் கும்பல்கள் பழிக்குப்பழி வாங்கும் கோஷத்துடன் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர்-சீக்கியர்-மீது கொடூரமான வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டன. இந்த வன்செயல்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலும் இடம் பெற்ற போதிலும், தலைநகர் புதுடில்லியிலேயே அவை பெருமளவிற்கு நிகழ்ந்தன. இந்தக் கொடூரங்களை நேரில் பார்த்த இந்தக் கட்டுரை ஆசிரியரைப் போன்ற பலர், இந்தப் பேரதிர்ச்சியை இன்னமும் நினைவில் வைத்திருக்கிறார்கள். சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், இப்பொழுது, இந்திராவுக்கு பின்னர் நாட்டின் ஆறாவது பிரதம மந்திரியாகப் பதவியேற்ற அவரது மகனான ராஜீவுக்கு, தாய்க்கு நேர்ந்த அதே கதி நேர்ந்துள்ளது. அதாவது, பயங்கரவாத வன்செயலுக்கு அவரும் இரையாகி உள்ளார். இதிலுள்ள ஒரே வித்தியாசம் இம்முறை, அதி நவீன உபகரணங்களின் உதவியுடன் மிகக் கொடூரமான முறையில் இந்த அரசியல் படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதாகும். இந்த படுபாதகச் செயலை அடுத்து முழு நாடும் அதிர்ச்சியுற்று மௌனத்தில் ஆழ்ந்து போனது.

தொடர்ச்சியாக வளர்ந்து வரும் வன்முறை அலை, நாட்டைப் பீடித்துள்ள பல பரிமாணங்களிலான நெருக்கடிகளின் ஒரு நோய்க்குறி மட்டுமேயாகும். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு, தன் எதிரில் வியாபித்துவரும் சவால்களை சமாளிக்க முடியாத நிலையில் திணறிப் போயுள்ளது என்பதற்கு இது சான்று பகர்கின்றது.

நாடு, பொருளாதாரத் துறையில், ஏற்கனவே பாரிய நெருக்கடியொன்றை எதிர்கொண்டிருக்கிறது. நடு எண்பதுகளில் பொருளாதாரத் தாராளமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, இறக்குமதிச் செலவுகள் கண்மூடித்தனமாக பெருகிச் செல்ல இட

மளிக்கப்பட்டது. அத்துடன், அதிகார வர்க்கம் வளங்களை ஊதாரித்தனமாக அழித்துத் தீர்த்தது. அண்மைய வருடங்களில், இந்தியாவின் அன்னியச் செலாவணி ஒதுக்குகள் கணிசமான அளவில் தீர்ந்து போயுள்ளன. வர்த்தகச் சமமின்மை காரணமான சென்மதி நிலுவைப் பற்றாக்குறை மிகக் கடுமையான ஒரு மட்டத்தை அடைந்திருக்கிறது. இந்த நிலையில், தேசிய அளவில் இயங்கும் ஒரு பிரதான அரசியல் கட்சி, பொருளாதார முனையில் காணப்படும் பிரச்சினைகளை முழுத் தீவிரத்துடன் அணுகும் நிலைப்பாட்டினை எடுப்பதற்குப் பதிலாக தேசிய அடையாளம்-தேசியவாதம் என்ற கோஷத்தை பொதுத்தேர்தலின் போது முன் வைத்திருந்தது. (அதே போல, சனத்தொகை அடிப்படையில் நாட்டின் மிகப்பெரிய மாநிலமான உத்தர பிரதேசத்தின் சட்ட சபைத் தேர்தல்களிலும் இக்கட்சி இதே கோஷத்தை எழுப்பியது). தேசியவாதமென்பது, அடிப்படையில், இந்து அடையாளத்துக்கு இணையானதாக உருவாக்கப்பட்டுள்ளது. ஒருவர், தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில், தனது மத நம்பிக்கைகளை மீள ஸ்தாபித்துக் கொள்வதனை அல்லது பலப்படுத்திக் கொள்வதனை தவறான காரியமென்று எவரும் கூறிவிட முடியாது. ஆனால், அரசியல் நிகழ்வுப் போக்குக்குள், வகுப்புவாதத்தை நுழைக்காத முறையில் இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அக்கட்சி நிகழ்த்திய தேர்தல் பிரச்சாரம் வகுப்புவாதச் சாயலைக் கொண்டிருந்தது. "அனைவருக்கும் நீதி வழங்குவோம், எவரையும் சீராட்ட மாட்டோம்" என்ற அக்கட்சியின் சுலோகம், நாட்டின் மிகப்பெரிய சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புப்பாதுகாப்புக்கள், பெரும்பான்மையினரான இந்துச் சமூகத்தவருக்கு ஊறு விளைவிக்கக் கூடியவையாக இருக்குமென்பதனையே காட்டியது. பாரதீய ஜனதாக்கட்சி ஒலிப்பதிவு நாடாக்களின் உதவியுடனும் வீடியோ நாடாக்களின் உதவியுடனும், பகிரங்கமாக, வெகு முனைப்புடன் முன்னெடுத்துச் சென்ற தேர்தல் பிரசாரத்தின் போது, இந்த விஷயம் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது. குறுகிய தேர்தல் ஆதாயங்களை வென்றெடுப்பதற்காக மத வெறியையும் வகுப்புவாதத்தையும் தூண்டிவிடும் முயற்சிக்கான மிகச் சிறந்த உதாரணமாக அது இருந்தது. ராமஜென்ம பூமி-பாப்ரி மசூதி விவகாரத்தில் இது மேலும் வன்மையுடன் வெளிப்பட்டுத் தெரிந்தது. இந்த வகுப்புவாத அலை அந்தக் கட்சிக்கு பேரளவு தேர்தல் இலாபங்களை ஈட்டுக்கொடுத்தது. உத்தரப்பிரதேச சட்டசபையில் காங்கிரஸ்கட்சி படுதோல்வி கண்டதுடன், பாரதீய ஜனதாக் கட்சி அதிக பெரும்பான்மையுடன் வெற்றியீட்டியது. இந்த நிகழ்வுப் போக்கு, இனங்களுக்கிடையிலான பதற்ற நிலையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக, கடந்த ஓராண்டு காலத்தில் எத்தனையோ மதக் கலவரங்கள் வெடித்துக்கிளம்பிய வட இந்தியாவில் நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு போகிறது.

## வகுப்புவாத உணர்வு

வகுப்புவாத விழிப்புணர்வு திடீரென்று பீறிட்டுக் கிளம்புவதற்கு பின்னணியிலிருந்த காரணம் யாது? நிபுணர்கள், பல விளக்கங்களைத் தருகிறார்கள். ஈரானில் முஸ்லிம் அடிப்படைவாதமும், மதவெறியும் எழுச்சியடைந்ததனையடுத்து, உலகெங்கிலும் இஸ்லாமிய அடிப்படைவாத உணர்வு பெருகி வருகின்றது. இது, இந்த வகுப்புவாதிகளை, இந்து அடையாளத்துக்கான ஒரு கோஷத்தை முன்வைப்பதற்குத் தூண்டியிருக்க முடியும். ராமர் கோயில் விவகாரத்தை, இந்த விழிப்புணர்வைப் பரப்புவதற்கான ஒரு பின்புலமாக பயன்படுத்திக்கொள்ள அவர்களால் முடிந்தது. இதனுடன் சேர்ந்து நேருவின் மதச்சார்பின்மைக் கோட்பாட்டுக் கெதிராகவும் முனைப்பு மிகுந்த பிரகாரம் நடத்தப்பட்டு வருகிறது. எனினும், இக்கட்டுரை ஆசிரியர் இது குறித்து சற்றுவித்தியாசமான ஒரு கருத்தினையே கொண்டுள்ளார். இந்தியாவின் பின்தங்கிய, நசுக்கப்பட்ட சாதியினர் இன்னமும் கூட கணிசமானளவு சமூக ஒடுக்குமுறைக்கு ஆளாகி வருகின்றனர். இந்த நலிந்த சமூகப் பிரிவினருக்கு அதிகாரத்தில் ஒரு சிறிய பங்கினை மட்டும் வழங்குவதற்கான முயற்சி, சாதி அடிப்படையில் அடுக்குகளாக அமைந்துள்ள இந்து சமுதாய அமைப்பின் அடுக்குகளை சீர்குலைக்கக் கூடியதான அச்சுறுத்தலை முன் வைத்தது. இந்து சமுதாயத்தின் குறுகிய நலன்பேணும் பிரிவினர் இந்த நடவடிக்கைகளின் கசப்பான பின்விளைவுகளை எண்ணித் திகிலுற்றனர். இந்த நிலையில், பொதுமக்களின் – குறிப்பாக சமூகத்தின் ஒடுக்கப்பட்ட சலுகைகள் எதுவுமற்ற மக்கள் பிரிவினரின் – கவனத்தைத் திசைதிருப்புவதற்காக எதிர் நடவடிக்கை ஒன்றை அவர்கள் துவக்கி வைத்தார்கள். இது, இந்து சமுதாயக் கட்டமைப்பினை, இப்போதுள்ள நிலையில் தொடர்ந்தும் பேணிவருவதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு கடைசிநேரப் பிரயத்தனமாகவே தெரிகிறது.

## மண்டல் கமிஷன்

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதி, அப்போதைய பிரதமர் திரு. வி. பி. சிங் மண்டல் கமிஷன் அறிக்கையை (ஒரளவுக்கு) அமுல் செய்வதற்கு தனது அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அறிவித்தார். இதன் பிரகாரம், சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு அரச துறைத்தொழில்களிலும், கல்வி வாய்ப்புக்களிலும் இட ஒதுக்கீடுகள் அளிக்கப்படும். மண்டல் கமிஷன் 1979 இல் அமைக்கப்பட்டதுடன், அது, அதன் அறிக்கையை 1980 இல் சமர்ப்பித்தது. கடந்த 11 வருட காலமாக இந்த அறிக்கை அரசாங்க அலுவலகங்களில் தூசுபடிந்து போய்க்கிடந்தது. இந்திரா காந்தியோ அல்லது ராஜீவ் காந்தியோ இந்த அறிக்கை குறித்து, அவர்களது ஆட்சி காலத்தின் போது தெளிவான நிலைப்பாடு எதனையும் எடுக்கவில்லை. இதன் சிபார்சுகளை அமுல் செய்வது குறித்து அவர்கள் அடிக்கடி பேசி வந்த போதிலும், அவற்றை நடைமுறையில் செயலில் விடுவதனை மிகத் தந்திரமாகத் தவிர்த்து வந்தனர். இதன் நோக்கம், பின்தங்கிய வகுப்பினரை தொடர்ந்தும் எதிர்ப்பார்ப்பு நிலையில் வைத்திருப்பதும், காங்கிரஸ் கட்சிக்கு எதிராக அவர்கள் திரும்பாதிருப்பதை உறுதி செய்து கொள்வதுமாகும். அதே வேளையில், உயர்சாதியினரின் ஆதரவையும் இழந்து விடாது, தக்க வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது. எனினும், 1989 டிசம்பரில் அதிகாரத்துக்கு வந்த ஜனதா தள் கட்சி தலைமை

யிலான தேசிய முன்னணி அரசு, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை செயலில் விடத் தொடங்கியது. மண்டல் கமிஷன் சிபார்சுகளைச் செயற்படுத்துவதும் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஓர் அம்சமாக அடங்கியிருந்தது. (பாரதீய ஜனதாக் கட்சியை உள்ளடக்கிய ஏனைய கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இந்த விஷயம் வெவ்வேறு விதங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.) எனினும், தேசிய முன்னணி அரசு தான் பதவியேற்ற உடனேயே இந்தச் சிபார்சுகளை அமுல் செய்யத் தொடங்கவில்லை. இவ்வறிக்கையைப் பரிசீலனை செய்து நுணுகி ஆராய்வதற்கென மந்திரி சபை உப குழு ஒன்றினை அது நியமனம் செய்தது. இந்த உபகுழு மண்டல் அறிக்கையின் சிபார்சுகளை (ஓரளவுக்கு) அமுல் செய்வதற்குப் பச்சைக் கொடி காட்டிய பின்னர், வி. பி. சிங் உடனடியாக தன் முடிவை அறிவித்தார். பின்தங்கிய சமூகங்களை தனது பிடிக்குள் வைத்திருப்பதில் அவர் பெருமளவுக்கு ஆர்வம் காட்டினார்.

இந்த நடவடிக்கைக்கு, தொடக்கத்தில், எந்த அரசியல் கட்சியிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பவில்லை. அனைத்துக் கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் மண்டல் கமிஷன் சிபார்சுகளை அமுல் செய்வதாக வெறுமனே வாய்ப்பந்தல் போடப்பட்டிருப்பதாக வி. பி. சிங் சரியாகவே சுட்டிக் காட்டினார். எனினும், (உயர் சாதிகளைச் சேர்ந்த) மாணவர்கள் இந்த முடிவை எதிர்த்து வீதிகளில் இறங்கி வன்முறையுடன் கூடிய ஆர்ப்பாட்டங்களை நடத்திய போது காங்கிரஸ் கட்சியும் இந்த இயக்கத்தில் படிப் படியாகத் தன்னைப் பிணைத்துக் கொள்ளத் தொடங்கியது. செல்வாக்கு மிகுந்த பல தொழில் அதிபர்கள் வி. பி. சிங்கை பதவியிலிருந்து அகற்றுவதில் குறியாக நின்றனர். இந்த நிலையில், காங்கிரஸ் கட்சி இவர்களுடன் சேர்ந்துகொண்டது. ஆகவே, மண்டல் அறிக்கைக்கு எதிராகவும் அரசின் தீர்மானத்துக்கு எதிராகவும் நாடெங்கிலும் தொடரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெறத் தொடங்கின. இது மட்டுமன்றி பலர் தீக்குளிப்பின் மூலம் தமது உயிர்களை மாய்த்துக் கொண்டனர். இந்தத் தீக்குளிப்புச் சம்பவங்கள், எதிர்ப்புக் கிளர்ச்சிகள் பொதுவாக இடம் பெற்று வரும் இந்த நாட்டில் இது வரை காலமும் நிகழ்ந்திராத அதிசயங்களாகத் தென்பட்டன.

இந்த எதிர்ப்பியக்கம் நாடெங்கிலும் வேகமாகப் பரவிவந்த போது பாரதீய ஜனதாக் கட்சி அதன் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு வெளியில் வந்து, இப்பிரச்சினை தொடர்பாக தேசிய முன்னணி அரசு மீதும், வி. பி. சிங் மீதும் கண்டனக்கனைகளைத் தொடுத்தது. தேசிய முன்னணி அரசுக்கெதிரான பிரசாரத்தின் பிரதான அம்சம், வி. பி. சிங் சாதி அடுக்குகளின் எழுச்சிக்கு மீண்டும் ஒருமுறை வழி கோலுகிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையைக் கொண்டதாகவே இருந்தது. அறிவு ஜீவிகளில் பரவலான பிரிவினரும் இந்தக் கருத்தை ஆதரித்தார்கள். ஆனால், இது உண்மைக்கு மாறான ஒரு கருத்தாகும். ஏனெனில், சாதி அமைப்பு கடந்த காலத்தின் ஒரு பிதுரார்ஜிதமாகவே எமக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, வி. பி. சிங் அதற்குப் புத்துயிரூட்டினார் என்று கூறுவதில் எந்த அர்த்தமும் இல்லை. மாறாக, அவர் எடுத்த நடவடிக்கை, இந்து சமுதாயத்தின் முக்கியமான சாபக்கேடுகளில் ஒன்றாக இருந்த நாசகரமான சமூகக் கட்டமைப்பினை ஓரளவுக்கேனும் ஒழித்து விடுவதற்கு எடுக்கப்பட்ட ஒரு மிதமான முயற்சியாகவே இருந்தது. மண்டல் அறிக்கை பிரச்சினையின் அனைத்து அம்சங்களையும் மிக நுணுக்கமாக நோக்கும் போது, இந்தச் சிபார்சுகள் அமுல் செய்யப்பட்ட விதத்தில் பல குறைபாடுகள் இருந்ததனை எவரும் அவதானிக்க முடியும். (மண்டல் கமிஷன் அறிக்கையே பல குறைபாடுகளைக் கொண்டதென்பதை பல நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்). எனினும், இந்த விஷயம் தொடர்பாக, வி. பி. சிங் மீது தொடுக்கப்பட்ட கடுமையான தாக்குதல்கள், உயர்சாதி இந்துக்களின் பய உணர்வினையே – அதாவது தாழ்ந்த சாதிக்காரருக்கு தமது சலுகைகளை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும் என்ற பய உணர்வினையே–காட்டுகின்றது. நீண்டகாலமாக இடம் பெற்று வந்துள்ள சமூகச் சீர்திருத்தங்கள் மற்றும் நவீன யுகத்தை நோக்கிய இந்தியாவின் பயணம் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட இந்த சாதி அடுக்கு முறை மாறாமல் அப்படியே இருந்து வந்துள்ளது.

மண்டல கமிஷன் அறிக்கையை ஓரளவிலேனும் அமுல்படுத்தியமை சமூக சமத்துவத்தை நோக்கிய முன்னேற்றத்தின் ஒருபடி என்றே குறிப்பிட வேண்டியுள்ளது. எனினும், இட ஒதுக்கீடுகள் மட்டுமே சர்வரோக நிவாரணிகளாகக் கருதப்பட முடியாது. அரச சேவைகளில் செட்யூல்ட் வகுப்பினருக்கும், செட்யூல்ட் பழங்குடியினருக்கும் ஏற்கனவே 22.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த வழிமுறை ஒடுக்கப்பட்டுள்ள இந்த மக்கள் பிரிவினரை மேலுயர்த்தி விடும் பணியில் முற்றிலும் வெற்றி பெறவில்லை என்பது இதற்குச் சான்றுபகர்கின்றது. கல்வியையும், எழுத்தறிவினையும் பரப்புதல், தொழில் வாய்ப்புக்களைப் பெருக்குதல் போன்ற ஏனைய நடவடிக்கைகளுடன் இணைந்த வகையில் இவற்றை அமுல் செய்தால் மட்டுமே உரிய விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், இந்த ஆர்ப்பாட்டங்களின் போது தேசிய முன்னணி அரசின் தலைவர்களுக்கெதிராக – குறிப்பாக வி. பி. சிங்கிற்கு எதிராக – காட்டப்பட்ட வெறுப்புணர்வின் தீவிரம், சாதி அமைப்பு எவ்வளவு தூரம் பலம் பொருந்தியதாக இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

சாதி அமைப்பு தகர்ந்து வருவதற்கான சாத்தியங்களை பாரதீய ஜனதாக் கட்சித் தலைமை சரியான முறையில் உணர்ந்து கொண்டுள்ளது. அவர்களுடைய "ஹிந்துயிஸம்" குறித்த கருதுகோள் சாதி அடுக்கு முறையை தொடர்ந்து நிலைபெறச் செய்யும் உத்தேசத்தைக் கொண்டுள்ளது. வி. பி. சிங் ஹிந்து சமூகத்தைப் பிளவுபடுத்தி, அழித்து விடுவதற்கு முயன்றார் என்றும், சமூதாயத்தை ஒற்றுமைப் படுத்த வேண்டிய அவசியத்தை பாரதீய ஜனதாக்கட்சி உணர்ந்துள்ளதென்றும் கூறப்பட்டது. "சாதியின் பெயரால் அவர்கள் பிளவு படுத்த முயன்றார்கள். கலாச்சாரத்தின் பெயரால் நாங்கள் ஒற்றுமைப்பட முயல்கிறோம்" போன்ற சுலோகங்கள் புதுடில்லியிலும் ஏனைய நகரங்களிலும்

சுவர்களெங்கும் பரவலாகக் காணப்பட்டன. உண்மையிலேயே, பாரதீய ஜனதாக்கட்சியின் கலாச்சாரம், வகுப்புவாதச் சாயம் பூசப்பட்ட சாதிக் கலாச்சாரமேயன்றி வேறொன்றல்ல.

ராமர் பிறந்த இடமென்று கருதப்படுமிடத்தில் அவரது நினைவாக கோயிலொன்றை எழுப்புவது தொடர்பான பிரச்சினை (இதே இடத்தில் மொகலாயப் பேரரசர் பாபரினால் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசலொன்று இப்பொழுது இருக்கிறது) இந்த நோக்கத்துக்கு வசதியாக அமைந்தது. இந்தப் பள்ளிவாசலை உடைத்து விட்டு, அதனிடத்தில் கோயிலைக் கட்டுமாறு விடுக்கப்பட்ட உணர்ச்சிகரமான அழைப்பு, சராசரி ஹிந்து ஜனங்களின் உள்ளத்தில் மதவெறி என்னும் தீயை மூட்டுவதாக இருந்தது. மேலும், இது வரையில் பாரதீய ஜன்தாக் கட்சி இரகசியமாக மேற்கொண்டு வந்த துர்ப்பிரச்சாரத்தினை இப்பொழுது பகிரங்கமாகவே மேற்கொள்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பினை அளித்தது. இந்திய அரசியல் கட்டமைப்பில் செயற்பட்டு வந்த மதச்சார்பற்ற பிரிவுகள் அனைத்தையுமே, பா.ஜ.க. "போலி மதச்சார்பற்றவர்கள்" என முத்திரை குத்தியது. முஸ்லிம் சமூகத்தை சாந்தப்படுத்தி வருபவர்கள் என்பதைக் குறிப்பிடுவதற்கே இந்தப் பதம் பிரயோகிக்கப்பட்டது. இந்த வகையில், தனது வகுப்புவாத முகத்தோற்றத்தை மூடிக் கொள்வதற்காக அக்கட்சி "சாதகமான மதச்சார்பின்மை" என்ற பதத்தைப் பிரயோகித்தது. பெரும்பான்மைச் சமூகத்தினரின் உள்ளங்களில் ஒருவிதமான மன உளைச்சலைத் தோற்றுவித்து, தேர்தல்களில் அவர்களுடைய வாக்குகளை வென்றெடுப்பதே இந்த முயற்சிகளின் உள்நோக்கமாக இருந்தது. ஏனைய கட்சிகள் தமக்கென்று வாக்கு வங்கிகளைக் கட்டி எழுப்பிக் கொள்ள முயல்கின்றன என்று பா. ஜ. க. குற்றம் சாட்டியது. ஆனால், அக்கட்சியின் தலைவரான எல்.கே. அத்வானி, பல வடஇந்திய மாநிலங்களில் 1990 செப்டம்பர் / அக்டோபர் மாதங்களில் தனது ரத யாத்திரையைத் தொடங்கியபோது அவரும் இதனையே செய்தார். இந்தப் பயணத்தின் போது கலவரங்கள் இடம்பெறவில்லை என்ற போதிலும் போதியளவுக்கு வகுப்புவாத உணர்வுகள் கிளறிவிடப்பட்டிருந்தன. இதன் விளைவாக, குறுகிய காலத்துக்குள் நாட்டின் பல பாகங்களிலும் மதக் கலவரங்கள் தோன்றின. எனவே, பாரதீய ஜனதாக் கட்சி யதார்த்தமாக சாதியமைப்பின் அடிப்படையில் ஹிந்து சமூகத்தை ஒற்றுமைப்படுத்த முயன்று வரும் அதே வேளையில், மதச்சார்பின்மைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பரந்த இந்தியச் சமுதாயத்தில் பிரிவினையை உருவாக்கும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளது.

வகுப்புவாத அலையின் எழுச்சியினால் இந்திய அரசியல் கட்டமைப்பு எதிர்நோக்கியுள்ள நெருக்கடி – குறிப்பாக 1990 ன் பிற்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகளின் பின்னணியில் – மிகப்பாரதூரமான ஒரு கட்டத்தை எட்டியுள்ளது. மக்களவையில் பாரதீய ஜனதாக்கட்சி உறுப்பினர்களின் பிரசன்னம் பெரும் எண்ணிக்கையிலிருப்பது இதன் ஒரு வெளிப்பாடாகும். அதுமட்டுமன்றி, உத்தரப்பிரதேச மாநில ஆட்சியை தேர்தலில் பா. ஜ. க. கைப்பற்றியுள்ளது. மேலும், அத்வானி போன்ற தலைவர்கள், இந்து மதத்தை இந்திய தேசியவாதத்துடன் சமப்படுத்துவதன் மூலம் விளைவித்துவரும் குளறுபடிகள் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சி பத்தாவது மக்களவைக்கான தேர்தல்களில் நாட்டின் பல பகுதிகளிலும் பரவலான ஆதரவினை வென்றெடுத்திருக்கின்றது. வடஇந்தியாவில் மட்டுமன்றி, தென் இந்தியா, கிழக்கிந்தியா போன்ற பகுதிகளிலும் அது அதன் வாக்குப் பலத்தை அதிகரித்துக் கொண்டுள்ளது. மார்க்ஸிஸ்ட்டுகளின் கோட்டையான மேற்கு வங்காலத்திலும் கூட, அது பெற்ற வாக்குகளின் சதவீதம் உயர்ந்துள்ளதென்ற உண்மை, இன்றைய இந்திய அரசியல் கட்டமைப்பு நிலை குறித்த கவலையூட்டும் ஒரு யதார்த்தமாகும். மேலும், மதச்சார்பற்ற சக்திகள் பிளவுபட்டிருப்பதும், நேருயுக மதச்சார்பின்மையின் அடித்தளம் நலிவுற்றுப் போயிருப்பதும் இதற்கான காரணங்களாகும். எனினும், இந்து வகுப்புவாத அலையிலிருந்து தோன்றும் சவால்களைச் சமாளிக்கும் விஷயத்தில், உண்மையான இந்தியத் தேசியவாதம் முக்கிய பங்காற்ற முடியும். இந்து சமுதாயம், ஒடுக்கப்பட்ட அதன் மக்கள் பிரிவினருக்கு அதிகார அமைப்பில் உரிய பங்கினை அளித்து, அவர்களை முன்னேற்றி விடுவதற்கு அவசியமான சீர்திருத்தங்களை இந்தத் தேசியவாதம் எடுத்து வரமுடியும். இத்தகைய சீர்திருத்தங்கள் காலப்போக்கில் சாதி அடுக்குமுறையை வலுவிலக்கச் செய்வதற்கு வழிகோலும். அதுமட்டுமன்றி, உண்மையான இந்தியத்தேசியவாதம் மெய்யான மதச்சார்பின்மையையும் போஷித்து வளர்த்தெடுத்தல் அவசியமாகும். முஸ்லிம் சமூகத்தினரை, ஏனைய சமூகத்தினருடன் சேர்த்து மேலுயர்த்தி விடுவதை இது நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும். தேசிய முன்னணி–இடதுசாரிக் கூட்டணியின் கொள்கை – அமைப்பு ரீதியான பொறிமுறைகளின் உள்ளார்ந்த பல வீனங்கள் மற்றும் மூலவளங்களின் பற்றாக்குறை போன்ற முட்டுக்கட்டைகளுக்கு மத்தியிலும் கூட – இதுவாகவே இருந்தது. இந்த அடிப்படையில், அது ஹிந்தி பெருநிலமான பீகாரில் பா. ஜ. க. யை வீழ்த்தியது. ஹிந்தி பெருநிலமான உ. பி. பீகார் ஆகிய இந்த இரு மாநிலங்களும், ஒரு வகையில், இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் மாநிலங்களாக உள்ளன. எனினும், இந்திரா காங்கிரஸ்கட்சி, இந்தத் தேர்தலின் போது, மண்டல் அறிக்கை மற்றும் ராமஜென்ம பூமி ஆகிய பிரச்சினைகளில் திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை எடுக்காது ஒரு தடுமாற்ற நிலையையே காட்டிவந்தது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் அது சில தொகுதிகளில் வெற்றி பெற்ற போதிலும் பீகாரில் படுதோல்வி கண்டு விட்டது.

**பயங்கரவாதம்**

இந்த நெருக்கடி, அரசியல் களத்தில் வேறுவடிவங்களிலான சில வெளிப்பாடுகளையும் காட்டுகிறது. பஞ்சாபிலும் காஷ்மீரிலும் பிரிவினைவாதப் பயங்கரவாதம் தலைதூக்கி வருகிறது. அதே வேளையில், நாட்டின் பல பாகங்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகி வருகின்றன. தடைசெய்யப்பட்ட அசாம் விடுதலை

முன்னணியின் வன்முறைகள், இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் என்று சந்தேகப்படுபவர்களினால் நிகழ்த்தப்பட்ட ராஜீவின் படுகொலை, கிரீந்தர் போன்ற முன்னணித் தொழிலதிபர்களின் கொலை போன்றன சம்பவங்கள் இதனை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இந்திய அரசு, நாட்டின் வடமேற்குப் பகுதியில் பிரிவினைவாதத்தை ஒடுக்குவதில் கடுமையான ஆயுத நடவடிக்கைகளை மேற்கொண்டதைப் போலவே, வடகிழக்கு மாநிலங்களில் அத்தகைய சவால்களைச் சமாளிப்பதற்கும் அதே முறைகளை பிரயோகித்து வருகிறது. இந்த வழிமுறைகள் வடகிழக்கில் வெற்றியளித்துள்ளன என்ற ஓர் உணர்வு சில பிரிவுகளில் காணப்படுகிறது. எனினும், அரச பயங்கரவாத்தையும், இந்திய அரசாங்கத்தின் மிருகத்தனமான ஜனநாயக விரோத நடவடிக்கைளையும் எதிர்த்து நிற்கும் இயக்கங்கள் மணிப்பூர் போன்ற பகுதிகளில் காணப்பட்டு வருவது இந்த வெற்றியின் கடுமையான வரையறைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. காஷ்மீர், பஞ்சாப் போன்ற மாநிலங்களைப் பொறுத்த வரையில், உள்ளூர் மக்களை அடக்கி ஒடுக்கும் முயற்சியில் இம்முறையின் பிரயோகம் வலுவிழந்து வருகின்றதென்பது நாளுக்குநாள் இடம்பெற்று வரும் நிகழ்வுகளிலிருந்து தெரிகிறது.

இந்த இரு எல்லைப்புற மாநிலங்களிலும், இஸ்லாமாபாத்தின் தலையீடு காரணமாக இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடைந்து வருகிறது. பிரிவினை கோரும் பயங்கரவாதிகளுக்கு, இஸ்லாமாபாத் அதன் முழுமனதான ஆதரவை வழங்கி வருகிறது. இந்த நடவடிக்கை, என்றாவது ஒருநாள், பாகிஸ்தானையே திரும்ப வந்து தாக்கக் கூடியதாக நிச்சயமாக இருக்கும். (எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடனான இந்தியாவின் உறவு இறுதியில் இதனையே நிரூபித்தது). எனினும், பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் காணப்படும் பிரச்சினைகளுக்கான மூலகாரணம், பாகிஸ்தானின் வெளிநாட்டுக்கரமாக இருக்க முடியாது. இதற்கு, பெருமளவுக்கு, இந்திய மத்திய அரசாங்கத்தின் அரசியல் தலைமையில் இருந்தவர்கள் குறுகிய அரசியல் இலாபங்கள் கருதி மேற்கொண்டு வந்த தூரநோக்கற்ற, தவறான நடவடிக்கைகளே காரணமாக அமைந்தன. அடிப்படையில் ஆக உயர் மட்டத்தில் நிகழ்ந்த அரசியல் தவறுகள் காரணமாகவே இந்த இரு மாநிலங்களினதும் இன்றைய சிக்கலான பிரச்சினைகள் தோன்றியுள்ளன. எனவே, இப்பிரச்சினைகளின் தீர்வு, நிர்வாக வழிமுறைகளிலோ அல்லது இராணுவ நடவடிக்கைகளிலோ தங்கியிருக்கவில்லை; மாறாக, அரசியல் பேச்சுவார்த்தைகளை மீண்டும் துவக்குவதன் மூலமும், அதனையடுத்து, நீண்டகாலமாக இடை நிறுத்தப்பட்டிருக்கும் ஜனநாயகத் தேர்தல்களை இம்மாநிலங்களில் நடாத்துவதன் மூலமும் மட்டுமே இப்பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை எடுத்து வர முடியும்.

கடந்த சில மாதங்களாக மத்தியில் ஆட்சிபுரிந்து வந்த அபகீர்த்தி மிக்க சந்திரசேகர் அரசாங்கம் மேற்கொண்ட ஒரு துணிகரமான முயற்சியென பஞ்சாப்பில் தேர்தல் நடாத்துவதற்கான அதன் தீர்மானத்தினைக் குறிப்பிடலாம். தேர்தல் நாள் அண்மித்துக் கொண்டு வந்த போது, இந்த மாநிலத்தில் படுகொலைகள் பெருமளவில் அதிகரித்துக்கொண்டு வந்தன. தேர்தல்கல் நடாத்தப்படாதிருந்தால், கொலைகள் குறைந்துவிடுமென்ற ஒரு எண்ணப் போக்கை, இந்த முடிவை விமர்சித்த சிலர் முன்வைத்தார்கள். எனினும், இது உண்மை நிலவரத்தை முற்றிலும் தவறாகப் புரிந்து கொண்ட ஒரு செயலாகும்.

பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சியின் கீழும் கொலைகளும், படுகொலைகளும் இடையறாது நிகழ்ந்து வந்தன. தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் கொலைகளின் எண்ணிக்கை தற்காலிகமாக திடீரென அதிகரித்தாலும் கூட (அதனை சரியாக உறுதிப்படுத்த முடியாதிருந்த போதிலும்), ஜனநாயகத்தின் பேரில் இந்த ஆபத்தினை ஏற்பது தகும். உண்மையிலேயே, தீவிரவாதிகளை உள்ளடக்கிய பெருந்தொகையான மக்கள் பிரிவினர் இந்த ஆபத்தினை ஏற்பதற்கு முன்வந்துள்ளனர். ஆனால், நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவைக்கு இடம் விடும் பொருட்டு, சந்திரசேகர் அரசாங்கம் பதவி விலகியதை அடுத்து, தலைமைத் தேர்தல் ஆணையாளர் பஞ்சாப் தேர்தலை செப்டம்பர் வரையில் ஒத்திவைப்பதற்கு முடிவெடுத்துள்ளார். இதனை தமது வெற்றியொன்றாகக் கருதும் தீவிரவாதிகள், இப்பொழுது, தேர்தல் நிகழ்வுப் போக்கைக் குழப்பியடிப்பதற்கு முழுமூச்சுடன் அழிவு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஜனநாயகத் தேர்தல்களுக்கூடாக, பஞ்சாப்பில் அரசியல் நிகழ்வுப் போக்கு புத்துயிர் பெறுவதனை காண ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்கு இது ஒரு தனிப்பட்ட தோல்வியாக உள்ளது.

**வறுமை**

தேசத்தைத் துன்பத்தில் ஆழ்த்தி வரும் பேரளவு வறுமையை ஒழித்துக் கட்டுவதில், ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் தோல்விகண்டுள்ள நிலை, இந்த நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. மொத்த உள்நாட்டுற்பத்தியில் உயர்வீத வளர்ச்சி காணப்பட்ட போதிலும், 1987/88 இல் கிராமியக் குடித்தொகையில் சுமார் 43 சத வீதமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வந்தனர். முன்னாள் திட்டக்கமிஷன் உறுப்பினரான கலாநிதி பி. எஸ். மின்ஹாஸ், கடந்த பெப்ரவரி மாதத்தில் ஹரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சோட்டுராஸ் ஞாபகார்த்த விரிவுரையை நிகழ்த்திய போது, இதனை ஆதாரபூர்வமாக எடுத்து விளக்கினார். மேலும், 20 ஆம் நூற்றாண்டின் இன்றைய கடைசிக் கட்டத்திலும் கூட, நாட்டின் பல்வேறு பகுதிகளில் மகளிருக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளிலும் அவர்கள் எதிர்நோக்கியுள்ள இன்னல்களிலும் இந்த நெருக்கடியின் கூறுகளை காண முடிகிறது. கடந்த சில வருடங்களில் வரதட்சணை மரணங்களும், மணப்பெண்கள் தீயில் எரிக்கப்படும் நிகழ்வுகளும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. இது நுகர்வுவாதக் கலாச்சாரத்தின் கொடூரமான முகத்தோற்றத்தைப் பிரதிபலிப்பதுடன், மறுபுறம், இந்தியப் பண்பாடு மீதான ஒரு களங்கமாகவும் இருக்கிறது. நாட்டின் மொத்தக் குடித்தொகையான 84.4 கோடி மக்களில் எழுத்தறிவு பெற்றுள்ள ஆண்களின்

விகிதம் 52.68 சதவீதமாக இருக்கும் அதே வேளையில், பெண்களுக்குரிய இந்த விகிதம் கணிசமானளவு குறைந்து 32.52 சதவீதமாகவே உள்ளது.

எனினும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், எழுத்தறிவினைப் பரப்புவதற்கு செயலூக்கமிக்க பல நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெருமளவுக்கு இந்த முயற்சி ஓர் இயக்கமாகவே செயற்பட்டு வருகின்றது. நாட்டின் தென் மாநிலமான கேரளம், இதன் மூலம் மிகச் சிறந்த அறுவடையை - 100 சத வீத எழுத்தறிவு விகிதத்தை எட்டியுள்ளதன் மூலம் - பெற்றுக்கொண்டுள்ளது. அதேவேளையில், மகளிருக்கெதிராக இழைக்கப்படும் கொடுமைகளின் விளைவாக, இன்றைய இந்தியாவில் பெரும் எண்ணிக்கையிலான மகளிர் அமைப்புக்களும், பெண் நிலைவாத அமைப்புக்களும் எழுச்சியடைந்துள்ளன. இந்த இயக்கங்கள் பால் சமத்துவம் குறித்த விழிப்புணர்வினை படிப்படியாகத் தூண்டுவதில் உதவியுள்ளன. எனினும், இப்பிரச்சினையின் பாரியதன்மை இன்னமும் அதே பரிமாணங்களில் நிலவி வருகின்றதென்பதனை எவரும் மறுத்துவிட முடியாது. இது வரையில், பனிப்பாறையின் ஒரு சிறு முனை மீது மட்டுமே தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார நெருக்கடி

அரசியல் தளத்தில் காணப்படும் நெருக்கடியின் பரிமாணம் என்னவாக இருந்த போதிலும், உண்மையிலேயே, பொருளாதார முனையில் காணப்படும் நெருக்கடியே பெருமளவுக்கு கவலையளிப்பதாக உள்ளது. சென்மதி நிலுவைப் பற்றாக்குறை மிகக் கூர்மையாக இருப்பதுடன், இதனுடன் இணைந்த வகையில், இந்தியாவின் அன்னியச் செலாவணி ஒதுக்குகள் வெகுவிரைவில் தீர்ந்து வருகின்றன. பொருளாதார ரீதியில், நாடு இன்று எதிர்நோக்கியுள்ள மிகவும் பாரதூரமான பிரச்சினை இதுவாகும். மேலைத்தேச தொடர்பு சாதனங்கள், பொருளாதார நிர்வாகத்தில் அதிகரித்த அளவில் தாராளமயமாக்கல் இடம்பெற வேண்டுமென உரத்து குரலெழுப்பி வருகின்றன. முக்கியமாக, இறக்குமதிகளில் இந்தத் தாராளத்தன்மையை - இது தொடர்பாக ராஜீவ் காந்தி அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை - துணிகரமானவை என்றும், புத்துணர்ச்சி ஊட்டுபவை என்றும் வர்ணித்த இந்த ஊடகங்கள், அதே வேளையில், நுண்பொருளியல் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் கோழைத்தனமிக்கவையென வர்ணித்தன. லண்டன் "எக்கனமிஸ்ட்" சஞ்சிகை அதன் மே 4-ம் திகதிய இதழில் இந்தியா குறித்த ஒரு மீளாய்வினை மேற்கொண்ட போது இதனைக் குறிப்பிட்டிருந்தது. எனினும், அதே இதழில், இந்தச் சஞ்சிகை, இந்தியாவின் சமீபகால பொருளாதார நெருக்கடிகள் குறித்து பின்வருமாறு எழுதியிருந்தது.

"தகுதி வாய்ந்த மத்திய வங்கி ஒன்றிருப்பதனாலும், நாடு அதன் உள்ளுணர்விலேயே பணவீக்கத்தை வெறுத்து வருவதனாலும் இந்தியாவின் பேரண்டப் பொருளியல் கொள்கைகள் - குறிப்பாக, மூன்றாவது உலகின் தரநிர்ணயங்களின் அடிப்படையில் நோக்கும் போது - வெற்றிகரமானவையாக அமைந்துள்ளன. பணவீக்கம் குறைந்த மட்டத்தில் நிலவி வந்துள்ளதுடன், (ஏனைய பல வளர்முக நாடுகள் 1970 களில் வெளிநாட்டுக் கடன் பொறியில் சிக்குண்டது போல) இந்தியா கடன் பொறியில் சிக்கிவிடவில்லை. கடந்த பத்தாண்டு காலத்தில் இந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. அரசாங்கம் அதிகளவில் கடன்பட்டுள்ளது; பணவீக்க விகிதம் இரட்டை இலக்கப் புள்ளிகளுக்கு உயர்ந்து சென்றுள்ளது; வர்த்தக இடைவெளி அதிகரித்துள்ளது. உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்கள் திரண்டு வந்துள்ளன. கடந்த மாதத்தில், அவசரகால பண உதவியொன்றை பொருளாதாரத்துக்குள் பாய்ச்சுவதற்கு ஜப்பான் இணங்கியது. இதற்கு முன்னர், இறக்குமதிகளை நிதிப்படுத்தக் கூடிய நாட்டின் அன்னியச் செலாவணி வளம், வெளியார் மதிப்பீடுகளின் படி, வெவ்வேறு அளவுகளில் காணப்பட்டது. பல நாட்களுக்குப் போதிய அன்னியச் செலாவணி உள்ளதென சில மதிப்பீடுகள் தெரிவித்ததுடன், வேறு சில மதிப்பீடுகளின்படி 20 நிமிடங்களுக்குப் போதுமான அன்னியச் செலாவணியே நாட்டின் கைவசம் இருந்தது".

1991 ஜூன் 1ம் திகதியன்று நாட்டின் அன்னியச் செலாவணி ஒதுக்குகள் 2811.53 கோடி ரூபாவாக இருந்தன. இது நான்கு வாரங்களுக்கான இறக்குமதிகளை நிதிப்படுத்துவதற்கு மட்டுமே போதுமானதாகும். ஆனால் "எக்கனமிஸ்ட்" சஞ்சிகை சரியாகவே சுட்டிக் காட்டுவது போல, இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் நிலமை மிகவும் மோசமானதாக இருந்துள்ளது. அப்போது ஒதுக்குகள் 2500 கோடி ரூபா மட்டத்தை விடவும் குறைவாக இருந்தன.

இந்தியாவின் உத்தியோக பூர்வமான வட்டாரங்கள், இந்த நெருக்கடி நிலையை பெருமளவுக்கு வளைகுடாப் போரின் விளைவாக ஏற்பட்டதென்று கூறி வருகின்றன. போரினையடுத்து நாட்டின் இறக்குமதிச் செலவினம் உயர்ந்து சென்றுள்ளதென்று கூறப்படுகின்றது. நிபுணர்கள் மற்றும் நெருக்கமான பொருளாதார அவதானிகள் போன்றோரின் கருத்துக்களின் பிரகாரம், இந்த விளக்கம் தப்பிக் கொள்வதற்கு வசதியானதொரு சாக்காக மட்டுமே இருப்பதாகத் தெரிகிறது. கடந்த பல வருட காலமாக, இந்த நெருக்கடி மெதுவாக, ஆனால் பிடிவாதமாக தோன்றி, வளர்ந்து வந்துள்ளதென புகழ்பெற்ற பொருளியலாளரான டாக்டர் அருண்கோஷ் குறிப்பிடுகிறார். வெளிநாட்டு நிதிகளில் நாம் தங்கியிருக்கும் நிலையை அதிகரிக்கும் விதத்திலான, சில தொடரான கொள்கை வழிகளை நாடு பின்பற்றி வந்துள்ளதுடன், திருப்பிச் செலுத்த வேண்டிய அவசியத்தை எவ்விதத்திலும் பொருட்படுத்தாது அது வெளிநாட்டுக்கடன்களை பெற்று வந்துள்ளதென்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஏழாவது திட்டக்காலத்தில் (1985/86 தொடக்கம் 1989/90 வரையில்) சென்மதி நிலுவைப்பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவீதம் வரையில் உயர்வானதாக இருந்தது. ஆறாவது திட்டகாலத்தில் இது 1.2 சதவிகிதமாக மட்டுமே இருந்து வந்தது. 1989/90 இல் ஏற்றுமதிகள் 15 சத விகிதத்தினால் வளர்ச்சியடைந்திருந்த போதிலும், சென்மதி நிலுவைப் பற்றாக்குறை 2.7 சதவிகிதமாக இருந்தது. இறக்குமதிகளுக்கான

கொடுப்பனவுகள் இடையறாது அதிகரித்து வந்தமையே இதற்கான காரணமாகும். (இந்தியாவின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் சுமார் 30 சதவிகிதத்தை கடன் மீளச் செலுத்துதல் தொடர்பான கடப்பாடு அடித்துச் செல்கிறது என்பதனை நாம் மறந்துவிடலாகாது. இதனுடன் இணைந்த வகையில், நாட்டுக்குள் வரும் மூலதன உட்பாய்ச்சல் அநேகமாக நின்றுவிடுமளவிற்கு குறைந்து போயுள்ளதும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் வெகுவிரைவில் தீர்ந்து போவதற்கு வழிகோலியுள்ளது). உள்ளூர்ச் சந்தைக்கென ஆடம்பரமான நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் பெரிய அல்லது நடுத்தரஅளவு உற்பத்தியாளர்களின் நலன் கருதி பெரும்பாலான மூலதனப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மேலும், பாதுகாப்பு உபகரணங்கள், விமானங்கள் போன்றவையும் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. எண்ணெய் இறக்குமதிகள், இரசாயன உரவகைகள் மற்றும் உண்ணத்தக்க எண்ணெய் வகைகள் போன்றவற்றின் இறக்குமதிகள் இறக்குமதிச் செலவினத்தின் கணிசமான பகுதியைப் பெற்றுக்கொள்கின்றன. சாத்தியமான உச்ச மட்டம் வரையில் இறக்குமதிகளைக் குறைத்து விடுவதே இதற்குள்ள ஒரே வழியாகும். ஆடம்பர நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கென இறக்குமதி செய்யப்படும் உள்ளீட்டுப் பொருட்களின் அளவை குறைத்து விடுவதற்கு யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், மூலதனச் செறிவும், வலுச்செறிவும் கொண்ட உற்பத்தி முறைகளை ஊழியச் செறிவு கொண்ட உற்பத்தி முறைகளாக மாற்றியமைக்க வேண்டுமென்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. பாரியமட்ட உற்பத்தியாளர்கள் தமது இறக்குமதித் தேவைகளை குறைத்துக் கொள்ளும் அதே வேளையில், ஏற்றுமதிகளுகூடாக வெளிநாட்டுச் செலாவணித் தேவைகளைச் சம்பாதித்துக் கொள்ளுமாறு தூண்டப்படுதல் வேண்டும். தற்சார்பு நிலையினை ஊக்குவிக்கும் நிலையிலான, பல நீண்டகால இயல்புகொண்ட வழிமுறைகள் உள்ளன. எனினும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக நிதியமைப்புக்களைச் சேர்ந்த அதிகாரிகளைப் பொறுத்த வரையில் இந்தப் பதம் எந்த முக்கியத்துவத்தையும் தரவில்லை. இந்தியப் பொருளாதாரத்தில் காணப்படும் கட்டுப்பாடுகளை முற்றுமுழுதாக ஒழித்து, இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதிலேயே இவர்கள் குறியாக உள்ளனர். அதே வேளையில், ஐக்கிய அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகள் முழு அளவு பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி வருவதுடன், தகைமைபெற்ற இந்தியப் பொருட்கள் தமது சந்தைகளுக்குள் நுழைவதை அவை தடுத்தும் வருகின்றன.

சர்வதேச நாணய நிதியக் கடன்களுடன் இணைந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், இந்தியப் பொருளாதாரத்தில் காணப்படும் நெருக்கடி மேலும் தீவிரமடைய முடியும். இதன் விளைவாக, மூலதனப் பொருட்துறையில் வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகக்கூடும். அத்துடன், இந்நெருக்கடியின் சுமை ஒழுங்கமைந்த துறையிலிருக்கும் தொழிலாளர்களின் மீதே விழ முடியும். இந்த நிலையில், மிகுந்த விழிப்புணர்ச்சி கொண்ட இந்தியப் பொதுஜன அபிப்பிராயம், இத்தகைய நிபந்தனைகள் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடனேயே செயற்படும். குறிப்பாக, கிழக்கு ஐரோப்பாவில் முன்னர் சோஷலிஸ நாடுகளாக இருந்த இடங்களில் சமூக சேமநல நடவடிக்கைகள் துரிதமாக அகற்றப்பட்டு வருவதன் விளைவான மனக்கசப்பு நிலைக்கு இது மேலும் உரமூட்டுவதாக அமையும். இந்தச் சூழ்நிலையில், நாட்டின் புதிய நிதியமைச்சராக உலகப் புகழ் பெற்ற பொருளியலளாரான டாக்டர் மன் மோகன் சிங் நியமனம் செய்யப்பட்டிருப்பது ஓரளவுக்கு ஆறுதல் தரும் ஒரு விஷயமாகும். மூன்றாவது மண்டல நாடுகளிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட தெற்கு ஆணைக்குழுவின் செயலாளர் நாயகமாகவும் கலாநிதி சிங் பணிபுரிந்துள்ளார். எனவே, இந்தப் பின்னணியில் சர்வதேச நாணய நிதியக் கடன்கள் தொடர்பான நிபந்தனைகள், அவை இந்தியாவின் தேசியக் குறிக்கோள்களுடன் இணங்கிச் செல்லக்கூடியதாக இருந்தால் மட்டுமே நிறைவு செய்யப்படக்கூடும்.

இந்தப் பொருளாதார நெருக்கடி மிக விரிவான நிதி நெருக்கடியொன்றை எடுத்து வந்துள்ளது. இந்த நிலையில் அரசாங்கச் செலவினங்களை கடுமையாக வெட்டிவிட வேண்டியுள்ளதுடன், உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டுவதற்காக பல்வேறு வகைப்பட்ட புதுமை நோக்கிலான நடவடிக்கைகளையும் கண்டறிய வேண்டியுள்ளது. வேளாண்மைத் துறையின் உபரிகளை உறிஞ்சி எடுப்பதும், பேரளவில் செல்வங்களைத் திரட்டிக் கொண்டிருக்கும் குபேரர்களிடமிருந்து, மிகவும் செயற்தாக்கமுள்ள வரி அறவீட்டு முறைகளுக்கூடாக செல்வத்தைத் திரட்டி எடுப்பதும் இவ்வேளையில் நாம் மிக முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியுள்ள வழிமுறைகளாக உள்ளன. இத்தகைய முயற்சியொன்றை மேற்கொள்வதற்கான அரசியல் விருப்பும், திடசித்தமும் இன்றைய அரசாங்கத்துக்கு உள்ளதா என்பது மற்றொரு விஷயமாகும்.

எவ்வாறெனினும், இந்த நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு, மிகக் கடினமான தெரிவுகளை பயன்படுத்தவேண்டியிருக்குமென்று அரசாங்கம் வெளிப்படையாகக் கூறியிருப்பதானது, அது இந்த விஷயத்தில் காட்டும் அக்கறையின் தீவிரத்தினையே வெளிப்படுத்துகிறது. சந்திரசேகர் ஆட்சியிலும் கூட, இந்திய ஒதுக்கு வங்கி வர்த்தக மிகையை அடையும் நோக்கிலும், பெறுமதி மிக்க வெளிநாட்டுச் செலாவணியை சேமித்துக் கொள்ளும் நோக்கிலும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல கட்டாய நடவடிக்கைகளை அறிவித்தது. எனினும், இது ஒரு குறுங்கால நோக்கிலான அணுகுமுறையாகவே இருந்தது. வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு, சந்திரசேகர் அரசாங்கம் மேற்கொண்ட மற்றுமொரு கடைசிநேர துணிகர நடவடிக்கை, பறிமுதல் செய்யப்பட்டிருந்த 20 தொன் தங்கத்தை அடகு வைத்து 400 கோடி ரூபா திரட்டிக் கொண்டதாகும். திரு. பி. வி. நரசிம்மராவ் தலைமையிலான புதிய அரசாங்கம், அடுத்த சில மாதங்களில்

இந்தத் தங்கத்தை திரும்பப் பெறுவ தனை உறுதி செய்யும் பொருட்டு, போதியளவு வெளிநாட்டுச் செலாவ ணியை ஈட்டிக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரி வித்துள்ளது.

பொருளாதார முனையில் காணப் படும் அறைகூவல்களை வென்றெடுப் பதில் புதிய அரசாங்கத்துக்குள்ள தீவிரமான அக்கறை, டாக்டர் மன் மோகன் சிங் அவர்களை நிதி அமைச் சராக நியமனம் செய்த நடவடிக்கையி லேயே தெளிவாகத் தெரிகிறது. டாடக்டர் சிங், கடுமையான தெரிவுகள் குறித்து குறிப்பிட்டுள்ளது மட்டுமன்றி நிதிசார் ஒழுக்காற்றினை வலியுறுத்து வதில் தாம் திடசங்கற்பம் பூண்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளார். இந்த நிதிசார் கட்டுப்பாடு, விலைகளை ஸ்திரப்படுத்தி, மூன்றாண்டு காலத்தில் பணவீக்கத்தை 3–4 சதவிகிதம் வரை யில் குறைத்துவிட முடியுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**துர்நிர்வாகம்**

இந்தியா இன்று எதிர்நோக்கியுள்ள பல பரிமாணங்களைக் கொண்ட இந்த நெருக்கடி, பெருமளவிற்கு கடந்த காலத்தில் இடம்பெற்றுவந்த துர்நிர் வாகத்தின் விளைவாகவே தோன்றி யுள்ளதென்று கூறலாம். குறிப்பாக, 1984–ம் வருட மக்களவைக்கான தேர் தலின் போது, நாடு மிக உறுதியான ஒரு அரசாங்கத்துக்கு, இதுவரை கால உச்சமட்டத் தொகுதிகளைப் பெற்றுக் கொடுத்தது. அப்போதைய ஆளும் கட்சிக்கிருந்த மிதமிஞ்சிய இந்தப் பெரும்பான்மை, அக் கட்சியின் தலைவர் எவ்வித அச்சமுமின்றி தான் தோன்றித்தனமாக நடந்து கொள்வ தற்கும் எதிர்க்கட்சிகளை மிதித்துத் துவம்சம் செய்து விடுவதற்கும் வகை செய்தது. அக்கட்சி, நிகழ்வுகளுக்கு, தான்தோன்றித்தனமான எதிர் விளைவு களைக் காட்டியதுடன், குறிப்பாக, 1986 –க்குப் பின்னர் எத்தகைய திட்டவட்டமான கொள்கை நோக்கு களையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், அது, அதேவேளையில், தேசிய ஒற்றுமைக்கு உலைவைக்கக் கூடிய வித்தில் விஷயங்களை குழப்பி அடித்தது. இலங்கைக்கு இந்திய அமைதிப் படையை அனுப்பிய நட வடிக்கை இந்த வகையைச் சேர்ந்த தாகும். ஊழல் மிக உயர்ந்த மட்டம் வரையில் வியாபித்திருந்தது. அத் துடன், பல்வேறு அரசியல் கட்சிகளி லும் இயங்கி வந்த செல்வாக்கு மிக்க அதிகார தரகர்களின் நடவடிக்கைகள், அரசியல் கட்டமைப்புக்குள் குற்ற நட வடிக்கைகளை புகுத்துவதற்கு வழி கோலின. (சமீபத்தில் முடிவடைந்த மக்களவைக்கான தேர்தலின் போது, சமூக விரோதிகள் இந்தத் தேர்தலில் பங்கேற்றிருப்பதனை வேட்பாளர் பட்டியல்களில் இருந்து அறிய முடி கிறது). ஒருபுறம், பேரளவில் வகுப்பு வாதக் கலவரங்கள் வெடித்துக் கிளம் பிய அதே வேளையில், இதனுடன் இணைந்த வகையில், சாதி உணர்வு களும் திடீரென்று எழுச்சியடைந்தன.

சமீபத்தில் நடந்து முடிந்த மக் களவைத் தேர்தல்களின் போது, இது வரை காலமும் நாடு கண்டிராத வன் முறைச் சம்பவங்களும், படுகொலை களும் நிகழ்ந்தன. எனினும், இவற்றால் தேர்தல் நிகழ்வுப் போக்கினை நிறுத்தி விட முடியவில்லை. தேர்தல் முடிவு கள், எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையைக் கொடுக்க வில்லை. எந்த ஒரு கட்சியும் நாட்டை ஆளும் தகுதியைப் பெற்றிருக்கவில்லை என்ற நெருக்கடியின் வெளிப்பாடா கவே இதனை நோக்கவேண்டியுள்ளது. காங்கிரஸ் கட்சி தலைமையிலான சிறு பான்மை அரசாங்கம், நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பல முனைகளிலான சவால்களுக்கு முகங்கொடுப்பதில், தேசிய கருத்தொற்றுமையும், கூட்டு நடவடிக்கையும் அவசியமாகவுள்ளன என்ற காலத்தின் கட்டாயத்தை தெளி வாக உணர்ந்து கொண்ட நிலையில் பதவியேற்றுள்ளது. இந்திய அரசியல் கட்டமைப்பை எதிர்நோக்கியுள்ள பல பரிமாணங்களிலான நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், இந்திய ஜனநாய கத்தைப் பலப்படுத்துவதற்கும் இத் தகைய ஒரு அணுகு முறையினால் மட்டுமே முடியும். பெருமளவுக்கு அனுசரித்துச் செல்லக்கூடிய ஓர் ஆளுமையைக் கொண்டிருக்கும் திரு. நரசிம்மராவ், இத்தகைய அணுகுமுறை ஒன்றை மேற்கொள்வதற்கு மிகப் பொருத்தமான ஒரு தலைவராக இருக்கிறார்.

(35 ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கொள்கைத் தெரிவுகளிலும், கொள்கை முன்னுரிமைகளிலும் தனி நபர்கள் வகித்து வரும் பங்கின் முக்கி யத்துவம் குறைந்து வருவதுடன், அது, இந்திய அரசியல்–பொருளாதாரத்தில் கட்டமைப்பு நிர்ப்பந்தங்களுக்குள் மிகத் தெளிவான கொள்கைத் தெரிவுகளை எடுத்துவர முடியும் புதிய பிரதம மந்திரி திரு. நரசிம்மராவ், பேட்டி யொன்றின் போது, "அரசியல் என்பது சாத்தியமான ஒரு கலை" என்று குறிப்பிட்டிருந்தார். வருங்கால இந்திய அரசியல் குறித்த இந்த வாசகம், நேரு யுகத்தின் இலட்சியவாதம், இந்திரா காந்தியின் ஏதேச்சாதிகாரம் ராஜீவ் காந்தியின் 21 ஆம் நூற்றாண் டுக்கான தொழில்நுட்பப் பாய்ச்சல் போன்ற நிலைகலிலிருந்து இந்திய அரசியலை தீவிரமாக அப்பால் நகர்த்துவதனையே குறிக்கின்றது. உடனடி எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய எந்தொரு பிரதம மந்திரியும் தனக்கு முன்னால் பதவி வகித்தவர் களுக்குக் கிடைத்த எந்தத் தெரிவு களையுமே பெறமாட்டார்.

சமகால இந்திய அரசியல்–பொரு ளாதாரத்தின் குறித்துரைக்கப்பட்ட அமைப்பு ரீதியான நிர்ப்பந்தங்களை இது எமக்கு எடுத்து வருகிறது. முத லில், இந்தியாவின் மிகப் பிரமாண்ட மான சமூகப் படுதாவில் பாரதீய ஜன தாகட்சி போன்ற மறுமலர்ச்சிச் சமூக அடையாளங்களின் அரசியல் வலி யுறுத்தல் மிக உக்கிரமாக, காணப் படுகிறது. இந்த பின்னணியில், உடனடி எதிர் காலத்தில், காங்கிரஸ் கட்சியைப் போன்ற மற்றுமொரு தேசிய கட்சியின் எழுச்சி ஏற்படுமென எண் ணுவது யதார்த்தத்துக்குப் புறம்பான தாகும். காங்கிரஸ் கட்சி இப்பொழுதும் கூட, குறிப்பிட்ட சில பிராந்தியங்களில் மட்டும் திரண்ட செல்வாக்கைக் கொண் டிருக்கும் நிலைக்குக் கீழிறக்கப்பட்டி ருக்கிறது. ஏனைய பல கட்சிகளை (இரு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் சேர்த்து), ஒன்றை மற்றொன்றிலிருந்து பிரித்து சிறப்பாக அடையாளங்கண்டு கொள்ள முடியாதுள்ளது, அத்துடன், ஒவ் வொரு கட்சியும் குறிப்பிட்ட சில பிர தேசங்களில் தனது முதன்மை நிலை யைப் பேணி வருகிறது. இந்து எழுச்சிக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி கூட இந்தியாவின் பிரத்தியேக மான மக்கள் தொகுப்புக்குள் தவிர்க்க

(49 ம் பக்கம் பார்க்க)

# பாசிச அச்சுறுத்தல்

சஞ்சய் கபூர்

*சஞ்சய் கபூர், பிரபல்யம் மிக்க ''பிளிட்ஸ்'' பத்திரிகையின் புதுடில்லி பணிமனையின் தலைவராவார்.*

அந்நிய செலாவணி நெருக்கடியிலிருந்து விடுபடும் பொருட்டு சந்திரசேகரின் முன்னைய காபந்து அரசாங்கம் சூரிச் வங்கியில் பறிமுதல் செய்யப்பட்ட 20 தொன் தங்கத்தை ஈடு வைக்க எடுத்த முடிவானது, ஒரு வகையில் இந்திய நெருக்கடியின் பல 'பரிமாணத்தன்மையினை' எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

உலகின் பல பாகங்களிலிருப் போருக்கும் மஞ்சள் நிறமான இந்த துங்கம் மிகப் பெறுமதி வாய்ந்த உலோகமாக இருக்கலாம். ஆனால், இந்தியாவிலுள்ள பெருந்தொகையானோருக்கு இந்த துங்கத்தை உடமையாக வைத்திருப்பது என்பது அவர்களது சுயமரியாதைக்கும், சமூகத்தில் அவர்களுக்கிருக்கும் அந்தஸ்துக்கும் அடையாளம் எனலாம். எனவே, துங்க விற்பனையானது, அதுவும் சாதாரண இந்தியர்களைப் பொறுத்தவரை வங்குரோத்து நிலையையும், சுயமரியாதை இழப்பினையுமே வெளிக்காட்டும் ஒன்றாக கருதப்படுகிறது. பொருளாதாரப் பின்னணியில் எடுக்கப்பட்ட இந்த முடிவு, ஒருவகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கலாமெனினும், நிச்சயமாகவே இதன் தாக்கம் எதிர்மறையானதான ஒன்றாகவே, அரசியல் ரீதியில் பாதிப்பினை ஏற்படுத்துமொன்றாகவே கருதப்படவேண்டும். சுருக்கமாகக் கூறப் போனால், தங்க விற்பனையானது, இன்றைய நிலையில் நாடு எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார, அரசியல் நெருக்கடிகளின் உச்சகட்ட வளர்ச்சியாகவே கொள்ளப்பட வேண்டும்.

ராஜீவ் காந்தி கொலை, உக்கிரமான தேர்தல் வன்முறைகள் போன்றவை காரணமாக, உலகின் மிகப் பெரிய ஜனநாயகம், எதேச்சாதிகாரத்துக்கோ இராணுவ ஆட்சி முறைக்கோ இரையாகிப்போய்விடவில்லையென்றும், இவற்றைத் தாக்குப் பிடித்து, மீண்டுள்ளதுதானேயென்றும் தீவிர நம்பிக்கையாளர்கள் சிலர் வாதிடலாம். ஆனால், இந்த ஜனநாயகம், சமூக, பொருளாதார, அரசியல் சீரழிவுகளுக்கு எல்லாம் தாக்குப் பிடிக்கக் கூடிய வலிமையானதுதானா? சீரழிவு, பின்னடைவு சக்திகளை தூர விலக்கி, இந்த ஜனநாயகம் நவீன இந்தியாவொன்றினை உருவாக்குவதில் உதவ முடியுமா?

ஜனநாயகம் குறித்த இந்திய புத்திஜீவிகளின் மனப்போக்கு, இன்றைய காலகட்டத்துக்கு ஒவ்வாத, பொருந்தாத ஒன்றாகவும் கருதப்படலாம். ஆனால், இந்தியாவைப் போலன்றி, மற்றைய நாடுகளில் அண்மைக்காலத்தில் தலைகாட்டிய இந்த ஜனநாயகப் போக்கு, இந்தியாவுக்கு நீண்டகாலப் பரிச்சய மிக்கதொன்றாகும். ஜனநாயகத்தின் முழு அளவிலான போக்குகள் மீது ஏற்படக்கூடியதான அதிருப்தி, ஆரோக்கியகரமான நிலைமைகளை குலைப்பதுடன், வேண்டத்தகாத அழிவுகரமான நிலைமைகளுக்கு இட்டுச் செல்லவும் கூடும். ''ஜனநாயகம் சலிப்புற்ற நிலையில் எதேச்சாதிகாரம் தலைதூக்கும்'' என்ற செஸ்ரர்டன் கூற்று ஒரு வேளை சரியாகவும் இருக்கக் கூடும்.

ஜனநாயகத்தைப் பொறுத்தவரையில், மக்களது சிந்தனைப் போக்குகளை அளவிட தேர்தல் காலங்கள் மிக உகந்தனவென்பது மாத்திரமன்றி, எதிர்காலத்தில் சமூகப் போக்குகள் எத்தகையனவாக அமையலாமென்பதையும் எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன.

இந்த அசாதாரணமான, நீண்ட கோடை காலத்தேர்தலில் அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்கள் மூலம் (இவர்களுட் பலர் கிரிமினல்கள்) சகல வழிகளிலும் வாக்காளர்களைக் கவர முயன்றதில் பலியாகிப் போயுள்ளது ஜனநாயகமே. 1991 தேர்தலில், மூன்று வேறுபட்ட பிரச்சினைகளை முன் வைத்து காங்கிரஸ், ஜனதா தள், பி.ஜே.பி. ஆகிய அரசியல் அமைப்புக்கள் மும்முனைப் போட்டா போட்டிகளில் இறங்கியிருந்தன. காங்கிரஸ் – ஸ்திரப்பாடு, ஜனதா தள் –சமூக நீதி, பி.ஜே.பி. – ராமராச்சியம். இந்திய ஜனநாயகத்திலேயே, மிக மோசமான காலகட்டமொன்று பாரதீய ஜனதா கட்சி போன்ற இனவாத கட்சிகளது ''ராம ராச்சியம் உருவாக்குவது'' என்ற வெற்றுத்தனமான கோஷங்களினால் ஏற்படலாயிற்று. இந்து பாரம்பரிய உணர்வுகளைக்கிளறி, அதன் மூலம் தேர்தலில் வெற்றிபெற முற்பட்டதானது யதார்த்தபூர்வமான பிரச்சினைகளை பின்தள்ளியதுடன், வேண்டாத பிரச்சினைகள் வடிவில் புதிய நெருக்கடிகள் தோன்றவும் வழிவகுத்தது எனலாம். (இத்தகைய குணாம்சம் குறித்து ''ஆசிய நாடகம்'' என்பதில் மிர்டால் தத்துவார்த்த விளக்கம் ஒன்றினைக் கொடுத்துள்ளார்.)

ஐந்து வருட காலகட்டத்தில், சுமார் 17 மாதங்கள் கூட ஆகாத துரதிர்ஷ்டமிக்கதான சூழ்நிலைகளில் நடாத்தப்பட்ட தேர்தல்களில் ஒரு கட்சியுமே கூடிய பெரும்பான்மையினை பெற முடியாத நிலையில், பாராளுமன்ற ஜனநாயகத்தினின்றும் பிரிக்க முடியாத பல்வேறு பலவீனமான குணாம்சங்களே வெளிப்பட்டன. 1989 ல் நடாத்தப்பட்ட கடைசித் தேர்தலில் தேசிய முன்னணி – இடது சாரிகள் – பாரதீய ஜனதா கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய எதிர்க்கட்சி கூட்டணியிடம் காங்கிரஸ் தோல்வி கண்டது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் பி.ஜே.பி.க்குமிடையே கூட்டு எதுவுமில்லாத போதிலும், காங்கிரஸ் மீதுள்ள வெறுப்பின்காரணமாக அவற்றுக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒன்று ஏற்பட வாய்ப்பளித்தது. (ஜனதா தள் இதில் இரண்டுக்கும் பயன்படுத்தப்பட்டது.)

சாதி இனரீதியான அடிப்படை

யிலேயே இன்றும் இந்தியாவில் தேர்தல்கள் நடப்பதால் பிரதான காங்கிரஸ் அல்லாத கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வு ஏற்பட, அதனால் ஆளுங்கட்சியின் பரந்த தளம் குறுகிக் கொண்டது. மேலும் பல வருட காலமாக, காங்கிரஸ் – இடது அணியை ஆதரித்து வந்த மத்தியதர வர்க்கத்தினரின் ஆதரவினையும், ஊழல் பிரச்சினைகளை பிரதானமாக்கியதன் மூலம் எதிர்க் கட்சியினர் தமதாக்கிக் கொண்டனர்.

இந்த வருடம் நிலைமை முன்னையதைப் போல இருக்கவில்லை. வி.பி. சிங் அர்சாங்கம், இடதுசாரிகளினதும், வலதுசாரியான பி.ஜே.பி யினதும் முரண்பாடான நிலைப்பாடுகளை தீர்க்கத் தவறியதையடுத்து, ஜனதா தள்ளின் உடைவினை, தனியான, பெரிய கட்சியான காங்கிரஸ், வலுவாக ஆதரித்தது. இது வழமைக்கு மாறான ஒரு நிலைமையை உண்டு பண்ணியது எனலாம். ஆட்சியதிகாரத்திலிருந்த 54 எம். பிக்களை, வெளியேயிருந்து 200 எம். பிக்கள் ஆதரித்தனர்.

1979 தேர்தல் அனுபவம் ஒன்றினை மீண்டும் காங்கிரஸ் பயன்படுத்த முற்பட்டது. (இந்திராகாந்தி, சரண்சிங் அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவினை வாபஸ் பெற்றுக்கொண்டது.) இம்முறை முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் இல்லத்திற்கு வெளியே வேவு பார்த்த பிரச்சினை. இந்த தேர்தலுக்கு காங்கிரஸ் ஒரு வகையில் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தாலும், வலுவற்றதும், சின்னாபின்னப்பட்டதுமான எதிர்கட்சிகளிடமிருந்து அதிகளவு அனுகூலங்களை அதனால் பெற முடியவில்லை. *1979 ல் போலன்றி, 1991 ல்* வலதுசாரி பி.ஜே.பி யும், ஜனதா தள்ளும் காங்கிரஸ் தளத்தின் ஒரு பகுதியை மெள்ள மெள்ள சுவீகரித்துக் கொண்டு விட்டன. ஒடுக்கப்பட்டோர் (ஹரிஜனர்) சிறுபான்மையினர் (முஸ்லிம்கள்) மேல் சாதியினர் (பிராமணர்) ஆகியோரை உள்ளடக்கியதான காங்கிரஸின் பாரம்பரிய களம், பி.ஜே. பிக்கும், ஜனதா தளத்துக்கும் போய் விட்டது. சுருக்கமாக கூறப்போனால், இந்த இரு கட்சிகளுமே உணர்ச்சிகரமான பிரச்சினைகளான ராமராச்சியம், மண்டல் அறிக்கை அமுலாக்கம் ஆகியவற்றை பயன்படுத்தியதன் விளைவாக, எக் கட்சிக்குமே நிலையான பெரும்பான்மை கிடைக்காமல் போய் விட்டது. மேலும், ஊழல் குற்றஞ் சாட்டப்பட்ட காங்கிரஸ், நடு நிலையான பாதைக்குச் செல்ல முற்பட்டதனால், பரவலாக, அது இயலாமை கொண்டதென்று கருத இடமளித்தது.

தேர்தல் பிரச்சாரங்கள் சூடு பிடிக்க ஆரம்பித்ததும், நாட்டிற்கு ஜனநாயகத்தின் மீதிருக்கும் பேரவாவானது, ஒரு போதும் அதற்கு உதவப் போவதில்லையென்று தெட்டத் தெளிவாகி விட்டது. நிலையற்ற பாராளுமன்றமும், உறுதியற்ற, ஸ்திரப்பாடற்ற அரசாங்கமுமே இனி வரப்போகும் காலங்களில் நிலவும் என்பது உறுதியாகி விட்டது.

சிலவேளைகளில் கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியனில் நடக்கும் நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு, இந்தியாவிலும் இடதுசாரி சிந்தனைக்கு அடிவிழ ஆரம்பித்துமிருக்கலாம். இடதுசாரி இயக்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் இந்த படிப்படியான வீழ்ச்சி, வலதுசாரிகளுக்கு வாய்ப்பாக அமையும். தமது வெற்றியினை அவர்கள் உணரவும் ஆரம்பித்துள்ளனர். காங்கிரஸ் மீதிருக்கும் பாரம்பரியமான கவர்ச்சியும், குறிப்பாக இடதுசாரி புத்தி ஜீவிகளின் பால் இருக்கும் ஈடுபாடும், பேர்லின் சுவர் இடிந்ததிலிருந்து அருகி வருகிறது. பொருளாதார பிரச்சினைகளின் அதிகரிப்பு, மக்கள் வலதுசாரி பாரதீய ஜனதா கட்சி போன்றவற்றிற்கு இரையாகக் கூடிய வாய்ப்பினை உண்டு பண்ணியுள்ளது. இக்கட்சி, ஆட்சி செய்வதுடன் சமயம், ஒழுக்கம் என்பவற்றை இணைக்க முற்பட்டுள்ளது. இந்தியா சமய சார்பில்லாத நாடாக கூறப்பட்டு வந்த போதிலும், பொதுவாக மக்களுக்கு சமய சார்பின்மையின் முக்கியத்துவம் உணர்த்தப்படவில்லை. நாட்டு முன்னேற்றத்துக்கு அதன் தொடர்பு உணர்த்தப்படவில்லை. இதே வேளை பி.ஜே.பி, பெரும்பான்மை சமூகத்தினர் மனதில், சிறுபான்மையினர் அவர்களை விட சனத்தொகையில் மிஞ்சிவிடுவர் என்று கிலேசத்தை பரப்பி வருகிறது. இதனால் இரு சமூகங்களுக்குமிடையே அடிக்கடி கலவரங்கள் மூள, உறவில் பெருவிரிசல் ஏற்படலாயிற்று. பெருந்தொகைப் பணம் (மிக அதிக அளவில் செலவிடப்பட்ட தேர்தல் இதுதான்) செலவிடப்பட்ட போதிலும், மக்கள் உறுதியற்ற நிலையற்ற பாரளுமன்றமொன்றினையே தெரிவு செய்தனர்.

ராஜீவ் காந்தி கொலை இதனை முழுமையாக மாற்றிய போதிலும், சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில், எப்போதுமே ஏற்பட்டிராததொரு நெருக்கடி இப்போது ஏற்பட்டுள்ளது. மிகப் பெரிய அளவில் 1000 கோடி டொலர்களை அரசாங்கம் கடனாக பெற்றுக் கொள்ள முடிவெடுத்துக் கொண்டுள்ள போதிலும் (தற்போதைய பொருளாதார நெருக்கடியினை சமாளிக்கும் வகையில்) சர்வதேச நாணய நிதியம் வறிய மக்கள் எதிர்நோக்கும்) பிரச்சினைகளைத் தீர்க்க எந்த வகையில் உதவப் போகிறது என்பது குறித்து எவருக்குமே தெளிவாகத் தெரியவில்லை. சற்று வரலாற்றின் பக்கங்களை புரட்டிப் பாத்தால், சர்வதேச நாணய நிதியத்தின் பரிகாரங்கள் மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரத்தை எந்தளவுக்கு பாரதூரமாக சீரழித்துள்ளது என்பதனை நாம் கண்டு கொள்ளலாம்.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பாக அரசியல் கட்சிகள் வெவ்வேறு நிலைப்பாடுகளைவெளிப்படுத்தி வருகிற போதிலும், இன்றைய நெருக்கடியிலிருந்து நாடு மீள, எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகள் குறித்தும், அவைக்கிருக்கும் அக்கறையையும், ஈடுபாடுகளையும் பொறுத்தவரையில் ஒரு ஒருமைப்பாடும், இணக்கப்பாடும் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. வரப்போகும் காலங்களில் பொருளாதார பிரச்சினை காரணமாக பல்வேறு மட்டங்களிலும் புதிய, புதிய பிரச்சினைகள் தோன்றலாம். சர்வதேச நாணய நிதியம், தனது ஸ்திரப்பாடு தொடர்பான கொள்கைகளை அமுல்படுத்தும் வகையில், உணவு, உரங்கள் குறித்த மானியங்களை ஒழிக்கும் பட்சத்தில், லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ஏற்பட்ட கதி இந்தியாவுக்கும் ஏற்படக் கூடும்.

ஆனால், ஜனநாயகம் சலிப்புற்றதான ஒரு காலகட்டம் தோன்றியுள்ள தான இந்த நிலைமையில், பாரதீய ஜனதா கட்சி அல்லது இதைப் போன்ற

(49 ம் பக்கம் பார்க்க)

# சோவியத் யூனியன் : நேற்று இன்று நாளை மூன்று கண்ணோட்டங்கள்

## கடந்தகால தவறுகள் என்று அனைத்தையும் துடைந்தெறிந்து விட முடியாது

விக்டர் அல்க்ஸ்னிஸ்

**''கறுப்பு கர்னல்'' என்றும் அழைக்கப்படும் கர்னல் விக்டர் அல்க்ஸ்னிஸ் ஐ.சோ.சோ. குடியரசின் மக்கள் பிரதி நிதியாவர். 'சோயுஸ்'' குழுவின் தலைவரான அவர் கடுமையான நிலைப்பாடுகளை எடுப்பவர். என்பது பரவலாக அறிப்பட்ட ஒரு விஷயமாகும். அவருடன் இந்தப் பேட்டியை, நொவஸ்தி செய்தி நிறுவன பாராளுமன்ற அவதானியான பீலிக்ஸ் அலெக்சியேவ் நடத்தினார்.**

**கேள்வி :** இன்றைய சோவியத் யூனியன் எதிர்நோக்கியுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி, கம்யூனிச கருதுகோளின் தோல்விக்கு சான்று பகர்கின்றதா ? சோவியத் யூனியனின் சிதைவுக்கு யார் பொறுப்பு என நீங்கள் கருதுகின்றீர்கள் ? அதனைத் தடுக்கக் கூடியதாக இருந்ததா ?

**பதில் :** கம்யூனிச கருதுகோள் படுதோல்வி கண்டுவிடவில்லை என்பதனை மிக உறுதியாகக் கூறுவேன். இந்தக் கருதுகோள் பொதுவான மானிட விழுமியங்களையும், நீதிக்கும் சமத்துவத்துக்குமான மனிதனது தேடலையும் பிரதிபலிக்கும் ஒரு கருதுகோளாகும். ஆனால், நமது வழிமுறை தவறானது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய சோவியத் யூனியனில் நிலவி வரும் சமூக அமைப்பினை சொல்லின் முழு அர்த்தத்திலும் ஒரு சோஷலிஸ அமைப்பு என்று கூறமுடியாதுள்ளது. சோஷலிஸக் கருதுகோளை செயலில் விடும் பொருட்டு, நாம் எமது வழிமுறைகளை சீராக்கிக் கொள்ள வேண்டியுள்ளதுடன் புதிய சோஷலிஸ மாதிரியொன்றையும் கண்டறிய வேண்டியுள்ளது. அவ்வாறு செய்தால் மட்டுமே, இந்த இக்கட்டான நிலையிலிருந்து நாம் மீண்டு வர முடியும். இப்பொழுது அனைத்துக்குமே கடந்த கால தவறுகள் மீது பழி சுமத்தி விடுவது சரியான ஒரு செயலாக இருக்கமாட்டாது. இன்றைய அரசியலிலும், பொருளாதாரத்திலும் மாபெரும் குழப்பத்தையும் அராஜக நிலையையும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். நிலைமைகள் இவ்விதம் இருண்ட நிலையில் காணப்படுவதற்கு மிக்காயில் கொர்பச்சேவ் மற்றும் அவரது குழுவினர்கள் ஆகியோர் மீதே பழியைச் சுமத்த வேண்டும் என்பது எனது கருத்தாகும். அவர்களுடைய பெரிஸ்த்ரோய்கா சித்தாந்தம் தோல்வியில் முடிந்துள்ளது.

**கேள்வி:** நீங்களும் ஒரு தலைவராக செயற்பட்டு வரும் மக்கள் பிரதி நிதிகள் குழு - சோயுஸ் குழு - கொர்பச்சேவின் இராஜினாமாவை கோரியுள்ளது. இக்குழு மாற்று வேட்பாளர் எவரையேனும் உத்தேசித்துள்ளதா?

**பதில் :** கொர்பச்சேவ் பிழையான வழிகளிலான சீர்திருத்துங்களை தெரிவு செய்துள்ளார் என்பதனால் அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தோம். கொர்பச்சேவ் ராஜினாமாச் செய்யுமிடத்து, ஜனாதிபதி பதவி காலியாகவே இருக்கும். சோவியத் யூனியனின் உப ஜனாதிபதி சுப்ரீம் சோவியத்துக்களின் தலைவர் அல்லது பிரதமர் ஜனாதிபதியின் பணிகளுக்கு பொறுப்பாக இருப்பார். இந்த நிலை மாறும் காலகட்டத்தின் போது, ஒரு சிலர் நாட்டினை, தற்காலிக அடிப்படையில், ஆனால் சரியான திசை வழியில் நடாத்திச் செல்லுதல் வேண்டும். அரசியல் சாசனத்திற்கு இசைவானதான பிறிதொரு சாத்தியமும் உண்டு. தேசிய நல்லிணக்கத்திற்கான கமிட்டி என்றழைக்கக் கூடிய கூட்டான அதிகாரக் குழு ஒன்றை நிறுவுவது அம்முறையாகும்.

**கேள்வி :** இந்நாட்டில் சர்வாதிகார முறையொன்று தோன்றுவதற்கு சாத்தியமுள்ளது என்று எட்வட் செவனால்ட்ஸே குறிப்பிட்டுள்ளார். இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ?

**பதில் :** ஆம்; இக்கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆங்காங்கே வளர்ந்து வரும் குழப்ப நிலைமைகளும் அராஜகமும் நிறுத்தப்படாவிடின் சர்வாதிகார அமைப்பொன்று தோன்றுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். இடதுசாரிகளும், வலதுசாரிகளும் அதே போல தீவிரவாதிகளும் பழமை பேணுவோரும் ஒடுக்கப்பட முடியும். எனவே சோயுஸ் குழு, ஜனநாயக கட்டமைப்புக்குள் இன்றைய சிக்கலை தீர்த்து வைக்க விரும்புகிறது.

**கேள்வி :** சந்தைப் பொருளாதாரத்திற்கான நிலைமாற்றம், நாட்டில் இதுவரை காலமும் நிலவி வந்த ஆணையிடும் பொருளாதார முறையை முடிவுக்கு கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த எழுபத்திநான்கு வருட காலமாக செயற்பட்டு வந்த திட்டமிட்ட பொருளாதாரம் ஒரு தவறு என்று நீங்கள் கருதுகின்றீர்களா ?

**பதில் :** சோவியத் பொருளாதாரத்தின் இன்றைய துக்ககரமான நிலைமை, திட்டமிட்ட பொருளாதாரத்தின் தவறுகளினால் தோன்றியது என பொதுவாக கருதப்படுகிறது. ஆனால், செஞ்சேனை, ஒன்றன் பின் ஒன்றாக தோல்விகளை சந்தித்துக் கொண்டு வந்த 1941 மற்றும் 1942 ஆகிய ஆண்டுகளை இங்கு நான் நினைவு கூர விரும்புகிறேன். அந்நாட்களில், சோவியத் பொருளாதாரம் அழிவின் விளிம்பில் நின்றிருந்தது. ஆனால், திட்டமிட்ட பொருளாதாரத்தின் உதவியால், பாரிய கைத்தொழில்

அமைப்புக்களை சோஷயத் யூனியனின் கிழக்குப் பிராந்தியங் களுக்கு மாற்றிக்கொள்ளக் கூடிய நிலையில் நாம் இருந்தோம். அத்துடன், நவீன இராணுவ உபகரணங்களை பாரிய அளவில் உற்பத்தி செய்யக் கூடியதாகவுமிருந்தது. அக் காலத்தில் எம்மிடம் குறைந்த மின்சார சக்தியும், சொற்ப உருக்கு அலுமினியமுமே இருந்தன. ஆனால் இந்த மட்டுப் பாடுகளையும் மீறி நாம் ஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலையிலும், இராணுவத்துக்கு அவசியமான அனைத்து விதமான பொருட்களையும் வழங்கக் கூடியதுமான நிலையிலும் இருந்தோம். அதே போல் பிந்திய 1950 களிலும் 1960 களின் தொடக்க காலத்திலும் சோவியத் கைத்தொழிலின் வருடாந்த மிகை 15 சதவீதம் வரையில் இருந்து வந்துள்ளது. உண்மையிலேயே, இக்காலப் பிரிவை திட்டமிட்ட சோஷலிஸ பொருளாதாரத்தின் பொற்காலம் என வர்ணிக்க முடியும். திட்டமிட்ட பொருளாதாரத்தையோ அல்லது சந்தைப் பொருளாதார கட்டமைப்பையோ நான் இங்கு பூஜிக்கப்போவ தில்லை. இறுதியில், நாம் சக்தி வாய்ந்த அரசுதுறையொன்றைக் கொண்ட கலவை மாதிரியொன்றையும், திட்டமிட்ட பொருளாதார கோட்பாடுகளில் தங்கியிருக்கும் அமைப்பினையும், தெரிவு செய்து கொள்வோமென நான் நினைக்கிறேன். இதற்கு இணையாக விரிவான சந்தைத்துறையொன்று எழுச்சியடையும் ; அத்துடன் அது தன்னைத்தானே ஒழுங்கு படுத்திக்கொள்ளும் விதி முறைகளையும் பின்பற்றும்.

**கேள்வி** : சோயுஸ் மக்கள் பிரதிநிதிகள் குழு, அவசர கால நிலைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்பதனை வலி யுறுத்தி வருவது ஏன் ? அது, மீண்டும் கம்யூனிசக் கட்சியின் சர்வாதிகாரத்துக்கு வழிகோல முடியும் என நீங்கள் எண்ண வில்லையா ?

**பதில்** : சரிந்து வரும் சோவியத் பொருளாதாரத்தை சிகிச்சை மூலம் குணப்படுத்த முயல்வதில் எந்தப் பயனுமில்லை. அதி விசேட வழிமுறைகள் மூலம் மட்டுமே இந்த நிலைமையை திருத்தியமைக்க முடியும். ஜனநாயக வட்டாரங்களிலும் இந்த அணுகுமுறையே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குடியரசுகளின் தலைவர்கள் சார்பாக, பொருளாதாரத்தின் அடிப்படைத் துறைகளில் விசேட செயற்பாட்டு நிலைமைகளை அறிமுகப் படுத்துவதற்கான ஜனாதிபதியின் தீர்மானமும், இணக்கமும் அதிவிசேட வழிமுறைகளுக்கு மாறிச் செல்வதனையே காட்டு கின்றன. நாங்கள் இந்த வழி முறைகளை பின்பற்றாவிட்டால் இவ்வருட முடிவில் நாட்டில் மூன்று கோடி வேலையற்ற மக்கள் இருப்பார்கள். நாங்கள் இதுவரையில் வேலை யில்லாதோருக்கு அனுகூலமளிக்கும் முறையொன்றை ஸ்தாபித் துக் கொள்ளவில்லை. இந்த நிலையில் வேலையற்றோரின் பட்டாளம், அனைத்து அம்சங்களையும் அச்சுறுத்தக்கூடிய ஓர் அபாயமாக வளர்ச்சியடைய முடியும். அதனாலேயே சோயுஸ், அவசரகால நிலையின் அறிமுகத்தை வேண்டி நிற்கிறது. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத நிலையில் நாம் பொருளாதார சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது. அவசரகால நிலைமை, மீண்டும் ஒரு முறை கம்யூனிசக் கட்சியின் சர்வாதிகாரத்தை எடுத்து வருமென்று நான் நினைக்கவில்லை. அவசரகால நிலைமை நிலவும் காலப்பிரிவில் கம்யூனிசக் கட்சியை உள்ளடக்கிய அனைத்து அரசியல் கட்சிகளினதும், இயக்கங்களினதும் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைத்தல்,, இத்தகைய அவசர நிலைமைகளை விதிப்பதற்கான முன் நிபந்தனைகளில் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

**கேள்வி** : அண்மையில் பால்டிக் குடியரசுகளில் விரிவான போர் மூண்டிருந்தது ; புதிய பயங்கரவாத அலையொன்றின் அச்சுறுத்தலை இக்குடியரசுகள் எதிர்நோக்கியுள்ளனவா ?

**பதில்** : ஆம்; நிச்சயமாக அப்படித்தான். பால்டிக் குடி யரசுகள் மாபெரும் இரத்தக் களரியொன்றை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன என நான் பல முறை எச்சரிக்கை விடுத்து வந்துள்ளேன். இப்பகுதிகளில் எதிர் கொள்ளல் நிலைமைகள் வர வர மோசமடைந்து கொண்டு வருகின்றன. சட்டரீதியான முறைகள் போதியவை அல்ல என்பது நிரூபணமாகிவிட்டது. பாராளுமன்றங்களினால் சமாளிக்க முடியாத பிரச்சினைகளை ஆயுதாங்கிய மோதல்கள் மூலம் தீர்த்து வைக்கவேண்டி இருக்கும் நிலைமை தோன்றலாம்.

**கேள்வி** : அயலில் உள்ள நாடுகள் மீதான சோவியத் யூனியனின் அரசியல் செல்வாக்கு சரிந்து வருகின்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிகழ்வுப் போக்கை எவ்விதம் தடுக்க முடியுமென நீங்கள் எண்ணுகிறீர்கள் ?

**பதில்** : சர்வதேச சக்திகளின் சமநிலை இப்பொழுது குழம்பிப் போயுள்ளது. முன்னர், இரு உலக வல்லரசுகள், முழு உலகிலும் நேருக்கு நேர் ஒன்றினையொன்று பகைமையுடன் எதிரெதிர் கொண்டிருந்தன; ஒன்று மற்றொன்றுக்கு ஈடாக சம வலுவில் இருந்து வந்தது. ஏனைய நாடுகள் இந்த கட்டமைப்புக்குள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தன. இப்பொழுது எண்ணிக்கையில் வளர்ந்து வரும் நாடுகள் ஏதாவது ஒரு வல்லரசினை அரவணைத்துக் கொள்ளக்கூடிய நிலைமை தோன்றலாம். இந்த நிலையில் பல உலகத் தலைவர்கள் சுதந்திரமான கொள்கையொன்றை பின்பற்றுவதற்கான புதிய வாய்ப்புக்களை கண்டறிவார்கள் என எண்ணுகிறேன். அவ்வாறு செய்யும் போது அவர்கள் நிச்சயமாக சோவியத் யூனியனின் செல்வாக்கை பயன்படுத்திக் கொள்ள விரும்புவார்கள்.

**கேள்வி** : ஆயுதப் பரிகரண ஒப்பந்தங்களுக்கு, சோவியத் யூனியன் இசைவாக நடந்து கொள்ளவில்லை என்ற வகையில் அமெரிக்கா குற்றஞ் சுமத்தி வருகின்றது. சோவியத் யூனியன் அதன் இராணுவ ஆற்றலின் ஒரு பகுதியை யூரலுக்கு அப்பால் நகர்த்திச் சென்றுள்ளது என்று அது கூறி வரு கின்றது. இது உண்மைதானா ?

**பதில்** : அது சரிதான் ; எமது இராணுவத்தின் சில பிரிவுகள் யூரலுக்கு அப்பாலுள்ள பகுதிகளில் மீளமர்த்தப்பட்டுள்ளன. இதுவரை காலமும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஐரோப்பிய சோவியத் யூனியனுடன் சம்பந்தப்பட்டவையாகும். பாரம்பரிய ஆயுதக் குறைப்புக் குறித்த பாரிஸ் உடன்படிக்கை மற்றும் வியன்னா ஒப்பந்தம் என்பவற்றின் கருதுகோள் கைவிடப்பட்டுள்ளதென்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். இதே வேளையில், வார்ஸோ உடன்படிக்கை அமைப்பும் முடிவுக்கு வந்துள்ளது. இந்த நிலையில், யூரல் பகுதியை நோக்கிய இராணுவ அமைப்புக்களின் நகர்வு மூலம் சோவியத் யூனியன் ஒப்பந்தங்களுக்கு இசைந்து செல்ல தவறியுள்ளது என்ற கருத்தினை நான் ஏற்கமாட்டேன். இவ் வாறு செய்ததன் மூலம் வோர்ஸோ ஒப்பந்தத்தை ஒழித்து விட்டமைக்கு நாம் ஓரளவுக்கு ஈடு செய்துள்ளோம் என்றே கூறவேண்டும்.

# நாம் இணைந்து வாழ வேண்டும் என்பது வரலாற்று விதி

திமித்ரி வொல்கோகொனோவ்

**போரிஸ் யெல்ட்ஸ்சினின் பாதுகாப்பு ஆலோசகராக பணிபுரிந்து வரும் வொல்கோகொனோவ் நொவெஸ்தி பாராளுமன்ற நிருபர் பீலிக்ஸ் அலெக்சியேவுக்கு அளித்த பேட்டி.**

**கேள்வி:** நாங்கள் எங்கு இருக்கின்றோம்? எங்கு செல்கின்றோம்? எமக்கு எத்தகைய எதிர்காலம் காத்திருக்கிறது என்பன போன்ற வலி மிகுந்த பல கேள்விகளுக்கு நாடு இப்பொழுது விடை தேடிக்கொண்டிருக்கின்றது அல்லவா ?

**பதில்:** ஏதேச்சதிகார கெடுபிடி ஆட்சியொன்றிலிருந்து, நாகரீக மடைந்த ஜனநாயக சமூகமொன்றை நோக்கி நிலைமாற்றம் காணும் கடுமையான ஒரு காலப்பிரிவிற்குள் சோவியத் யூனியன் பிரவேசித்துள்ளது என நினைக்கின்றேன். இக்கால கட்டம் 10-15 வருடங்களுக்கு நீடிக்க முடியும். மிக்கயேல் கொர்பச்சேவோ அல்லது போரிஸ் யெல்ட்சின்னோ எந்த மந்திரக்கோலின் உதவியுடனும் ஓரிரவுக்குள் நிலைமையை மாற்றியமைத்துவிட முடியாது. எம்மைப் பீடித்துள்ள நெருக் கடியின் மிகந்தாழ்ந்த மட்டப் புள்ளியையேனும் நாம் இன்னும் தாண்டிச் சென்றுவிடவில்லை. 1992 இல், (ஏதேனும் நாச கரமான விபரீதங்கள் இடம்பெறாதவிடத்து) நாம் நிச்சயமாக இந்த நெருக்கடிக்கூடாகப் பயணித்துச் செல்வோம். ஆனால், அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நாகரீகமடைந்த அபிவிருத்திப் பாதையில் நாங்கள் உறுதியாக நின்றிருப்போம்.

**கேள்வி:** வருங்கால சமுதாயமும் கூட சோஷலிஸக் கருத்துக்களி னால் வழிநடத்தப்பட முடியுமா ?

**பதில்:** இன்று, சோஷலிஸம் மற்றும் முதலாளித்துவம் போன்ற தலைப்புக்கள் மட்டுமே விவாதிக்கப்பட்டு வருகின்றன. நாங்கள் எங்கு செல்கின்றோம் ? இவை அனைத்தும் மத்திய கால புத்தி ஜீவிகளின் விவாதங்களை எனக்கு நினை வூட்டுகின்றன. (அதாவது உண்மையை ஓர் ஊசி முனையில் வைக்க முடியுமா போன்ற விவாதங்கள்). முதலாளித்துவ, சோஷலிஸ அமைப்புக்கள் குறித்த பேச்சுக்கள் பயனற்றவை என்பதே எனது கருத்தாகும். இன்றைய நாட்களில் ஒரு சமூகத்தின் பிம்பமும் அதன் அபிவிருத்திப் பாதைகளும், அது அடைந்துள்ள நாகரீகத்தின் மட்டம், பொருளாதாரத்தின் திறமை, சமூகப் பாதுகாப்பு வலைகளின் நம்பகத்தன்மை என்பவற்றினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன.

**கேள்வி:** சோவியத் யூனியனில் நாகரீகமடைந்த சமூதாய மொன்றைப் காணமுடியுமென நீங்கள் நம்புகின்றீர்களா?

**பதில்:** நாங்கள் கடைசிவரையில் நம்பிக்கையைக் கைவிடக் கூடாது. உண்மை, அன்பு, அழகு போன்ற அகிலம் பரந்த மானிட விழுமியங்கள் எமது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வெற்றிடையுமென் நான் நம்புகிறேன்.

**கேள்வி:** இப்போது மிக்காயேல் கொர்பச்சேவ், போரிஸ் யெல்ட்சின் ஆகிய இரு தலைவர்களுக்கும் இடையில் மட்டுமே பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுவருவதுபோல் தெரிகிறது. சோவியத் அரசியல் மேடையில் புதிய தலைவர்கள் தோன்ற முடியுமா ?

**பதில்:** நீங்கள் சொல்வது சரிதான். இந்த இரு தலைவர்களும் மட்டுமே இப்போது எமது அரசியல் மேடையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விருவரும் பழைய கட்சி அமைப்புக் களிலிருந்து தோன்றியவர்களாவர். அத்துடன், அவர்கள், நிலைமாற்றம் கண்டுவருபர்களாகவும் உள்ளனர். மக்கள் பழைய சித்தாந்தத் தளைகளிலிருந்து விடுபட்டு, இவர்களுக்குப் பதிலாக புதியவர்களை பீடத்தில் அமர்த்தும் காலம் விரைவில் வரும். உண்மையான வருங்காலத் தலைவர்கள் இன்னமும் பல்கலைக்கழக வட்டாரங்களிலேயே இருக்கின்றனர். தற் போதைய தலைவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரித்தான ஆற்றல்களையும் பலவீனங்களையும் கொண்டுள்ளனர். யெல்ட்சினைப் பொறுத்தவரையில், அவரது தளராத முயற்சி யும், அறிந்து கொள்வதற்கான அவாவும் போற்றத்தக்க குணாம்சங்களாக எனக்குத் தெரிகின்றன. தன்னிச்சையான செயற்பாடு மற்றும் தவறான தீர்மானங்களை எடுத்தல் என்பன அவரது பலவீனங்களாகும். ஜனாதிபதி கொர்பச் சேவைப் பொறுத்தளவில், அவருடைய ஆளுமையில், துரதிர்ஷ்டவசமாக, உறுதியாக நிற்க முடியாத ஒரு நிலையும், தெட்டத்தெளிவான உபாயமொன்று இல்லாதிருத்தலும் பலவீனங்களாகத் தெரிகின்றன. அவர் சில நல்ல கருத்துக்களை முன் வைக்கிறார்; ஆனால், அவற்றைச் செயலில் விடுவதற்கு என்ன செய்யவேண்டுமென்று அவருக்குத் தெரிவதில்லை. பல எதிர்மறை நிகழ்வுகளை வெற்றி கொள்ள முடியாதுபோன, ஒரு மாபெரும் சீர்திருத்தவாதி என்ற முறையில் அவர் வரலாற்றில் இடம் பெறுவார். ஏதேச்சாதிகார முகாமை முறையை அவர் ஒழித்துக் கட்டினார் என்று வலியுறுத்திக் கூறுவது தவறானதாகும். அது தன்னைத்தானே அழித்துக் கொள்வதை அவர் தடுக்கவில்லை; மேலும் அவ்வாறு செய்யும் போது பெரிஸ்த்ரோய்கா முயற்சிக்கு அவர் பெரும் பங்களிப்பினை வழங்கினார்.

**கேள்வி:** சோவியத் யூனியனின் இன்றைய நிகழ்வுப் போக்கு களுக்கும் உலக வரலாற்றின் தருக்கவியலுக்குமிடையே ஏதேனும் இணைப்புக்கள் இருப்பதனை நீங்கள் அவதானிக்கின்றீர்களா?

**பதில்:** ஆம்; ஒரு வகையில் பார்க்கும் போது, அனைத்துச் சாம்ராஜ்யங்களும் முடிவில் சிதறுண்டு போயுள்ளன. ருஷ்யப் பேரரசு அவற்றில் ஒன்றாகும். சிதறிவரும் சோவியத் பேரரசுக்கும் அதே தலைவிதி காத்திருக்கிறது. சுதந்திர தேசங்களின் ஒரு யூனியன், அதனிடத்தில் உருவாக முடியு மென்பதே இதன் சிறப்பம்சமாகும். இன்றைய மாற்றங்கள், மையத்திலிருந்து பிறிட்டுக் கிளம்பும் போக்குகளினால் தூண்டப்பட்டு வருகின்றன. எனினும், அடுத்துவரும் ஐந்

# சோவியத் நெருக்கடி

தாண்டுகளில் (அல்லது அதற்கு முன்னர்) மையத்தை நோக்கிய சக்திகளின் புறப்பாடு இடம்பெற முடியுமென நான் நம்புகின்றேன். தற்போது சுதந்திரத்துக்காகப் போராடிவரும் ஒருசில பால்டிக் குடியரசுகள் தவிர ஏனைய சோஷயத் குடியரசுகள் கூட சோவியத் யூனியனுடனான நல்லிணக் கத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். யூனியன் தொடர்பான ஒப்பந்தத்தை நாங்கள் எவ்வளவு சீக்கிரமாக பூர்த்தி செய்து கொள்கிறோமோ எமது சமஷ்டி நிலையின் உள்ளார்ந்த சக்தியை எவ்வளவு விரைவில் வெளிப்படுத்து கிறோமோ அந்தளவுக்கு விரைவாக மையத்திலருந்து புறப்படும் சக்திகளின் செல்வாக்கு மங்கிச் சென்றுவிடும். ஒருங்கிணையும் நிகழ்வுப் போக்குகள் உலகெங்கிலும் தீவிரமடைந்து வருகின்றன. ஆனால், நாகரீகத்தின் நிகழ்வுப் போக்குக்கு எதிர்த்திசையில் மேற்கொள்ளப்படும் முயற்சியையே இங்கு நாம் காண்கின்றோம். அதே வேளையில், நாம் பத்தென்பதாம் நூற்றாண்டுக்கு திரும்பிச் சென்றுவிட்டவர்களைப் போல எல்லைகளை நிர்ணயம் செய்து கொள்ள முயல்கிறோம். இது ஆபத்துக்கள் மலிந்த ஒரு நடவடிக்கையாகும். ஒருவரின் சொந்த மொழி, கலா சாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதும், தேசிய விழிப்புணர்வினைப் பாதுகாப்பதும் அவசியமானதென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும், அகிலம் தழுவிய மானிட விழுமியங்களுக்கும் மேலாக தேசிய விழுமியங்களை வைக்கும் எல்லை வரையில் ஒருவர் சென்றுவிட முடியாது. இது நமது சொந்த மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய மக்களுக்கும் கூட ஓர் அச்சுறுத்தலாக இருக்கிறது. பல்வேறு தேசிய இனங்களையும் கொண்ட மூன்றுகோடிக் குடும்பங்கள், ஒன்றாக இணைந்து வாழும் ஓர் இணைப்பினை சோவியத் யூனியன் பிரதிபலிக்கிறது. ஏனைய இனக்குழுக்களின் பிராந்தியங்களில் சுமார் ஆறு கோடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து வாழ வேண்டிய விதியை வரலாறு எம்மீது திணித்திருக்கிறது என்று கூறுவது மிகப் பொருத்தமாக இருக்கும்.

**கேள்வி:** ஐம்பது வருடங்களுக்கு முன்னர், ஜூன் மாதம் 22 ஆம் திகதி, நாஜி ஜேர்மனி படைகள் சோவியத் யூனியனுக்குள் பிரவேசித்தன. இலட்சக்கணக்கான மக்களின் உயிர்த்தியாகத்தில் வெற்றி கொள்ளப்பட்ட இந்த வரலாற்று நிகழ்வினை, ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் நீங்கள் எவ்விதம் மதிப்பிடுகிறீர்கள்?

**பதில்:** இதன் விளைவு மிக எளிதானதாகும். நியாயத்திற்காகவும், சுதந்திரத்துக்காகவும், விடுதலைக்காகவும் போராடும் மக்கள் பயங்கரமான சோதனைகளை எதிர்நோக்குகிறார்கள். ஆனால், முடிவில் அவர்கள் எப்போதுமே வெற்றி பெறுகிறார்கள். இரண்டாவது விளைவு, ஏதேச்சதிகார ஆட்சிகள் - அவை எந்த வடிவத்திலிருந்த போதிலும் - முடிவில் தோற்கடிக்கப்படுகின்றன என்பதாகும். அத்தகைய ஆட்சிகளுக்கு எதிர்காலம் இருப்பதில்லை. ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் ஹிட்லரின் ஏதேச்சதிகாரத்துக்கு எதிராக போராடி நாம் நியாயமான வெற்றியைக் கண்டோம். அந்த ஏதேச்சதிகார அமைப்பு அப்போது ஒழிக்கப்பட்டது. ஆனால், ஸ்டாலின் தலைமையிலான மற்றுமொரு ஏதேச்சதிகார ஆட்சி நிலை கொண்டு வருவதனை உலகம் காண நேர்ந்தது. ஆனால், ஸ்டாலினால் கட்டியெழுப்பப்பட்ட இந்த ஏதேச்சதிகார ஆட்சியை முழு அளவில் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. இப்பொழுது பேரளவு கஷ்டங்களுக்கு மத்தியில், அது விலகிச் சென்று கொண்டிருக்கிறது.

பிறிதொரு விளைவும் உள்ளது. அதாவது உயிராபத்தான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போது, வித்தியாசமான பல்வேறு சக்திகள், இணைந்து செயலாற்றுவதற்கான பாதையொன்றை கண்டுகொள்கின்றன. சேர்ச்சில், ஸ்டாலின் போன்றோரும் மேலைத்தேய ஜனநாயகமும் சோவியத் யூனியனும் எப்போதுமே இணக்கப்படுத்த முடியாத பகைவர்களாக இருந்து வந்தார்கள்; பகைமை நாடுகளாக இருந்தன. எனினும், தம்மைச் சூழ்ந்து வந்த மாபெரும் உலகப் போரின் அச்சுறுத்தல், அவர்களை ஒன்றுபடச் செய்து, அவர்களின் முயற்சிகளை ஒருமுகப்படுத்தியது, வரலாற்றின் இந்தப்படிப்பினைகளை நாம் மறந்து விட முடியாது. இன்றைய எமது சமுதாயம், இந்த நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கான வலி மிகுந்த மாற்றங்களை அவாவி நிற்கும் பல்வேறு குழுக்களுக்கு இடையிலும் புரிந்துணர்வையும், நல்லெண்ணக்கத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும்.

---

(45 ம் பக்கத் தொடர்ச்சி)

தான நவ பாசிச கட்சிக்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவு அதிகரிக்கும் வாய்ப்பு அதிக தூரத்தில் இல்லை.

இதேவேளை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் மூடக்கும் தன்மை வாய்ந்த நிபந்தனைகளை, சிறுபான்மை அரசாங்கம் ஒன்றினால் அமுலாக்க முடியாதென்பது வெளிப்படையானதொரு உண்மையாகும். இன்று காங்கிரஸ் இருக்கும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் அரைவாசி நிபந்தனைகளையுங்கூட அதனால் நிறைவேற்ற முடியாது போய்விடலாம். ஏனெனில், இது மக்கள் விரோத நடவடிக்கைகளாக கருதப்படுமென்ற அச்சம் உள்ளது. இத்தகையதானதொரு பின்னணியில், சனத்தொகையில் பெரும்பான்மையினரும் இந்த நிதியங்களுமே தமது கடனை திருப்பி செலுத்தக் கூடியதொரு ஏதேச்சாதிகார அமைப்பொன்றினை விரும்பக்கூடும். இவற்றைப் பார்க்கையில், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மனியிலும், இத்தாலியிலும் தோன்றியதான பாசிச தன்மைகளின் கூறுகள் தானோ இவையெனக் கருத வேண்டியுள்ளது.

(43 ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத ஒரு தடுமாற்ற நிலையினை அனுபவித்து வருகிறது. இந்து எழுச்சிக் கோசங்களுக்கு மத்தியிலும் கூட, குறிப்பிட்ட சில பிராந்தியங்களில் மட்டுமே அது தனது முதன்மை நிலையினை தக்க வைத்துக் கொள்ள முடிந்ததென்பதை சமீபத்தில் தேர்தல் முடிவுகள் காட்டின.

சமீபத்திய பொதுத்தேர்தல் முடிவுகள், இந்தியாவுக்கு கூட்டு அரசியலே பொறுத்தமானதென்ற விதியை முன்வைத்துள்ளன. இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய பல நாடுகளும் சமகால இந்திய அரசியல்-பொருளாதாரத்தில் காணப்படும் அதே திரிபுகளையே கொண்டுள்ளனர். இந்திய அரசியலின் நேரு-காந்திக்குப் பிற்பட்ட யுகம், அரசியல் கட்டமைப்பில், கருத்தொற்றுமையை ஒரு முக்கிய கூறாக வலியுறுத்தும் வாய்ப்பு பெருமளவுக்கு தென்படுகிறது.

# சோவியத் நெருக்கடி: அதனை வெல்வதற்கான இன்றைய நடவடிக்கைகள்

வலன்டின் பவ்லோவ்

நாட்டை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கான அமைச்சரவையின் அவசரகால வேலைத்திட்டத்தின் அடிப்படை ஏற்பாடுகளை சுப்ரீம் சோவியத் அமைப்பு அண்மையில் அங்கீகரித்தது. இக்கட்டுரை, இது குறித்த பிரதமர் பவ்லோவின் உரையை அடிப்படையாக கொண்டதாகும்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறிப்பிட்ட ஒரு நோக்கினை – அதாவது கைத்தொழிலின் செயற்பாட்டினை இயல்பான நிலைக்குக் கொண்டுவருதல், நிதி மற்றும் பணப்புழக்கம் என்பவற்றை விருத்தி செய்தல், சமூக உத்தரவாதங்கள் முறையொன்றை உருவாக்குதல் ஆகியவற்றை –இலக்காகக் கொண்டுள்ளது. தனியார்துறை தொழில் முயற்சிகளை அபிவித்தி செய்தல், அதற்கு ஆதரவளிப்பதற்கான வழிமுறைகள், பொருளாதாரத்தை தேசியமய நிலையிலிருந்தும் ஏகபோக நிலையிலிருந்தும் விடுவித்தல் போன்ற நடவடிக்கைகள் இந்நோக்கங்களை எய்துவதற்கான அடிப்படையாகக் கருதப்படுகிறது.

இந்தப்புதிய சூழ்நிலைகளில், மத்திய அரசும் குடியரசுகளும் பரஸ்பரத் தொடர்புகளில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கவேண்டியுள்ளன. இந்த வேலைத் திட்டத்தை செயலாக்கும் விஷயத்தில், இது அத்தியாவசியமான முன் நிபந்தனையொன்றாக உள்ளது.

## மாற்று வழிகள்

சோவியத் பொருளாதாரத்தை முற்றிலும் மாற்றியமைப்பதற்கு அவசியமான பிரயோக நடவடிக்கைகள் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. ஆனால், இவை அனைத்தும் இரு விடயங்களை வலியுறுத்தி வருகின்றன. அதில் ஒன்று, நாடு, பழைய மாதிரியிலான ஆணையிடும் பொருளாதார முகாமை முறைக்கு திரும்பவேண்டுமென்பதை வலியுறுத்துகிறது. எனினும், இந்த கருத்து வெறும் அபத்தமானதென்பது தற்போதைய நெருக்கடியிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது. உற்பத்தி உறவுகளிலும், சந்தைப் பொருளாதாரத்திலும் அடிப்படையில் ஒரு புதிய முறை உருவாக்கப்பட வேண்டுமென இரண்டாவது கருத்து கூறுகிறது. சமூகத்தின் அரசியல் கட்டமைப்பில் பாரிய பொருளாதார சீர்திருத்தங்களையும், மாபெரும் மாற்றங்களையும் எடுத்து வருவதாக இது அமையும். இந்த இரண்டாவது வகை பல்வேறு சாத்தியங்களையும் கொண்டுள்ளது. இவற்றுள் பின்வரும் மூன்று அம்சங்கள் நமது கவனத்துக் குரியனவாகும்.

தற்போதைய போக்குகளுக்குள் வளர்ச்சி கண்டு வரும் சமூக அரசியல் நிலைமைகளும், இந்த நிலைமைகளுக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டு வரும் பொருளாதார நிகழ்வுப் போக்குகளும் நிலவிவரும் ஒரு சூழ்நிலையில் இந்த நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு சிறப்பான வழிமுறைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்ற எடுகோளின் அடிப்படையிலேயே முதலாவது அம்சம் அமைந்துள்ளது. இந்த நிலையில், தேறிய தேசிய உற்பத்தி ஆண்டொன்றுக்கு இருபது சதவீதமளவில் வீழ்ச்சியடைய முடியும். அதே வேளையில், தனியாள் நுகர்வு 15–20 சதவீத்துக்குள் வீழ்ச்சி காண முடியும். குறிப்பிட்ட சில கைத்தொழில்கள் பெருமளவுக்கு நெருக்கடிக்கு உள்ளாவதுடன் வேலையற்றோரின் எண்ணிக்கை பதினெட்டு இலட்சம் பேர் வரையில் உயர்ந்து செல்ல முடியும். இந்தப் பின்னணியில் நோக்கும் போது, இந்த ஆண்டு முடிவதற்குள்ளேயே மா பெரும் சமூகக் கொந்தளிப்பொன்று உருவாகும் வாய்ப்பு தென்படுகிறது.

மற்றொரு அணுகுமுறை, பொருளாதாரத்தில் அரச தலையீட்டினை முற்றிலும் ஒழிப்பதனையும், துரிதகதியில் முழுஅளவு சந்தைப் பொருளாதார மொன்றுக்கு நிலைமாறுவதனையும் வேண்டி நிற்கிறது. இந்த வழிமுறை, தொடக்கத்தில், உற்பத்தியில் செங்குத்தான வீழ்ச்சியை எடுத்து வருவதுடன், அது, பாரியளவில் தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கும் தொழில் இழப்புக்களுக்கும் வழிகோலும். இவ்வாண்டில் தேறிய தேசிய உற்பத்தியும், கைத்தொழில் வெளியீடும் 30 சதவீதம் வரையில் வீழ்ச்சியடையுமென்றும் வேலையற்றோரின் எண்ணிக்கை முப்பது இலட்சம் வரையில் இருக்கும் என்றும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இதன் விளைவான பொதுமக்களின் ஆத்திரத்தையும் பரவலான இழப்புக்களையும் கற்பனை செய்து பார்க்கவே முடியாது.

அரசாங்கம் மாற்று வழி ஒன்றைத் தெரிவு செய்து கொண்டுள்ளது. பிரதான பிரவாக சமூக சக்திகளுள் அனைத்துக் குடியரசுகளும் முழு அளவுப் புரிந்துணர்வுடன் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளும், நிர்ணயகரமான, கண்டிப்பான, ஒரே சீராகச் செல்லும் ஒரு வழிமுறையாக இது இருக்கிறது. இந்தத் தெரிவு மாறிவரும் சூழ்நிலைகளுக்கு மக்கள் தம்மை சீராக்கிக் கொள்வதற்கு வகை செய்வதாக அமையும். அத்துடன் நட்டங்களும், சமூகச் செலவினங்களும் குறைந்த மட்டத்திலேயே இருக்கும்.

"எமது வேலைத் திட்டத்துக்கு பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில், முயற்சிகளை முனைப்புடன் மேற்கொள்ளும் வேளையில், பொருளாதார வீழ்ச்சிக்கு வழிகோலும் நிகழ்வுப் போக்குகளைக் தடுத்து நிறுத்தி, இவ்வாண்டு முடிவுக்கு முன்னர் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவரக் கூடிய நிலையில் நாம் இருப்போம்".

**முன்னுரிமைகள்**

நிர்வாக முறைகளுடன் இணைந்த, சுதந்திரச் சந்தை ஊக்குவிப்புக்களில் இந்த வேலைத்திட்டம் தங்கியுள்ளது. உண்மையிலேயே, அரசாங்கம் சர்வ தேச ரீதியில் பலவந்த முறைகளைப் பிரயோகிக்கும் சில விடயங்கள் இருக்கத்தான் செய்யும். சட்ட வழிமுறைகள் மூலம் சட்டத்தை நிலை நிறுத்துவதாக இது அமையும். திறமையான செயற்பாடு, விவேகபூர்வமான முகாமை முன் முயற்சி மற்றும் தொழிற்றுணிபு என்பவற்றை வழங்குதல் அரசாங்க நடவடிக்கைகளில் ஒரு முக்கியமான நிலைப்பாடாக இருக்கும். குறிப்பாக, உற்பத்தியாளர் மீதான தடைகளை அகற்றுதல், போட்டியையும் தனியார் தொழில் முயற்சியையும் ஊக்குவித்தல், சந்தைச் சக்திகளை நல்ல முறையில் முடுக்கிவிடுதல் என்பன இவற்றுள் அடங்கும். உற்பத்திச் சாதனங்கள், இறுதியில், உண்மையான உரிமையாளர்களின் கைகளில் மீண்டுமொரு முறை விடப்படுதல் வேண்டும்.

இந்த வேலைத் திட்டம் தனியார் மயமாக்கல் குறித்த ஒரு தொகுதி நடவடிக்கைகளை வழங்குகிறது. எனினும், உற்பத்திச் சாதனங்களின் உரித்தில் பொது உடைமையை முற்றிலும் ஒழித்து விடுதல் இதன் நோக்கமல்ல. தொடக்கத்தில், சிறு அளவு தனியார் மயமாக்கல் என்று அழைக்கப்படும் விஷயத்தில் அதிகளவு கவனம் செலுத்தப்படும். இது பெரும் எண்ணிக்கையிலான சில்லறை விற்பனை நிலையங்கள், உணவகங்கள், நாளாந்தச் சேவைகள், சிறு தொழில் வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கும். இத்துறைகளில் காணப்படும் சிறு வர்த்தகத்தில் சுமார் மூன்றிலொரு பகுதி இவ்வாண்டு முடிவுக்கு முன்னர் அரசகட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுவிடும். அத்துடன், 1992 இல் மூன்றிலிரண்டு பகுதி நீக்கப்படும்.

நடுத்தர அளவு மற்றும் பாரியளவு அரச தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரையில், அவை கூட்டுப்பங்குக் கம்பனிகளாக அல்லது மக்கள் தொழில் முயற்சிகளாக மாற்றப்படவுள்ளன. அனைத்து அரச துறைத் தொழில் முயற்சிகளினதும் பங்குகள் அல்லது சொத்துக்களின் குறைந்தபட்சம் பத்து சத வீதம் 18 மாத காலத்துக்குள் ஊழியர் படை உறுப்பினர்களின் அல்லது ஏனைய தனிநபர்களின் சொத்துக்களாக மாற்றப்படுதல் வேண்டும். முதல் கட்டத்தில் பங்குகளின் ஒரு கணிசமான சதவீதம் அரசின் கைகளிலே இருக்கும்.

பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது அந்நோக்கத்திற்கென வழங்கப்படும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கென பொதுமக்கள் பயன்படுத்தும் வருமானங்களுக்கு வரி விலக்களிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தனது இலாபங்கள் மூலம் அரசிலிருந்து சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் தொழில் முயற்சிகளுக்கும் இதே சலுகை அளிக்கப்படும். இந்த வேலைத்திட்டம் வேதனச் சீர்திருத்தங்களுக்கூடாக உற்பத்தித் திறனை உயர்த்துவதையும், வாழ்க்கை நிலையைவிருத்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் சில முக்கிய கூறுகள் ஏற்கனவே இடம் பெறத் தொடங்கிவிட்டன. பல்வேறு தொழில்கள், தொழில்சார் நிலைகள், தேர்ச்சித்தரங்கள் என்பவற்றுக்கான குறைந்த பட்ச ஊதியத்தை அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. அத்துடன் சம்பாத்திய அளவு மீதான வரையறைகள் ஒழிக்கப்பட்டுள்ளதுடன், உற்பத்தியாளர்கள் தமது சொந்தச் சம்பளத் திட்டங்களைத் தயாரித்துக் கொள்வதற்கு சுதந்திரமும் அளிக்கப்பட்டுள்ளது. பாரிய பொருளாதார வீழ்ச்சியொன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில், இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதென்பதே இங்குள்ள அடிப்படைச் சிரமமாகும். அதுமட்டுமன்றி, அனைத்து வகையான மூலவளங்களின் இருப்புக்களும் தீர்ந்து கொண்டுவருகின்றன. ஆகவே, இந்தச் சூழ்நிலையில், மிகமுக்கியமானது எது என்பதை இனங்கண்டு கொள்ள வேண்டிய தேவை உள்ளது. குறிப்பான சில குறிக்கோள்களில் அனைத்து நிதிகளையும், சேவைகளையும் ஒரு முகப்படுத்தப்படவேண்டியுள்ளது. உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் வழங்கல், போக்குவரத்து மற்றும் சக்திக் கைத்தொழில் என்பனவே முன்னுரிமைப் பட்டியலில் முதல் நிரலில் நிற்கின்றன.

"உணவு வழங்கல் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் நாம் கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது". இது, அடிப்படையில், குடியரசுகள் உள்ளூர் அதிகார சபைகள் முக்கியமாக உணவுற்பத்தியாளர் ஆகிய பிரிவனரின் பணிகளாக இருக்கும். நிதிகளையும், பணப்புழக்கத்தையும் விருத்தி செய்து ரூபிள் நாணயத்தின் வீழ்ச்சியைத் தடுக்கும் வழிமுறைகள் மீது அதிக அழுத்தம் கொடுக்க வேண்டியுள்ளது. கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கமுறை பயன்படுத்தப்படவுள்ளதால் அது செலவுகளை குறைந்த பட்ச மட்டங்களுக்கு குறைத்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. சோவியத் யூனியனின் வரவு செலவுத் திட்ட முறை குறித்த இறுதி ஒப்பந்தமொன்றும் அவசியமாகும். மத்திய அரசுக்கும், குடியரசுகளுக்குமிடையே வருவாய்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றின் பகிர்வு, முறையான நிதிசார் ஒழுக்காற்றினை உறுதிப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் என்பன இதில் அடங்குகின்றன. குறிப்பாக, பாதுகாப்புச் செலவுகள் உள்ளிட்ட பொதுச்செலவினத்தை வெட்டி விடுவதற்கான மேலும் பல வழிகளைக் கண்டறிவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் குடியரசுகளும், உள்ளூர் அதிகாரசபைகளும் தமது பங்குக்கு ஆகக்கூடிய பொறுப்புணர்ச்சியை காட்ட வேண்டியுள்ளதுடன், தமக்கென ஒதுக்கப்பட்ட மூலவளங்களுடன் சமாளித்து செயற்பட வேண்டியும் உள்ளன.

வரி அறவீட்டு முறையினை மீளமைப்புச் செய்தல் மிகமுக்கியமான ஒரு நடவடிக்கை என்று கருதப்படுகின்றது. விலைகள் உயர்ந்து செல்லக்கூடிய சாத்தியப்பாடு காணப்படுவதால் வரவு செலவுத் திட்டத்தை சமநிலையில் வைத்திருக்க முடியாது போகும். அத்துடன் வருவாய்கள் பிரதானமாக வரிகளில் இருந்தே கிடைப்பதாக இருந்தால் செலவு நிதிப்படுத்தலை மேலும் விரிவாக்க முடியாத நிலை தோன்றும். ஆகவே, வளர்ச்சி கண்ட பல நாடுகளில் காணப்படும் வரி அறவீட்டு முறைக்கு மாறிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முறையின் கீழ் அதிகளவில் நுகர்வு செய்வோரின் மீதே வரிச்சுமை

(67 ம் பக்கம் பார்க்க)

# நாடுகளின் போட்டியிடும் திறனை மதிப்பிடுவதற்கான ஓர் அளவுகோல்

சமன் கலேகம

எம். எஸ். சி. (கணிதம்),
எம். எஸ். சி. (பொருளாதாரம்),
டி. பில். (ஒக்ஸ்போர்ட்)

ஒப்பீட்டு ரீதியான அனுகூலம் குறித்த கருதுகோளின் சுருக்கமான வரலாற்று கண்ணோட்டத்தை முதலில் பார்ப்போம். இரண்டாவதாக, நாடுகளின் ஒப்பீட்டு ரீதியான போட்டி அனுகூலத்தினை மதிப்பீடு செய்யும் தர நிர்ணய அளவுகோள் இங்கு விளக்கப்படுகிறது. உறுதியாக நிலை பெற்றுள்ள ஒப்பீட்டு ரீதியான அனுகூலம் குறித்த கருதுகோள்கள் மற்றும் வீர்யத்துடனான ஒப்பீட்டு அனுகூலம் குறித்த கருதுகோள்கள் என்பன மூலம் இந்த விளக்கம் மேற்கொள்ளப்படுகிறது. மூன்றாவதாக, நாடுகளின் போட்டித்திறனை நிர்ணயிக்கும் காரணிகள் இக்கட்டுரையில் கலந்துரையாடப்படுகின்றன. நான்காவதாக, இலங்கையின், 1977க்கு பிற்பட்ட கைத்தொழில்மயமாக்கல் அனுபவங்கள் மற்றும் நாடு போட்டித்திறனை சாதித்துக் கொள்வதில் சந்தித்த இடையூறுகள் போன்ற விஷயங்கள் இங்கு ஆராயப்படுகின்றன. இறுதியில், இது தொடர்பான அனைத்து அம்சங்களும் குறித்த ஒரு சுருக்கமான தொகுப்பு தரப்படுகிறது.

## 1. ஒப்பீட்டு அனுகூலம் என்ற கருதுகோளின் தோற்றம்

ஒப்பீட்டு அனுகூலம் குறித்த விதி பொதுவாக ரிகார்டோ என்பவருடனேயே தொடர்புபடுத்தப்படுகிறது. அவருடைய சூத்திரம் இலட்சிய ரீதியான வியாபார மாதிரியின் நியதிகளிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. ஒரே உற்பத்திக் காரணியை - அதாவது ஊழியத்தை-உபயோகப்படுத்தி இரு நாடுகள் இரு வகையான பொருட்களை உற்பத்தி செய்வதனையே இந்த மாதிரி பிரதிபலிக்கிறது. இரு பண்டங்களின் உற்பத்தியில் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே காணப்படும் சிறக்குமியல்பு, முற்று முழுதான ஊழிய உற்பத்தித் திறனை அடிப்படையாக கொண்டிருக்கக் கூடாது என்றும், சார்பு ரீதியான ஊழிய உற்பத்தித் திறனையே அது அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்றும் அந்த விதி கூறு கிறது. போர்த்துக்கல் வைன் உற்பத்தி செய்வதும், இங்கிலாந்து ஆடைகள் உற்பத்தி செய்வதும் இந்த பொது விதிக்கான மிகச்சிறந்த உதாரணமாக காட்டப்படுகிறது. இந்த சூழ்நிலைகளின் கீழ், உற்பத்தியின் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு நாடு மற்ற நாட்டினை விடவும் அதிகளவு திறமை கொண்டதாக இருந்த போதிலும், சர்வதேச தொழில் பிரிவு இடம் பெற்று வருகிறது என்ற விதியினை இந்த சூத்திரம் ஆதரிக்கிறது. வியாபாரத்தின் மூலம் ஆதாயம் பெறுதல் என்ற தர்க்கவியலின் அடிப்படையிலேயே இந்த அம்சம் வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாடும், தான் ஒப்பீட்டு அனுகூலத்தை அனுபவித்து வரும் குறிப்பிட்ட ஒரு பொருளின் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் சிறப்பாற்றலைக் கொண்டிருந்தால் அனைத்துப் பொருட்களினதும் உலக வெளியீடு அதிகரிக்கும். எனவே, சார்பு ரீதியான ஊழிய உற்பத்தித் திறனின் அடிப்படையில் குறிப்பிட்ட நாடுகளுக்கு குறிப்பிட்ட உற்பத்திகளை "ஒப்படைப்பது" உச்சமட்ட பயனை அளிக்கும் என்பது இந்த எடுகோளின் நோக்கமாகும்.

ஒரே உற்பத்திக் காரணி உள்ளூர் ஊழியம் என்பதனையும், பொருட்களின் விலைகள் அவற்றின் ஊழிய உள்ளடக்கத்தின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனையும் மூலசூத்திரம் எடுத்துக்கூறியது. மிகவும் எளிதான முறையிலான இந்த வகைப்படுத்தலுக்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டதனையடுத்து, சந்தர்ப்பச் செலவுகள் குறித்த கருதுகோளின் அடிப்படையில் புதிய சூத்திர விதியொன்று உருவாக்கப்பட்டது. அதிகளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கருத்து விளக்கம், மறைந்திருக்கும் உற்பத்திக்கோட்பாட்டின் குறித்துரைக்கப்பட்ட அம்சங்களிலிருந்து சுதந்திரமான முறையில், சர்வதேச சிறக்குமியல்பின் உச்சமட்ட மாதிரியினை நிர்ணயிப்பதனை அனுமதிக்கிறது.

புதிய சாஸ்திரீய பொருளியலாளர்கள், சுயதேவை சார்பு ரீதியான விலைகளின் அடிப்படையில் ஒப்பீட்டு அனுகூல விதியினை விளக்குகிறார்கள். இருநாடுகளின் அத்தகைய விலைகளை ஒப்பிடுவதன் மூலம் வர்த்தகப் போக்கினை முன்கூட்டியே கணித்துக் கூற முடியும். ஒவ்வொரு நாடும் உள்ளூரில் சார்பு ரீதியாக மலிவாக உள்ள ஒரு பொருளை ஏற்றுமதி செய்து, சார்பு ரீதியாக செலவுமிக்கதாக உள்ள ஒரு பொருளை இறக்குமதி செய்யும். சார்பு ரீதியான விலைகள் சந்தர்ப்பச் செலவுகளை பிரதிபலிக்குமளவிற்கு, இந்தக் கருத்து விளக்கம் மேலே எடுத்துக் காட்டிய கருத்து விளக்கத்துக்கு இணையானதாக உள்ளது. ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட விலை வேறுபாடுகளை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? அது ஊழியத்தின் சந்தர்ப்பச் செலவு மட்டுமா? இல்லை. சர்வதேச வர்த்தகத்தின் காரணி விகிதங்கள் தொடர்பான ஹெக்ஸ்சர்-ஓலின் கோட்பாடு இதற்கு ஒரு விடையைத் தருகிறது. இந்தக் கோட்பாட்டின் மைய அம்சம், உற்பத்திப் பொருட்களின் காரணிச் செறிவுக்கும் நாடுகளின் காரணிச் சொத்துக்களுக்கும் இடையிலான பரஸ்பரத்தொடர்பு வர்த்தகப் பாய்ச்சல்களை நிர்ணயித்து வருகின்றது என்பதாகும்.

இந்தக் கோட்பாடு முதன்முதலாக வார்க்கப்பட்ட மாதிரி - இது மிகப் பயன் மிக்கது என்பது தெரியவந்துள்

எது- இரு நாடுகளையும், இரு உற்பத்திப் பொருட்களையும் இரு உற்பத்திக் காரணிகளையும் (அதாவது ஊழியம், மூலதனம் என்பன) அடிப்படையாகக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட சில தரரீதியான எடுகோள்களுக்கு இணங்கிய விதத்தில், ஒவ்வொரு நாடும் சார்பு ரீதியில் அபரிமிதமாக வைத்துள்ள உற்பத்திக் காரணிகளை செறிவான முறையில் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே ஏற்றுமதி செய்து வருகின்றதென்றும், ஏனையவற்றை இறக்குமதி செய்து வருகின்றன என்றும் எடுத்து விளக்க முடியும். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தின் நிர்ணயிக்கும் காரணிகளை அடையாளம் கண்டு கொள்வது தொடர்பான பிரச்சினை (அவதானிக்கப்பட முடியாத) சுயதேவை நிலைகளின் தளத்திலிருந்து (அவதானிக்கக் கூடிய) குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருட்களின் உற்பத்திப் பொறிமுறைகளின் குணாம்சங்களுக்கு மாற்றப்படுகிறது. அத்துடன், நாடுகளின் மூலவள செல்வமும் இதில் இடம் பெறுகிறது.

இந்த சூத்திரத்தினை இருநாடுகள், இரு உற்பத்திப் பொருட்கள் என்ற மாதிரி உருவுக்கப்பால் விஸ்தரிப்பது மிகக் கடினமானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, காரணிகளை விடவும் அதிக உற்பத்திப் பொருட்களை உள்ளடக்கியதாக இருக்கும் ஒரு மாதிரியுருவைப் பொறுத்தவரையில் ஹெக்ஸ்சர்-ஓலின் மாதிரிக் கூற்றினை நிலை நிறுத்த முடியாது. இரு காரணிகளையும் உற்பத்திப் பொருட்களையும் அடிப்படையாகக் கொண்ட மாதிரி உருவொன்றில் "ஒப்பீட்டு அனுகூலச் சங்கிலியின் பலம் குன்றிய பல கண்ணிகள்" கண்டறியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இவையும் இவற்றையொத்த ஏனைய கண்டுபிடிப்புக்களும் நாட்டு காரணிச் சொத்து அம்சத்துக்கும், உற்பத்திக் காரணிச் செறிவுக்கும், வியாபாரப் போக்குக்கும் இடையிலான முறையான உறவு இரு நாடுகள் இருகாரணிகள் மற்றும் இரு உற்பத்திப் பொருட்கள் என்ற எளிய அமைப்பு முறை விரிவாக்கப்பட்ட உடனேயே முறிந்து விடுகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

சர்வதேசப் பொருளாதாரம் குறித்த எழுத்தாக்கங்களில் காரணிவிகிதங்கள் கோட்பாடு குறித்த இரண்டு பலம் குன்றிய கருத்து விளக்கங்கள் கிடைக்கின்றன. இதில் சம்பந்தப்பட்டுள்ள எடுகோள்கள் மற்றும் இந்தக் கருத்து விளக்கங்களின் சிக்கலான தன்மை என்பவற்றின் காரணமாக, சர்வதேச வர்த்தக கட்டமைப்பினை விளக்குவதில் அவற்றுக்குள்ள ஆற்றல் குறைவடைந்துள்ளது. இன்றும் கூட சர்வதேச வர்த்தகத்தை முழுஅளவில் விளக்கக் கூடிய மிகச் சரியான கோட்பாடொன்று கிடைக்கவில்லை. எனவே, காரணி விகிதங்கள் கோட்பாட்டின் பொதுவான செல்லுபடியாகும் தன்மையை (ஏனைய கூற்றுக்களின் ஆற்றல் குறைந்து காணப்படும் ஒரு நிலையில்) நிலை நிறுத்தக் கூடியதாக உள்ளது. அது முதலில் சர்வதேச சிறக்குமியல்புகளை பொருள் விளக்கம் செய்யும் மாதிரிகளுக்கான உலகம் தழுவிய ரீதியில் பிரயோகிக்கக் கூடிய கோட்பாட்டு ரீதியான சட்டகமொன்றை வழங்குகிறது. சர்வதேச ஒப்பீட்டு அனுகூலத்தை நிர்ணயம் செய்வதில், முற்றுமுழுதான திறமையிலும் பார்க்க, ஒப்பீட்டு ரீதியான திறமையே முக்கியமான பங்கினை வகிக்கின்றன என்ற கருதுகோள் தர்க்க ரீதியில் தோற்கடிக்கப்பட முடியாத ஒன்றாகும். அத்துடன், அனுபவத்திலிருந்து பெற்ற படிப்பினைகளின் ஆதரவும் அதற்குக் கிடைக்கிறது. விவேக பூர்வமான கொள்கைகளின் உருவாக்கத்துக்கான வழிகாட்டுதலுக்கான இயற்கை மூலமொன்று என்ற முறையில், ஒப்பீட்டு அனுகூல மாதிரியை உபயோகப்படுத்துவதற்கான உறுதியான விவாதமே இந்த தர்க்கவியல் கூறாகும். கொள்கை வகுப்போர் இந்த அடிப்படைக் கோட்பாட்டினைப் புறக்கணித்தால், சிந்தனையற்ற ஒரு செயலைச் செய்தவர்களாகவே இருக்க முடியும். இன்றைய உண்மையான உலகில்-பல நாடுகளையும், பல காரணிகளையும், பல உற்பத்திப் பொருட்களையும் கொண்ட உலகில் - இந்தக் கோட்பாட்டின் செல்லுபடியாகும் தன்மை உடனடியாக, தெளிவாக புலப்படவில்லை என்பது உண்மைதான். இது, இருகாரணிகளைப் பயன்படுத்தி, இரு பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு மாதிரி உலகத்துக்கு பிரயோகிக்கப்படும் போதே மிகவும் தெளிவாக புலப்படும் ஒன்றாக இருந்து வருகின்றது.

காரணி விகிதங்கள் கோட்பாட்டின் ஒரு வேறுபட்ட வடிவத்தை நான் முன்வைக்க விரும்புகின்றேன். அதாவது, ஒரு நாடு, அதனிடத்தில் அபரிமிதமாகக் காணப்படும் உற்பத்திக் காரணிகளை மிகவும் செறிவான முறையில் பயன்படுத்தும் உற்பத்திப் பொருட்களில், அது ஒப்பீட்டு அனுகூலத்தை அனுபவித்து வருகிறதென்பதாகும். உதாரணமாக, இரு நாடுகள் இரு காரணிகளை (ஊழியத்தையும், மூலதனத்தையும்) பயன்படுத்தி இரு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் போது மூலதனம் அபரிமிதமாக உள்ள நாடு மூலதனச் செறிவு மிக்க பொருட்களை ஏற்றுமதி செய்யும் என்பதும், ஊழியம் அபரிதமாகக் காணப்படும் நாடு, தொழில் செறிவு மிக்க பொருளை ஏற்றுமதி செய்யுமென்பதும் நிலை நிறுத்தப்படும்.

எனினும், இக்கோட்பாட்டினை அனுபவத்துடன் பொருத்திப் பார்க்கும் போது, இந்த அசல் அனுமானத்தின் எளிய போக்கினை, கடுமையான முரண்பாடுகளுக்குட்படுத்தும் பிரச்சினைகள் தோன்றுகின்றன. 1947 இல் ஐக்கிய அமெரிக்க ஏற்றுமதிகளில் ஊழியத்துக்கான மூலதன விகிதம் போட்டி போடும் இறக்குமதிகள் தொடர்பான விகிதத்திலும் பார்க்க குறைவாக இருந்தது என்ற லியோன்டீப் என்பவரின் முரண்பாடுமிக்க கண்டுபிடிப்பு கடந்த மூன்று தசாப்தகாலமாக கோட்பாட்டு ரீதியான ஆராய்ச்சியையும் தூண்டிவந்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்புக்கு வழங்கப்பட்ட பல்வேறு விளக்கங்கள், இயற்கை மூலவளங்கள், காரணிச் செறிவு எதிர்மறையில் இருப்பதற்கான சாத்தியப்பாடு, மனித மூலவளம் மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றின் புறக்கணிப்பு போன்ற அத்தியாவசியமான மாறிகள் விடுபட்டுப் போயிருப்பதனையும் சுட்டிக்காட்டின. பரீட்சார்த்தங்களின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், முக்கியமான சில பிரச்சினைகளை எழுப்பியுள்ளன. குறிப்பாக, ஒப்பீட்டு அனுகூலத்தின் நிர்ணயக்காரணிகள் என்ற முறையில் (ஊழியத்துக்கும், பௌதிக மூலதனத் துக்கும் மேலதிகமாக) மனித மூலதனத்தினதும், தொழில்நுட்பத்தின

தும் பங்கினை அவை எடுத்துக் காட்டின. இப்பொழுது ஒப்பீட்டு அனுகூலத்தின் ஏனைய முக்கிய நிர்ணய காரணிகளின் மீது கவனம் செலுத்துவோம்.

## 2. ஒப்பீட்டு ரீதியான போட்டி அனுகூலத்தை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோள்

### 2:1 நிலையான போட்டி அனுகூலத்தின் நிர்ணயக் காரணிகள்

நாடுகளின் நிலையான ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்தை மதிப்பிடுவது எப்படி? வியாபாரச் செயற்பாட்டுக்கும் ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்துக்கும் இடையில் காணப்படும் அனுமான ரீதியான உறவு நிலை காரணமாக, வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு ரீதியான அனுகூலம் "Revealed Comparative Advantage" (RCA) என்ற வடிவம்

**அட்டவணை 1**
**கைத்தொழில் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூலத்தின் காரணி வெளிப்பாடு**

| | | மொத்த மூலதன வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | கைத்தொழில் | 1963 | 1971 | 1980 |
| 633 | கோர்க் உற்பத்தியாளர்கள் | – 0.199 (81) | –0.182 (75) | –0.176 (71) |
| 641 | கடதாசி, கடதாசி அட்டை | 0.362 (26) | 0.363 (33) | 0.365 (23) |
| 642 | கூழ் பொருட்கள், கடதாசி அல்லது அட்டை | 0.394 (21) | 0.317 (38) | 0.068 (50) |
| 651 | புடவை மற்றும் நூல் | 0.194 (55) | –0.067 (68) | –0.173 (72) |
| 652 | பருத்தி உற்பத்திகள் | –0.122 (77) | –0.408 (88) | –0.406 (35) |
| 653 | பருத்தியல்லாத புடவை | –0.101 (75) | –0.120 (73) | –0.109 (69) |
| 654 | சரிகை, லேஸ், ரிப்பன் என்பன | 0.105 (62) | 0.202 (49) | 0.073 (49) |
| 655 | விஷேச புடவைத் தயாரிப்புக்கள் | 0.125 (59) | 0.138 (54) | 0.034 (54) |

மிகப் பொருத்தமானதாகத் தென்படுகிறது. வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு ரீதியான அனுகூலம் என்பது ஒரு நாட்டின் சாதாரண ரீதியான தேறிய ஏற்றுமதிகள் என்று வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு நாட்டின், குறிப்பிட்ட ஓர் உற்பத்தியின் தேறிய ஏற்றுமதியை சாதாரண நிலையில் ஒழுங்குபடுத்துவது என்பது, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின், நாட்டின் மொத்த வியாபாரப் பெறுமதியையும் உலக வர்த்தகத்தில் அந்த உற்பத்திப்பொருள் பெற்றுள்ள பலத்தினையும் குறிப்பதாக உள்ளது. அதாவது:

(RCA ij= {Aij - Mij} / {TMj (Tmw)}

X = ஏற்றுமதிகள்; M = இறக்குமதிகள்; i = உற்பத்திகள்; j = நாடு; m = கைத்தொழில் ரீதியாக முறைப்படுத்தப்பட்ட பொருட்கள் என்றும் நடுத்தரப் பொருட்கள் என்றும் ஒரு பரந்த அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்படும் மொத்தத் தயாரிப்புப் பொருட்கள்; w உலகம்; T = (X + M) / 2

தயாரிக்கப்பட்ட பொருட்களின் நிலையான ஒப்பீட்டுரீதியான அனுகூலத்தின் மீது மூலவளங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு, முதலில் ஊழியம், மூலதனம் போன்ற பாரம்பரியக் காரணிகள் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். மேலும், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மனித அல்லது தொழில்நுட்ப மூலவளங்களிலிருந்து பெறப்படும் காரணி உள்ளீடுளும் முக்கியமான இணை நிர்ணயக் காரணிகளாக கருதப்பட்டு வருகின்றன. நிலையான ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்துக்கும் பொருளாதார அபிவிருத்தி மட்டத்துக்குமிடையில் காணப்படும் தொடர்பு நிலை குறித்த அவதானிப்புக்களை வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்துக்கும் உற்பத்திக் காரணி வாய்ப்பு நிலைக்கும் இடையில் காணப்படும் உறவு நிலையின் அடிப்படையில் மிகத் தெளிவாக விளக்க முடியும்.

பௌதீக மூலதனத்திலான ஒரு நாட்டின் உற்பத்தி வளம், ஓர் ஊழிய அலகுக்கான மூலதன விகிதங்களில் அளவிடப்படுகிறது. அதேபோல திறனையும், தொழில் நுட்ப வளத்தையும் அளவிடுவதற்கான பல்வேறு வழிமுறைகள் உள்ளன. நாடுகளுக்கிடையிலான மூலவளங்களின் பகிர்வினை, நிலையான ஒப்பீட்டு ரீதியான அனுகூல மாதிரியுடன் தொடர்புபடுத்துவதற்காக பல்வேறு முறைகள் பயன்படுத்தப்பட முடியும். ஒப்பீட்டு அனுகூலத்தை நிர்ணயம் செய்வதில் பொருத்தமான, குறித்துரைக்கப்பட்ட மாதிரி உருவொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணடிப்பான பொருளாதார அளவீட்டுப் பகுப்பாய்வொன்றினை இது தொடர்பான மிகச் சிறந்த வழிமுறை கொண்டுள்ளது. அத்தகைய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்படும்போது, பல்வேறு தரவுகளையும் பொருளாதார அளவீட்டுப் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விவரங்களை வழங்கக்கூடிய புள்ளி விபரவியல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில், பயன்படுத்தப்படும் முறை வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூலத்தின் காரணி வெளிப்பாடு என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், அது கேத்திரகணித முறையில் உருவான ஆராய்ச்சியைத் தூண்டும் ஒரு வழியில், மூலவளங்களுக்கும் வர்த்தகப் போக்குகளுக்கும் இடையில் காணப்படும் இணைப்பினை சுட்டிக் காட்டுகிறது. மேலும், காரணி வெளிப்பாடு சுட்டெண்கள் பெறப்படும் நடைமுறை, பொதுவான காரணி விகிதங்கள் கோட்பாட்டின் சூத்திரங்களுடன் தொடர்புபட்டவையாக உள்ளன. இந்தச் சுட்டெண்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும் பொருள் தொகுதிகளுக்கான காரணி மிதமிஞ்சிய நிலைக்கும், ஒப்பீட்டு அனுகூலத்துக்கும் இடையிலான உறவு குறித்த சில விளக்கங்களைத் தருகின்றன. சராசரி மனித திறன்களும், தொழில் நுட்பங்களும் ஒப்பீட்டு அனுகூலத்தை நிர்ணயம் செய்யும் காரணிகளில் பௌதீக மூலதனத்தை விடவும் மிக முக்கியமான இடத்தை வகித்து வருகின்றன என்பதனை இந்த ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. எனவே, காரணி விகிதங்கள் கோட்பாட்டின் திருத்தியமைக்கப்பட்ட ஒரு வடிவம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச வர்த்தகத்தின் புதிய காரணி விகிதக் கண்ணோட்டமென்று அழைக்கப்படுகிறது. இந்த விஷயத்தில், மூலதனத்துடன் இணைந்து மனிதத்தேர்ச்சிகளும் தொழில்நுட்பமும் தனியொரு கூட்டாக கருதப்படுகின்றன. ஒரு நாட்டின் சார்புரீதியான மூலவளக் கொடைகளை மதிப்பீடு செய்யும்

பொருட்டு, இந்தப் பரந்த மூலவளம் ஊழியத்துடன் ஒப்பிடப்படுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால், அத்தகைய பகுப்பாய்வொன்றின் முடிவுகளை, நிலையான ஒப்பீட்டு அனுகூலத்தின் கட்டமைப்பை விளக்குவதில் காரணிச் செறிவும் காரணி வளமும் வகிக்கும் முக்கியமான பங்குக்கான அனுபவ ரீதியான சாட்சியங்களாக கொள்ளமுடியும்.

## 2 : 2 இயக்கவிசை மிகுந்த ஒப்பீட்டு அனுகூலமும் போட்டித் திறனும்

மேற்போந்த பகுப்பாய்வு தவிர்க்க முடியாத வகையில் பின்வருவன தொடர்பான பிரச்சினைகளுக்கு எம்மை இட்டுச் செல்கின்றது:

(1) காலப்போக்கில் வர்த்தக மாதிரிகளில் ஏற்படும் மாற்றங்கள். (2) மூலவளப் பகிர்வில் ஏற்படும் மாற்றங்கள். (3) (1) இற்கும் (2) இற்கும் இடையில் நிலவும் உறவு. உண்மையில், இயக்க விசை மிகுந்த வர்த்தகக் கோட்பாடொன்று இல்லாதிருப்பதனால், வர்த்தக மாதிரிகளில் காலப்போக்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்த நடைமுறை ஆய்வுகள், கண்டிப்பான முறையில் பெறப்பட்ட அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதில்லை. மாறாக அவை உள்ளுணர்வால் உணரப்பட்ட அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன. ஒப்பீட்டு அனுகூலத்தில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை அளவிடுவதற்கு உகந்த மாதிரியாக வர்த்தகத்தின் நிலையான பண்டத் தொகுப்பு முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த ஒப்பீட்டு ரீதியான அனுகூலம் ஒரு நாட்டின் காரணி வளங்களின் மாற்றங்களின் அடிப்படையில் நோக்கப்படுகிறது. இதன் விளைவாக, ஒரு நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் வர்த்தகத்தின் மாறிவரும் உள்ளடக்கம், அதன் பொருளாதார அபிவிருத்திப் பாதையில், ஒப்பீட்டு அனுகூலத்தின் ஒன்றன்பின் ஒன்றான படிகளுக்கு ஊடாக அந்த நாடு சென்று கொண்டிருக்கிறது என்பதனைப் பிரதிபலிக்கின்றது. தொழில்நுட்ப இடைவெளிக் கோட்பாடு அல்லது சர்வதேச வர்த்தகத்தின் உற்பத்திச் சுழல் மாதிரி உரு

**அட்டவணை 2**

**ஏற்றுமதிகளின் மொத்த காரணி வெளிப்பாடு**

| நாடு | மொத்த மூலதன ஏற்றுமதிகளின் வெளிப்பாடு 1963 | 1980 | மொத்த மூலதன வெளிப்பாட்டில் மாற்றம் சதவீதம் |
|---|---|---|---|
| ஹொங்கொங் | −0.086 (41) | −0.235 (30) | −0.149 |
| அயர்லாந்து | 0.022 (31) | 0.102 (20) | 0.080 |
| ஜப்பான் | 0.167 (12) | 0.258 (4) | 0.091 |
| பாகிஸ்தான் | −0.061 (39) | −0.179 (40) | −0.118 |
| போர்த்துக்கல் | 0.051 (22) | −0.079 (35) | −0.130 |
| ஸ்பெயின் | 0.073 (20) | 0.143 (16) | 0.070 |
| டியுனீசியா | 0.043 (23) | −0.114 (39) | −0.157 |

**ஆதாரம் :** ஐ.நா. தரவுகள் தொகுப்பு

ஊழிய அலகொன்றுக்கான பௌதீக மூலதனம், தேர்ச்சிபெற்ற தொழில்நுட்பம் = கூட்டு மொத்த காரணி என்று வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

போன்ற ஏனைய அணுகுமுறைகள் வர்த்தக மாதிரிகளின் இயக்கவிசை மிகுந்த இயற்கையான குணாம்சங்களை வலியுறுத்துகின்றன. தொழில் நுட்ப இடைவெளிக் கோட்பாடு, ஒப்பீட்டு அனுகூலத்தில் நிலவும் மாற்றங்களின் பின்னாலுள்ள உந்து சக்தி என்ற முறையில் தொழில் நுட்ப ரீதியான கண்டுபிடிப்புக்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. உற்பத்திச் சுழல் கோட்பாடு அத்தகைய மாற்றங்களை கைத்தொழில்களின் வாழ்க்கை வட்டங்களிலுள்ள ஒன்றன் பின் ஒன்றான கட்டங்களுடன் தொடர்புபடுத்துகிறது.

ஓர் அடிப்படையான, பரீட்சார்த்த ரீதியான கேள்வி நிலையான நிலைமைகளின் குணாம்சங்களை விளக்குவதற்கு பிரிவு 2 : 1 இல் விவரிக்கப்பட்ட பல்வேறு வழிமுறைகள் மற்றும் குறிகாட்டிகள் என்பவற்றை ஒப்பீட்டு அனுகூலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை விளக்குவதற்கு பயனுள்ள முறையில் உபயோகிக்க முடியுமா என்பதாகும். வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூலத்தின் கூட்டு மொத்தக் காரணி வெளிப்பாட்டினைப் பொறுத்த வரையில், இதற்கான விடை "ஆம்" என்பதாகும். வெ.ஒ.அ. சுட்டெண் கைத்தொழில் ஒன்றின் ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்தின் மூலவளச் சார்பினை, பல்வேறு காலப்பிரிவுகளுடன் ஒப்பிட்டு நோக்குவதற்கு இடமளிக்கிறது. வெ.ஒ.அ. வின் காரணி வெளிப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் பொதுவாக பல்வேறு முனைப்புமிக்க நிகழ்வுப் போக்குகளின் விளைவாகவே ஏற்படுகின்றன. வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூலத்தின் காரணி வழிப்படுத்தலில் பல்வேறு கூறுகளிலும் ஏற்பட்டுவரும் மாற்றத்தினை, அந்த மாற்றங்கள் எத்தகைய வழிகளில் ஏற்படுகின்றன என்பதனை பரிசீலனை செய்வது இங்கு அவசியமாகும். நாடுகளுக்கிடையிலான உறுதியான மூலவளப் பகிர்வு குறிப்பிட்டதொரு உற்பத்திப் பொருளின் காரணித் தொகுப்பில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற எளிமையான விஷயத்தை ஒரு துவக்கப் புள்ளியாகக் கொண்டு, வர்த்தக மாதிரிகளில் உற்பத்தி மாதிரி இயக்க விசை செயல்பட்டு வரும் முறையை விளக்கமுடியும். உதாரணமாக, மனிதத் தேர்ச்சிக் காரணி தனியாகக் கவனத்தில் எடுக்கப்பட்டால், குறிப்பிட்ட உற்பத்திப் பொருளின் கட்டம் கட்டமான நிலைமாற்றம் படிப்படியான தேர்ச்சிக் குறைவு நிலையொன்றுடன் சேர்ந்து வரக்கூடிய வாய்ப்பு உள்ளது. சர்வதேச வர்த்தகத்தின் உற்பத்திச் சுழல் மாதிரி உருவின் பிரகாரம் தேர்ச்சிச் செறிவில் ஒரு வீழ்ச்சி நிலை காணப்படுகிறது. ஆகவே, இந்த நிலையில் ஒப்பீட்டு அனுகூலம் குறைந்த அளவில் தேர்ச்சிகளைக் கொண்டிருக்கும் நாடுகளை நோக்கி நகர்ந்து செல்லக் கூடியதாக உள்ளது.

காரணி வழிப்படுத்துதல் செயல் முனைப்பின் இரண்டாவது கூறு, ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திப் பாதையில் காணப்படும் ஒப்பீட்டு அனுகூல கட்டங்கள் குறித்த கருதுகோளுடன் தொடர்புபட்டதாகும். ஒரு நாட்டின் ஒப்பீட்டு அனுகூலத்தின் பண்டத் தொகுப்பு காலப்போக்கில் மாற்றமடைகிறதென்ற கருத்தினையே இந்தக் கருதுகோள் வெளிப்படுத்துகிறது. பொருள் மூலதனத்தை குவித்துக் கொள்வதன் விளைவு, மனித மூலதன

உருவாக்கம், நவீன தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான நிகழ்வுப் போக்குகள் என்பன இதில் அடங்குகின்றன. இதற்கிணங்க காலம் செல்லச் செல்ல ஒரு நாடு அதிக மூலதனச் செறிவுமிக்க முறையிலும், அதிகளவு தேர்ச்சிச் செறிவு மிக்க முறையிலும் நவீன தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் மூலமும் அதன் ஒப்பீட்டு அனுகூலத்தை அதிகரித்துக் கொள்ள முடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒப்பீட்டு அனுகூலத்தின் கட்டங்கள் – அவை பொதுவாக தனிப்பட்ட ஒரு நாட்டின் வர்த்தக மாதிரியுடன் பொருந்தக் கூடியதாக இருந்த போதிலும் – வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூலத்தின் குறிப்பிட்ட சில காரணிகளில் கைத்தொழில்களில் ஏற்படும் மாற்றங்களில் மறைமுகமாக பிரதிபலிக்கப்படுகின்றன.

அட்டவணை 1 கைத்தொழிலில் காணப்படும் சர்வதேச ஒப்பீட்டு அனுகூலத்தின் இயக்குவிசையினைக் காட்டுகின்றது. கடந்த இரண்டு தசாப்த காலம் முழுவதிலும் நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டு அனுகூலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், பல கைத்தொழில்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதனை இந்தப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இந்த நகர்வுகளின் இயல்பினை விளங்கிக் கொள்ளும் பொருட்டு, நேரடி உண்மைகள் அனுமான எதிர்பார்ப்புக்களுடன் எவ்வளவு தூரத்துக்குப் பொருந்திச் செல்கின்றதென்பதைக் கண்டறிதல் அவசியமாகும். சர்வதேச ஒப்பீட்டு அனுகூலத்தின் கட்டமைப்பில் ஏற்பட்டு வந்துள்ள கடந்த கால மாற்றங்களை விளக்குவதற்கூடாக, எதிர்கால முன்னேற்றங்கள் குறித்த ஒரு கருத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஒப்பீட்டு அனுகூல மாதிரிகளின் முக்கிய அம்சங்களை, ஒரு தனி நாட்டின் அடிப்படையிலும் வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூலத்தின் கூட்டுமொத்த காரணி வெளிப்பாட்டினை உபயோகிப்பதன் மூலம் ஒரு கைத்தொழில் அடிப்படையிலும் நோக்கப்பட முடியும். ஒரு காலப்பிரிவின் தொடக்கத்தின் போதும் முடிவின் போதும் சுட்டெண்ணின் பெறுமதியில்

அட்டவணை 3

ஆர்ஜன்டீனா

| உற்பத்தி தொகுதி | | ஏற்றுமதிகளில் உற்பத்திகளின் அடக்கம் (சதவிகிதம்) 1970-1972 | 1981-1983 | இறக்குமதிகளில் உற்பத்திகளின் அடக்கம் (சதவிகிதம்) 1970-1972 | 1981-1983 | வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு ரீதியான அனுகூலம் (சுட்டெண்) 1970-1972 | 1981-1983 |
|---|---|---|---|---|---|---|---|
| 011-013 | இறைச்சி மற்றும் இறைச்சி தயாரிப்புக்கள் | 46.17 | 17.53 | 0.00 | 0.22 | 17.12 | 9.72 |
| 022-024 | கால்நடை உற்பத்திகள் | 1.33 | 0.96 | 0.18 | 0.21 | 0.88 | 0.63 |
| 032 | மீன் தயாரிப்புக்கள் | 0.02 | 0.03 | 0.01 | 0.07 | 0.00 | 0.23 |
| 0422 | அரிசி – மெருகூட்டப்பட்டது | 0.40 | 0.29 | ... | ... | ... | 1.20 |
| 046 | கோதுமையின் மாவும் உணவும் | 0.73 | 0.14 | 0.00 | 0.00 | 6.65 | 1.39 |
| 048 | தானிய தயாரிப்புக்கள் | 0.36 | 0.24 | 0.00 | 0.07 | 1.09 | 0.51 |
| 052 | உலர்த்தப்பட்ட பழங்கள் | 0.36 | 0.23 | 0.03 | 0.02 | 2.90 | 2.48 |
| 053 | பழ தயாரிப்புக்கள் | 1.03 | 1.09 | 0.14 | 0.13 | 1.76 | 2.39 |
| 055 | மரக்கறிகள், வேர்கள் என்பன | 0.48 | 0.43 | 0.01 | 0.10 | 1.27 | 1.14 |

ஆதாரம்: ஐ.நா. தரவுகள் தொகுப்பு

காணப்படும் வித்தியாசம் ஒவ்வொரு நாட்டினதும் தயாரிப்புப் பொருட்களின் ஏற்றுமதிகளில் காணப்படும் காரணித் தொகுப்பின் கூட்டுமொத்த மாற்றத்தின் அளவீடாகும். சராசரியாக அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள நாடுகளைப் பொறுத்த வரையில் இந்த மாற்றம் சற்று எதிர் மறையானதாக இருந்து வந்துள்ளது. டியுனீசியா, ஹொங்கொங், போர்த்துக்கள் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ளன. அதே வேளையில் ஜப்பான், அயர் லாந்து, இஸ்ரேல், ஸ்பெயின் போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்க ஏறுமுகப் போக்குகளைக் காட்டியுள்ளன. பல வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில், ஏற்றுமதிகளின் தொகுப்பு கைத்தொழில்களுக்குச் சார்பான முறையில் தெளிவாகவே மாறி வந்துள்ளது. நியாயமானளவில் மூலதனங்களைப் பெற்றிருக்கும் நாடுகள் இந்த நிலையில் பொதுவாக ஒப்பீட்டு அனுகூலத்தைப் பெறுகின்றன.

இயக்கவிசை மிகுந்த ஒப்பீட்டு அனுகூலம் அனைத்துக் காரணி வளங்களிலும் சாதகமான மாற்றங்களை எடுத்து வருகின்றதென்பது இப்பொழுது தெளிவாகத் தெரிகின்றது. பௌதீக மூலதனம், திறன்கள் மற்றும் தொழில் நுட்பம் ஆகிய அனைத்துக் காரணிகளிலும் இது மாற்றங்களை எடுத்துவருகிறது. காரணி வளங்களில் ஏற்படும் இந்த மாற்றங்கள் ஒரு நாட்டின் போட்டித் திறனை நிர்ணயிக்கும் முக்கியமான காரணிகளாக உள்ளன. ஆகவே, இயக்க வேகம் மிகுந்த, உறுதியான ஒப்பீட்டு அனுகூலம், ஒப்பீட்டுப் போட்டி அனுகூலத்துக்கு சமமானதாகும். எனவே, ஒரு நாட்டின் ஒப்பீட்டு ரீதியான போட்டி அனுகூலத்தை காலத்தின் இரு புள்ளிகளில் வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூல சுட்டெண்ணின் நடத்தையைக் கண்டறிவதன் மூலம் அளவிட முடியும். இதனை பல்வேறு பொருட்களுக்குமாக, நாடுகள் வாரியாக ஒருவர் பார்க்க முடியும். ஆர்ஜென்டீனாவின் உதாரணம் அட்டவணை 3 ல் தரப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருளைப் பொறுத்தவரையில் அதன் வெளியிடப்பட்ட ஒப்பீட்டு அனுகூலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம், ஒப்பீட்டு ரீதியான போட்டி அனுகூலம் தொடர்பான தற்போதைய நிலை குறித்த முடிவொன்றை வழங்கும் பொருட்டு பிறிதொரு நாட்டின் அத்தகைய மாற்றத்துடன் ஒப்பிடப்பட முடியும்.

ஒப்பீட்டு அனுகூலம் குறித்த விதி, வியாபார உலகொன்றில் எந்த ஒரு நாடும் அனைத்துக் கைத்தொழில்களிலும் (அல்லது பண்டங்களிலும் அல்லது பொருள் தொகுதிகளிலும்) சர்வதேச ரீதியில் போட்டித்திறன் பெற்றதாக இருக்குமென்பதை எதிர்

பார்க்க முடியாது என்ற விஷயத்தை வெளிப்படுத்துகிறது, ஏனெனில், குறிப்பிட்ட ஒரு கைத்தொழிலில் ஒரு நாடு அல்லது நாடுகளின் ஒரு குழு ஒப்பீட்டு அனுகூலத்தைப் பெறும் போது, பிறிதொரு நாடு அல்லது நாடுகளின் குழு அக்கைத்தொழிலில் பெற்றிருக்கும் போட்டியிடும் ஆற்றலை இழக்க வேண்டியுள்ளது.

### 3. போட்டித்திறனை நிர்ணயிக்கும் காரணிகள்

பொருளாதாரக் கொள்கை உருவாக்கத்தில் ஒப்பீட்டு அனுகூல விதி விரிவான ஒரு பங்கினை வகிக்க வேண்டுமென்ற ஒரு நிலைப்பாட்டை ஆதரித்து வருபவர்கள், சர்வதேசப் போட்டித் திறனை உருவாக்கும் பிரதான கருவி என்ற முறையில் வர்த்தகத் தாராளமயமாக்கலையே வழமையாக எடுத்துக்காட்டி வருகிறார்கள். வர்த்தகத் தாராளமயமாக்கலையடுத்து இடம் பெறும் சந்தைச் சக்திகளின் தளைகளற்ற இயக்கம் தானாகவே ஒரு நாட்டின் நிலையான போட்டி அனுகூலத்துக்கு உயிரூட்டி விட முடியுமா? இதற்கான விடை "இல்லை" என்பதாகும். ஏனெனில், காரணி, பண்டம் மற்றும் தொழில் நுட்பச் சந்தைகளில் பரவலான பல சந்தைக் குறைபாடுகள் காணப்பட்டு வருகின்றன. ஆகவே, (கைத்தொழில் உத்தி ஒன்றின் வழியாக) சந்தைச் சக்திகளின் செயற்பாட்டை நவீனமயப்படுத்துவதற்கூடாக, போட்டித்திறன் அனுகூலத்தை உருவாக்குவதில் ஒப்பீட்டு ரீதியான செலவு விதி அவசியமாகும். அந்த நிலையில் மட்டுமே ஒப்பீட்டு ரீதியான போட்டித் திறன் அனுகூலத்தை வென்றெடுக்க முடியும். குறிப்பிட்ட சில கைத்தொழில்களில் நேரடியாக அல்லது மறைமுகமாக சர்வதேசப் போட்டித் திறனில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய உள்ளார்ந்த ஆற்றலை அரசு கொண்டுள்ளது. போட்டித்திறன் அனுகூலம் குறித்த கோட்பாட்டு விதியின் சில முடிவுகளையும் முன்வைக்க முடியும். எனினும் இவை போட்டித்திறனின் தன்னிச்சையான போக்குக்கு தெளிவாகவே இடமளிப்பவையாக உள்ளன. காரணி விகிதங்கள் கோட்பாட்டின் பொதுவான விளக்கத்தின் படி, வர்த்தக மாதிரிகள் ஒரு நாட்டின் காரணிச் சொத்துக்களுக்கும் உற்பத்திக் காரணிச் செறிவுக்கு மிடையிலான பரஸ்பர தொடர்பினை பிரதிபலிக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட கைத்தொழிலிலான ஒரு நாட்டின் போட்டி ரீதியான அனுகூலம் அதன் சார்பு ரீதியான மூலவளச் சொத்துக்களினால் சந்தேகமற்ற முறையில் நிர்ணயிக்கப்படுவதில்லை. அது வேறு பல காரணிகளில் தங்கியுள்ளது. அத்தகைய காரணிகளில் அரசாங்கக் கொள்கைகளுடன் தொடர்புபட்ட காரணிகள், சர்வதேச போட்டித்திறனின் அமைப்பில் பொதுவாக கணிசமானளவு தாக்கத்தைக் கொண்டுள்ளன. போட்டி அனுகூலம் வழங்கப்படுவதில்லை; (குறைந்தது ஓரளவுக்கேனும்) உருவாக்கப்படுகின்றது என்ற கூற்று அதனை வடிவமைப்பதற்கான கொள்கை விருப்புக்களை வலியுறுத்துவதாக உள்ளது.

கைத்தொழில்மயமாக்கல் குறித்த சமீபத்திய ஆராய்ச்சிகள், தேசிய மட்டத்தில் வெற்றிகரமான கைத்தொழில்மயமாக்கல் ஊக்குவிப்புக்கள், மற்றும் வழங்கல் தொடர்பான காரணிகள் என்பவற்றுக் கிடையிலான பரஸ்பர செயற்பாடுகளின் விளைவாகவே உருவாகின்றதென்பதனை எடுத்துக் காட்டியுள்ளன. வழங்கல் பக்கத்தில் – அதாவது, காரணி, பண்டம் மற்றும் தொழில்நுட்பச் சந்தை என்பவற்றில் – பரவலான சந்தைத் தோல்விகள் இருக்க முடியும் என்பதனை இந்தக் கோட்பாடு அங்கீகரிக்கிறது. எனவே, இத்தகைய தோல்விகளை சீர்படுத்திக் கொள்ளும் பொருட்டு, சரியான விலை ஊக்குவிப்புக்களுக்கு மேலதிகமாக தேர்ந்தெடுத்த தலையீடு அவசியமாக உள்ளது. இத்தகைய உபாயமொன்றுக்கு ஊடாகவே வெற்றிகரமான சர்வதேச போட்டியொன்றுக்கான ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்தை வென்றெடுக்க முடியும். வழங்கல் பக்கக்காரணிகள், ஆற்றல்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. ஆற்றல்கள் என்பன அனைத்து விதமான – அதாவது, தொழில்நுட்ப, தொழிற்றுணிபு மற்றும் முகாமை என்பவற்றை உள்ளடக்கிய – மனிதத் தேர்ச்சிகளை அடக்கியதாக உள்ளன. அதேவேளையில், கைத்தொழில் ஆற்றல்களின் அபிவிருத்தியில் சந்திக்கும் குறித்துரைக்கப்பட்ட சில சந்தைத் தோல்விகளை வெற்றி கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்ட அமைப்புக்களே "நிறுவனங்கள்" என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றன. இந்தக் கருத்தினை சற்றுவிரிவாக நோக்குவோம்.

சர்வதேச போட்டியிடும் திறனைப் பேணும் பொருட்டு செலாவணி விகிதம், தீர்வை மற்றும் மானிய வழிமுறைகள் என்பன மூலம் விலைகளை சரியான நிலையில் வைத்தருப்பதே ஊக்குவிப்பு என்பதன் பொருளாகும். விலைச் சமிக்ஞைகளும், போட்டியும் ஆரோக்கியமான கைத்தொழில் வளர்ச்சியொன்றுக்கான மிக முக்கியமான தூண்டுகோல்களாக இருந்து வருகின்றன. எனினும், ஊக்குவிப்புக்கள், கைத்தொழில் அபிவிருத்திக்கான அவசியமான ஒரு நிபந்தனையாக இருந்த போதிலும், அதுமட்டுமே ஒரு போதுமான நிபந்தனை அல்ல என்பது இங்கு குறிப்பிடப்படுதல் வேண்டும். சரியான ஊக்குவிப்புக்கள், சுதந்திரச் சந்தை வழங்கும் விலைகளிலிருந்தும் வேறுபட்டுச் செல்லக்கூடும். எனவே, ஊக்குவிப்புக்கள் மட்டும் போட்டிக்கு அவசியமான வழங்கல் பக்கக் காரணிகளை உருவாக்காமல் இருக்கமுடியும். நாட்டு மட்டத்திலான போட்டி ஊக்குவிப்புக்கள், ஆற்றல்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலான பரஸ்பர செயல்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுவதாக உள்ளது. ஒவ்வொரு தொகுதிக் காரணிகளிலும் அவற்றின் பரஸ்பர நடத்தைகளிலும் நிகழக்கூடிய சாத்தியமான சந்தைத் தோல்விகளை கவனத்தில் எடுப்பவையே பொருத்தமான கைத்தொழில் உத்திகளாகும்.

தொழில் வளர்ச்சிகண்ட நாடுகளில் கைத்தொழில்களின் செயலாற்றுகையின் உற்பத்தித் திறன் வளர்ச்சி, போட்டியிடும் ஆற்றல் என்பவற்றில் காணப்படும் வேறுபாடுகளை விளக்குவதில் வெளிப்படையாக அல்லது மறைமுகமாக இந்த அணுகுமுறையே பின்பற்றப்பட்டது என்பதனை சுட்டிக் காட்டுவது மிக முக்கியமாகும். பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு (OECD) நாடுகளில் ஊக்குவிப்பு முறை சார்புரீதியில் சிறிதளவே வித்தியாசப்படுவதனாலும், இந்த நாடுகள் அனைத்தும் ஏற்றுமதி நோக்கிலான நாடுகளாகவும், திறந்த சந்தைப் பொருளாதாரங்களாகவும்

இருந்து வருவதனாலும் போட்டியிடும் திறனில் காணப்படும் திடமான வித்தியாசங்கள் வழங்கல் பக்கக் காரணிகளுடன் தொடர்புபடுத்தி விளக்கப்பட்டு வருகின்றன. அதாவது, ஆற்றல்கள் மற்றும் நிறுவனங்கள் போன்ற வழங்கல் பக்கத்தைச் சேர்ந்த காரணிகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த அம்சம் தொடர்பாக நெல்சன், வின்டர் ஆகிய இருவரும் எழுதிய நூல் (1982) முக்கியமாக குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், சோலோ என்பவரின் தலைமையிலான அண்மைய ஆணைக்குழுவொன்று ஐக்கிய அமெரிக்காவின் போட்டியிடும் ஆற்றலின் வீழ்ச்சியை இத்தகைய காரணிகளுடன் தொடர்புபடுத்துகின்றது. மிகச் சமீபகாலம் வரையில், வளர்முக நாடுகள் கைத்தொழில் கொள்கைகளை மதிப்பிடும் போது ஊக்குவிப்புக் காரணிகளுக்குச் சார்பாக நின்று, வழங்கல் பக்கம் தொடர்பான அம்சங்களை புறக்கணித்து வந்துள்ளன. வெளிக் காரணிகள், வளர்ச்சி குன்றிய திறன்கள் மற்றும் ஆதரவு அமைப்புக்கள் என்பன வளர்முகநாடுகளில் பல சந்தைத் தோல்விகளுக்கு வழிகோலியுள்ளன. மேலும், வளர்முக நாடுகளின் வழங்கல் பக்கக் கராணிகள், வளர்ச்சிகண்ட நாடுகளிலும் பார்க்க அதிகளவில் வேறுபட்டனவாக இருந்து வருகின்றன. ஆகவே, ஊக்குவிப்புக்களில் மட்டுமன்றி, இந்த வழங்கல் பக்கக் காரணிகளையும் - குறிப்பாக ஆற்றல்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றையும் - நோக்க வேண்டியுள்ளது.

ஆற்றல்களின் மிக முக்கியமான அம்சங்கள் மானிட மூலதனமும் தொழில் நுட்ப முயற்சியுமாகும். முதலில் மானிட மூலதனத்தைப் பார்ப்போம். (1) சனத்தொகையின் ஒரு விகிதம் என்ற முறையில் பொறியியல் படிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை (2) சனத்தொகையின் விகிதமொன்றாக தொழில் பயிற்சியில் சேர்ந்து கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை என்பன மானிட மூலதனம் குறித்த தர நிர்ணய அளவுகோள்களாக உள்ளன. கைத்தொழில் தொழில்நுட்ப சிக்கல் தன்மை உயர்ந்து கொண்டு வருகையில், தொழில் பயிற்சி, பல்கலைக்கழக மட்ட தொழில் நுட்ப மற்றும் முகாமைக்கல்வி என்பன அதிகளவில் முக்கியத்துவம் பெறுகின்றன. பயிற்சியும் தரமும் உள்ளடக்கமும் அதன் அளவினைப் போலவே முக்கியத்துவம் கொண்டது என்பதனை இங்கு கட்டிக்காட்டுதல் வேண்டும். கிழக்காசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்டுள்ள நாடுகள், ஏனைய வளர்முக நாடுகளிலும் பார்க்க உயர் அளவிலான மானிட மூலதன அடித்தளத்தைக் கொண்டுள்ளன. இந்நாடுகளில் போட்டியாற்றலைப் பராமரித்துப் பேணுவதற்கு பொருத்தமான அடித்தளமொன்றை அபிவிருத்தி செய்வதில் அரசு தேர்ந்தெடுத்த சில தலைமீடுகளை மேற்கொண்டு வந்துள்ளது.

உதாரணமாக, தென் கொரியாவில் ஆராய்ச்சி, அபிவிருத்திப் பிரிவு, பெருமளவுக்கு கைத்தொழில் துறையினாலேயே நிதிப்படுத்தப்பட்டு வருகின்றது. தென் கொரியாவின் இந்த நிதிப்படுத்தல் விகிதங்கள், தைவானின் விகிதங்களிலும் பார்க்க மூன்றுமடங்கு அதிகமாக உள்ளன. அத்துடன், இது பிரேசிலின் விகிதத்தைவிட 19 மடங்கு உயர்வாகவும், இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் விகிதங்களிலும் பார்க்க 50 மடங்கு அதிகமாகவும் காணப்படுகிறது. சர்வதேச போட்டியின் கடுமை நிலை, தென் கொரியா பேரளவு தொழில்நுட்ப முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது போல் தோன்றுகிறது. மேலும், வரி ஊக்குவிப்புக்கள், நிறுவன ரீதியான ஆதரவு, நிதிப்படுத்தல் மற்றும் நேரடி வழிகாட்டல் போன்றவற்றை வழங்குவதன் மூலம் அரசும் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிகழ்வுப் போக்கில் தலையிட்டுள்ளது.

சர்வதேச தொழில்நுட்பச் சந்தை தகவல்களின் சீரற்ற தன்மை, சந்தர்ப்பவாதம், சந்தை இடைவெளிகள் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட ஒரு தொகுதி தோல்விகளுக்கு உட்பட்டு வருகின்றது. போட்டி ஆற்றல் கொண்டுள்ள நாடுகளில், அரசாங்கங்கள், இத்தகைய தோல்விகளை வெற்றி கொள்வதற்கும், தேசிய தொழில் முயற்சிகள் நியாயமான விலைகளில் தொழில் நுட்பங்களை கொள்வனவு செய்வதற்கும் என பல்வேறு வழிமுறைகளை பின்பற்றியுள்ளன. கொரியாவும், தைவானும் கைத்தொழில்களில் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுவத்துவதற்கென விரிவான பல நிகழ்ச்சித் திட்டங்களை கொண்டுள்ளன. இந்நாடுகளில் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பங்களில் முதலீடு செய்தல், தெரிவு செய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஆராய்ச்சி நிறுவனங்களை ஸ்தாபித்தல், குறிப்பிட்ட சில ஆராய்ச்சி சில அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுசரணை வழங்குதல் போன்ற பல நடவடிக்கைகள் மூலம் அரசு இந்த விஷயத்தில் தலையிட்டு வருகிறது.

இப்பொழுது நிறுவனங்கள் குறித்து சற்று கவனம் செலுத்துவோம். கைத்தொழில் ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதில், குறிப்பிட்ட சில சந்தை தோல்விகளை சமாளிக்கும் பொருட்டு உருவாக்கப்படும் அமைப்புக்களைப்பற்றியே இங்கு நான் குறிப்பிடுகிறேன். வளர்முக நாடுகளில் ஆற்றல் அபிவிருத்தி பல்வகைப்பட்ட சந்தை தோல்விகளாலும் பாதிப்படைய முடியும். உதாரணமாக, (பொதுக்கட்டமைப்பு, கல்வி, கைத்தொழில் தர நிர்ணயங்கள் போன்ற) குறிப்பிட்ட சில உள்ளீடுகளின் "பொதுப்பண்ட" இயல்பிலிருந்து சந்தைத் தோல்விகள் உருவாக முடியும். மேலும், தனியார் நடவடிக்கைகள் மூலமும் இவை தோன்றக்கூடும். (உதாரணமாக, பாதகமான பக்கத்தில் சுற்றுச் சூழல் மாசடைதல்; சாதகமான பக்கத்தில், பயிற்சி அல்லது ஆராய்ச்சியைப் பொறுத்த வரையில் அபரிமிதமான நிலை). தகவல் சந்தைகளில் காணப்படும் குறைபாடுகளிலிருந்தும் இவை தோன்றக்கூடும். தொழில்நுட்ப ஒப்பந்தங்களின் இரு தரப்பினரும் சமமான அடிப்படையில் தகவல்களை பெற முடியாத நிலை, தொழில்நுட்ப தரகர்கள் இல்லாத நிலை, கடன் ஏற்பாடுகள் குறித்த போதிய தகவல் களின்மை போன்ற காரணிகளும் முதலீடுகளின் செலவு, தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்தல் அல்லது பொருளாதாரத்துக்குள் தொழில்நுட்பத்தை வியாபிக்கச் செய்தல் என்பவற்றை தடை செய்யவோ அல்லது உயர்த்தவோ முடியும். தரக்கட்டுப்பாட்டை பரீட்சித்தல், சில அடிப்படை ஆராய்ச்சி, அபிவிருத்தி முயற்சிகள்

போன்ற குறிப்பிட்ட சில வசதிகளைப் பொறுத்த வரையில், தொடக்க மூல தனச் செலவுகளாக பாரிய தொகைகளை முடக்க வேண்டியிருக்கும். அதனால் தனியார் தொழில் முயற்சிகள் இவற்றை ஸ்தாபிப்பதற்கு தயக்கம் காட்டக்கூடும். இதற்கென நிறுவனங்களை கூட்டுறவு அடிப்படையில் இணைப்பதற்குரிய நிறுவனரீதியான பொறிமுறைகள் அவசியமாகும்.

அபிவிருத்திப் போக்கு முன்னேறிச் செல்லும் போது, நாடுகள், பல சந்தைத் தோல்விகளுக்கான தீர்வுகளை பெறக்கூடியவையாக உள்ளன. சில சந்தர்ப்பங்களில், சந்தைத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு சிறப்புத் தேர்ச்சி பெற்ற வர்த்தக மத்தியஸ்த அமைப்புக்கள் தோன்றக் கூடும். வேறு சில சந்தர்ப்பங்களில், குறைபாடுள்ள சந்தைகளை சமாளிக்கும் பொருட்டு, பொருள் உற்பத்தியாளர்கள் தாமே பாரிய அளவில் வளர்ச்சி காண முடியும். வேறு சிலவற்றின் விஷயத்தில், சந்தை வழியிலான இந்த தீர்வுகள் வளர்ச்சியடைவதற்கு நீண்ட காலம் பிடிக்கும்; அல்லது தோன்றாமலேயே இருக்கும். எனவே, இந்த நிலையில், சில நாடுகளில் நிவாரணங்களை அளிக்கவென அரசாங்க தலையீடு பாவிக்கப்படுகிறது. இந்த தலையீடு சந்தைத் தோல்வியை நேரடியாக சமாளிப்பதாக இருக்கும்; அல்லது குறிப்பிட்ட சில பிரச்சினைகளை கையாள்வதற்காக அரசு சிறப்புத்தேர்ச்சி பெற்ற சில நிறுவன அமைப்புக்களை உருவாக்கக்கூடும்.

கைத்தொழில் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் நிறுவனங்களை கட்டியெழுப்பும் விஷயத்தில், ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் –குறிப்பாக, கொரியா, தாய்வான், சிங்கப்பூர் என்பன – மிகுந்த ஊக்கத்துடனும், ஓர் ஒழுங்கு முறையிலும் செயற்பட்டு வந்துள்ளன என்பதை ஆங்காங்கே கிடைக்கும் சான்றுகள் தெரிவிக்கின்றன. தர நிர்ணயங்கள், தர உத்தரவாதம், பயிற்சி, தகவல் சேகரிப்பு, தொழில்நுட்ப பரவல், பரிசோதனைக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதரவளிக்கும் நிறுவனங்கள் போன்றவற்றை அந்நாடுகள் கொண்டிருந்தன. தனியார் கைத்தொழில்கள்–குறிப்பாக வெளிநாட்டுச் சந்தைகளில் ஊடுருவுவதற்கு முடுக்கிவிடப்பட்ட கைத்தொழில்களும் தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்து, உருவாக்கும் கைத்தொழில்களும் – இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை இந்த அரசாங்கங்கள் பெற்றுக் கொடுத்தன. இந்த வகையில், தென் கொரியா புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட ஏனைய நாடுகளிலும் பார்க்க சற்று வித்தியாசமானதாக இருந்தது. மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் தகவல் சந்தைகள் என்பவற்றில் ஏற்படும் பல்வேறு சந்தைத் தோல்விகளை வென்றெடுக்கும் பொருட்டு, அது, பிரமாண்டமான தொழில் கூட்டுக்களை திட்டமிட்டு போஷித்து வளர்த்தது.

ஒரு நாட்டின் போட்டி ஆற்றலை நிர்ணயிக்கும் வழங்கல்–பக்கத்தின் நிர்ணயகரமான காரணிகளான ஆற்றல் மற்றும் நிறுவனங்கள் என்பன குறித்த சித்திரமொன்றை நான் வழங்கியுள்ளேன். ஏற்கனவே குறிப்பிட்டது போல, பல வளர்முக நாடுகளில் சந்தைச் சக்திகளின் இயக்கத்தில் மட்டும் இந்த வழங்கல்-பக்க காரணிகள் உருவாக்கப்படுவதில்லை, எனவே, குறிப்பிட்ட ஒரு நாட்டின் போட்டியிடும் ஆற்றல் குறித்து தீர்மானிக்கும் போது, அந்நாட்டின் பொருளுற்பத்தித் துறையில் வழங்கல் பக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கு உருவாக்கப்படும் கைத்தொழில் கொள்கைகளை மிக நுணுக்கமாக பரிசீலனை செய்ய வேண்டும். வளர்முக நாடுகளின் கைத்தொழில் உத்திகள், அந்நாடுகள் சர்வதேச பொருளாதாரத்தில் பெற்றுள்ள அந்தஸ்தின் அடிப்படையிலேயே பொதுவாக உருவாக்கப்படுகின்றன என்பதனையும் நாம் நினைவில் வைத்திருத்தல் அவசியமாகும்.

இரு காலப் பிரிவுகளுக்கான வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூல சுட்டெண்கள் கிடைக்காதவிடத்து, குறிப்பிட்ட நாடு, சந்தை தோல்விகளை சீர் செய்து கொள்ளும் பொருட்டு, பயன்படுத்தும் விலை ஊக்குவிப்புக்களையும், கைத்தொழில் கொள்கைகளையும் பகுப்பாய்வு செய்வது அவசியமாகும். குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கான வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூல நிலை குறித்த சுட்டெண்கள் கிடைக்கப் பெற்றாலும் கூட, அந்நாட்டின் போட்டியிடும் ஆற்றலை நிர்ணயிக்கும் பொருட்டு, இந்த சுட்டெண்களின் நடத்தையை கைத்தொழில் கொள்கைகளின் பகுப்பாய்வுடன் பொருத்திப் பார்ப்பது அவசியமாகும்.

### 4. இலங்கையில் போட்டியிடும் ஆற்றலை உருவாக்குவதில் உள்ள இடையூறுகள்

ஏற்கனவே எடுத்துக் காட்டிய வழங்கல் பக்கம் தொடர்பான அம்சத்தை எடுத்து விளக்குவதற்கு, இப்பொழுது நான் ஒரு நாட்டின் உதாரணத்தை எடுக்கிறேன். எம். அனைவருக்கும் நன்கு பரிச்சயமான இலங்கையின் அனுபவத்தை நோக்குவோம். இலங்கையில், 1977 ல் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார தாராளமயமாக்கலையடுத்து, ஒரு சில வருடங்களில், இலங்கை ஒரு சிங்கப்பூராக மாற்றமடைவதனை காண ஜனாதிபதி ஜயவர்தனா விரும்பினார். "நாங்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும்; அல்லது ஒழிந்து போக வேண்டும்" என்று அவர் ஒரு முறை குறிப்பிட்டிருந்தார். ஏற்றுமதி நோக்கிலான திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட 14 வருடங்களில், இலங்கை ஒரு சிங்கப்பூராக மாற்றம் கண்டுள்ளதா? இதற்கான பதில் மிகத்தெளிவானதாகும் இல்லை. உலகச் சந்தையில் எமது ஏற்றுமதிகள் போட்டியிடக் கூடிய நிலை உருவாவதனை தடுத்த முக்கியமான இடையூறுகள் எவை? நடு என்பதுகள் வரையில், செலாவணி விகித பெறுமதியேற்றம் முக்கியமான பிரச்சினையாக இருந்து வந்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, செலாவணி விகித பெறுமதியேற்றத்துக்கு ஈடு செய்யும் வகையில், வரிச்சலுகைகளையும், ஏற்றுமதி மானியங்களையும் வழங்கி வந்தது. எனினும், இவை சிவப்பு நாடா தாமதங்களையும், தொந்தரவு மிகுந்த நடைமுறைகளையும் உள்ளடக்கியிருந்தமையால் அவற்றால் உரிய தாக்கத்தை எடுத்து வரமுடியவில்லை அத்துடன் வரி/மானியக்கொள்கை மிக மந்தமான தாக்கத்தையே எடுத்து வந்தது. எனினும், செலாவணி விகித பெறுமதியேற்றம் ஓரளவுக்காவது சீர் செய்து கொள்ளப்பட்ட போதிலும், அப்பொழுது, ஏற்றுமதி வளர்ச்சிக்கு எதி

ராக நின்ற வேறு பல இடையூறுகள் இனங்காணப்பட்டன.

இந்த இடையூறுகள் யாவை? இவற்றை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை (1989) எடுத்துக்காட்டியிருந்தது. இவற்றுள் முதன்மையானவை: (1) போதிய ஆராய்ச்சி முயற்சி இன்மை; (2) சந்தைப் படுத்தல் குறித்த தகவல் பற்றாக்குறை; (3) தரம், வடிவமைப்பு, பொதிப்படுத்தல் என்பவற்றில் போதிய கவனம் செலுத்தப்படாமை; (4) தகைமை வாய்ந்த கொள்வனவாளர்களுடன் வெற்றிகரமாக பேச்சுவார்த்தைகளை நடத்தும் திறன் இல்லாதிருந்தமை; (5) உற்பத்தியில் (ஒன்று மற்றொன்றுடனான) பரஸ்பர ஒத்துழைப்பு குறைவாக இருந்தமை; (6) நம்பகமான முறையிலும் உரிய காலத்திலும் பொருட்களை வழங்குவது தொடர்பான செயலாற்றுகையின் அதிருப்தியான நிலை; (7) விருத்தியடைந்திராக மூலதனச் சந்தை; (8) கப்பல் கட்டணங்கள் உயர்வாக இருந்ததும், கப்பல் சரக்குகளை வைப்பதற்கான இடப்பற்றாக்குறைவும்; (9) கைத்தொழில்மயமாக்கலுக்கு தம்மை அர்ப்பணிக்கக்கூடிய செயல் வேகம் மிகுந்த கைத்தொழில் அதிபர்கள் வர்க்கமொன்று காணப்படாத நிலை; (10) சட்டரீதியான தடங்கல்கள் என்பனவாகும். இவற்றில் இரண்டு காரணிகளை - அதாவது சந்தை தகவல்களின்மை மற்றும் சட்டரீதியான இடையூறுகள் என்பவற்றை - இங்கு விளக்க விரும்புகிறேன்.

சந்தை தொடர்பான தகவல்கள் முழு அளவில் கிடைக்காதிருப்பதும், சந்தைகளுடன் தொடர்ச்சியான, ஒழுங்கான தொடர்புகள் பேணப்படாததும் ஏற்றுமதி வளர்ச்சி எதிர்நோக்கியுள்ள மிக முக்கியமான இரு குறைபாடுகளாகும். பிரதான சந்தைகளில் எமது பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதற்கோ அல்லது உற்பத்தியாளர்களுக்கு சரியான தகவல்களை வழங்குவதற்கோ எந்த ஒரு தனியார் துறை அமைப்பும் அல்லது கூட்டும் செயற்பட்டு வரவில்லை. அரச அதிகாரிகள் வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கூடாக வியாபார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்கள். ஆனால், தனியார் துறையைச் சேர்ந்த பொருள் உற்பத்தியாளர்களுடனும், ஏற்றுமதியாளர்களுடனும் இவர்கள் மிகச்சிறிதளவே தொடர்புகளை பேணி வந்தார்கள். மேலும், இவர்களில் பெரும்பாலான அதிகாரிகள் விளம்பரம் செய்தல் மற்றும் ஏனைய வியாபார மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றில் தகைமை பெற்றவர்களாக இருக்கவில்லை. ஜப்பானிய பாணியிலான வியாபார நிலையங்களை அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. மிகச் சமீபத்திலேயே (அதாவது 1991 ல்) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை "வியாபார நிலையங்கள்" குறித்த கருதுகோளை முன்னெடுத்துச் செல்லத் தொடங்கியது. மேலும், சமீபத்தில் (1991 ல்) வெளிநாட்டு அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட இருபக்க ஒத்துழைப்பு பிரிவின் கீழ் ( Bilateral Cooperation Unit) பல வெளிநாடுகளில் இலங்கை தூதுவர் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சட்ட அம்சம் தொடர்பான இடையூறுகளை இப்பொழுது பார்ப்போம். இலாப நோக்குக்கும், அனைத்துக்கும் மேலாக போட்டிக்கும் எதிராக செயற்படும் பெருந்தொகையான தொழில் சட்டங்கள் இந்நாட்டில் இருப்பதாக பல தொழில் அதிபர்கள் கூறி வந்துள்ளனர். ஊழியர் முகாமை தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது, எந்த தொழில் சட்டத்தை பிரயோகிப்பது என்பதனை நிர்ணயம் செய்து கொள்வதில் பல தொழில் அதிபர்கள் சிரமப்படுகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், 1977 ஆம் வருட தொழிலாளர்களின் பணியை முடித்து விடுவது தொடர்பான (விசேஷ ஏற்பாடுகள்) சட்டம், வியாபார நடவடிக்கைகளுக்கான முக்கியமான இடையூறாக இருந்து வருகிறது. இச்சட்டத்தின் பிரகாரம், ஓர் ஊழியரின் பணியை முடிவுக்கு கொண்டுவர விரும்பும் ஒரு வேலை கொள்வோர், அதற்கு, ஒன்றில் குறித்த ஊழியரின் சம்மதத்தை முன்னரேயே எழுத்து மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்; அல்லது தொழில் ஆணையாளரின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். இது குறித்து இலங்கை முதலாளிமார் சம்மேளனம் பின்வருமாறு எழுதியுள்ளது: "ஊழியர்கள் மிதமிஞ்சிய நிலையில் உள்ள நிலைமைகளின் போது அல்லது நட்டங்களின் போது அல்லது இவை இரண்டும் காணப்படும் சந்தர்ப்பங்களில், முதலாளிமார் தமது வியாபாரத்தை அங்கீகரிப்பதற்கும், நியாயமான முறையில் நடத்திச் செல்வதற்கும் உரிய துரித நடவடிக்கைகளை எடுக்க இயலாத நிலை, அவர்கள் தமது வியாபாரங்களை கலைத்து விடக்கூடிய விளிம்புக்கே அவர்களைத் தள்ளியுள்ளது. இத்தகைய நிலைமைகளின் போது, இச்சட்டத்தின் நடைமுறைகளை பின்பற்றாது, வியாபாரத்தை உடனடியாக. சரியான அளவுக்கேற்ப வெட்டி சீர் செய்து கொள்வதனை தடுத்து நிறுத்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். அத்துடன், விசாரணைகள் முடிவடையும் வரையில் மிதமிஞ்சிய ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக வேதனங்கள் வழங்கப்படுதல் வேண்டும்."

போட்டித்திறனில் தொழில் சட்டங்கள் ஏற்படுத்தும், தாக்கம் குறித்து சம்மேளனம் பின்வருமாறு குறிப்பிடுகிறது. "சட்டத்தினால் அவர்களுக்கு (தொழிலாளர்களுக்கு) வழங்கப்பட்டுள்ள மிதமிஞ்சிய பாதுகாப்பு, அவர்கள், தண்டனை அச்சம் எதுவுமின்றி, உற்பத்தியில் ஈடுபடாது சும்மா கிடப்பதற்கு வாய்ப்பளிக்கிறது. ஒழுங்காக வேலைக்கு சமூகமளிக்காதிருக்கும் ஊழியர்கள், முதலாளிமார் தம்மை வேலையிலிருந்து நீக்குவதற்கும், அதை நீதிமன்றமொன்றில் நியாயப்படுத்துவதற்கும் கணிசமான அளவு காலம் செல்லும் என்பதை கண்டு கொள்கிறார்கள். இந்த முறை திறமையான வினைதிறன் மிக்க ஊழியர்களுக்கு வெகுமதிகளை அளிப்பதில்லை. ஆனால், அது, அஜாக்கிரதையாக திறமை குன்றிய, வினைதிறன் அற்ற ஊழியரையே பாதுகாக்கிறது. இதன் பின்விளைவாக உற்பத்தித் திறனும் அதே போல வியாபாரத்தின் இலாபமும், இலாப எல்லைகளும் பாதிக்கப்படுகின்றன".

இறுதியாக, மிகவும் பாரதூரமானவை என்று நான் கருதும் வேறும் சில சட்ட இடையூறுகள் சிலவற்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏற்றுமதி வரிச்சலுகைகள் /மானியங்கள் என்பன குறித்த தொந்தரவு மிக்க நடைமுறைகள் மற்றும் சிவப்பு நாடா தாமதங்கள் என்பவற்றை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். இத்தகைய நடைமுறைகள்

வரிச்சலுகைகள் /மானியங்கள் என்பவற்றுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டவையல்ல. உதாரணமாக, பல்வேறு முதலீடுகள், இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் என்பவற்றுக்கு தேவையான எண்ணற்ற நடைமுறைகள் ஆவணப்படுத்தல் போன்றன குறித்த கசப்பான முறையீடுகளை ஏற்றுமதியாளர்கள் முன் வைத்து வருகின்றனர். சுங்க கட்டளைச் சட்டம், இறக்குமதி - ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம், உண்ணாட்டரசிறை சட்டம் போன்றவற்றிலிருந்தே இந்த நடைமுறைகள் வருகின்றன. சுதந்திர வர்த்தக வலயத்துக்கு வெளியே, தமது வியாபாரம் தொடர்பாக தாம் பெருந்தொகையான முகவரகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது என்பதே ஏற்றுமதியாளர்களின் மிக முக்கிய முறைப்பாடாக உள்ளது. இவற்றில் சில நடைமுறைகள் தொடர்பான தேவைகளும், ஆவணப்படுத்தல்களும் அனாவசியமானவை என்றும் அவர்கள் கூறி வருகிறார்கள். இந்த நடைமுறைகளை குறைந்தபட்ச மட்டத்தில் வைத்திருப்பதற்கான வழிமுறைகளை உள்ளடக்கிய யோசனைகளை இலங்கை வர்த்தக எளிமைப்படுத்தல் கமிட்டியும், எஸ்.கே. விக்கிரமசிங்க கமிட்டியும், முன்வைத்துள்ளன. எனினும், ஏற்றுமதியாளர் தொடர்ந்து முறைபாடுகள் செய்து வருகின்றனர்.

பிந்திய எண்பதுக்கள் வரையில் இலங்கையின் கொள்கை வகுப்போர் பெறுமதியிறக்கங்கள், தீர்வை சீராக்கங்கள் மற்றும் மானியங்களை அதிகரித்தல் போன்ற விஷயங்களிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தி வந்துள்ளார்கள் என்பது தெரிகிறது. ஏற்றுமதிகளில் போட்டித்திறனை எட்டுவதற்கு தடையாக இருந்து வந்த மேற்கண்ட இடையூறுகளை அவர்கள் கவனியாது விட்டிருந்தனர். இந்த இடையூறுகள், வழங்கல் பக்கத்தில் இருந்த தடங்கல்களே என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. போதிய திறன்களின்மை, போதியளவு பயிற்சி இல்லாமை, ஆராய்ச்சி இல்லாமை, நிறுவனங்கள் குறைவாக இருந்தமை, தொழில் முனைப்பு அபிவிருத்தி போதியளவில் காணப்படாமை என்பனவே இந்த தடங்கல்களாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இந்த இடையூறுகளானவை வழங்கல் பக்கத்தின் சந்தை தோல்விகளாகவே இருந்தன. உண்மையிலேயே, பொருளாதார தாராயமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டு ஒரு தசாப்த காலம் செல்லும் வரையில், சந்தைத் தோல்விகளை சீராக்கிக் கொள்வதற்கான கைத்தொழில் உத்தியொன்றை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. 1987 ஆம் ஆண்டிலேயே கைத்தொழில் உத்தியொன்று உருவாக்கப்பட்டது. அரசாங்கம் 1989 ல் 1987 ம் வருட கைத்தொழில் உத்தியின் திருத்தியமைக்கப்பட்ட வடிவமொன்றை வகுத்துக் கொண்டது. இலங்கையின் போட்டித்திறனை அதிகரிப்பதில் இந்த உத்தி எந்த அளவுக்கு பங்களிப்புச் செய்யும் என்பதனை இனிமேல் தான் பார்க்க வேண்டும். கைத்தொழில் உத்தியானது, உலக அளவில் நாட்டின் போட்டித்திறனை நிர்ணயம் செய்யும் முக்கிய காரணியாக உள்ளது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

## 5. முடிவுரை

ஒப்பீட்டு அனுகூலம் குறித்த கருதுகோளின் வளர்ச்சி குறித்த ஒரு சுருக்கமான குறிப்பு பகுதி 1 - இல் விவரிக்கப்பட்டது. நியமமான வியாபார கோட்பாடு ஒன்று காணப்படவில்லை என்பதனையும், நிலையான சர்வதேச ஒப்பீட்டு அனுகூலத்தை புரிந்து கொள்வதில் காரணி விகிதங்கள் கோட்பாடு இன்னமும் முக்கியஇடத்தை வகித்து வருகின்றது என்பதனையும் நான் சுட்டிக்காட்டியிருந்தேன். இது வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூல சுட்டெண்ணை பயன்படுத்தி வருகின்றது. அதன் பின்னர் இந்த நடைமுறைக்கும் ஒரு நாட்டின் காரணி வளங்களுக்கும், இடையில் நிலவி வரும் உறவினை விளக்கியிருந்தேன். பின் இப்பகுப்பாய்வினைப் செயல் வேகம் மிகுந்த கட்டமைப்பொன்றுக்கு விரிவாக்கினேன். உலகளாவிய வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூல சுட்டெண்ணின் குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவுக்கான கைத்தொழில்களுக்கான நடத்தையை நாடுகளின் ஒப்பீட்டு அனுகூலம் குறித்த கட்டம் மற்றும் உற்பத்திச் சுழல் கோட்பாடு என்பவற்றின் பின்னணியில் எடுத்துக்காட்டியிருந்தேன். அதனையடுத்து, குறிப்பிட்ட ஒரு நாட்டின் ஒப்பீட்டு ரீதியான போட்டி அனுகூலத்தை மதிப்பீடு செய்யும் வகையில் இந்த பகுப்பாய்வு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பிரிவு 3 -இல் போட்டி குறித்து நோக்கினோம். அத்துடன், ஒரு நாட்டின் போட்டித் திறனை வடிவமைப்பதில் வளங்கள் தொடர்பான காரணிகள் வகித்து வரும் முக்கியமான பங்கும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. போட்டித் திறன் கூறு காணப்படும் பட்சத்தில் மட்டுமே நிலையான ஒப்பீட்டு அனுகூலம் செயல் வேகம் கொண்ட ஒரு சக்தியாக மாறுகிறது. இதனை எய்தும் பொருட்டு கைத்தொழில் உத்தியொன்று அவசியமாகும். சந்தைத் தோல்விகளைச் சீராக்கம் செய்துகொள்வதற்காக கைத்தொழில் உத்தியொன்றை பயன்படுத்தும் நாடுகள், கைத்தொழில் உத்திகள் பலம் குன்றியவையாகக் காணப்படும் அல்லது கைத்தொழில் உத்திகள் காணப்படாத நாடுகளிலும் பார்க்க மிக வேகமாக போட்டியிடும் திறனை பெற்றுக் கொள்கின்றன. ஒரு நாட்டின் போட்டியிடும் ஆற்றலை நிர்ணயம் செய்வதில் கைத்தொழில் உத்தியொன்றின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கும் பொருட்டு நான் இலங்கையின் அனுபவத்தை விளக்கியிருந்தேன். ஒட்டு மொத்தமாக நோக்கினால், ஒரு நாட்டின் ஒப்பீட்டு போட்டி அனுகூலத்தை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோல், அந் நாட்டின் வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூல சுட்டெண்ணை இரு காலப்பிரிவுகளில் பகுப்பாய்வு செய்வதும், பொருளாதாரத்தின் வழங்கல் பக்கத்தை விருத்தியடையச்செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படும் கைத்தொழில் உத்தியை மதிப்பிடுவதுமாகும் எனக் கூறலாம்.

(19 ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது என்ற உண்மையை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கடந்த 30 வருட காலத்தில் கிளை அமைப்பின் அபிவிருத்தி, வைப்புக்களில் ஏற்பட்ட பெருக்கம், கொடுகடனில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு என்பவற்றை நோக்கும் போது இது மிகத் தெளிவாகத் தெரிகிறது. வர்த்தக வங்கி அபிவிருத்தி வங்கியொன்றாக இயங்கக் கூடாது; அதே போல ஒரு அபிவிருத்தி வங்கி வர்த்தக வங்கியாக இயங்கக் கூடாது என்ற கருத்து பொதுவாக நிபுணர்களிடையேயும், கல்விமான்களிடையேயும், வங்கியாளர்களிடையேயும் நிலவி வருகிறது.

# கொழும்பு பங்கு மாற்று நிலையத்தின் வளர்ச்சி – ஒரு கண்ணோட்டம்

எம். எச். ஈ. செரீப்

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டு, பல சாதகமான கூறுகள் மேலோங்கியிருந்த ஓர் ஆண்டாக இருந்தது. விலைப் போக்குகள் மிகவும் திருப்திகரமான நிலையில் காணப்பட்டன. கொழும்பு பங்கு மாற்று நிலையத்தின் கூட்டு மொத்த விலைச் சுட்டெண் 204.90 புள்ளிகளைப் பதிவு செய்திருந்தது. இது இதுவரையில் சந்தையில் சாதிக்கப்பட்ட மிக உயர்ந்த அளவு வருடாந்த ஆதாயமாகும். பங்குச் சந்தையில் செழிப்பு நிலைமை காணப்பட்டமை, மற்றும் கம்பனிகளை பொதுக் கம்பனிகளாக்கும் அரசாங்கத்தின் நடைமுறைகள் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கையும், பங்கு விநியோக நடவடிக்கைகளும் இன்னமும் உச்ச கட்டத்தை அடையவில்லை. இது, பங்குகளை நிதிப்படுத்தும் விஷயத்தில் தனியார் துறை இன்னமும் தயக்கம் காட்டி வருவதையே சுட்டிக் காட்டுகிறது. விலைப் போக்குகளில் உயர்ச்சிப் போக்கிலான மாற்றங்கள் காணப்பட்ட போதிலும் புதிய பங்கு வெளியீடுகள் குறைந்த மட்டத்திலேயே நிலைத்துள்ளன. எனினும் கடந்த சில மாதங்களில் நிலைமை ஓரளவுக்கு விருத்தி கண்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. கடந்த ஓரிரு மாதங்களில் சிலோன் ஒக்சிஜன் லிமிடட் மற்றும் இன்டர்நஷனல் டுவரிஸ்ட் ஹோட்டோலியல் லிமிடட் என்பவற்றின் பங்கு வெளியீடுகளின் போது ஒரு வாரத்துக்குள்ளேயே மிதமிஞ்சிய அளவில் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டன.

இலங்கையின் பங்குச் சந்தை 1970 களின் போது, அப்போதைய அரசாங்கத்தின் தேசியமயமாக்கல் கொள்கையின் விளைவாக முடங்கிக் கிடந்தது. 1975 ஆம் வருட நிலச்சீர்திருத்தத்தையடுத்து, பாரிய தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பெருந்தோட்டங்களைக் கொண்டிருந்த பல கம்பனிகள் அரசுடைமையாக்கப்பட்டன. இதன் விளைவாக பெருமளவுக்கு முடங்கிப் போயிருந்த பங்குச் சந்தை, 1983 இன் தொடக்கத்தில் நம்பிக்கையூட்டும் அறிகுறிகளைக் காட்டியது. அந்த ஆண்டில் மட்டும் 25 புதிய பங்கு வெளியீடுகள் இடம்பெற்றன. பொது மக்களுக்கென 170 கோடி ரூபா பெறுமதியான 17 கோடி பங்குகள் வெளியிடப்பட்டன. கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை நிலையம் இதுவரை காலத்திலும் கையாண்ட மிகப் பெரிய பங்கு வெளியீடு 38.3 கோடி ரூபா பெறுமதியான பெல்வத்த சீனிக் கம்பனியின் பங்கு வெளியீடாகும். குறிப்பாக, 1980 இற்குப் பின்னர் பங்கு உடைமையில் அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. இதற்குப் பொருளாதாரத்தின் ஆற்றல் காரணமான நம்பகத்தன்மையும், தனிப்பட்டவர்களின் நிதிப்படுத்தலும் வழிகோலியுள்ளது. எனினும் பங்குகள் மீதான முதலீடுகள், சேமிப்புக்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது என்பதனை நாம் மறந்து விடலாகாது. பல சேமிப்பு முறைகளின் முக்கியமான ஓர் அங்கம் என்ற முறையில் பங்குகளின் முக்கியத்துவம் வர வர அதிகரித்துக் கொண்டு வருகிறது. எனவே, பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு கம்பனியும் பொது ம மக்களுக்கு முதலீடுகள் குறித்த தகவல்களை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் பங்குகளில் முதலீடு செய்யும் அனைவரும் சமமான முறையில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதனையும் அது உறுதி செய்தல் வேண்டும்.

கம்பனிகள் பல காரணங்களின் நிமித்தம் பங்கு மாற்று நிலையத்தில் தமது கம்பனிகளை வெளியிட வேண்டியுள்ளது. கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. டி. எல். எல். பி. ஜெயவர்தன வெளியிட்ட "இலங்கையின் பொதுக்கம்பனிகள்–1974" என்ற அறிக்கையில் இதற்குப் பின்வரும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின்படி, சுமார் 38 சதவீதமான கம்பனிகள், மூலதனத்தின் ஒரு பகுதியைத் திரட்டுவதற்காகவே தாம் பங்குகளை வெளியிட்டிருந்ததாக குறிப்பிட்டன. பங்குகளை வெளியிட்ட வேறு சில கம்பனிகள், தமது பங்குகளுக்கான உடனடி சந்தைப் பெறுமதியை பெற்றுக்கொள்ளும் எண்ணத்தினால்

**அட்டவணை 1**

| வெளியிடப்பட்ட காலம் | பங்குகளை வெளியிட்ட கம்பனிகள் | சதவீதம் |
|---|---|---|
| 1948 வரையில் | 27 | 14.83 |
| 1949 தொடக்கம் 1977 | 57 | 31.31 |
| 1978 தொடக்கம் 1988 | 95 | 52.19 |
| 1989 தொடக்கம் 1990 | 3 | 1.64 |
| மொத்தம் | 182 | 100.00 |

ஆதாரம் : கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், கொ.ப.மா. நிலைய வருடாந்த அறிக்கை

**அட்டவணை 2**

**உரிமைப் பங்கு வெளியீடுகளும் புதிய பங்கு வெளியீடுகளும் 1988 – 1990**

| வருடம் | உரிமைப்பங்கு வெளியீடுகள் | கம்பனிகளின் எண்ணிக்கை | புதிய பங்கு வெளியீடுகள் | கம்பனிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1988 | 320,373,610 | 12 | 79,462,500 | 8 |
| 1989 | 90,696,350 | 7 | 140,000,000 | 2 |
| 1990 | 494,903,516 | 12 | 7,000,000 | 1 |

ஆதாரம் : கொ.ப.மா. நிலைய வருடாந்த அறிக்கைகள் 1988, 1989 ; கொ.ப.மா. நிலைய தகவல் திரட்டு.

தூண்டப்பட்டு பங்கு வெளியீடுகளை மேற்கொண்டிருந்தன. சுமார் 20 சதவீத மான கம்பனிகள், இந்தக் காரணத்தைக் கூறின. இவைதவிர, சுமார் 14 சதவீத மான கம்பனிகள் தமது பங்குத் தொகுதி யின் உரித்தினை சாதாரண மக்களும் அடைவதற்கு வகைசெய்யும் விதத்தில், பங்கு அடித்தளத்தை விரிவாக்கும் நோக்குடன் தாம் பங்கு வெளியீடுகளை மேற்கொண்டதாகத் தெரிவித்தன. பங்குகளை வெளியிடும் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுவந்த நிதிசார் ஊக்கு விப்புக்களும், வரி ஊக்குவிப்புக்களும் 16 சதவீதமான கம்பனிகள் தமது பங்குகளை பட்டியலிடுவதற்கு தூண் டின.

## 1. மூலதனத்தை உயர்த்துவதற்கான தேவை

கம்பனிகளை உருவாக்குதல் மற்றும் பங்கு வியாபாரம் என்பவற்றில் இலங்கை நீண்ட வரலாற்றைக் கொண் டுள்ளது. இலங்கையின் முதலாவது கம்பனிகள் கட்டளைச் சட்டம், இங்கி லாந்தில் 1875 இல் அத்தகையதொரு சட்டம் நிறைவேற்றப்பட்டதையடுத்து இங்கு நிறைவேற்றப்பட்டது. இந்தக் காலகட்டத்தில், இலங்கையில், பெருந் தொகையான பிரிட்டிஷ் தொழில் முயற் சியாளர்கள் (தமது தாய்நாட்டிலிருந்து கொண்டு வந்த மூலதனத்தைக் கொண்டு) பெரும் எண்ணிக்கையிலான கோப்பித் தோட்டங்களை ஸ்தாபித்து வந்தனர். இந்த நிலையில், தனியார் உடைமை முறை, முதன்மை ஸ்தான த்தைப் பெற்றிருந்தது. கோப்பிப் பெருந்தோட்டங்கள், சில தசாப்தங் களின் பின்னர் இலைத் தொற்று நோய் ஒன்றினால் அழிவுற்றதனை யடுத்து, கோப்பியின் இடத்தில், தேயிலைப் பயிர்ச்செய்கை அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. பெருந் தோட்டங்கள் பரவலாக பெருகிவந்த ஒரு சூழ்நிலை, வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் உருவாக் கத்தை அவசியப்படுத்திற்று. தேயி லைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான மூலதனத்தை உப யோகப்படுத்திக்கொள்ளும் நோக்கங் களுக்காக, கொழும்பிலும் லண்டனிலும் கம்பனிகள் ஸ்தாபிக்கப்பட்டன. தொழில் முயற்சியாளர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை விரிவு படுத்துவதற்குப் போதிய மூலதனம் இல்லாதிருந்த நிலை, 1886 இல் கொழும்பு பங்குத்தரகர்கள் சங்கம் தோன்றுவதற்கு வழிகோலியது. இவ் விதம் உருவாக்கப்பட்ட கம்பனிகள், இச்சந்தைக்கூடாக பங்குகளை வெளி யிடுவதன் மூலம் தமக்குத் தேவையான நிதிவசதிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையிலிருந்தன. கோப்பி மற்றும் தேயிலை என்பவற்றின் பயிர்ச் செய்கையிலும், இது தொடர்பான ஏனைய வர்த்தக முயற்சிகளிலும் முன் னோடிகளாக இயங்கிவந்த பிரிட்டிஷ் பிரஜைகள், தம்மிடம் பெருமளவு மூல தனத்தைக் கொண்டவர்களாக இருக்க வில்லை. அதனால், அவர்கள், பிறரிட மிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் அந்த நோக்கத்தில், வங்கியொன்றுக்குச் சென் றால் கடன் பெறுவதற்கு பிணைகளும் உத்தரவாதங்களும் தேவைப்படும். அவர்கள் தமது சொத்துக்களை வங்கி யில் ஈடாக வைக்கமுடியும்; எனினும், ஒரு வங்கி, இன்னமும் ஸ்தாபிக்கப் படாத ஒரு பெருந்தோட்டத்துக்கு நிதி களை வழங்க முடியாதிருக்கும். இந்த நிலையில், தொழில் முயற்சியின் சொத் தினை வைத்திருப்பதற்காக அவர்கள் கம்பனிகளை உருவாக்கியதுடன், அவற்றின் மூலம் பொதுமக்களுக்கு பங்குகளை வெளியிடத் தொடங்கினர். கொழும்பு பங்குத்தரகர்கள் சங்கம், இத்தகைய கம்பனிகள், தமது தொழில் முயற்சியில் தகவல் விபரங்களை விளம் பரப்படுத்துவதற்கும், விரிவான வீச்சி லான முதலீட்டாளர் பிரிவினருக்கு தமது பங்குகளை விற்பனை செய்வ தற்கும் இக்கம்பனிகளுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தப் பெறிமுறைமூலம், நிதிகளை வெறு மனே வைத்திருந்தவர்கள், அந்த நிதி கள் தேவைப்பட்டவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. இந்த வழியில், வியாபாரத் தைக் தொடங்குவதற்கான மூலதனம் திரட்டப்பட்டது. பிரிட்டிஷ்காரர்கள் 1880களில் இலங்கைப் பொருளாதாரத் துக்குள் மற்றொரு வர்த்தகப் பயிரினை – இறப்பரினை – அறிமுகப்படுத்தினர். தெங்குக் கைத்தொழிலும் உள்நாட்டு வர்த்தகப் பயிர்ச்செய்கையின் ஒரு பாகமாக ஒழுங்குபடுத்தப்பட்டது. ஏற் றுமதிகளுக்கூடாக, அத்தியாவசியமான இறக்குமதிகள் அனைத்தையும் நிதிப் படுத்தக் கூடிய போதிய வெளிநாட்டுச் செலாவணியை நாடு ஈட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அரிசி இறக்கு மதிகளும் (1880 க்கு முன்னர் நாடு அரசியில் சுயதேவைப் பூர்த்தியை அடைந்திருந்தது) இதில் அடங்கும். சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில், இலங்கையின் பொருளாதாரம் இர ட்டை முகங்கொண்ட ஓர் ஏற்றுமதிப் பொருளாதாரமாக இருந்து வந்தது. இதில் ஒரு பிரிவு, கட்டமைப்பிலும் தொழில் நுட்பத்திலும் நவீனமானதாக இருந்ததுடன், உலகச் சந்தைக்காக பண்டங்களை உற்பத்தி செய்து

**அட்டவணை 3 பங்குகளை வெளியிடுவதற்கு கம்பனிகள் கூறிய காரணங்கள்**

| காரணங்கள் | விவசாயம் | | கைத் தொழில் | | ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் | | வங்கித் தொழில் | | நிதி | | முதலீடு | | ஆதன அபிவிருத்தி நிர்மாணம். | | ஹோட்டல் சேவைகள், | | மற்றும் சுற்றுலா கைத்தொழில்கள் | | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண். | % | எண். | % | எண். | % | எண். | % | எண். | % | எண். | % | எண். | % | எண். | % | | |
| 1. மூலதனத்தின் வா பகுதியை திரட்டுதல் | – | – | 25 | 41.0 | 4 | 19.0 | 1 | 50.0 | 2 | 25.0 | 1 | 33.3 | 5 | 35.7 | 22 | 61.1 | 5 | 35.8 | 65 | 38.9 |
| 2. வரி ஊக்குவிப்புக்களை பயன்படுத்தல் | 2 | 25.0 | 10 | 16.4 | 4 | 19.0 | – | – | 1 | 12.5 | – | – | 1 | 7.1 | 8 | 22.2 | 1 | 7.1 | 27 | 16.1 |
| 3. பங்குகளுக்கு உடன் சந்தைப் பெறுமதியை பெற | 5 | 62.5 | 9 | 14.8 | 7 | 33.4 | 1 | 50.0 | 1 | 12.5 | – | – | 2 | 14.3 | 4 | 11.1 | 5 | 35.7 | 34 | 20.4 |
| 4. மூலதனச் சந்தைகளை | – | – | 1 | 1.6 | – | – | – | – | – | – | – | – | 1 | 7.1 | – | – | 2 | 14.3 | 4 | 241 |
| 5. பங்கு கொள்வனவு தல் | 1 | 12.5 | 15 | 24.6 | 3 | 14.3 | – | – | 3 | 37.5 | – | – | 3 | 21.5 | 2 | 5.6 | 1 | 7.1 | 28 | 16.8 |
| விற்பனைக்கு வசதி செய்தல் | – | – | – | – | 3 | 14.3 | – | – | 1 | 12.5 | 2 | 66.7 | – | – | – | – | – | – | 6 | 3.6 |
| 7. ஏனையன | – | – | 1 | 1.6 | – | – | – | – | – | – | – | – | 2 | 14.3 | – | – | – | – | 3 | 1.8 |
| மொத்தம் | 8 | 100.0 | 61 | 100.0 | 21 | 100.0 | 2 | 100.0 | 8 | 100.0 | 14 | 100.0 | 36 | 100.0 | 36 | 100.0 | 14 | 100.0 | 167 | 100.0 |

ஆதாரம்: கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

கொண்டிருந்தது. இரண்டாவது பிரிவு, கட்டமைப்பு, தொழில்நுட்பம் ஆகிய இருஅம்சங்களிலும் பாரம்பரியத் தன்மை கொண்டதாக இருந்ததுடன், அது உள்நாட்டுச் சந்தைக்காகவே தனது உற்பத்தியை மேற்கொண்டு வந்தது. பெருந்தோட்டத் துறையில், வளர்ச்சி வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. நாட்டின் பொருளாதாரம் தலைகீழ் முறையில் அபிவிருத்திய டைந்ததே இதற்கான காரணமாகும். நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்றுமதித்துறையே முதன்மை நிலையை வகித்து வந்த நிலையில் தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய மூன்று பிரதான ஏற்றுமதிகளினதும் உலகச் சந்தை விலைகள் அடிக்கடி தளம்பல்களுக்கு உட்பட்டுவந்தமையினால் நாட்டின் பொருளாதாரம் எளிதில் ஊறு படத்தக்கதொன்றாக இருந்து வந்தது. குறிப்பாக, பெருந்தோட்டத்துறையின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில், 1948 க்கு முன்னர் வர்த்தக வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், சுதந்திரத்தையடுத்து, அரசாங்கம், வங்கித் தொழில் வசதிகளை பொருளாதாரத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் விஸ்தரித்தது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரண்டு முதன்மைத் தேசிய வங்கிகள், 1980 இல், இலங்கையில் செயற்பட்டு வந்த மொத்த வங்கிக் கிளைகளில் 90 சதவீதத்தை தம்வசம் வைத்திருந்தன.

1904 ஆம் ஆண்டில் கொழும்புப் பங்குத் தரகர்கள் சங்கம் என்ற பெயர், கொழும்புத் தரகர்கள் சங்கமென மாற்றப்பட்டது. தரகர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இந்த வியாபார முறை, கொழும்புத் தரகர் சங்க துணை விதிகளின் கீழ், 1984 ஜூன் மாதம் வரையில் தொடர்ந்து இடம் பெற்று வந்தது. இலங்கையில் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பெருந்தோட்டங்களின் பொற்காலம், 1850 தொடக்கம் 1950 வரையில் சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு நீடித்துச் சென்றது. அதன் நினைவாக, கொழும்புப் பங்குச் சந்தையில், பங்குகளை வெளியிடும் 266 கம்பனிகளை அது விட்டுச் சென்றுள்ளது.

பெருந்தோட்டப் பொருளாதாரம் மங்கி, கைத்தொழில் பொருளாதாரம் உருவானதும், 1977 ஆம் ஆண்டின் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் அறிமுகமும் மற்றும் பொருளாதாரத்தில் தலையாய சக்தி ஒன்றாக தனியார் துறை மீண்டும் எழுச்சி கண்டமையும் கொழும்புப் பங்குச் சந்தை புதிய தேவைகளுக்கேற்ப தன் மீளமைத்துக் கொள்வதற்கு வழிகோலியது. முதலீடுகளை மேற்கொள்ளும் பொதுமக்களுக்கென, 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் திகதி, பங்குச் சந்தையில் ஒரு வியாபாரத் தளம் திறந்து வைக்கப்பட்டது.

சுதந்திரத்துக்கு முன்னர் நாட்டில் ஏற்றுமதி பதப்படுத்தும் அலகுகள் தவிர, வேறும் ஒருசில தொழிற்சாலைகள் இருந்தன. ஒரு பருத்தி ஆலை, ஓர் ஓட்டுத் தொழிற்சாலை, இரு தீப்பெட்டித் தொழிற்சாலைகள், பெருந்தோட்டங்கள் தொடர்பான சில பொறியியல் வேலைத்தளங்கள் என்பன இவற்றுள் அடங்கின. இரண்டாவது உலகமகா யுத்த காலத்தின் போது, பிரிட்டிஷ் அரசும் தனியார்துறையும் (யுத்தம் காரணமாக இறக்குமதி செய்யப்பட முடியாதிருந்த) குறிப்பிட்ட சில அடிப்படை நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கென பல தொழிற்சாலைகளை ஆரம்பித்தன. எனினும், போருக்குப் பின்னர் இத்தகைய பொருள்களின் இறக்குமதிகள் தாராளமாக வரத்தொடங்கியதனையடுத்து, இத்தகைய தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை ஊக்கமிழந்தன.

தற்போது நாட்டில் காணப்படும் கைத்தொழில்களில் பெரும்பாலானவை, கடந்த மூன்று தசாப்த காலத்துக்குள் ஸ்தாபிக்கப்பட்டவையாகும். சீமெந்து, டயர், மட்பாண்டங்கள், உருக்கு, கடதாசி, இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், பசளை, இரும்பு, ஆடைகள், பாரியதுணி ஆலைகள் மற்றும் உணவுப் பொருட் தொழிற்சாலைகள் என்பன இவற்றுள் அடங்கும். நாட்டுக்கெனத் தயாரிக்கப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள் அனைத்துமே கைத்தொழில் அபிவிருத்தியின் அவசியத்தை அங்கீகரித்துள்ளன. பெருகி வரும் ஊழியர் படையை உறிஞ்சிக் கொள்வதற்கும், ஏற்றுமதி வருவாய்களை பன்முகப்படுத்தி, அதிகரித்துக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் இத்துறை இடையறாது விஸ்தரிக்கப்பட்டு வருதல் அவசியமாகும். ஏனெனில், வேளாண்மைத் துறையின் அபிவிருத்தி, அதன் சொந்த மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தைகளில் நாம் விஸ்தரிப்புக்களை மேற்கொள்ளும் பொருட்டு, துரித தொழில்மயமாக்கல் அவசியமாகும். ஏனெனில், வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினைகளையும், உள்நாட்டுச் சந்தையின் சிற்றளவு ஏற்படுத்தியுள்ள வரையறைகளையும் வெற்றி கொள்வதற்கும் அது உதவும். நாட்டின் பெரும்பாலான பொருளுற்பத்திக் கைத்தொழில்கள் சுதந்திரத்துக்குப் பின்னரேயே ஆரம்பிக்கப்பட்டன. மேலும், அரசாங்கத்தின் இறக்குமதி பதிலீட்டுத் திட்டங்களின் விளைவாகவே இக்கைத் தொழில்கள் துவக்கப்பட்டன.

நாட்டின் முழுமொத்த உள்நாட்டுக் கைத்தொழில் கொள்கையை மீளமைக்கும் நோக்குடனேயே, கைத்தொழில் அமைச்சினால் புதிய கைத்தொழில் உத்தி அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டது. இந்த உத்தி 1989 டிசம்பர் 27 ஆம் திகதி அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றது. (அ) இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழிலை ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழிலொன்றாக நிலைமாற்றம் செய்தல், (ஆ) பெருமளவில் தொழில்களையும், வருமான வாய்ப்புக்களையும் வழங்குதல், (இ) பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தி, சென்மதி நிலைவைகளை பலப்படுத்துதல், (ஈ) வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் சமத்துவமான பகிர்வினை உறுதி செய்தல் என்பன புதிய கைத்தொழில் உத்தியின் குறிக்கோள்களாகும். முதலீடுகளுக்கும் ஏற்றுமதிகளுக்குமான மூலவளங்களைத் திரட்டுதல், உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், பொதுத்துறைத் தொழில் முயற்சிகளை சீர்திருத்தி அமைத்தல், போட்டி நிலவும் சூழலொன்றை ஊக்குவித்தல், பாரிய கைத்தொழில்களுக்கும் சிறிய கைத்தொழில்களுக்கும் இடையே இணைப்புக்களை ஸ்தாபித்தல், ஆராய்ச்சி, பயிற்சி, சந்தைப்படுத்தல் என்பவற்றை மேம்படுத்துதல், முதலீடு, உற்பத்தி, ஏற்றுமதிகள் என்பவற்றுக்குத் தடையாக இருக்கும் நிர்வாகத் தடங்கல்களை அகற்றுதல் போன்வற்றை உருவாக்கு

வதற்கான கொள்கை வழிமுறைகளை யும் இந்த உத்தி உள்ளடக்கியுள்ளது.

அண்மைய மாதங்களில் கொழும்பு பங்கு மாற்று நிலையத்தில், மூல தனத்தைத் திரட்டும் விஷயத்தில் உற் சாகமூட்டும் ஒரு புத்துயிர்ப்பு நிலை நிலவி வந்துள்ளது. இது பணத்தைச் சேமிப்பவர்களுக்கும், தொழில் முயற்சி யாளர்களுக்கும் நன்மையளிக்கும் ஒரு போக்காக தென்படுகிறது. கடந்த ஐந்தாண்டு காலத்தில், பங்கு மாற்று நிலையம் பெருவெற்றியுடன் பணத் தைத் திரட்டிவந்துள்ளது. புதிய பங்கு வெளியீடுகள் மூலம் பல கம்பனிகள் தமது மூலதன அடித்தளத்தை வியப் பூட்டும் விதத்தில் விஸ்தரித்துக் கொண் டுள்ளன. உரிமைப் பங்குகள் வெளியீடு என்பது, ஒரு கம்பனி மேலதிக மூலதனத்தை திரட்டிக் கொள்ளும் நோக்கில், அக்கம்பனியில் ஏற்கனவே உள்ள பங்கு தாரர்களுக்கு, அவர் களுடைய பங்குடமை விகிதத்துக்கேற்ப புதிய பங்குகளை வெளியிடுவதாகும். எனவே, உரிமைப் பங்கு வெளியீடுகள், பொதுவாக தற்போதைய பங்குகளின் சந்தை விலையிலும் பார்க்க குறைந்த விலையிலேயே வழங்கப்பட்டு வரு கின்றன. அவ்வாறு செய்யாவிடின், இதனை ஏற்பதற்கு பங்குதாரர்கள் ஊக்குவிப்புப் பெற முடியாது. பங்குதாரர்கள் இந்த அளிப்பினை ஏற்க வேண்டிய கடப்பாடில்லா திருப்பதனால் அதனை அவர்கள் புறக்கணித்து விட முடியும். மேலும், உரிமைப் பங்கு வெளியீட்டினைப் பங்குதாரர் உதறித்தள்ளிவிடவும் முடி யும். அதாவது, பங்குதாரர் தாம் விரும்பும் பட்சத்தில், தனது உரிமைப் பங்குகளை விற்பனை செய்யவோ அல்லது மாற்றவோ முடியும். குறிப் பிட்ட ஒரு காலப்பிரிவுக்கென இப் பங்குகளை வியாபாரம் செய்து, பரி மாற்றம் செய்து கொள்ளவும் முடியும். இதன் மூலம் திரட்டப்படும் நிதிகளின் செலவினம் சர்க்கைக்குரியதாக இருந்த போதிலும், கணிசமான எண்ணிக்கை யிலான கம்பனிகள் இப்பொறி முறை யை பயன்படுத்தி வருகின்றன. இப் படிச் செய்வதன், மூலம் உயர்ந்த வட்டிவீதங்களில் கடன்பெறுவதினின் றும் தவிர்ந்து நடக்கும் அனுகூலத்தை அவை பெறுகின்றன.

தமது மூலதனத்தை விஸ்தரித்துக் கொள்ளவிரும்பும், பங்குகளை வெளி யிடும் கம்பனிகளே உரிமைப்பங்குகளை யும் வெளியிடுகின்றன. அதே வேளை யில், பிரபல்யமிக்க உள்நாட்டு, வெளி நாட்டு தொழில் முயற்சிகளினால் ஊக்குவிக்கப்படும் புதிய கம்பனிகளே புதிய மூலதன வெளியீடுகளை மேற் கொள்ளுகின்றன. அதுமட்டுமன்றி, நீண்டகாலமாக ஸ்தாபிதமாகியுள்ள தனி யார் கம்பனிகள், தமது பங்குகளில் ஒரு பகுதியினை பொதுமக்களுக்கு விற்பனை செய்ய விரும்பும் சந்தர்ப்பங் களிலும் இந்த வழிமுறை பின்பற்றப் படுகின்றது. ஒரு கம்பனியின் பங்குகள் முதன்முறையாக பங்குமாற்று நிலை யத்தில் நான்கு பிரதான வழிகளில் வெளியிடப்பட முடியும்.

(அ) தகவலறிக்கை மூலம் வெளியிடு தல்.

(ஆ) அளிப்பு மூலம் விற்பனை.

(இ) விற்பனைக்கு வைத்தல்.

(ஈ) அறிமுகம்.

புதிய மூலதன வெளியீடு – மூல தனத்தின் வடிவம், திரட்டக்கூடிய தொகை, பல்வேறு வெளியீட்டு முறை கள், காலத்தைக் குறித்தல், தக வலறிக்கை தயாரிப்பு, வெளியிடுவதற் கான விண்ணப்பம், வெளியீட்டுச் செலவுகள், காப்புறுதி முதலியவற்றை கொழும்புப் பங்கு மாற்று நிலையத்தின் உறுப்பினர்களிடமிருந்தும், அபிவிருத்தி வங்கிகளிலிருந்தும், வணிக வங்கி களிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடி யும். பெரும்பாலும் சாதாரண பங்கு களே பொதுமக்களுக்கு வெளியிடப்படு கின்றன. சாதாரண பங்குகளை வெளி யிடுவதற்கு விண்ணப்பிக்கும் கம்பனி கள் பின்வரும் தேவைப்பாடுகளை நிறைவு செய்ய வேண்டுமென்பது ஒரு பொதுவிதியாக எதிர்பார்க்கப்படு கின்றது.

(1) குறைந்தது ரூபா 5000,000 செலுத் தப்பட்ட மூலதனமாகக் கொண்டி ருத்தல்.

(2) கம்பனி சேரும் வகையைப் பொறு த்து வெளியிடப்பட்ட மூலதனத்தில் பின்வரும் சதவீதம் பொதுமக்க ளின் கைகளில் இருத்தல் வேண் டும்.

ரூபா 10,000,000 கீழ் 40%
ரூபா 10,000,000 தொடக்கம் 25,000,000 வரை 30%
ரூபா 25,000,000 க்கு மேல் 25%

இந்தத் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் போது பின்வருவனவற்றி லிருந்து விலக்களிக்கப்படுகின்றது:

(அ) பிரதான துணை அல்லது இணைக் கம்பனிகளினால் வைத் திருக்கப்படுதல்.

(ஆ) பணிப்பாளர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது அமர்த்தப்பட்டவர்களால் கம்பனி கள் வைத்திருத்தல்.

**2. பங்குகளுக்கான உடன் சந்தைப் பெறுமதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளல்**

இரண்டாந்தரச் சந்தையில் ஒரு கம்பனியின் பங்குகளின் விலை, எளி மையான கேள்வி மற்றும் வழங்கல் சக்திகளாலேயே நிர்ணயிக்கப்படுகின் றது. அதாவது, கொள்வனவு செய்ப வர்கள் செலுத்தும் விலை, மற்றும் விற்பனை செய்பவர்கள் ஏற்றுக் கொள் ளும் விலை என்பவற்றின் அடிப்படை யிலேயே வியாபாரம் நடைபெறுகிறது. முதலீடுகள் மீதான ஆதாயங்கள் எப் பொழுதும் பங்கிலாபங்களின் வடிவில் இருப்பதில்லை. கொள்வனவு செய்யும் நேரத்துக்கும், விற்பனை செய்யும் நேரத்துக்குமிடையில் ஒரு பங்கின் விலை அதிகரித்தால் முதலீட்டாளர் மூலதன ஆதாயமொன்றை (அல்லது இலாபமொன்றைப்) பெறுகிறார். இது, பிரதான பங்குடமையாளர்கள், பிறி தொரு இடத்தில் முதலீடு செய்யும் பொருட்டு, தமது பங்குகளின் ஒரு பகுதியை விற்பனை செய்வதற்கு அவர் களுக்கு வாய்ப்பினை அளிக்கிறது.

**3. பங்குகளை வெளியிடும் கம்பனி களுக்குக் கிடைக்கும் நிதிசார் ஊக்குவிப்புக்களும் வரிச் சலுகை களும்.**

தற்பொழுது பங்குகளை வெளியிடும் பொதுக்கம்பனிகள் அனைத்தும், தமது இலாபங்கள் மீது 40 சதவீத சலுகை விகிதத்தில் வருமான வரிக்கு உட்

படுத்தப்பட்டு வருகின்றன. (ஏனைய கம்பனிகளைப் பொறுத்தவரையில், அவை 50 சதவீதம் வரி செலுத்துதல் வேண்டும்), பங்குகளை வெளியிடும் பொதுக்கம்பனிகள் பின்வரும் தேவைப் பாடுகளை நிறைவு செய்யும் பட்சத்தி லேயே அவற்றுக்கு இந்த வரிச்சலுகை அளிக்கப்படுகின்றது:

1. கம்பனியில் பங்குதாரர்களாக பதிவு செய்யப்பட்டிருக்கும் நபர் களின் எண்ணிக்கை 200 இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண் டும்.

2. கம்பனியின் மொத்த வெளியிடப் பட்ட பங்கு மூலதனத்தில், ஐந்து நபர்கள் இணைந்து நேரடியாக அல்லது அமர்த்தப்பட்டவர்களூக் கூடாக 60 % க்கு மேற்பட்ட பங் கினை வைத்திருக்கக்கூடாது.

இதுதவிர பட்டியலிடப்பட்ட கம் பனிகளின் பங்குதாரர்கள் பின்வரும் வரி அனுகூலங்களையும் பெறு கின்றனர் :

1. பங்குகளை வெளியிடும் ஒரு பொதுக்கம்பனியின், பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் கிடை க்கும் மூலதன ஆதாயங்கள் - ஒரு வருட காலம் வரையில் வைத்தி ருந்து அதன்பின்னர் விற்பன்ன செய்வதானால் - வரி அறவீட்டுக்கு உட்படுத்தப்படுவதில்லை.

2. பங்குகளை வெளியிடும் ஒரு பொதுக்கம்பனியினால், 1991 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யன்று அல்லது அதற்குப் பின்னர், அதன் பங்குதாரர்களுக்கு பகிர்ந் தளிக்கப்பட்ட பங்கிலாபங்கள், எந்த வகையான பிடித்துவைத்தல் வரிக்கும் உட்படுத்தப்பட மாட் டாது.

3. வதிவிடப் பிரஜைகள் அல்லாத பங்குதாரர்களுக்கு செலுத்தப்படும் பங்கிலாபங்கள் மீது 15 சதவீத பிடித்துவைக்கும் வரி தொடர்ந்தும் அறவிடப்பட்டு வரும்.

**4. பங்கு உரித்தினை விரிவாக்குதல்**

ஒவ்வொரு தொழில் முயற்சியாள ரும் தனது சொந்த வியாபாரத்தை, ஒரு தனியார் கம்பனியாக கட்டி யெழுப்பும் கனவினைக் கொண்டுள் ளார். அப்பொழுது அதன் வெற்றி மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்கள் என்ப வற்றின் பின்னணியில், அதனை சந்தை யில் விற்பனை செய்யப்படக்கூடியதாக இருக்குமென்றும் அவர் எதிர்பார்க்கின் றார். இத்தகைய பல தொழில் முயற்சி யாளர்களைப் பொறுத்தவரையில், குறைந்தது 40 சதவீதத்தை கொள்வனவு செய்வதற்கு பெருந்தொகையான தனி நபர்களை பெற்றுக்கொள்வதே, மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு தீர்வாக இருக் கும். இவ்வாறு செய்வதன் மூலம் தொழிலின் ஸ்தாபகரும், அவருடைய குடும்பத்தினரும் இத்தொழில் மீது கட்டுப்பாட்டினை விதித்துக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், விற்பனை மூலம் பெற்றுக்கொள்ளும் பணத்தை வேறொரு தொழில் முயற்சியில் பயன் படுத்திக் கொள்ளவும் முடியும். பங்கு மாற்று நிலையம் வியாபாரக்குக்கும் தொழில் முயற்சிக்குமான பணத்தைத் திரட்டுவதில் ஒரு மத்தியஸ்த அமைப் பாக செயற்பட்டுவருவதனால் இது சாத்தியமாகின்றது. ஒன்றுக்கொன்று உறுது;ணையான இரு பொருளாதாரத் தேவைகளிலிருந்து-ஒரு ஸ்தாபனத்தின் நிதிகளுக்கான தேவையும் தனது மேல திகப் பணத்தை திறமையான முறை யில் முதலீடு செய்வதற்கான ஒரு தனிநபரின் தேவையும் - இது வளர்ச்சி யடைந்துள்ளது. அதன் விளைவாக, மேலதிகப்பணம் அது தேவையாக இருக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுகிறது.

எனவே, வளர்ந்து வரும் ஒரு தொழில் முயற்சியைப் பொறுத்தவரை யில், அது தன்னை கொழும்பு பங்கு மாற்று நிலையத்தில் குறித்துக் கொள் வதன் மூலம் கிடைக்கும் மிகப் பெரிய அனுகூலம், அந்த நிறுவனம் பெற்றுக் கொள்ளும் (கேட்காதுகிடைக்கும்) நிதி வளமாகும். குறித்த கம்பனி சிறந்த முறையில் இயங்கி வருவதாக முத லீட்டாளர்கள் கருதும் பட்சத்தில், பெருந்தொகையான முதலீட்டாளர்கள் அதன் பங்குகளைக் கொள்வனவு செய்ய முன்வருவார்கள்.

"பட்டியலிடப்பட்ட 167 கம்பனிகள், 47,341 தொழில் வாய்ப்புக்களை மட்டுமே வழங்கியிருந்தன. இது வெளியிடப்பட்ட மூலதனத்தைப் பொறு த்தவரையில், ஒரு தொழில்வாய்ப்புக்கு ரூபா 1,28,000 என்ற வீதத்தில் உள்ளது. தேசிய பொருளாதார அளவுகோள் களின் படியும், பொதுவான உள்நாட்டு கம்பனிகளின் தராதரங்களின் படியும் தொழிலொன்றுக்கான இந்தச் செலவு மிகவும் உயர்ந்ததாகவே காணப்படு கிறது. இந்த நிலை பங்குகளை வெளி யிடும் கம்பனிகள் இலங்கையின் வர்த்த கத்துறையில் உயர் அளவில் மூலதனச் செறிவு மிக்கனவாக இருந்து வருகின் றன என்பதனையே காட்டுகிறது. இது உண்மையில் பொருளாதாரத் தர்க்க வியலை உறுதிப்படுத்துவதாக உள் ளது. மூலதனத்தின் செலவினைக் மிகக் குறைவாக வைத்திருந்த வரி வழிமுறைகள் மூலம் பங்குச் சந்தை ஊக்குவிக்கப்படுகிறது. குறிப்பாக, மூலதனத்தின் மீதான ஆதாயங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுக்கும் சந்தர்ப்பங்களி லேயே இது நிகழ்கிறது. எனவே, நாங்கள் மூலதனச் செறிவுமிக்க இந்தச் சந்தையை நோக்கி எமது தேசிய மூல வளங்களை திசைதிருப்பி விட்டுள் ளோம். பொதுவாகச் சொல்லப் போனால், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர உபகரணங்களும், கட்டடங் களும் மிக உயர் அளவில் காணப்படு கின்றன". என கலாநிதி டாரின் குண சேகர எழுதியுள்ளார்.

சந்தை, ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மை அல்லது பங்குகளுக்கான கேள்வி என்பவற்றின் அடிப்படை யிலேயே முழுக்க முழுக்க இன்றைய நிலைக்கு வளர்ச்சி கண்டு வந்துள்ளது என்பதே எனது கருத்தாகும். ஆகவே, இந்த நிலையில் பங்குமாற்று நிலை யத்துக்கூடாக சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கு மூல தனத்தை கிடைக்கக் கூடியதாகச் செய் வது மிக முக்கியமான ஒரு நட வடிக்கையாக இருக்கும் இந்தக்கைத் தொழில்துறை, நாட்டின் பொருள் வெளியீட்டுக்கு கணிசமான அளவில் பங்களிப்புச் செய்து வருவதனாலும், அதனால் அது நீண்டகால வளர்ச்சிக் கான பாரிய உளார்ந்த ஆற்றலைக் கொண்டிருப்பதாலும் இந்த நட வடிக்கை குறிப்பாக அவசியமாகின் றது. இத்தகைய கைத்தொழில் முயற்சி

யில் ஈடுபட்டிருக்கும் கம்பனிகள், பங்கு வெளியீடு தொடர்பாக பெரிய கம்பனிகல் மீது விதிக்கப்பட்டிருக்கும் தரநிர்ணயங்களை நிறைவு செய்ய முடியாதிருந்த போதிலும், (வெகுவிரைவில் வருமானப் பாய்ச்சல் இடம் பெறுமென்று எதிர்பார்க்கப்படும்) ஒரு செய்திட்டத்தை அல்லது ஒரு உற்பத்தியை நிதிப்படுத்துவதற்கு அவற்றுக்கு நிதிகள் தேவைப்படுகின்றன. கம்பனிகளின் அளவு குறித்த வரையறைகளற்ற இரண்டாவது சபையொன்றை ஸ்தாபிப்பது காலத்துக்குகந்த ஒரு தேவையாக உள்ளது. எனினும், இரண்டாவது சபைக்கான பிரவேசத்துக்கு, அது ஒருவருடகால நிதிப்பதிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## சொல்லகராதி

**அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்–** பங்குகளின் செயற்பாட்டின் அடிப்படையில், பங்குச் சந்தையின் நிலையை அளவிடும் புள்ளி விபர ரீதியான கருவி.

**தரகர்: –** தரகுக் கூலியைப் பெற்று, இரு திறந்தவர்களிடையே விற்பனைகளையும், கொள்வனவுகளையும் நடத்தும் ஒரு முகவர்.

**பரவலாக்குதல் –** பங்கு உரித்தினை பெரும் எண்ணிக்கையிலான தனிநபர்களிடையே பரவலாக்குதல்.

**பொதுக்கம்பனி –** சட்டபூர்வமான ஒரு நோக்கத்துக்காக சங்க நடைமுறை விதிகளுக்கு தமது பெயர்களை வழுங்கி, பதிவு செய்துகொண்ட பின்னர் கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடக்கும் எவரேனும் ஏழு நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்டோர்.

**தனியார் கம்பனி –** தனியார் கம்பனியொன்றைப் பொறுத்தவரையில், கம்பனியைப் பதிவு செய்வதற்கு இருநபர்களோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ போதியவர்களாவர்.

**பட்டியலிடப்பட்ட/பங்குகளை வெளியிடும் கம்பனி –** கொழும்பு பங்கு மாற்று நிலையத்தில் இக்கம்பனிகளின் பங்குகள் வியாபாரத்துக்கு வைக்கப்பட்டுள்ளன.

**வெளியிடப்பட்ட பங்குகள்/மூலதனம் –** குறிப்பிட்ட ஒரு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தின் ஒரு பகுதியைப் பொதுமக்களுக்காக வெளியிடுவதே இதுவாகும்.

**பங்கிலாபம் –** கம்பனியின் பணிப்பாளர்களின் விருப்பத்துக்கேற்ப, வழக்கமாக இலாபங்களின் ஒரு பகுதியை பகிர்ந்தளித்தல்.

**பன்முகப்படுத்தல் –** வெவ்வேறு கம்பனிகளின் வெவ்வேறு பங்குகளின் முதலீடுகளை, பல்வேறு துறைகளிலும் பரவலாக முடக்குதல்.

**நெம்புகோல் தொகுதி –** சாதாரண பங்குகளில், கடன்வட்டி அல்லது சலுகைப் பங்கிலாபங்கள் (அல்லது) ஆகிய இரண்டையும் கொண்ட நிலையான கட்டணங்களின் பங்கொன்றுக்கான ஆதாயத்தின் தாக்கம், சாதாரண பங்கொன்றுக்கான ஆதாயங்களின் அதிகரிப்பு, வீழ்ச்சி என்பவற்றின் சதவீதத்தின் விளைவாக நிலையான கட்டணங்களில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி.

**சந்தை விலை –** கொழும்பு பங்கு மாற்று நிலையத்தின் வியாபாரத் தளத்தில் ஒரு பங்கு விற்பனை செய்யப்படும் பட்டியல் விலை.

**அசல் பெறுமதி –** பங்கொன்றின் குறிப்பிடப்பட்ட முகப்பெறுமதி பங்கொன்றுக்கான ரூபா வடிவில் வெளிப்படுத்தப்படுகிறது. சாதாரண பங்கொன்றின் அசல் பெறுமதி, பொதுவாக நடப்புச் சந்தை விலையுடன் எந்தவிதமான சம்பந்தத்தையும் கொண்டிருப்பதில்லை.

**புதிய பங்கு வெளியீடு –** ஒரு கம்பனி முதல் தடவையாக தனது பங்குகளை விற்பனைக்கு விடுதல்.

**அளிப்பு –** ஒருவர் தனது பங்கினை விற்பதற்குத் தயாராகவிருக்கும் மிகக் குறைந்தபட்ச விலை. இது கேள்விக்கு – அதாவது ஒருவர் ஒரு பங்கினை வாங்கக்கூடிய உச்ச மட்ட விலைக்கு நேரெதிரானதாகும்.

**உரிமைப்பங்கு வெளியீடு –** ஒரு கம்பனியின் நடப்புப் பங்குதாரர்கள், கம்பனியின் மேலதிகப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படும் ஒரு தற்காலிக சலுகை.

**தகவலறிக்கை –** பங்குகள் பொதுமக்களுக்கு விற்பனைக்கு விடப்படுகின்றன என்பதனை விளக்கும் ஒரு சட்ட ரீதியான ஆவணம். மேலும், குறிப்பிட்ட செய்திட்டத்தின் அல்லது தொழில் முயற்சியின் பல்வேறு விபரங்களும் இந்தத்தகவலறிக்கையில் வழங்கப்படுகின்றன.

**பங்குமாற்று நிலையம் / பங்குச் சந்தை –** வெளியிடப்பட்ட பங்குகள் வியாபரம் செய்யப்படும் சந்தை இடம். புதிய பங்கு வெளியீடுகள் பங்குமாற்று நிலையத்தின் முதனிலைச் சந்தைக் கூடாக பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**பங்குதாரர் –** ஒரு கம்பனியின் பதிவேடுகளில் பெயர் குறிக்கப்பட்டுள்ள, அக்கம்பனியின் பங்குகளை வைத்திருக்கும் ஒரு நபர்.

(51 ம் பக்கத் தொடர்ச்சி)

யின் பெரும் பகுதி சுமத்தப்படுகிறது. வெளிநாட்டு முதலீடுகளைப் பொறுத்தவரையில், திறந்த பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவதே நோக்கமாக உள்ளது. உள்நாட்டுச் சந்தை – அதாவது மூலதன நிதிச் சந்தைகள், ஊழியச் சந்தை அறிவுசார் சொத்துக்கள், சந்தை பண்டச்சந்தை என்பன – படிப்படியாக திறந்துவிடப்படுதல் வேண்டும்.

இன்றைய சோவியத் யூனியனின் அரசியல் கட்டமைப்புக்குள் குடியரசுகளுக்கு ஒரு புதிய பங்கினை அளிப்பதனை நாளாந்த பொருளாதாரச் செயற்பாட்டு முறை ஊர்ஜிதம் செய்ய வேண்டுமென்பதனையே அமைச்சரவை ஒரு முக்கிய அம்சமாக எடுத்துக் காட்டுகிறது. மத்திக்கும் குடியசுகளுக்குமிடையிலான அதிகார வரம்புகள் பொதுநலனை நிறைவு செய்வதாக இருத்தல் வேண்டும்.

# தேசிய நெருக்கடியொன்றில் தொடர்பு சாதனங்களின் பங்கு

பிரட்மன் வீரக்கோன்

**நாட்டின் தலைசிறந்த சிவில் அதிகாரிகளில் ஒருவாரான பிரட்மன் வீரக்கோன், ஆறு பிரதமர்களின் கீழ் செயலாளாரக பணிபுரிந்தவர். அவர், சர்வதேச விவகாரங்கள் குறித்த ஜனாதிபதி ஆலோசகர், சர்வகட்சி மாநாட்டின் செயலாளர், மனித உரிமைகள் செயலணியின் உறுப்பினர் போன்ற பதவிப் பொறுப்புக்களை தற்பொழுது வகித்து வருகிறார்.**

நாங்கள், கடந்த இரண்டு வருட காலமாக, ஒரு தேசமென்ற முறையில், இங்கு முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராத இரு பாரிய நெருக்கடிகளை சமாளிக்க வேண்டியிருந்தது. இந்த நெருக்கடிகள், இயல்பில், பொதுவான சமூகக் கட்டமைப்பினை தகர்த்துவிடக் கூடியவையாகவும், பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டவையாகவும் இருந்தன. அதுமட்டுமன்றி, எமது நாட்டுக்கு நீண்டகால ரீதியில் மிக மோசமான பின்விளைவுகளை எடுத்து வரக்கூடியவையாகவும் அவை இருந்தன. இதில் ஒன்று (அனேகமாக இப்போது முடிவுக்கு வந்துவிட்ட) ஜே.வி.பி. கிளர்ச்சியாகும். அரசினதும் சமுதாயத்தினதும் உயிர்வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமைந்த ஒரு தொகுதி சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளினால் உருவான தேசிய நெருக்கடியொன்றாக இது இருந்தது. நாடு 1988, 1989 ஆகிய ஆண்டுகளில், ஒரு தேசிய நெருக்கடி என்ற முறையில் சந்தித்த நிகழ்வுகள் குறித்த வர்ணனை இங்கு பொறுத்தமற்றதாக இருக்க மாட்டாது. அது சொல்லின் முழு அர்த்தத்திலும் ஒரு தேசிய நெருக்கடியாகவே இருந்தது.

தேசிய அரசியல் கட்டமைப்பு, பொருளாதாரம், சமூகம் ஆகிய அனைத்துப் பிரிவுகளையும் அது அச்சுறுத்தி வந்தது. பாராளுமன்றம், நீதிமன்றங்கள், நிர்வாக இயந்திரம், பத்திரிகை உலகம் ஆகிய நிறுவன அமைப்புக்கள் அனைத்தையும் இந்த எழுச்சி முழு அளவில் எதிர்த்து நின்றது. இந்த நிறுவனங்கள் ஜனநாயக அரசொன்றின் அங்கீகரிக்கப்பட்ட அத்திவாரங்கள் என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.

நாங்கள் சந்தித்த – இன்னும் சந்திக்கொண்டிருக்கிற – அடுத்த நெருக்கடி வடக்கிலும், கிழக்கிலும் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடன் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் மோதலாகும். இந்தப் போராட்டத்தின் தீவிரம், மூர்க்கத்தன்மை, நீடித்த நிலை என்ற அம்சங்களும் அது தேசிய அரசொன்றின் ஒருமைப்பாட்டுக்கும், ஐக்கியத்துக்கும் பயமுறுத்தலொன்றாக இருந்து வருகின்றதென்ற நிலையும் தெளிவாகவே அதனை ஒரு மாபெரும் தேசிய பிரச்சினையாக மாற்றியமைத்திருக்கிறது.

இந்த நெருக்கடிகள் குறித்த தகவல்களை வெளியிடுவதில் தொடர்பு சாதனங்கள் இலங்கையில் மிகவும் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வந்துள்ளன; இன்னமும் வகித்து வருகின்றன. உங்களுடைய இந்தக் கருத்தரங்கின் வாதப்பிரதிவாதங்களில் இந்த விஷயம் அடிக்கடி எழுப்பப்படும் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன், இக்கருத்தரங்குக்கு அவசியமான முக்கியமான சில மூலப்பொருள்களை அது வழங்குவதுடன், தேசிய நெருக்கடியொன்றை அறிக்கையிடுவதில் தொடர்பு சாதனத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கான வழிகாட்டு நெறி ஒன்றினை தொகுப்பதற்கான உங்கள் முயற்சிகளிலும் இது முக்கிய இடத்தைப் பெறும். தொடர்புசாதனங்கள், தேசிய நெருக்கடி ஒன்றில் வகிக்க வேண்டிய பங்கு குறித்த முக்கியமான சில விஷயங்களை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முதலாவது விஷயம், ஒரு பிரச்சினைக்கு வரைவிலக்கணம் வழங்குவது தொடர்பானதாகும். எந்த வகையான ஒரு நெருக்கடி குறித்து நாங்கள் பேசுகிறோம்? சாதாரண சந்தர்ப்பங்களில் தொடர்பு சாதனங்களிலிருந்து நீங்கள் எதனை எதிர்பார்க்கிறீர்கள்? நெருக்கடியான காலகட்டங்களில், எத்தகைய முறையில் இதைவிடவும் மாறுபட்ட ஒரு பங்கினை எதிர்பார்க்கின்றீர்கள்? ஒரு தேசிய நெருக்கடியின் போது, பொறுப்புணர்ச்சி மிக்க தொடர்புசாதன அமைப்பிலிருந்து சற்று விசேஷமான ஒரு பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. பொதுமக்கள், அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகள் என்ற அமைப்புக்கள் சாதாரண காலங்களில் தொடர்பு சாதனங்களிலிருந்து எதனை எதிர்பார்க்கின்றன? இதனை மிகச் சுருக்கமாகச் சொல்வதானால், தெளிவாகவும், சரியாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, சாத்தியமானால், கல்வியினைப் பெற்றுக் கொள்ளும் உரிமை என்பவற்றை இது உள்ளடக்கி இருக்கின்றது என்று கூறலாம். ஒருவர், தொடர்பு சாதனங்கள், தமது அறிக்கைகளுக் கூடாக வெளிப்படுத்தும் பிரச்சினைகள் குறித்து சரியான முறையில் தனது சிந்தனைகளை நெறிப்படுத்திக் கொள்வதற்கு உதவும் வகையில் இந்தக்கல்வியூட்டுதல் பங்கு அமைதல் வேண்டும். ஆனால், இன்றைய கொந்தளிப்பு மிகுந்த, பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் உலக அமைவில், நாங்கள் ஒரு நெருக்கடியிலிருந்து மற்றொரு நெருக்கடியை நோக்கி விரைவாக நகர்ந்து கொண்டிருக்கின்றோம் என்றும், இத்தகைய சூழ்நிலைகளில், சாதாரண சகஜ நிலைமை நிலவும் காலகட்டங்களை காணமுடியவில்லை என்றும் ஒருவர் வாதிக்கக்கூடும். இந்த நெருக்கடிகளில் சில, மனிதனால் உருவாக்கப்பட்டவையாகும்: அது தவிர, இயற்கையான நெருக்கடிகளும், உள்ளக நெருக்கடிகளும், (வெளியிலி

ருந்துவரும் நெருக்கடிகளும், நீண்ட கால குறுங்கால நெருக்கடிகளும் காணப்படுகின்றன. மற்றொருபுறம், பொருளாதார நெருக்கடி, துப்பாக்கிக் கலாச்சாரம் மற்றும் தொடர்ச்சியான வறுமை போன்ற துன்பங்களில் மனித சமுதாயம் சிக்கித் தவிக்கிறது. இவை தேசியநெருக்கடிகள் அல்ல என்று கூற முடியுமா? இத்தகைய நிலைமைகளை தொடர்புசாதனங்கள் எந்த விதத்தில் எதிர்கொள்ள வேண்டும் என்ற விஷயத்தையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டாமா ?

நான் இங்கு முன்வைக்க விரும்பும் அடுத்த விஷயம், எந்த ஒரு நாட்டிலும் தொடர்பு சாதனங்கள் அரசுடன் கொண்டுள்ள உறவுகளின் பின்னணியில், அவை பெற்றுள்ள கட்டமைப்பு தொடர்பானதாகும். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் அளவு, தொடர்பு சாதனங்கள் அரசாங்கத்தில் எவ்வளவு தூரம் தங்கியுள்ளன போன்ற பிரச்சினைகள் இந்த இடத்தில் மிகமுக்கியமானவையாகும். எமது பிராந்தியத்தின் பல நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள், பொதுவாக அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினாலேயே கையாளப்பட்டு வருகின்றன என்ற உண்மையை இங்கு நான் சுட்டிக்காட்டுதல் வேண்டும். இந்த அமைப்புக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பணிப்பாளர் சபையின் கைகளிலேயே உள்ளன. இந்தப் பணிப்பாளர்கள், முடிவில் அரசாங்க அமைச்சருக்கே பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய நியமனமும் அமைச்சரினாலேயே செய்யப்படுகிறது. பத்திரிகைத் துறையைப் பொறுத்த வரையில், நிலைமை சற்று மாறுப்பட்டதாகும். பல நாடுகளில் உரித்தினைப் பொறுத்த வரையில் பத்திரிகைகள் அரசாங்கத்திலிருந்தும் சுதந்திரமானவையாக இருந்து வருகின்றன. எனினும், அரசாங்க விளம்பரங்களைக் கொடுத்தல் அல்லது விலக்கிக் கொள்ளுதல், பத்திரிகைக் காகித விநியோகம் போன்றவற்றுக்கூடாக மறைமுகமான அரச கட்டுப்பாட்டினை -இது அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் ஓர் அரச நடவடிக்கையாக இருக்கிறது- திணிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

மூன்றாவது வகையான அக்கறை, தற்போதைய உங்கள் கலந்துரையாடல் தொடர்பானதாகும். தேசிய அரசு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் போரொன்றில் ஈடுபட்டிருக்கும் போது, அது தொடர்பான பிரச்சினைகளை அறிக்கையிடுவதில் தொடர்பு சாதனங்களுக்குள்ள பொறுப்பு என்பதே இந்த விஷயமாகும். நாடு, உள்நாட்டில், அதன் சொந்தக் குடிமக்களில் ஒரு குழுவுக்கு அல்லது குழுக்களுக்கு எதிராக போர்தொடுத்திருக்கும் நிலையில் தோன்றியுள்ள ஒரு தேசிய நெருக்கடியின் போது, இந்த நிலை மிகவும் சிக்கலானதாக, சவால்களை முன்வைப்பதாக இருக்கிறது என்று நான் துணிந்து கூறுவேன். தொடர்பு சாதனத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களைப் பொறுத்த வரையில், இந்த நெருக்கடி தார்மீகப் பிரச்சினைகளையும், அறநெறிசார்ந்த பிரச்சினைகளையும், தொழில் நுட்பப் பிரச்சினைகளையும் எடுத்து வருகின்றது. இத்தகைய ஒரு பின்னணியிலேயே, இலங்கையின் அநுபவம் உங்களுக்கு மிகவும் உபயோகமான, வழிகாட்டக்கூடிய ஒரு தொகுதி மூலப் பொருட்களை வழங்கக்கூடியதாக இருந்து வருகிறது என்பது எனது கருத்தாகும்.

அரசாங்க அதிகாரிகளும் தொடர்பு சாதனத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களும் எதிர்கொள்ள நேரிடும் இத்தகைய தடுமாற்ற நிலைகள், போர்க்கால நிலமைகளின் கீழ் பல நாடுகளில் தோன்றுவதுண்டு. உலகெங்கிலுமுள்ள பல ஜனநாயக அரசாங்கங்கள், அரசின் பாதுகாப்புக் குறித்த பேரளவு நலன்களைக் கவனத்திலெடுத்து, உத்தியோகபூர்வ இரகசியக் காப்புச் சட்டம், வன்முறைக்குத் தூண்டுதல், வதந்திகளைப் பரப்புதல் போன்றவற்றுக்கெதிராக பத்திரிகைகளினதும் தொடர்பு சாதனங்களினதும் சுதந்திரத்துக்கு வரையறைகளை விதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுண்டு. அமெரிக்கா, கிரனாடா மீதான அதன் படையெடுப்பின் போதும், வளைகுடாப் போரின் போதும், ஐக்கிய இராச்சியம் போக்லாந்து யுத்தத்தின் போதும் பத்திரிகைகள் மீது இத்தகைய தடைகளை விதித்த உதாரணங்களைக் காட்ட முடியும்.

அரசியல் அமைப்பிலிருந்து வரும் தடைகள் தவிர, ஒரு தேசிய நெருக்கடி இயற்கையாக வளர்த்தெடுக்கும் சுய தணிக்கை குறித்த உள்ளகத் தடங்கல்களிலும் அண்மைக்காலத்தில் அதிக அக்கறை காட்டப்பட்டுவந்துள்ளது. யுத்த நிலைமைகளின் போது, பி.பி.சி. போன்ற பெருமைமிக்க தகவல் நிறுவனங்களிலும் கூட உருவாகக் கூடிய சில நிலமைகளை புகழ்பெற்ற தொடர்பு சாதனத்துறை வல்லுனரான ஜோன் பிலகர் எடுத்துக் காட்டியுள்ளார். பி.பி.சி. யின் வாராந்த மீளாய்வுக் குழுக்கூட்டத்தின் குறிப்புக்களை மேற்கோள்காட்டும் அவர், போக்லாந்து யுத்தத்தின்போது பி.பி.சி. நிறுவனம் எடுத்து சில தீர்மானங்களை வெளிப்படுத்தியுள்ளார். பொதுமக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பு நிலைமைக்கேற்ற விதத்தில் செய்திகளை வழங்க வேண்டுமென்று அது தீர்மானித்ததுடன், பாரபட்சமற்ற தன்மை "அவசியமற்ற எரிச்சலூட்டும்" ஒரு நடவடிக்கையாக இருந்ததனையும் உணர்ந்திருந்தது.

எமது நாடுகளிலும், பத்திரிகைகளின் ஆசிரிய பீடக் கொள்கைகளை வடிவமைப்பதில் இத்தகைய அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. என்று கருதுவது தவறானதாக இருக்க மாட்டாது. ஆசிரிய பீடத்தின் மீது, செய்திகளை மிகச்சரியான முறையில் வெளியிடுவதனை தடுக்கும் நோக்கில் ஓரளவுக்கு நெருக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில், போர் நிலமைகளின் போது, செய்திகளை வெளியிடுவது இச்சாதனங்களுக்கு எத்தகைய தார்மீக மற்றும் அறநெறி சார்ந்த தடுமாற்றங்களை தோற்றுவிக்க முடியும்? உண்மை நிலையைத் தெரிந்திருந்தும், அவற்றைச் சரியாக, பாரபட்சமற்ற முறையில் வெளிப்படுத்த முடியாத தடுமாற்ற நிலை தோன்றுகின்றது. அரசாங்கத்தின் உச்சமட்ட முடிவெடுக்கும் வட்டாரங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு பெற்றிருந்தவன் என்ற முறையில், அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைமை, சரியான கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு, நிறைவான முழு அளவு அறிவினையே வேண்டி நிற்கின்றது என்பதனை ஒரு துளியேனும் சந்தேகமின்றி என்.

னால் கூற முடியும்.

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றங்கள் நம்பகமான தகவல்களைப் பெறும் பிரச்சினையை மேலும் சிக்கிலாக்கியுள்ளன. எமது யுகத்தை நவீன தகவல் யுகமென்று குறிப்பிடுவது மிகவும் பொறுத்தமானதாக இருக்கும். இரண்டு காரணிகள் - ஒன்று நவீன தொழில்நுட்பம்; அடுத்தது, சர்வ வியாபகமாகவுள்ள வெளிநாட்டு நிருபர் அமைப்பு - ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என எண்ணுகிறேன். தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள், ஒளியியல் நார்கள், வீடியோ சாதனங்கள், அச்சுப் பிரதிகள் மற்றும் சர்வதேச கம்பியூட்டர் வலைப் பின்னல் அமைப்புக்கள் என்பவற்றுக் கூடாக இன்றைய தொடர்பு சாதனங்கள் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு காரணியாக வளர்ச்சி கண்டுள்ளன.

எந்த ஒரு பிரச்சினை குறித்தும் சமூக விழிப்புணர்ச்சியின் மட்டத்தையும், தீவிரத்தினையும் நிர்ணயிப்பதில் வேறெந்த காரணியை விடவும் தொடர்பு சாதன அமைப்பே அதிகளவில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. வெளிநாட்டு நிருபர் சாப்பு ரீதியாக, உள்ளூர் நிர்ப்பந்தங்களுக்கு அதிகளவில் ஆளாவதில்லை. அத்துடன், சர்வதேச தகவல் வலைப்பின்னல் அமைப்பின் அனுகூலம் அவருக்கு கிடைத்து வருகிறது. அவர் சரியான ஒரு சித்திரத்தை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்யவில்லையென்றாலும், பிறிதொரு கண்ணோட்டத்தை முன்வைப்பதில் முக்கிய இடத்தை வகித்து வருகிறார். எனவே, ஒரு நாட்டின் பத்திரிகைகளும், ஒலி பரப்புச் சேவையும் தகவல்களை வழங்கும் போது, வெளி உலகம் என்ன சொல்லக்கூடும் என்ற விஷயத்தையும் கவனத்தில் எடுக்கவேண்டியிருக்கின்றது. நெறிப்படுத்தல்களுக்கான தேவை, மென்மையான ஆனால் இடையறாத நிர்ப்பந்தங்களை தேசிய தொடர்பு சாதன அமைப்பு மீது ஏற்படுத்தி வருகின்றதென்பது உண்மையாகும். இந்த நிலையில், இந்தச் சாதனங்கள் செய்திகளை வெளியிடுவதில் மிகச் சரியாகவும், உணர்ச்சி வசப்படாமலும் செயற்பட வேண்டியுள்ளது.

அடுத்துவரும் மூன்று தினங்களில், நீங்கள் மிகவும் ஆழமாக அலசி ஆராயவிருக்கும் சுவாரசியமான சில பிரச்சினைகளை மேலோட்டமாக அணுகுவதற்கே நான் இங்கு முயன்றுள்ளேன். அண்மையில் இலங்கை அரசாங்கம் துவக்கி வைத்துள்ள தளைகளற்ற தொடர்பு சாதனங்கள் என்ற விஷயம் குறித்து தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் கலந்துரையாடல்களிலிருந்து, நாங்கள் திரட்டிக் கொண்டுள்ள அம்சங்களையே எனது இந்த தனிப்பட்ட சிந்தனைகள் பிரதிபலிக்கின்றன. இந்தத் திசையில் நகர்ந்து செல்வதற்கான தீர்மானமானது பகிரங்கத்தன்மை, கலந்துரையாடல், பங்கேற்றல், கருத்தொருமைப்பாட்டுக்கான முயற்சி என்பவற்றைக் கொண்ட அரசாங்கத்தின் பரந்த மனப்பான்மையுடன் இணைந்து செல்வதாகவே உள்ளது. கட்டுப்பாடுகளை அகற்றி பொருளாதாரத்துக்கும் சமூகத்துக்கும் விடுதலையளிக்கும் நிகழ்வுப் போக்கின் ஒருபாகமாகவே இதனையும் நோக்க வேண்டியுள்ளது. கடந்த மூன்று மாத காலமாக, சர்வகட்சி மகாநாடு - நாட்டின் பதிவு செய்யப்பட்டுள்ள 28 அரசியல் கட்சிகளில் 20 அரசியல் கட்சிகள் இதில் சேர்ந்து கொண்டுள்ளன - தொடர்புசாதன ஆணைக் குழு தொடர்பான உத்தேச மசோதா குறித்து கலந்துரையாடி வந்துள்ளது. பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி என்பவற்றை உள்ளடக்கிய தொடர்புசாதனத் தொகுதியை தாராளமயமாக்குவதே இந்த மசோதாவின் முதன்மை நோக்கமாகும். அது, மேலும் பல குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் நான் இங்கு எடுத்துக் காட்டுவேன். இவற்றின் மூலம், நாங்கள் ஏற்றுள்ள பாரிய பணியின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். தொடர்பு சாதன ஆணைக் குழுவின் குறிக்கோள்களில் பின்வருவனவும் அடங்கியுள்ளன.

* இலங்கையில் பத்திரிகைகளினதும், இலத்திரனியல் தொடர்பு சாதனங்களினதும் சுதந்திரத்தையும், தங்கியிருக்காத நிலையையும் உறுதி செய்தல்.

* பொதுமக்களின் நலன்கள், தேசிய நலன்கள், பிராந்திய நலன்கள் மற்றும் சர்வதேச நலன்கள் தொடர்பான அனைத்துவிதமான விஷயங்கள் குறித்தும் உண்மையான, சரியான தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான குடிமக்களின் உரிமையை பாதுகாத்தல்.

* தேசிய ஒற்றுமை, இனங்களுக்கிடையிலான ஒருமைப்பாடு மற்றும் பன்முகப்பட்ட கலாச்சாரங்களைக் கொண்ட தன்மை என்பவற்றை பலப்படுத்தி, உறுதிப்படுத்துவதும்; சகிப்புத்தன்மையையும் பன்முகப்பட்ட இயல்பையும் மேம்படுத்துவதும்; இனம், மொழி, மதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்களை இல்லாதொழிப்பதும்.

* பத்திரிகையாளர்களின் அறநெறிகள் தொடர்பான உயர்ந்த தாரதரங்கள் பேணிக்காக்கப்படுவதை உறுதி செய்வதும், பத்திரிகையாளர்களை தொழிலில் சேர்த்தல், கல்வியூட்டுதல், பயிற்சியளித்தல் மற்றும் நலன் புரிச் சேவைகளை வழங்குதல் என்பவற்றை விருத்தி செய்வதும்.

என்னைப் பொறுத்தவரையில், தொடர்பு சாதனத்துறை நெருக்கடியான ஒரு காலகட்டத்தின் போது நாட்டுக்கு ஆற்ற வேண்டிய மிகச் சிறந்த சேவை, பத்திரிகையாளர் ஜோன்டெலான் என்பவரின் அறிவுரையை பின்பற்றுவதாகவே இருக்க வேண்டும். சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் விக்டோரியா மகாராணியின் ஆட்சிக் காலத்தில் ''டைம்ஸ்'' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அவர், அவருடைய நிருபர்களுக்கு இந்த அறிவுரையை வழங்கினார். கிரிமியாப் போர்முனையில் செய்திகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த ஒரு நிருபர், இந்தப் போரின் தியாகங்கள், அழிவுகள், தவறுகள் என்பன குறித்து தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துவிட்டு, தனது பத்திரிகையின் ஆசிரியரிடம், ''இந்த விஷயங்களை நான் வெளியில் சொல்ல வேண்டுமா? அல்லது வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமா'' என்று கேட்டார். ''உண்மையைச் சொல்வதில் நீங்கள் இதுவரையில் எப்படி ஈடுபட்டு 'வந்தீர்களோ, தொடர்ந்தும், எந்தளவுக்கு உங்களால் முடியுமோ அந்தளவுக்கு அந்த முயற்சியில் ஈடுபட்டுவாருங்கள்'' என்று ஜோன்டெலன் பதிலளித்தார்.

# கொழும்பு நகரில் சேரி மற்றும் கொட்டில் குடியிருப்புக்களில் வாழும் பிள்ளைகளின் ஆரம்ப கல்வி நிலை

எச். எல். ஹேமச்சந்திரா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சேரி மற்றும் கொட்டில் குடியிருப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளின் குறைவான பாடசாலைப் பங்கெடுப்புக்கான காரணங்களை இனங்கண்டு, பகுப்பாய்வு செய்யும் பொருட்டு, அதிகாரிகளிடமிருந்தும், இப்பிரச்சினையில் அக்கறை காட்டும் தனிநபர்களிடமிருந்தும் பெற்றோரிடமிருந்தும் மாதிரிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளிடமிருந்தும் மற்றும் ஆவணங்களிலிருந்தும் பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும் வறுமை, போதிய சுகாதார பராமரிப்பின்மை என்பனவே முதன்மைக் காரணங்களாக தெரிகின்றன. போதிய பாடசாலை வசதிகளில்லாமை, குடும்பத் தகராறு, பெற்றோர் வீட்டில் இல்லாமை, பெற்றோரின் அக்கறையீனம் இருப்பிட மாற்றம், பிறப்புச் சான்றிதழ்கள் கிடைக்காமை, மோசமான வீட்டு மற்றும் வெளிச்சூழல் போன்ற காரணங்களும் இப்பிள்ளைகளின் பாடசாலை பங்கெடுப்பு குறைவதற்கு பங்களிப்புச் செய்திருப்பதனை காணமுடிகிறது. பல்வேறு மட்டங்களில், இந்தக் காரணிகள் ஒவ்வொன்றும் பரஸ்பரம் சம்பந்தப் பட்டவையாக இருந்த போதிலும் இப் பகுப்பாய்வில் அவை தனித்தனியாக பரிசீலனை செய்யப்படுகின்றன. முதலில், மாதிரிக்காக தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களையும் சேர்ந்த பிள்ளைகளின் பாடசாலை பங்கெடுப்பினை இக்காரணிகள் எவ்விதம் பாதித்துள்ளன என்ற விஷயம் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. அடுத்து, பொதுவாக கொழும்பு நகரின் சேரி மற்றும் கொட்டில் குடியிருப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளின் பாடாசலைப் பங்கெடுப்பு குறைந்த விகிதத்தில் காணப்படுவதற்கு இக்காரணிகள் பங்களிப்புச் செய்துள்ள விதம் குறித்து ஆராயப்படுகிறது.

## வறுமை

பாடசாலைக்கு சமூகமளிக்காத 34 பிள்ளைகளில், 7 பிள்ளைகள் அவ்விதம் சமூகமளிக்காமைக்கு வறுமையே முக்கிய காரணமாக இருந்தது. பெற்றோர், பிள்ளைகளை பாடாசலையில் அனுமதிக்கும்போது செய்ய வேண்டிய செலவுகளை சமாளிக்க முடியாதிருந்ததால், 4 பிள்ளைகள் பாடாசலைகளில் சேர்க்கப்படவில்லை. மற்றொரு பிள்ளை, பெற்றோரினால் பாடசாலைச் செலவுகளை சமாளிக்க முடியாதிருந்தமையால் பாடசாலை செல்வதை நிறுத்தி விட்டது. பிறிதொரு சிறுமி, ஆடைத் தொழிற்சாலையொன்றில், தற்காலிக வேலையொன்றில் ஈடுபடுவதற்கென பாடசாலையை விட்டு விட நிர்ப்பந்திக்கப்பட்டது. வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் இளைய சகோதர, சகோதரிகளை கவனித்துக் கொள்வதற்குமாக மற்றொரு சிறுமி பாடாசலை செல்வதை நிறுத்தியிருந்தாள்.

பாட போதனை, பாட நூல்கள், மதிய ஆகாரம் என்பன பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவது உண்மைதான், எனினும், பிள்ளைகளின் சேர்வுக் கட்டணங்கள், வசதிக் கட்டணங்கள், ஆடைகள், எழுதுகருவிகள் போன்ற தேவைகளுக்கு பெற்றோர் ஓரளவு பணத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது. கொழும்பு நகரின் சேரிகளிலும் கொட்டில்களிலும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடும்பங்களுக்கு, பிள்ளைகளின் கல்விக்கான இந்த சிறு செலவுகள் கூட, பெரும் சுமையாக உள்ளது. பிள்ளைகளை பாடாசலைகளில் சேர்த்து, தொடர்ந்து பராமரித்து வரும் பொருளாதார ஆற்றல் பல குடும்பங்களிடம் இருப்பதாக தெரியவில்லை. கடந்த காலத்தில் பாடசாலை எழுதுகருவிகளின் விலைகள் வெகுவாக உயர்ந்து சென்றிருப்பதும், சேர்வுக் கட்டணங்கள் (ரூ. 200 தொடக்கம் 350 வரையான வீச்சில்) அதிகரித்திருப்பதும் இப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன.

கல்விக்கான செலவு தவிர, கல்விக்கான சந்தர்ப்ப செலவும், இப்பிள்ளைகள் பாடசாலைகளுக்கு சமூகமளிக்காதிருப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளது. குடும்ப வருமானங்களை குறை நிரப்புச் செய்வதற்காக சிறு சிறு தொழிகளில் ஈடுபடும் பொருட்டு, இப்பிள்ளைகள் விரும்பியோ விரும்பாமலோ தொடக்கப் பள்ளி கல்வியை நிறைவு செய்யாமலேயே பாடசாலைகளிலிருந்து வெளியேறிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது. சிறு வியாபாரம், வீதியோர வியாபாரம், கூலி வேலை, நடுத்தர குடும்பங்களின் வீடுகளில் எடுபிடி வேலை போன்ற முறைசாராத் துறையின் நடவடிக்கைகளில் இச்சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். சிறுமிகள், வீட்டு வேலைகளில் உதவுவதற்கும், சிறு குழந்தைகளை கவனித்துக்கொள்வதற்குமென பாடசாலைக்கு செல்லாது வீட்டில் தங்கி நிற்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்த பிள்ளைகளின் பெற்றோர் பொதுவாக தற்காலிக வேலைகளிலும், சமயாசமய வேலைகளிலும் ஈடுபட்டிருப்பதனால், அவர்கள் பெறும் சிறிய வருமானங்கள், பல்வேறு காரணங்களால், அடிக்கடி தளம்பல்களுக்கு உள்ளாகின்றன. சம்பாத்தியம் வீழ்ச்சியடையும் போது அது பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியை பாதிக்கிறது. இந்த குடியிருப்புக்களில் வாழும் வறிய குடும்பங்களின் உயிர் வாழும் தேவை, இப்பிள்ளைகளின் கல்வித் தேவையையும் மிஞ்சிக் காணப்படுகிறது. அவர்களை துன்புறுத்தும் வறுமையானது, கிடைக்கக்கூடியதாக இருக்கும் கல்வி வசதிகளைக் கூட அவர்கள் பயன்படுத்திக் கொள்வதனை தடுத்து வருகிறது.

## முறைசார் கல்வியமைப்பின் குறைபாடுகள்

முறைசார் பள்ளிக்கல்வியமைப்பின் குறைபாடுகள் காரணமாக 4 பிள்ளைகள் படசாலைக்கு சமூகமளிக்கவில்லை. இவர்களில் மூவர் பாடசாலைகளில்



33776

சேர்க்கப்படவில்லை. இரு பெற்றோர், பிள்ளைகளை சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை தமது குடியிருப்புக்கு அண்மையில் அமைந்திருக்கும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்திருந்த போதிலும், அப்பாடசாலைகள், குறிப்பிட்ட சிறுவர்களை சேர்த்துக்கொள்ளவில்லை. அவர்கள் பின்னர் இது பற்றி விசாரித்த போது, இப்பாடசாலைகளில் போதிய வசதிகளில்லாதிருப்பதனால் இப்பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது தெரிய வந்தது. இந்த மூன்று பிள்ளைகளில் 2 பிள்ளைகள் 6 வயதினராகவும் ஒரு பிள்ளை 9 வயதுடையதாகவும் உள்ளனர். 9 வயதுப்பிள்ளையின் பெற்றோர், அந்தப் பிள்ளையை பள்ளியில் சேர்ப்பதற்கு ஒரு முறைக்கு மேல் எந்த முயற்சியையும் மேற்கொள்ளாது அலட்சியமாக இருந்து விட்டனர். மற்றொரு 13 வயதுப் பிள்ளை 11 வயதில் பாடசாலைக்கு செல்வதை நிறுத்தியிருந்தது. படிப்பிப்பதற்கு தனது பாடசாலையில் போதிய ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தினாலேயே தான் இவ்விதம் நின்று விட்டதாக இப் பிள்ளை கூறியது. இப்பிள்ளையை வேறொரு பாடசாலைக்கு அனுப்பும் விஷயத்தில் பெற்றோர் அதிக அக்கறை காட்டவில்லை.

நாட்டின் தொலைவில் ஒதுங்கிப் போயுள்ள கிராமங்களில் வாழும் தொடக்கப்பள்ளி வயது பிள்ளைகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, கொழும்பு நகரின் சேரி மற்றும் கொட்டில் பகுதிகளில் வாழும் இப்பிரிவைச் சேர்ந்த பிள்ளைகளின் இருப்பிடங்களுக்கு அண்மையில் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. ஆனால், போதிய வசதிகள் இன்மையால் அல்லது வேறு காரணங்களால், இப்பாடசாலைகள், அனுமதி கோரும் அனைத்துப் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. இந்த நிலை, உயர் விகிதத்தினர் பாடசாலைகளில் (சேர்க்கப்படாதிருப்பதற்கும், காலம் பிந்தி சேர்க்கப்படுவதற்கு வழி கோலியுள்ளது.

நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும், நகர மேட்டுக் குடியினரின் பிள்ளைகளும் கல்வி பயிலும் நகர பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது, முதன்மையாக சேரி மற்றும் கொட்டில் குடியிருப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்பினை வழங்கும் பாடசாலைகள் வகுப்பறைகள், தளபாடங்கள், தகைமை பெற்ற ஆசிரியர்கள், நல்ல நீர் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற அனைத்து அம்சங்களிலுமே பற்றாக்குறைகளைக் கொண்டு, அனுகூலமற்ற நிலையில் இருந்து வருகின்றன. இந்த குறைபாடுகள் ஒரு புறமிருக்க, இப்பாடசாலைகளில் நிலவும் வகுப்பறைச் சூழலும், போதனா முறைகளும் மாணவர்களை பாடசாலைக்கு கவர்ந்திழுக்கக் கூடியனவாக காணப்படவில்லை. பிள்ளைகளின் முரட்டுத்தனமான நடத்தை அல்லது கட்டுப்பாட்டின்மை, ஒழுங்காக பள்ளிக்கு சமூகமளிக்காமை, கல்வியில் கவனம் செலுத்தாமை, பாடசாலைகளில் அவசியமான எழுதுகருவிகளும், கற்பிக்கும் வசதிகளும் இன்மை போன்ற காரணங்களினால், வசதிகள் குறைந்த இத்தகைய பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதில் ஆசிரியர்கள் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை. இது, பிள்ளைகளின் பள்ளிச் செயலாற்றுகையில் மேலும் ஒரு எதிர்மறை தாக்கத்தை எடுத்து வருகிறது.

இக்கட்டுரையாசிரியர், பாடசாலையை இடையில் விட்டுச் சென்ற சில பிள்ளைகளின் பெற்றோருடன் தனிப்பட்ட முறையில் உரையாடியபோது, தமது பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதில் அவர்கள் அக்கறையற்றவர்களாக இருப்பது தெரிய வந்தது. ஐந்தாம் தரத்தில் கல்வியை நிறுத்திக்கொண்ட ஒரு பிள்ளையின் பெற்றோரிடம் இது பற்றிக் கேட்ட போது தமது பிள்ளைகளுக்கு தொடர்ந்து கல்வியூட்டுவதன் மூலம் பொருளாதார ஆதாயங்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று அவர்கள் கூறினார்கள். சேரிகளிலும், கொட்டில் குடியிருப்புக்களிலும் வாழும் குடும்பங்கள் தமது சமூக - பொருளாதார நிலைமைகள் மிகவும் தாழ்ந்த மட்டங்களில் இருப்பதனால் வாழ்வில் முன்னேறும் அபிலாஷையற்றவர்களாக உள்ளனர். பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதில் எதிர்நோக்கும் கஷ்டங்கள் காரணமாகவும், குறிப்பிட்ட சில வசதிகள் குறைந்த பாடசாலைகளில் கூட மிக வறிய பிள்ளைகளுக்கு காட்டப்படும் பாரபட்சம் காரணமாகவும் ஏற்பட்டுள்ள கசப்புணர்வு, இக்குடும்பங்கள் கல்வி குறித்து காட்டும் எதிர்மறை உணர்வுகளுக்கு ஓரளவுக்கு பங்களிப்புச் செய்துள்ளது. இவர்கள் கல்வி மீது காட்டும் இந்த அசிரத்தைக்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் அவர்கள் மூழ்கியிருப்பதும் ஓரளவுக்கு காரணமாக இருக்கிறது.

பிள்ளைகளை ஊக்குவித்து, அவர்களது படிப்புக்கு உதவும் முறைகள் குறித்து பெற்றோர் அறியாதிருப்பதும் பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிக்காமைக்கு பங்களிப்புச் செய்துள்ளது. குறிப்பாக, இக்குடியிருப்புக்களில் வாழும் தமிழ், முஸ்லிம் பெற்றோர் பெண் பிள்ளைகளின் கல்வி குறித்து சில எதிர்மறை கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பெண் பிள்ளைகள் தொடக்கக்கல்வி நடுப்பகுதி வரையிலும், பூப்படையும் வரையிலும் கல்வி கற்றால் போதுமானது என்று இவர்கள் கருதுகிறார்கள். இவற்றின் கூட்டு மொத்த விளைவு கல்வி புறக்கணிக்கப்படுதலாகும். இதன் காரணமாக சில பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு விணணப்பங்கள் அனுப்புவதில்லை. சிலர் காலம் பிந்தி விண்ணப்பங்களை அனுப்புகிறார்கள். பல சந்தர்ப்பங்களில், தமது வீட்டுக்கு அண்மையில் உள்ள பாடசாலையொன்றில் பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள முடியாதவிடத்து குறிப்பிட்ட பெற்றோர் வேறு பாடசாலைகளில் அவர்களை சேர்ப்பிக்க முயல்வதில்லை. சில பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலை செல்லும் வயதை எட்டியுள்ளதை அறியாதவர்களாக உள்ளனர்.

பெற்றோர் வீட்டில் இல்லாமையாலும், குடும்பத் தகராறுகள் காரணமாகவும், பதினொரு பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை. ஒரு ஏழு வயதுப் பிள்ளையின் தந்தை தூர இடமொன்றில் கூலி வேலை செய்து வந்தமையினால் அப்பிள்ளை பாடசாலையில் சேர்க்கப்படவில்லை. பிள்ளையைப் பாடசாலையில் சேர்க்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை அப்பிள்ளையின் தாய் அறியாதவளாக இருந்தார். ஒரு பிள்ளையின் தாய் மரணமடைந்த போது